878
16-X-07

வெளியீடு : 5-9-2007 Issued : 5-9-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 24, 2007—தொகுதி 31—எண் 2**

**Tuesday, the 24th April, 2007—Volume 31—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

53-1/

24–4–2007

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **இரங்கற் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 319 |
| **2. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 320-361 |
| **3. தகவல் கோரல்—** | |
| எதிர்க்கட்சித் தலைவர்மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்படுமென ஜெயா தொலைக்காட்சி அலுவலகத்திற்கு வந்த மிரட்டல் கடிதம் | 361-371 |
| *திரு. ஓ. பன்னீர்செல்வம் | 361-367 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 367-371 |
| **4. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீடு—மத்திய அரசின் மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது | 371-390 |
| திரு. டி. ஜெயக்குமார் | 372-373 |
| *திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 373-377 |
| திரு. தி. வேல்முருகன் | 377-380 |
| *திரு. சி. கோவிந்தசாமி | 380-381 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 381-383 |
| திரு. வீர. இளவரசன் | 383-385 |
| *திரு. து. ரவிக்குமார் | 385-386 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 386-390 |

பக்கங்கள்

5. கவன ஈர்ப்பு—

பஞ்சு வியாபாரிகளுக்கு நூற்பாலைகள் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை — 390-395

திரு. சி. ஞானசேகரன் — 390,394,395

மாண்புமிகு திரு. என்கேகே. பி. ராஜா — 391-395

6. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொதுக் கணக்குக் குழு — 395-396

(ஆ) பொது நிறுவனங்கள் குழு — 396

7. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் துறை — 396-495

*மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன் — 396,420,437,439, 447,450-451, 472-492,493,494

*திரு. சி. துரைராஜ் — 420-426

*திரு. அருள் அன்பரசு — 411,426-435, 439,440

திரு. கே. முருகவேல் — 440-444

திரு. கி. ஆறுமுகம் — 409,444-454

*திரு. என். நன்மாறன் — 402,454-458

*திரு. எஸ். இராசசேகரன் — 459-462

*திரு. நா. இராமகிருஷ்ணன் — 462-466

*திரு. ந. சுப்ரமணியன் — 466-472

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 495-496


தமிழ்நாடு ... சென்னை-600 009 ... எழும்பூர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 11, சர்வஜித் – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஏப்ரல் 24, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்."

தெளிவான அறிவும் உறுதியும் கொண்டவர்கள், துன்பத்திலிருந்து விடுபடுவதற்காகக்கூட இழிவான செயலில் ஈடுபடமாட்டார்கள்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. தி. இரா. கஜபதி அவர்கள் 23-4-2007 அன்று மறைவுற்ற செய்தியை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன். திரு. தி.இரா. கஜபதி அவர்கள் ஆற்காடு சட்டமன்றத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1989 முதல் 1991 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால், அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள், வினா எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**121—**

### குறைந்த மின்னழுத்தம்

***504—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் குறைந்த மின்னழுத்தம் உள்ள நிலைமையினை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இப்பகுதியில் உள்ள துணை மின் நிலையத்திற்கு மின்சாரம் வழங்கி வரும் வாய்மேடு துணை மின் நிலையம், தற்போதுள்ள 66/11 கிலோ வோல்ட்டிலிருந்து 110 கிலோ வோல்ட்டாக உயர்த்தப்படவுள்ளது. அதற்கான பணிகள் முடிவடைந்து, பயன்பாட்டிற்கு வந்ததும், குறைந்த மின்னழுத்தம் சரி செய்யப்பட்டுவிடும்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த வாரம் இது சம்பந்தமாகக் கேள்வி கேட்டிருந்தேன். அப்பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாகச் சரி செய்யப்பட்டுவிடும் என்று சொல்லியிருந்தார்கள். அதன் அடிப்படையிலே அன்று மாலையே மின்சாரத் துறையைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர் தலைமையிலே ஒரு குழு வந்து அந்த இடங்களையெல்லாம் பார்வையிட்டு உடனடியாக அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கும், அதேபோல, ஏற்கெனவே [illegible] துணை மின் நிலையத்தினுடைய சக்தி[illegible]கரிப்பதற்கு[illegible]ய ஏற்பாடுகளையெல்லாம்

227571
சென்னை-600 008
நூலகம்



செய்துகொண்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பணிகளை விரைந்து முடிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே தெரிவித்ததைப்போல, அவர் கேள்வி கேட்டவுடனே அதிகாரிகளை அங்கு அனுப்பி, அந்தப் பணிகளை வேகப்படுத்தி, இப்பொழுது 70 சதவிகிதப் பணிகள் முடிவடைந்து இருக்கின்றன. மற்ற பணிகள் யாவும் வருகின்ற 31-8-2007-க்குள் முடிக்கப்பட்டுவிடும். அதற்குப் பிறகு அந்த இடத்திலே தாழ்வழுத்த மின்சாரம் நிச்சயமாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலையில் 110 கிலோ வோல்ட் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டவுடன் ஒவ்வோர் ஆண்டும் 60 துணை மின் நிலையங்களைத் தமிழ்நாட்டிலே அமைத்து, தமிழகத்திலே எங்கேயும் தாழ்வான மின்னழுத்தம்

இல்லை என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்காக 325 துணை மின் நிலையங்களைத் தமிழகத்திலே அமைக்க முடிவு எடுத்து, அதற்காக 2,000 கோடி ரூபாய் பணமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் படிப்படியாகத் தொடங்கி முடிக்கப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினருடைய குளித்தலை தொகுதியிலேயும் துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தாலுகா, ஜமுனாமரத்தூர், மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. சுமார் 85 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள். அங்கே, குறைந்த மின் அழுத்தம் காரணமாக டியூப் லைட்டுகள் எரிவதே கிடையாது. குண்டு பல்புகள்தான் அங்கே எரிகின்றன. எனவே, அங்கே நீண்ட நாட்களாகத் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரமே ஜவ்வாது மலையிலே ஒரு துணை மின் நிலையம் அமைப்பது குறித்து நான் இந்த அவையிலே சொல்லியிருக்கின்றேன். ஏற்கெனவே இந்த அவையிலே குறிப்பிட்டதைப்போல, ஜவ்வாது மலையிலே அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, வீரபாண்டி ஊராட்சியிலுள்ள வீரபாண்டி, வீரபாண்டிபுதூர், அறிவொளி நகர், அண்ணா நகர் ஆகிய பகுதிகளிலே குறைந்த மின் அழுத்தம் உள்ளதாக அறிந்து, அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டு, அந்த





ஆய்வுப் பணிகள் முடிவுற்ற நிலையிலே இருக்கின்றன. அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுகள் முடிவுற்று இருக்குமானால், துணை மின் நிலையம் விரைவில் அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலேயே காற்றாலைகள்மூலம் மின்சாரம் தமிழகத்திலேதான் அதிகமாக எடுக்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக, கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து அதிகமாக உற்பத்திச் செய்யப்படுகிறது. காற்றாலை மின்சாரத்தைக் கொண்டு செல்கின்ற மின் பாதை--Grid குறைவாக இருக்கின்ற காரணத்தால், மிக அதிகமான மின் காற்றாலைகள் நிறுவப்பட்டும், நாளொன்றுக்கு 24 மணி நேரத்திற்குப் பதிலாக, 10 மணி, 12 மணி நேரம் அவை ஓடுகின்றன. மீதி நேரம் அவர்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை எடுத்துச் செல்ல மின் பாதை இல்லாத காரணத்தால் நிறுத்தப்படுவதாக அறிகிறேன். ஆகவே, அந்தக் காற்றாலைகள் எல்லாம் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை முழுமையாக மின் பாதைமூலம்--Grid மூலம் கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் தெரிவித்ததைப்போல, காற்றாலைமூலமாக உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தைக் கொண்டு செல்லும் பாதை--Grid, அதனுடைய சக்தியை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்று Power Grid Corporation-க்கு நாம் கடிதம் எழுதியிருக்கின்றோம். Power Grid Corporation தமிழகத்திலிருந்து மற்ற மாநிலங்களை இணைப்பதற்காக சுமார் 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்றும், அதற்கு

முதல் கட்டமாக 5 ஆயிரம் கோடி ரூபாய் வரையிலே மத்திய அரசு உதவி செய்யும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இதற்கிடையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தோடு தனியார் ஒப்பந்தம் போட்டு அதற்குத் தேவையான பணத்தை மிச்சம் உள்ள 5 ஆயிரம் கோடி ரூபாயை நாங்கள் தருகிறோம், மின்சார வாரியத்தோடு இணைந்து செய்வதற்கு எங்களுக்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, விரைவிலே முடிவெடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலுள்ள, ஜோலார்பேட்டையிலே குறைந்த மின் அழுத்தம் இருக்கின்ற காரணத்தினாலே 2001 ஆம் ஆண்டு ஒரு துணை மின் நிலையம் அமைக்க ரூபாய் 3 கோடி நிதி வாரியத்தால் ஒதுக்கப்பட்டு, இதுவரை நிலம் ஆர்ஜிதம் செய்யப்படாமலும், பிறகு இரயில்வே துறையிடம் இடத்தைக் கேட்டும், அவர்களும் வழங்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். எனவே, அந்தத் துணை மின் நிலையப் பணி நிறைவேற்றப்படாமல் அப்படியே கிடப்பிலே கிடக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுத்து, நிலத்தை ஆர்ஜிதம் செய்து, துணை மின் நிலையம் அமைத்துத்தர ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் தமிழகத்திலே எங்கெல்லாம் துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று கருதுகின்றதோ அங்கெல்லாம் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான ஒப்புதல்கள் தரப்பட்டுள்ளன. அதற்குத் தேவையான பணத்தையும் Rural Electrification Corporation கொடுத்திருக்கிறது. ஆனால், பல இடங்களிலே இடம் கிடைக்கவில்லை. அதற்காக என்னுடைய தலைமையிலேயே தமிழகத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர், இப்படிப்பட்ட அதிகாரிகளைக்கொண்ட ஒரு கூட்டம் நடத்தி ஆய்வு செய்தபோது, சென்னை மாநகரத்திலே





இருக்கக்கூடிய ஆணையர் மட்டும்தான் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலத்தை இலவசமாகவே கொடுப்பதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 9-40

அறநிலையத் துறையைச் சேர்ந்தவர்கள், guideline value அல்லது market value, இந்த இரண்டில் எது அதிகமோ, அந்த விலை கொடுப்பதாக இருந்தால், அவர்கள் அந்த நிலத்தைக் கொடுப்பதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பொறுத்தவரையில் எங்கேயாவது அரசாங்க நிலம் இருந்தால் அதை நாங்கள் உடனடியாகக் கொடுக்க முடியும் என்றும், நிலம் இல்லையென்று சொன்னால் தனியாரிடத்திலேயிருந்துதான் வாங்கித் தர வேண்டுமென்றும் சொல்லி இருக்கிறார்கள். எனவே, நிலம் வாங்கித் தருவதிலேதான் பிரச்சினை இருக்கிறதே தவிர, துணை மின் நிலையம் அமைப்பதிலே எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**122—**

### உழவர் சந்தை

***989—திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி தொகுதியில் பரமத்தி, தென்னிலை, சின்னதாராபுரம், தாந்தோணி, அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி ஆகிய ஊர்களில் உழவர் சந்தை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டத்தில் கரூர், குளித்தலை மற்றும் வேலாயுதம்பாளையம் ஆகிய இடங்களில் உழவர் சந்தைகள்

செயல்பட்டு வருகின்றன. தற்போதைய நிலையில் பரமத்தி, தென்னிலை, சின்னதாராபுரம், தாந்தோணி, அரவக்குறிச்சி மற்றும் பள்ளப்பட்டி ஆகிய இடங்களில் உழவர் சந்தைகள் தொடங்கும் கருத்துரு எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்.

**திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரவக்குறிச்சி தொகுதியில் எந்த ஓர் இடத்திலும் உழவர் சந்தை என்பதே இல்லை. பள்ளப்பட்டியைப் பொறுத்தவரை, அதன் சுற்று வட்டாரங்களிலே கிராமங்கள் அதிகமாக உள்ளன. விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்கின்றனர். அவர்கள் விவசாயம் செய்யக்கூடிய காய்கறி பள்ளப்பட்டியில் அதிகம் விற்கப்படுவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. பள்ளப்பட்டி பேரூராட்சியைப் பொறுத்தவரை அங்கே உழவர் சந்தை அமைப்பதற்கு, நிலம் தருவதற்குப் பேரூராட்சி நிர்வாகம் தயாராக உள்ளது. ஆகவே, பள்ளப்பட்டியிலாவது உழவர் சந்தையை அமைப்பதற்கு அரசு முன்வருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகத்தில் 103 உழவர் சந்தைகள் நடைபெறுகின்றன. மேலும், பல்வேறு மாவட்டங்களிலேயிருந்து உழவர் சந்தைகள் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்து, அவை பற்றி ஆய்வு செய்ததிலே, 50 இடங்களில் நடப்பாண்டிலே தொடங்கலாம் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல பள்ளப்பட்டியில் உழவர் சந்தை தொடங்க இடம் இருக்குமானால் அதனை எழுத்துபூர்வமாகத் தந்தால், துறைக்கு அனுப்பி அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்.



**திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தைகள் எங்கும் மிகச் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்பதற்காகத் தொடங்கப்பட்டு, குறிப்பாக என்னுடைய பண்ருட்டி தொகுதியில் நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு, முதலில் உழவர்கள் 15 நபர்கள் வருகை தந்தார்கள். தற்போது 7 நபர்களாக ஆகி, இப்போது ஒருவர்கூட வர முடியாமல் அது மூடப்படுகின்ற ஒரு நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—உழவர்கள் பயனடைகின்ற வகையில் பண்ருட்டி பேருந்து நிலையம் அருகே, பொது மக்கள் கூடுகிற இடத்தில் விவசாயிகள் வந்து பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவான இடத்தில் அந்த உழவர் சந்தையை மாற்றி அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி பற்றித்தானே சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) பண்ருட்டியிலே தொடங்குகிறபோது அந்த இடம்தான் உழவர் சந்தை தொடங்குவதற்குக் கிடைத்தது. அது தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. பிறகு இடையிலே, அந்த 103 உழவர் சந்தைகளுமே எப்படி முடக்கப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆனால், இப்போது ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில் 103 உழவர் சந்தைகளும் புதுப்பிக்கப்பட்டு இப்போது சிறப்பாகச் செயல்படுகின்றன. பண்ருட்டியிலே இருக்கக்கூடிய உழவர் சந்தைக்கு இடம் சரியில்லை. அதனால், பொது மக்கள் வந்து செல்வதற்கு வாய்ப்புக் குறைவாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுவாரேயானால், பொது மக்கள் கூடக்கூடிய அல்லது விவசாயிகள் வருவதற்கு ஏற்ற இடமாகப் பார்த்து இடம் கொடுத்தால், அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

[2007 ஏப்ரல் 24

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில், சீர்காழி நகரில் உழவர் சந்தை அவசியமாக அமைக்கப்பட வேண்டும். சீர்காழி தொகுதியிலே நிறைய காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கக்கூடிய சந்தப்படுகை, திட்டுப்படுகை, முதலைமேடு, முதலைமேடுதிட்டு, கோதண்டபுரம், இன்னும் சீர்காழி ஒன்றியத்திலே இருக்கக்கூடிய அல்லிவிளாகம், செம்பதனிருப்பு ஆகிய பகுதிகளிலே காய்கறிகள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே, சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலே உழவர் சந்தை அமைக்கப்படுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தை அமைப்பது, மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்னதைப்போல, காய்கறிகள் உற்பத்தியாகின்ற இடமாகவும் இருக்க வேண்டும். அதே நேரத்தில், அப்படியொரு உழவர் சந்தை தொடங்கினால், நுகர்வோர்கள் தேவையான அளவிற்கு அங்கு இருந்தால்தான், அந்தச் சந்தைக்குக் கொண்டு வரக்கூடிய காய்கறிகள் விற்பனையாகும். ஆகவே, நுகர்வோர்களையும் கருத்திலேகொண்டுதான் உழவர் சந்தை தொடங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**123—**

## தூர் வாருதல்

***8369—திரு. போ. சின்னப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 24]

தூத்துக்குடி மாவட்டம், எப்போதும் வென்றான் பொதுப் பணித் துறை கண்மாயைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** பேரவைத் தலைவர் அவர்களே,

எப்போதும் வென்றான் கண்மாயினைத் தூர் வாரும் பிரேரணைகள் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட எப்போதும் வென்றான் நீர்த்தேக்கம் 650 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த நீர்த்தேக்கத்தின்மூலம் 1,045 ஏக்கர் நஞ்சை நிலம் பயன்பெறுகிறது. இதில் எப்போதும் வென்றான் பகுதியில் 410 ஏக்கர் நஞ்சை நிலமும், காட்டுநாயக்கன்பட்டி பகுதியில் 635 ஏக்கர் நஞ்சை நிலமும் பயன்பெறுகின்றன. தற்போது 100 எக்டேர் அளவில்தான் விவசாயம் நடைபெறுகின்றன. அங்கே ஒருபோகம்கூட சரியாக விளைவிக்க முடியாத ஒரு சூழ்நிலையிருக்கின்றது. ஆறு அடி உயரத்திற்கு அது மண் மேடாகியிருக்கின்றது. ஆரம்ப காலங்களில் அங்கே இருபோகம் நெல் விளைவித்தார்கள். ஆகையால், விவசாயிகள் மீண்டும் இருபோகம் நெல்லை விளைவிக்கும் வகையில் அதனைத் தூர் வாரிட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினருடைய புள்ளிவிவரங்கள் சரி. ஆனால், அதில் மேடிட்டிருக்கக்கூடிய மண் மேட்டை அகற்றுவது என்பது சாதாரணக் காரியமல்ல. பொதுவாகவே, அணைகளிலிருந்து தூர் வாருவது என்பது சாத்தியமற்ற செயல். அதனால்தான் நான் அன்றைக்கேகூட சொன்னேன், ஆற்றுப் போக்கில் போகிற மதகைத் திறந்துவிட்டால் மண் வெளியே வந்துவிடும் என்று. அப்படியும் சில இடங்களில் இருக்கின்றன. அந்த மண்ணை எடுத்துக்கொண்டு போய் எங்கே கொட்டுவது என்பது பெரிய பிரச்சினை. வீராணம் ஏரியிலே தூர் வாருகிறபோது, எங்கே கொட்டுவது என்ற பிரச்சினை எழுந்து மண்ணைக் கொண்டு போய் forefront-லே கொட்டியபோது எங்கள்

நிலங்கள் பாதிக்கப்படுகின்றன என்று அங்குள்ள நிலத்துக்காரர்கள் சண்டைக்கு வந்துவிட்டார்கள். ஆகையினாலே, இந்த மண்ணை வெகு தூரத்திற்கு எடுத்துக்கொண்டு போய் அது வேறு ஒன்றுக்குப் பயன்பட்டால்தான் சில இடங்களிலே தூர் வாருவது சாத்தியமாகும். இதைப் பொறுத்தவரையில் மண் மேடிட்டிருப்பது உண்மை. தூர் வார வேண்டியது அவசியமான ஒன்றுதான். இப்போது தூத்துக்குடி-மதுரை நான்கு வழிச் சாலை அமைக்கின்ற பணி தொடங்கப்பட்டிருக்கிறது. அந்தச் சாலையை மேம்படுத்துவதற்கு, உயரமாக்குவதற்காக அதிகமான மண் தேவைப்படுகிறது. எனவே, எப்போதும் வென்றான் பகுதியிலிருந்து மண்ணை எடுத்துக்கொள்ளலாமா என்று நெடுஞ்சாலைத் துறையிலிருந்து கேட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்துரு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அதனால், அப்படியொரு நிலைமை ஏற்பட்டால், பொதுப் பணித் துறை அவர்களுக்குப் பக்கத்திலேயிருந்து எவ்வளவு ஆழத்திற்கு மண் எடுக்கலாம் என்பதையெல்லாம் அவர்கள் திட்டவட்டமாக வரையறுத்துக் கொடுத்து மண்ணை அப்புறப்படுத்துவதற்கு ஏதுவாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நான்கு வழிச் சாலைக்கு மண் எடுப்பதாகக் கூறுகிறார்கள். அந்த மண் கரிசல் மண். நிச்சயமாக, அது சாலை போடும் பணிக்குப் பயன்பெறாது. அப்படியே எடுத்தாலும், மேலாக எடுத்துவிட்டு, கீழே உள்ள சரளையை மட்டும்தான் அவர்கள் எடுப்பார்களேயொழிய, அந்த மண்ணை ஒதுக்கி வைத்துவிடுவார்கள். ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே மீண்டும் இருபோகம் விளைவிக்கும் வகையில், இந்த ஆண்டே அந்த எப்போதும் வென்றான் நீர்த்தேக்கத்தைத் தூர் வாரிக் கொடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணையில் இருக்கிற மண்ணை எப்படியாவது





அப்புறப்படுத்தலாம் என்று பார்த்தேன், உறுப்பினர் அதற்கும் ஒரு அணை போட்டுவிட்டார். ஆகவே, இதை வேறு வகையிலே எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பிறகு யோசித்துத்தான் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன். 9-30 மணிக்குக் கையைத் தூக்கினால், 10-30 மணி வரை கையைத் தூக்கிக்கொண்டே இருக்கிறீர்கள்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியாவது கூப்பிடுவீர்கள் என்ற நம்பிக்கைதான். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய மானியக் கோரிக்கையின்போது தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் குளங்களும், கால்வாய்களும் தூர் வாரப்படும் என்று குறிப்பிட்டு இருந்தார்கள். எங்களுடைய மாவட்டத்தில் பேச்சிப்பாறையிலிருந்து கடைமடை வரை இருக்கின்ற channel-களைத் தூர் வாருவதற்காக ரூ.3 கோடி செலவில் ஒரு கருத்துரு தயாரிக்கப்பட்டு, துறைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இப்போது தண்ணீர் சாரல் இல்லாத சமயம். ஒரு கோடி ரூபாய் நம்முடைய அமைச்சர் அவர்கள் அனுமதித்திருப்பதாக நான் அறிகிறேன். தயவுசெய்து அந்தத் தொகையை உடனடியாக விடுவித்து மாவட்டத்திற்கு அனுப்பி அந்தப் பணியை உடனடியாகத் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளைத் தூர் வாருவது என்பது வேறு, கால்வாய்களைத் தூர் வாருவது என்பது வேறு. அது பெரிய சங்கடம் அல்ல. காரணம், the quantity of sand. அந்த மண்ணின் அளவு கொஞ்சம்தான். கரையைப் பலப்படுத்திவிடலாம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தக் கால்வாயைத் தூர் வாரிச் செப்பனிடுகிற பணி வழக்கப்படி நடைபெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், குத்தாலம் தொகுதியில் உள்ள குத்தாலம், குடவாசல் ஒன்றியங்களை இணைக்கும் வடகோரையாறு,

|2007 எப்ரல் 24

தென்கோரையாறு மற்றும் நந்தலாறு ஆகிய ஆறுகள் கடந்த காலங்களில் தூர் வாரப்படாததால், மழைக் காலங்களில் வெள்ளம் ஏற்படுகிறபோது விளை நிலங்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றன. இது தொடர்பாக 19-2-2007 அன்று நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலே நான் மனுவாகக் கொடுத்து இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 2 ஏரிகள் தூர் வார அனுமதிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதன் அடிப்படையிலே, என் தொகுதியில் ஏரி இல்லாத காரணத்தால், அந்தச் சலுகையை இந்த மூன்று ஆறுகளுக்கும் வழங்கி, இந்த ஆண்டே தூர் வார அரசு ஆவன செய்யுமா? இரண்டு ஒன்றியங்களின் விவசாயிகள் பயன்பெற அரசு நடவடிக்கை எடுத்து, தூர் வாரித் தந்திடுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தொகுதியில் உள்ள ஏரிகளைத் தூர் வாருவது என்றுதான் அறிவிக்கப்பட்டது. அது கால்வாயாக மாற்றப்பட வேண்டும், ஒரு amendment வேண்டும் என்று கேட்டிருக்கிறார். ஏற்கெனவே தஞ்சை மாவட்டத்தில், கால்வாய்களைத் தூர் வாருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கொடுத்தால் அந்தத் தலைப்பின்கீழ் அந்தத் தூர் வாருகிற பணி எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதியிலுள்ள கொங்கர்குளம், மன்னவராடி, காட்டகாமன்பட்டி, ஆவாரம்பட்டி முதலிய பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கண்மாய்களைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்தக் கண்மாய்களின்



2007 எப்ரல் 24|

பெயர்களை எழுதிக் கொடுத்தால், அவற்றைத் தூர் வாருகிற பணி அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா, இல்லையா என்று பார்த்து, அப்படி இல்லாவிட்டாலும் உறுப்பினர் கேட்டதற்காக அரசு ஒன்றிரண்டைச் சேர்த்து, எடுத்துப் பணி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**124—**

## சொந்தக் கட்டடம்

***132—திரு. கு. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, ஒடுக்கத்தூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, ஒடுக்கத்தூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒடுக்கத்தூரில் இயங்கி வரும் சார் பதிவாளர் [illegible] வசதிகள்கூட [illegible] போதுமான அளவுக்கு [illegible] அந்த [illegible] வாடகைக் கட்டடமாக [illegible] வசதிகளைக்கொண்ட வேறு ஒரு கட்டடம் கிடைக்காத [illegible] அந்தப் பகுதியில் மலைவாழ் மக்கள் அதிகமாக

வசிக்கின்ற காரணத்தாலேயும் முன்னுரிமையின் அடிப்படையிலே நடப்பு நிதியாண்டிலேயே ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த முறை அமைச்சராக இருந்தவர்கள். அவர் அந்தக் காலத்தில் செய்து இருக்கலாம். அப்போது வேண்டுமென்றே விட்டுவிட்டாரா என்று தெரியவில்லை. இப்போது அந்த வாடகைக் கட்டடத்தின் அருகில் அரசுக்குச் சொந்தமான இடம் இருந்தாலும் அல்லது தானமாகக் கொடுத்தாலும் அரசு இக்கோரிக்கையை விதிகளுக்கேற்ப பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே அரசினுடைய புறம்போக்கு நிலத்தைக் கையகப்படுத்தி, நில மாற்றம் செய்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருந்த காரணத்தால் அந்தப் பணி விரைவாக முடிக்கப்படாத நிலையிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே சொந்தக் கட்டடம் கட்டப்படவில்லை என்பதையும், தற்போது அந்த அரசுப் புறம்போக்கு நிலம், நில மாற்றம் செய்யப்பட்டுப் பத்திரப் பதிவுத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தாலே, இதைச் சிறப்பு நிகழ்வாகக் கருதி, அங்கே நடப்பு நிதியாண்டிலே கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதையும், தமிழகத்தில் எவ்வளவு சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன என்பதையும், எத்தனை அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்குகின்றன என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் அதையெல்லாம் கேட்கிறீர்கள்? உங்கள் துணைக் கேள்வியை main question-ல் மட்டும் கேளுங்கள். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நிலத்தைக் கையகப்படுத்தியதால் காலதாமதம் ஆகிவிட்டது என்று ஒப்புக் கொண்டுள்ளார். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் காலத்திலே செய்ய முடியாததை இப்போது அந்த இடத்தில் நிலத்தைக் கையகப்படுத்தியிருந்தால் நிதிநிலைக்கேற்பக் கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலூர் மாவட்டத்தில் 45 பதிவுத் துறை அலுவலகங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றில் 25 அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்குகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள 20 இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் சார் பதிவாளர் அலுவலகம் இல்லை. கீழ்ப் பகுதிக்குத்தான் வர வேண்டும். ஆகவே, வால்பாறையிலே ஒரு சார் பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கட்டடம் கேட்கிறார்கள். அலுவலகமே அங்கே இல்லை. புதிய அலுவலகம் திறந்த பிறகு கட்டடம் கட்டுவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 125. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

125— [2007 ஏப்ரல் 24

## சுற்றுலாத் தலம்

***17883—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, மலையடி ஸ்ரீமகாதேவர் ஆலயப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, மலையடி ஸ்ரீமகாதேவர் ஆலயப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்கும் குறிப்பு எதுவும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கோயில் சுமார் 800 ஆண்டுகள் பழமையானது. சித்திர வேலைப்பாடுகள் நிறைந்தது. தரைமட்டத்திலிருந்து ஆயிரம் அடி உயரத்தில் உள்ள மலை உச்சியில் அமைந்துள்ளது. மலை உச்சியில் சுரங்கப் பாதையும், எக்காலத்திலும் வற்றாத கிணறும், குளமும் உள்ளது. சூரிய உதயமும், மறைவும் அங்கே பார்க்க வாய்ப்பு இருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையின் தொலைதூர நீட்சியும், இயற்கை அன்னையின் கவின்மிகு காட்சியும் அங்கே பிரபலம். இத்தகைய சிறப்பு மிக்க அந்தப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக மாற்ற எதிர்காலத்திலேனும் ஏதேனும் கருத்துரு அரசின்மூலம் தயாரிக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஸ்ரீமகாதேவர் ஆலயத்தினுடைய சிறப்பைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறினார்கள்.



2007 ஏப்ரல் 24]

ஆனால், அங்கு வருகின்ற பயணிகளினுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தால் வருங்காலத்தில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றபோது துறையின் சார்பாக கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்ற அறிவிப்புக்கு நன்றி. கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி மிகப் பிரபலமான சுற்றுலாத்தலம். அங்கே தெய்வப் புலவர் திருவள்ளுவர் அவர்களின் சிலை இருக்கிறது. அந்தச் சிலை புதுப்பிக்கப்பட்டுப் பொலிவூட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தப் பணி துவக்கப்பட்டதா? அது எப்பொழுது முடியும்? சுனாமிக்குப் பின் கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறித்து ஏதேனும் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறதா? பயணிகள் வருகையை அதிகரிக்க ஏதேனும் உத்தி கையாளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விளவங்கோட்டில் உள்ளதைப் பற்றிக் கேள்வி கேட்டீர்கள். மீண்டும் கன்னியாகுமரிக்குப் போகிறீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அய்யன் திருவள்ளுவரின் சிலையைப் பொறுத்தமட்டில் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய எண்ணத்தில் உருவான திட்டம். 2000 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கன்னியாகுமரி வந்து திறந்து வைத்து, அதன் பிறகு தொடர்ந்து வந்த அரசாங்கம் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த காரணத்தால், அதைப் புறக்கணித்து வந்தது. தமிழ் அறிஞர்கள் அனைவரும் கேட்டுக்கொண்ட பிறகும் புறக்கணிக்கப்பட்டு வந்தது. மீண்டும் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு பகுதி-2 திட்டத்தின்கீழ் 39 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அடிப்படைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மாத இறுதிக்குள்ளாக நிச்சயமாக அனைத்துப் பணிகளும் முடிவடையக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது.

[2007 எப்ரல் 24

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு ஓராண்டுக்கு வந்து செல்கின்ற சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை எவ்வளவு? அதில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் தமிழகத்திற்கு அதிகமாக வருகிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் வெளிநாட்டைச் சார்ந்தவர்கள்—ஸ்பெயின், ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா, பின்லாந்து, நார்வே, கனடா, இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி, நெதர்லாந்து போன்ற வெளிநாட்டுப் பயணிகளும், வெளிமாநிலத்தவரைப் பொறுத்தமட்டில் கேரளா, மகாராஷ்டிரம், கர்நாடகம், உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், குஜராத், புது டெல்லி, பாண்டிச்சேரி, கோவா போன்ற பகுதிகளைச் சார்ந்தவர்களும் அதிகமாகத் தமிழ்நாட்டை நோக்கி வருகை தந்திருக்கிறார்கள். வெளிநாட்டுப் பயணிகளுடைய எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில், 15.35 இலட்சம் பேரும், உள்நாட்டுப் பயணிகளுடைய எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் 3,02,11,000 பேரும் வருகை தந்திருக்கிறார்கள். கடந்த ஆண்டை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது 27 சதவிகிதம் வெளிநாட்டுப் பயணிகளும், உள்நாட்டுப் பயணிகளும் அதிகமாகத் தமிழகம் நோக்கி வருகை தந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி அதிகமாகக் கிராமப்புறங்கள் அடங்கிய தொகுதி. நகரமே இல்லாத தொகுதி. அங்கு அரகண்டநல்லூர் பகுதியில் இருக்கின்ற அதுல்யநாதீஸ்வரர் கோயில் மிகச் சிறப்பு வாய்ந்த கோயில். அங்கே பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினந்தோறும் தரிசித்து வருகின்றனர். அந்தக் கோயில் பகுதியில் அதிகமாக அரசு நிலங்கள் இருக்கின்றன. எனவே, அதை மிகப்



2007 எப்ரல் 24]

பெரியதொரு சுற்றுலாத் தலமாக ஆக்கி, நகரமே இல்லாத எனது தொகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நகரத்தை உருவாக்கித் தருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரமே இல்லாத ஊருக்கு நகரத்தை உருவாக்கித் தருவது இந்தத் துறையினுடைய பணி அல்ல. இருந்தாலும்கூட, அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தால் நிச்சயமாக வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி, திருவேலங்காடு வடஆரண்யேஸ்வரர் திருக்கோயில் மிகவும் பழைமை வாய்ந்தது. அருணகிரிநாதரால் பாடப்பெற்ற ஒரு தலம். அந்தத் தலத்தை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் துறை சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கே அதிகமான பயணிகள் வருகை தந்தால், நிச்சயமாக அடிப்படைத் தேவைகளைக் கலைஞருடைய அரசாங்கம் நிறைவேற்றித் தரும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நீங்கள் பேசுகிறீர்களா? வாய்ப்பை வேண்டுமானால் திரு. கண்ணனுக்குக் கொடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுக்க முடியாது.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே புதிதாக சுற்றுலாத் தலங்களை உருவாக்குவதற்கான புதிய திட்டங்கள் ஏதாவது அரசிடம் இருக்கின்றனவா என்று

[2007 ஏப்ரல் 24

கேட்பதோடு, ஏற்கெனவே இருக்கிற சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கான புதிய திட்டங்கள் ஏதாவது அரசிடம் இருக்கின்றனவா என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 7 ஆம் தேதி சுற்றுலாத் துறையின் சார்பான மானியக் கோரிக்கை வர இருக்கிறது. அப்போது தெரியப்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**126—**

## சொந்தக் கட்டடம்

***4921—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குமாரவலசு ஊராட்சி, குமாரவலசில் கூட்டுறவு அங்காடிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, குமாரவலசு ஊராட்சி, குமாரவலசில் 265 குடும்ப அட்டைகளுடன் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடை குமாரவலசு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அரசின் வேறு ஏதாவது திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீடு வருகிறபோது, இக்கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும்.



2007 ஏப்ரல் 24]

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே மொத்தம் 754 கார்டுகள் இருக்கின்றன. அவற்றிலே 467 கார்டுகளைக் குமாரவலசுக்கும், 287 கார்டுகளை செங்கோடம்பாளையத்திற்கும் பிரித்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கிறது. அதைப் பிரித்துத் தர வேண்டும். மேலும், அங்குள்ள மக்கள், 4, 5 கிலோ மீட்டர் நடந்து சென்று, பொருட்களை வாங்குவதில் சிரமங்கள் இருக்கின்ற காரணத்தினாலே, அருகிலேயே சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். கடந்த முறை நான் பேசுகிறபோது, புதிய ரேஷன் கார்டுகளுக்கு வழங்குகிற மண்ணெண்ணெய், கோதுமை, ரவை போன்றவையெல்லாம் பற்றாக்குறையாக இருக்கின்றன; கோதுமை பெரும்பாலும் வழங்கப்படுவதில்லை; ஒரு மாதத்திற்கு ஒரு நாள் மட்டும் எப்போதாவது வழங்கப்படுகின்றது என்கின்ற செய்தியைச் சொன்னேன். அதைப்போலவே, மண்ணெண்ணெய் கேட்டு, மத்திய அரசுக்கு 7 முறை கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் டெல்லி சென்று உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் பேசி இந்தப் பிரச்சினையை, மக்களுடைய பிரச்சினையை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர், question-ஐ மாத்திரம் கேளுங்கள்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** சரி. எனவே, டெல்லி சென்று பேசியதற்கேற்ப, உடனடித் தீர்வுகள் ஏதும் செய்வார்களா, தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் மிகவும் சிரமத்திலே இருக்கிறார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமாரவலசு பகுதியிலிருந்து கார்டுகளைப் பிரித்து மற்றொரு பகுதியில் பகுதிநேரக் கடையைத் துவக்க வேண்டுமென்று

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். 150 கார்டுகளும், 1½ கிலோ மீட்டர் தூரமும் இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரே அதற்கு அனுமதி வழங்கலாம் என்று ஏற்கெனவே அரசு அரசாணை பிறப்பித்திருக்கிறது. எனவே, அந்த வகையில், அந்த விதிக்கு உட்பட்டிருந்தால், அங்கே அதைப் பிரித்துக் கொடுப்பதற்கு அரசில் எந்தவிதக் காலதாமதமும் இல்லை. அதைப் பிரித்துக் கொடுத்துவிடலாம். இன்னொன்று, மண்ணெண்ணெய் பிரச்சினை. ஏற்கெனவே இதை நான் என்னுடைய மானியக் கோரிக்கையின்போது சொல்லியிருக்கிறேன். தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். அது வருகிறபொழுது அந்தப் பகுதி நிறைவடைகிற வகையில் மண்ணெண்ணெய் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு கடையைப் பிரித்துக் கொடுப்பதற்கு எவ்வளவு கிலோ மீட்டர் தூரம், இடைவெளி, எவ்வளவு கார்டுகள் என்கின்ற விதிமுறைகள் ஏதையாவது அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நான் இந்த மன்றத்திலேயே குறிப்பிட்டுக்கொண்டிருக்கிறேன், 1½ கிலோ மீட்டர் தூரம் இருந்தால் போதும்; 150 கார்டுகள் இருந்தால் போதும் என்று. ஏற்கெனவே 200 கார்டுகள், 2 கிலோ மீட்டர் தூரம் என்று இருந்தது. தற்போது தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு அதை 1½ கிலோ மீட்டர் தூரம் இருந்தால் போதும், 150 கார்டுகள் இருந்தால்போதும் என்று மாற்றியிருக்கிறது; அதற்கான ஆணையை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரே பிறப்பிப்பதற்கு அரசு அரசாணையைப் பிறப்பித்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்திலே நடைபெறுகிற முழுநேர அங்காடிக்குச் சட்டமன்ற



உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யலாம். ஆனால், பெரும்பாலும் கிராமப்புறத்திலே இருக்கிற பகுதிநேர அங்காடிக்குச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கினால், அதை மாவட்ட நிர்வாகம் நிராகரித்துவிடுகிறது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பகுதிநேர அங்காடிக் கடைக்கு நிதி ஒதுக்கிட அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் நேற்றையதினம்கூட இதற்குப் பதில் சொன்னேன். 1996-லிருந்து 2001 வரை இதுபோன்ற பொது விநியோகக் கடைகளுக்குத் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு தொடர்ந்து கட்டடங்களைக் கட்டிக்கொடுத்துக்கொண்டிருந்தது. இதற்கு சட்டப் பேரவை உறுப்பினர் நிதியிலிருந்தும் நிதி கொடுக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அஃதன்னியில், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலமாகவும் அப்பொழுது கட்டடங்களெல்லாம் கட்டிக்கொடுக்கப்பட்டன. 4-9-2001 அன்று அரசாணை எண் 221-லே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இதற்கு நிதி கொடுக்கக் கூடாது என்று முந்தைய அரசு ஓர் ஆணை பிறப்பித்திருக்கிறது. அதுதான் தொடர்ந்து நடைமுறையில் இருக்கிறது. நேற்றுகூட நான் இதைத்தான் பதிலாகச் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு சென்று, சட்டப் பேரவை உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதைக் கட்டிக் கொடுப்பதற்கு இந்த அரசு முனைப்புடன் செயல்படும் என்று சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பொது விநியோகக் கடைகளைக் கட்டித் தருவதற்கு அரசு முனைப்போடு செயல்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

[2007 ஏப்ரல் 24

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 38 இலட்சம் கார்டுகள், (மணியடிக்கப்பெற்றது) இல்லை, இல்லை, கேள்வியைத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அதுதான் கேட்கிறேன். குற்றச்சாட்டுச் சொல்லவில்லை. 38 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள். வம்பை இழுக்காதீர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அதற்கு வேண்டிய போதிய நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா? இந்த 38 இலட்சம் கார்டுகள் கூடுதலானதற்காக அதற்குக் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்ப அட்டை வழங்க வேண்டும் என்று சொன்னால் மனுக்களைப் பெற்று, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கிற மாவட்ட வழங்கல் அதிகாரிகள், சென்னையைப் பொறுத்தவரைக்கும், உதவி ஆணையர், இவர்கள் எல்லாம் ஒரு முறைக்கு இரண்டு முறை தணிக்கை செய்து, அதற்குப் பிறகு மேலதிகாரிகளும் தணிக்கை செய்து, கிட்டத்தட்ட இரண்டு, மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் ஒரு குடும்ப அட்டையினுடைய நிலைப்பாடுகளை நாம் அறிய முடியும். அப்படித்தான் அணுக முடியும், ஆகையினால்தான் காலதாமதம் ஆகிறது. அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்ததைப்போல, கணிசி அட்டைகளை வாரி வழங்கிவிட்டுப் போய்விட்டார்கள். அதில்தான் பல Bogus card-கள் இருப்பதைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறோம். பல இடங்களிலே Bogus card-கள் இருக்கின்றன. தொடர்ந்து நான்கூட என்னுடைய மானியக் கோரிக்கையில் சொன்னேன், கிட்டத்தட்ட 15 இலட்சம் Bogus card-கள் இப்போது



2007 ஏப்ரல் 24]

கண்டறியப்பட்டிருக்கின்றன. இப்போது அதை முறைப்படுத்தி, அதையெல்லாம் நீக்க வேண்டும். அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவைகளெல்லாம் முடிந்த பின்பு, உண்மையான கார்டுகளுக்கு உரிய மண்ணெண்ணெய், அரிசி, கோதுமையை தமிழக அரசின் சார்பாகக் கலைஞர் அரசு கட்டாயம் தரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிநேரக் கடைகளைத் திறப்பதற்கு, 150 கார்டுகளும், ஒன்றரைக் கிலோ மீட்டர் தூரமும் இருந்தால் போதும்; கடை திறக்கலாம் என்று தனி அலுவலர் அவர்களாலும், துறையினுடைய அந்தப் பகுதி Secretary அவர்களாலும், மற்றும் இணைப் பதிவாளர் அவர்களாலும் பரிந்துரைக்கப்பட்டு அது மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதிக்காகச் சென்று வந்ததற்குப் பிறகுதான் திறப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களது கடலூர் மாவட்டத்திற்கு ஆய்வுக்கு வந்தபோதுகூட என்னுடைய தொகுதியிலுள்ள வடக்குத்து, கட்டியம்பாளையம் போன்ற பகுதிகளில் நான்கு கடைகளைத் திறப்பதற்கு இந்த அதிகாரிகள்மூலம் பரிந்துரை செய்யப்பட்டு, கடந்த ஓராண்டுக்கும் மேலாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அனுமதிக்காக அப்படியே காத்துக்கொண்டிருக்கிறது. ஆதலால், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதிநேரக் கடைகளைத் திறப்பதற்கான அதிகாரங்களை அந்தப் பகுதியினுடைய செயலாளர் மற்றும் தனி அலுவலர் மற்றும் துணை அலுவலர்போன்றவர்களுக்கு வழங்கி அந்த அதிகாரிகளே ஆய்வு செய்து, அவர்கள் அதிகாரத்திற்குக் கொண்டுவந்து இதைத் திறப்பதற்கு ஆவன செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத் திட்டம் என்பது இன்றைக்கு மக்கள் மத்தியிலே இருக்கிற ஒரு அத்தியாவசியமான திட்டம். இதிலே பொருட்களையெல்லாம் வழங்குகிறோம். ஏற்கெனவே அங்கு இருக்கிற செயலாளர்கள், அங்கு இருக்கிற தனி அலுவலர்களை

[2007 ஏப்ரல் 24

வைத்து மட்டுமே இதை நாம் நிறைவேற்றிவிட முடியாது. அதனால்தான் நேரடியாக அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பித்து, அவர்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் அந்த [illegible] கடைகளைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்த [illegible] கடைகளைப் பற்றிய விவரங்களை என்னிடத்தில் குறித்துக் கொடுத்தால் உடனே மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்புகொண்டு, அவை அங்கு வருவதற்கு வேண்டிய முயற்சி செய்யப்படும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 127. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**127—**

## இணையதள வசதி

***994அ—திரு. கு. பிச்சாண்டி:**

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலைவாய்ப்புப் பதிவை இணையதளம்மூலம் செய்யும் வசதியை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தில் குறுக்கீடு எதுவும் இருக்கக் கூடாது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைவாய்ப்புக் கோரிப் பதிவு செய்துள்ளவர்கள் மேற்படி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள இணையதளத்தின்மூலமாக தங்களின் பதிவினைப் புதுப்பித்து வருகின்றார்கள். *(குறுக்கீடுகள்)*



2007 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள், *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள் முதலில்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** இருப்பினும், தமிழகத்திலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களையும் மத்திய அரசின் மின் ஆளுமைத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இன்டர்நெட்மூலம் பதிவினை மேற்கொள்வதற்கான வசதியினை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** Speaker Sir. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஒன்றும் குற்றச்சாட்டுச் சொல்லவில்லை. *(குறுக்கீடு)* இருங்கள் சொல்கிறேன். 39 இலட்சம் Ration Card-கள் வழங்கப்பட்டதில் 15 இலட்சம் Ration Card-கள் Bogus cards என்றும் அதைக் கண்டுபிடித்துள்ளோம் என்றுதான் சொல்கிறார். அதில் என்ன குற்றச்சாட்டு இருக்கிறது? அது உண்மைதானே? அது குற்றச்சாட்டு கிடையாதே! உண்மையை சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? வழங்கப்பட்ட 39 இலட்சம் Ration Card-களில் 15 இலட்சம் cards bogus cards. அதைத்தான் கண்டுபிடித்திருக்கிறோம் என்று சொல்கிறார். அதில் என்ன தவறு? It is a fact. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது, நடைபெற்றது. உண்மையான குறிப்புகளில் இருந்து, 39 இலட்சம் Ration Card-களில் 15 இலட்சம் Bogus card-கள் கொடுக்கப்பட்டன என்று சொல்கிறார். அதைத்தான் சொல்லியிருக்கிறார். அவர் ஒன்றும் குற்றச்சாட்டுச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணினிமூலம் ஒவ்வொரு வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் மேற்கொள்ளப்படும் பணிகள் யாவை என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு இல்லை. உட்காருங்கள். உண்மையை கண்டறிந்ததைத்தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) அதில் ஒன்றும் குற்றச்சாட்டு இல்லை. (குறுக்கீடுகள்) திரு. பிச்சாண்டி, (குறுக்கீடுகள்) அதில் குற்றச்சாட்டு இல்லை உட்காருங்கள்.

**HON. THIRU V.P. DURAISAMY (DEPUTY SPEAKER):** Sir, Question Hour-ல் இந்த மாதிரி செய்யக் கூடாது. After Question Hour, they have got right to say anything. They have no business at all to disturb the Question Hour-Question Hour-ல் இதையெல்லாம் பேசக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணினிமூலம் அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்படும் பணிகள் யாவை என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணினிமூலம் பதிவு செய்தல்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 39 இலட்சம் Ration Card-களில் 15 இலட்சம் bogus card-கள் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையைக் கண்டறியும் நிலையே தவிர, குற்றச்சாட்டு இல்லை.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** பதிவுதாரர்களின் கூடுதல் கல்வித் தகுதியைப் பதிவு செய்தல், வேலை அளிப்பவர்களுக்கு அரசு விதிமுறைப்படி பட்டியல் அனுப்புதல், வேலை நிலைத் தகவல் ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பணி ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 128. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**128—**

## அனுமதி

***4896—திரு. எஸ்.வி. சேகர்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மயிலாப்பூர், கபாலீஸ்வரர் கோயிலில் திருமணம் நடத்துவதற்கு மீண்டும் அனுமதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் நீண்ட காலமாகத் திருமணம் மற்றும் இதர சுப நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன. (குறுக்கீடுகள்) ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் இதுபோன்று... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், கேளுங்கள். 39 இலட்சம் Ration Card-களிலே 15 இலட்சம் Ration card-கள் bogus என்று சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) அது உண்மையைக் கண்டறியும் நிலைதானே தவிர, யார் மீதும் குற்றச்சாட்டு சொல்லவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** கடந்த ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற சுப நிகழ்ச்சிகள் நடத்துவதற்குத் தடை விதித்து விட்டார்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் bogus card போட்டீர்களா? நீங்கள் போட்டீர்கள் என்று அவர் சொன்னாரா? உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட

அறங்காவலர் குழு தீர்மானம் நிறைவேற்றி, கடந்த 15-2-2007 ஆம் நாள் முதல் திருமணம் மற்றும் இதர சுப நிகழ்ச்சிகள் முன்போல் நடைபெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.வி. சேகர், துணைக் கேள்வி கேட்கிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர், துணைக் கேள்வி கேட்க விருப்பம் இல்லை. (குறுக்கீடுகள்) வினா எண் (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுச் சொல்லக் கூடாது என்பது முறை. விடை சொல்கிற ஓர் அமைச்சர் கடந்த காலத்தில், கடந்த காலம் என்பது 5 ஆண்டுகளாகவும் இருக்கலாம்; 10 ஆண்டுகளாகவும் இருக்கலாம். (குறுக்கீடுகள்) பதில் சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. குறுக்கிட்டுப் பேசுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. ராஜா, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ராஜா, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய உரிமை, கடந்த கால நிர்வாக அடிப்படையில் தொடர்ந்து என்ன பணி ஆற்றுவது என்பதைச் சொல்வது. இடைக்காலத்திலே, கடந்த காலத்திலே ஏற்பட்ட குறைபாடுகளை இந்த அவையிலே சொல்வது குற்றச்சாட்டு ஆகாது. சொல்வதற்கு உரிமை உண்டு. அப்படிச் சொன்னதை எதிர்த்து யாரேனும் ஒருவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுந்து ஏதேனும் கருத்துத் தெரிவிக்க வேண்டுமேயானால் தெரிவிக்கலாம். மொத்தமாக ஒரு கட்சி உறுப்பினர்கள் எழுந்திருந்து அத்தனை பேருமாக நின்றுகொண்டு, அவை தொடர்ந்து நடைபெற முடியாமல் தடுப்பது என்பது இந்த அவை மரபுக்கு மாறுபட்டது, முறைகேடானது. அதைத் தாங்கள் அனுமதிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் கேள்விக்கு...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள், இதைக் கேள்வி நேரம் முடிந்த பிறகுகூட raise பண்ணலாம். (குறுக்கீடுகள்)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *என்னங்க? (குறுக்கீடுகள்) அவரே சொல்லிவிட்டார். அவர் சொன்ன பிறகு, நாங்கள் பதில் சொல்ல வேண்டாமா? என்னங்க இது! (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு கேள்வி முடிந்து, இன்னொரு கேள்விக்குச் சென்றுவிட்டோம்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *நீங்கள் சொல்வது நியாயமா? சபையை இப்படி நடத்துகிறீர்களே? (குறுக்கீடுகள்) என்ன நீங்கள்? (குறுக்கீடுகள்) என்ன இது! (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, சொல்லுங்கள்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *கேள்வி நேரத்தின்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு அமைச்சர் விளக்கம் சொல்வதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. ஆனால், அமைச்சர் தவறான புள்ளிவிவரங்களை, குற்றச்சாட்டுகளை அவர் சொன்னால், திரும்பவும் நாங்கள் கேள்வி கேட்பதற்கு எங்களுக்கும் உரிமை இருக்கிறது. அதைத்தான் நாங்கள் கேட்டோம். எங்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று சட்டப் பேரவைத் தலைவரிடம் கேட்டோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, நீங்கள் விஷயத்திற்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் Subject-ல் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் பேரவைத் தலைவர்மீது குற்றச்சாட்டுச் சொல்வது எல்லாம் இருக்கட்டும். முதலிலே Subject-க்குள்ளே போங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *சரி. புதிதாக 39 இலட்சம் கார்டுகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டன. ரேஷன் கார்டு இல்லாத குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன; 1 கோடியே 88 இலட்சம் பேர்களுக்கு கார்டுகள் வழங்கப்பட்டன; அதில் 1 கோடியே 49 இலட்சம் பேர்களுடைய*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

பழைய கார்டுகள் அவர்களுக்குப் புதுப்பித்து வழங்கப்பட்டன. புதிதாக 30 இலட்சம் பேர்களுக்கு Ration Card-கள் வழங்கப்பட்டன. அதைத்தான் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அள்ளித் தெளித்ததுபோல, கடந்த ஆட்சிக் காலத்தில், தேர்தல் வருகின்றது என்று 30 இலட்சம் கார்டுகளைக் கொடுத்துவிட்டார்கள்; அதில் 15 இலட்சம் bogus card-களை நாங்கள் கண்டுபிடித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் திரும்பவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேள்வி கேட்கின்றேன். நீங்கள் கண்டுபிடித்திருக்கின்ற அந்த 15 இலட்சம் bogus card-கள் ஒரு கோடியே 10 இலட்சம் கார்டுகளைப் புதுப்பித்தோமே, அவற்றில் இருக்கின்றனவா? 30 இலட்சம் Ration Card-கள் புதியதாக வழங்கப்பட்டனவே, அவற்றில் இருக்கின்றனவா? என்று ஆதாரம் உங்களிடம் இருக்கின்றதா என்பதைத்தான் நான் உணவு அமைச்சரைக் கேட்கின்றேன். ஆதாரம் வைத்திருக்கின்றாரா அவர்? ஆதாரம் இல்லாத ஒரு குற்றச்சாட்டை அமைச்சர் சொன்னால், திரும்பவும் நாங்கள் எழுந்து விளக்கம் கேட்டால்**

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைத் தலைவர்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டு அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாமல் நான் சொல்லவில்லை. ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இப்போது இல்லை. ஆதாரத்தோடுதான் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) ஆதாரத்தோடு சொல்ல விரும்புகிறேன். புதியதாகக் கொடுக்கப்பட்ட Ration Card-கள் குறித்து இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திம்மநாதபுரம், இடிவிலக்கி, சுப்பிரமணியபுரம் ஆகிய மூன்று ஊர்களில் நாங்கள் ஆய்வு செய்தபொழுது சுமார் இரண்டாயிரம் Ration Card-கள் இருக்கின்றன. அந்த இரண்டாயிரம் Ration Card-களில் 400 Ration Cards bogus cards என்று கண்டுபிடிக்கப்பட்டு, முந்தைய தினம் அவற்றுக்கு stoppage ஆணை போட்டிருக்கிறோம். அதற்காகத்தான் நான் சொன்னேன். இன்னும் பல இடங்களில் stoppage உத்தரவு ஏன் போடாமல் இருக்கிறோம் என்று சொன்னால்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது





பல இலட்சம் bogus ration cards கண்டறியப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து மேல் தணிக்கைக்கு உத்தரவு போட்டிருக்கிறேன். அவைகளையெல்லாம் கண்டுபிடித்துக் கட்டாயம் stoppage உத்தரவு போடுவோம். அதனால்தான் சொன்னேன். யாரும் திட்டமிட்டுச் சொல்லவில்லை. அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்ததைப்போல Ration Cards கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதனால்தான் தவறான Ration Card-கள் என்று நான் சொன்னேன். அதில் என்ன தவறு? (குறுக்கீடுகள்) யாரும் திட்டமிட்டுச் சொல்லவில்லை. தவறான Ration Card-கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் பொறுப்பேற்றுச் சொல்கிறேன். தவறான Ration Card-கள் உலவிக் கொண்டிருக்கின்றன. தவறான Ration Card-கள் இருக்கின்றன என்பதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Question hour என்பது விவாதத்திற்கான நேரமல்ல. சொல்லியாகிவிட்டது. அதற்கு அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் அவையின் நேரத்தை வீணாக்குகிறீர்கள். அவ்வளவுதான் சொல்லுவேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான Ration Card-களைக் கண்டுபிடிப்பதில் யாருக்கும் எந்தவிதமான...

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன் (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், நீங்கள் இங்கே பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், நீங்கள் இங்கே பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நடந்துகொள்ளும் முறை சரியில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் முறையில்லாமல் நடந்துகொள்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னைப் பார்த்துத்தான் பேச வேண்டுமே தவிர, அவை உறுப்பினரைப் பார்த்துப் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) நீங்கள் முன்னாள் அமைச்சராக இருந்து இருக்கிறீர்கள். இந்த மரபுகூட உங்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. (குறுக்கீடுகள் உறுப்பினரைப் பார்த்துப் பேசுவதை எல்லாம் அவையில் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான்தான் சொல்கிறேன் அல்லவா? நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லிவிட்டு உட்காருங்கள்

(குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசும்போது குறுக்கிடுவதற்கு அவர் யார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள். நேரத்தை வீணாக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகக் கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகளைச் சொல்லக்கூடாது என்பது மரபு ஒத்துக்கொள்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் சொன்னதுதான் சரியானது. அதாவது, அப்படியே யாராவது ஒரு மாண்புமிகு உறுப்பினரோ அல்லது யாரோ குற்றச்சாட்டைக் கூறியிருந்தால், கேள்வி நேரம் முடிந்த பிறகுதான் அதை எழுப்புவது இந்த மன்றத்தினுடைய மரபு. காரணம், இந்த மன்றத்திலே கேள்வி நேரம் மிக முக்கியமான நேரம். இந்த நேரத்தை வேறு எதிலும் சிதறடித்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் அத்தகைய ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரியாதது அல்ல. ஆக, அப்படி குற்றச்சாட்டு எழுப்ப வேண்டுமென்று இருந்தால்கூட zero hour-ல்தான் அதைக் கிளப்ப வேண்டுமே தவிர, கேள்வி நேரத்தை எடுத்துக்கொண்டு, 10-30 மணிக்கு மேலே கேள்வி நேரத்தை நீட்டுகிற நிகழ்வு இந்த மன்றத்தில் நடைபெற்றது கிடையாது. அதுதான் மரபு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. சேகர். (குறுக்கீடு) என்ன நீங்கள் திருப்பித் திருப்பிக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) சொன்னதற்குமேலே சொல்லிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) ஆமாம், இப்படி லாவணி பாடிக்கொண்டிருக்க வேண்டியதுதான். (குறுக்கீடுகள்) நீங்கள் அவரைச் சொல்ல வேண்டியது. அவர் இவரைச் சொல்லவேண்டியது. இதே வேலையாகப் போய்விட்டது. திரு. எஸ்.வி. சேகர், நீங்கள் கேள்வியைக் கேட்டால் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. பிறகு என்ன? ஒவ்வொரு நாளும் கேட்க வேண்டும். ஒவ்வொன்றுக்கும் எழுந்துகொண்டு பதில் சொல்லிக்கொண்டே





இருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) இங்கே லாவணி பாடிக்கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடுகள்) திரு. எஸ்.வி. சேகர், இது கேள்வி நேரம். (குறுக்கீடுகள்) முடியாது. போங்கள், போங்கள். (குறுக்கீடுகள்) இருப்பதாக இருந்தால் அவையில் இருங்கள். இல்லையென்றால் போங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கோஷமிட்டுக்கொண்டு அவையில் இருந்து வெளியேறினர்)*

*முற்பகல் 10-25*

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம், என்ன?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு அவையினுடைய விதியே தெரியவில்லை. விதியே தெரியாதவர்கள் விதியை ஏற்றுக்கொண்டு, அதனைச் செயல்படுத்துவதற்கு அவர்களுக்குப் பக்குவமும் இல்லை. ஒன்று படித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும்; இல்லையென்றால் அனுபவத்திலேயாவது கற்றுக்கொள்ள வேண்டும். எதுவுமே இல்லாமல், கூட்டமாக வந்து கோஷம் போடுவதும், வேறுவிதமான பிரச்சினைகளை எழுப்புவதும், கேள்வி நேரத்திலே விவாதத்தைத் தொடங்குவதும் என்பது இந்த அவையினுடைய மரபுக்கே எதிரான செயல். முதலிலே இதைப் பேசுவதற்கு நீங்கள் அனுமதித்ததே எந்த வகையிலே பொருத்தம் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கேள்வி நேரத்தின் இடையிலே விவாதிப்பது என்பதற்குரிய வாய்ப்பே கிடையாது. இடையிலே குற்றச்சாட்டைச் சொன்னால் அவர்கள் திரும்ப எழுப்பி, அந்தப் பிரச்சினைகள்மீது விவாதிக்கலாம்; கருத்துகளைச் சொல்லலாம். ஆனால், ஒரு கருத்தைச் சொல்கிறபோது, 15 இலட்சம் போலி Ration Card-கள் இருக்கின்றன என்பது உண்மை. இதை எப்படி மறுக்க முடிகிறது? அதிகாரிகள் ரீதியாக, அரசு ரீதியாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற உண்மையை மறைப்பதற்கான முயற்சி இது. இப்போது என்ன தெரிகிறது என்றால், அ.இ.அ.தி.மு.க. தேர்தலை மனதிலே வைத்துக்கொண்டு, 15 இலட்சம் போலி Ration Card-களை உலவவிட்டது உண்மை என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டு, (குறுக்கீடு) அதை மறுக்க இயலாத காரணத்தினாலே, இப்போது வெளிநடப்புச் செய்கிறார்கள். (குறுக்கீடு) போலியாக 15 இலட்சம் Ration Card-களை அவர்கள் உலவவிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 129. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதை மறுக்க முடியாத காரணத்தினாலே அவர்கள் வெளிநடப்புச் செய்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 129. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**129—**

**தொடக்கப் பள்ளி**

***8932—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் ஊராட்சி ஒன்றியம், ஆரியூர் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளியை அரசே ஏற்று நடத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆரியூர் செல்லப்பா நிதியுதவித் துவக்கப் பள்ளியை அரசு நடத்த உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்ம சிந்தனையுள்ள தனவான்களால் 50, 60 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்டு, அரசு உதவி செய்து வருகிற பள்ளிகளுக்கு, அந்தப் பள்ளிகளினுடைய புரவலர்கள் அவர்களுடைய பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கேற்ப பள்ளிகளைப்



பராமரிக்கின்றனர். பல இடங்களில் தலைமுறை மாற்றத்தாலும், புரவலர்கள் புலம் பெயர்ந்து சென்றதாலும், பள்ளிகளினுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலே இருக்கிறார்கள். அந்தப் புரவலர்களின் தொண்டுள்ளத்தைப் போற்றுகின்ற அதே வேளையிலே, அங்கே படிக்கின்ற மாணவர்களின் நலத்தைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, அறங்காவலர்களை அழைத்துப் பேசி, அந்தப் பள்ளிகளினுடைய அடிப்படைக் கட்டமைப்புகளை உயர்த்தச் சொல்லலாம் அல்லது அவர்களால் இயலாத நேரத்தில் அரசு உதவ முன்வருமா அல்லது அரசே எடுத்துக்கொள்ளுமா? அப்படி எடுத்துக்கொள்ளும்போது, அரசு அவர்களுக்கு இழப்பீடு வழங்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட அரசு நிதியுதவி பெறக்கூடிய பள்ளிகளை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அந்த நிருவாகத்தைச் சார்ந்தவர்கள் முதலிலே அதற்கு ஓர் ஒப்புதலைக் கொடுக்க வேண்டும். அந்தப் பள்ளியினுடைய நிருவாகக் குழுவைக் கூட்டி, பள்ளியிலே இப்போது இருக்கக்கூடிய நிருவாகம் மாத்திரமல்ல, அவர்களுடைய வாரிசுதாரர்களும் இணைந்து இந்தப் பள்ளியை அரசு ஏற்றுக்கொள்வதற்கு இணக்கமாக ஒரு தீர்மானத்தைப் போட்டு, அவர்கள் அதனை அளிக்க வேண்டும். இன்னொன்று, அந்தப் பள்ளியிலே இப்போது நிருவாகத் தகராறு ஏதும் இல்லாதபட்சத்திலே அரசு அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையும் அங்கே இல்லை. மற்றொன்று, ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அந்தப் பள்ளியிலே இப்போது இருக்கக்கூடிய பள்ளிக்கான கட்டடம், நிலம் ஆகியவற்றை அரசினிடத்திலே அவர்கள் ஒப்படைக்க வேண்டும். ஆக, இவற்றையெல்லாம் அந்தப் பள்ளி நிருவாகம் செய்தால் அரசால் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ள முடியும். நிதி உதவிபெறும் பள்ளிகளினுடைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தமட்டிலே, அரசாங்கமே இப்போது அளிக்கக்கூடிய மானியத்திலே 2 சதவீதம் maintenance grant ஆக அவர்களுக்கு ஏற்கெனவே கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். எனவே, அதனுடைய பணிகள் அந்த அடிப்படையிலே செய்யப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடைசியில் கேட்டதுபோல, அப்படி எடுத்துக்கொள்கின்ற நேரத்திலே அரசு அவர்களுக்கு ஏதாவது இழப்பீடு வழங்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு இழப்பீடு வழங்குவதற்கு அரசினிடத்திலே இப்போது எதுவும் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிதி உதவிபெறக்கூடிய தனியார் பள்ளிகளின் நிருவாகங்களே முன்வந்து, கட்டடங்கள் மற்றும் நிலங்கள் போன்றவற்றை அரசு எடுத்துக்கொள்வதில் ஆட்சேபனை இல்லையென்று, ஒரு தீர்மான வடிவிலே அரசுக்கு முன்மொழிவுகளை அனுப்பினால், அதை ஏற்றுக்கொண்டு அரசே நடத்துவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். எங்களுடைய பகுதியில் பேட்டூரை அடுத்து, ஸ்ரீ இராமகிருஷ்ணா குருகுலம் உயர்நிலைப் பள்ளி என்று ஒரு பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியை அரசு ஏற்று நடத்துவதற்கு, நிருவாகம் அரசுக்கு முன்வந்து ஒப்புதல் அளித்தால், அதனை அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு சில பள்ளிகளில்....

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. ஜி.கே.மணி:** அரசு உதவி பெறக்கூடிய சில பள்ளிகளில், நீண்ட காலமாக ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே, மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதலான பணியிடங்களை அப்பள்ளிகளுக்கு வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, இத்தகைய பள்ளிகளை அரசு ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்புவார்கள் என்று சொன்னால், அந்த நிலம், கட்டடம் போன்ற தளவாடங்களையெல்லாம் அரசின் பொறுப்பிலே ஒப்படைப்பார்கள் என்று சொன்னால், அரசு அதை ஏற்றுக்கொள்வதற்கு வழிவகை இருக்கிறது. ஏற்கெனவே இந்த மன்றத்திலேகூட, அதுபற்றிக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மூலமாக சில பள்ளிகள் கொண்டு வரப்பட்டு, அரசு அவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிகழ்வுகளும் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த குருகுலம் பள்ளியைக்கூட அத்தகைய ஒரு தீர்மானத்தின்மூலம் அவர்கள் அரசுக்கு அனுப்பியிருப்பார்கள் என்று சொன்னால், அரசு அதை முறைப்படிப் பரிசீலித்து, அரசினுடைய பொறுப்பிலே அதனை ஏற்றுக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும்.

அரசு நிதி உதவியைப்பெறுகின்ற பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர் பணியிடங்களைப் பொறுத்தமட்டிலே, அது நீண்ட காலமாக இருக்கக்கூடிய ஒரு பிரச்சினை. அதற்கு நான் பல முறை இந்த மன்றத்திலேகூட பதில் சொல்லியிருக்கிறேன். அரசினுடைய நிதியாதாரத்தைப் பொறுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே, வரக்கூடிய காலங்களிலே நாங்கள் கலந்து பேசி, அது குறித்து ஆவன செய்வதற்கு அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**130—**

## மயில்கள் கணக்கெடுப்பு

***8747—திரு. எஸ். ராஜகுமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசியப் பறவையான மயில்கள் குறித்த கணக்கெடுப்பு பணி தமிழ்நாட்டில் நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், தமிழகத்தில் உள்ள மயில்களின் எண்ணிக்கை எவ்வளவு? மயில்களைப் பாதுகாக்க எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2005-ல் எடுக்கப்பட்ட கணக்கின்படி தேசியப் பறவையான மயில்களின் எண்ணிக்கை, பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் 110 என்றும், பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே 1,881 என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. மயில்களைக் காப்பதற்காக, 1972 வன உயிரினப் பாதுகாப்புச் சட்டப்படி மயில்களை இறைச்சிக்காகவோ, அவற்றினுடைய இறக்கைகளுக்காகவோ வியாபார நோக்கோடு வேட்டையாடுபவர்கள்மீது அந்தச் சட்டப்படிக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் வனப் பகுதியிலே பர்கூர் இன மாடுகள் என்று சமீப காலத்திலே 40 ஆயிரம் மாடுகளுக்குமேல், அவைகளுக்குப் பட்டிகள் மட்டுமே உண்டு. அவை கட்டுத் தறி போட்டுக் கட்டப்படுகிற மாடுகள் அல்ல. வனப் பகுதிகளிலே மேய விடப்படுகின்ற மாடுகள். அது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி மயில் சம்பந்தப்பட்டது.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** வனப் பகுதியில் இருப்பதனால் சொல்கிறேன். வேறு ஒன்றும் இல்லை. மத்திய ஆராய்ச்சி நிலையமும், தமிழக ஆராய்ச்சி நிலையமும் கலந்து பேசிப் பார்த்ததிலே, ஆய்வு மேற்கொண்டதற்குப் பின்னாலே, 20 ஆயிரம் மாடுகள்தான் இப்போது இருக்கின்றன என்றும், அந்த இனம் அழிந்து வருகிறது என்றும், சமீபத்திலே செய்தித்தாள்களிலே குறிப்புகள் வந்திருக்கின்றன. ஆக, அந்த இனத்தைக் காப்பதற்கு வனத் துறை ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள அந்தக் காட்டு மாடுகளையெல்லாம் பத்திரமாகப் பாதுகாப்பதற்கு, அவை வெளியே வராமல் இருப்பதற்காக, அந்தப் பகுதியிலே வேலிகள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அகழிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. எனவே, அவற்றைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### எதிர்க்கட்சித் தலைவர்மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்படுமென ஜெயா தொலைக்காட்சி அலுவலகத்திற்கு வந்த மிரட்டல் கடிதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயா தொலைக்காட்சியை முடக்க சதி என்பது குறித்தும், அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என்று மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டது குறித்தும் அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஓ. பன்னீர்செல்வம், கே.ஏ. செங்கோட்டையன், டி. ஜெயக்குமார் ஆகியோர் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து சுருக்கமாகப் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 21-4-2007 அன்று ஜெயா டிவியினுடைய செய்திப் பிரிவிற்கு வரப்பெற்ற ஒரு கார்டில் ஒரு தகவல் எழுதப்பட்டு, அதில், "தமிழக முதல்வர் பற்றிய செய்திகளை வெளியிட வேண்டாம்; மீறினால் மாண்புமிகு அம்மா அவர்கள்மீது வெடிகுண்டுத் தாக்குதல்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2007 ஏப்ரல் 24

நடைபெறுவது உறுதி; முடிந்தால் தடுத்துப் பார்" என்று எழுதி, கீழே 'விடுதலைப் புலிகள்' என்று குறிப்பிட்டு, card வரப்பெற்றிருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 10 ஆண்டு காலம் தமிழகத்தினுடைய முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்து, 20 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த இயக்கத்தினை நடத்தி வருகின்றார்கள்.

முற்பகல் 10-35

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த நேரத்தில் ரௌடிகள் ராஜ்ஜியம் ஒழிக்கப்பட்டது. தீவிரவாதம் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் வராதவாறு பாதுகாத்து, தமிழகத்தை அமைதிப் பூங்கா மாநிலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் வைத்து ஆட்சி செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தீவிரவாதிகளின் கைவரிசை ஒடுக்கப்பட்டது; ஜாதிச் சண்டைகள் இல்லை; மதக் கலவரங்கள் இல்லை; சிறுபான்மையினப் பெருமக்கள் மிகவும் அமைதியாக வாழ்வதற்குரிய ஒரு சூழ்நிலையை, ஒரு நாட்டினுடைய முதலமைச்சர் எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுத்து, சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் இந்தியாவில் தலைசிறந்த முதலமைச்சராக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு 'விடுதலைப் புலிகள்' என்ற பெயரில், 'வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்படும்' என்று அவர்களுக்கு மிரட்டல் வந்திருக்கின்றது. முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி இந்த மண்ணில் மாண்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் subject-க்குள்ளே வாருங்கள். தேவையில்லாத பிரச்சினையை எல்லாம் எடுக்காதீர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள்; ஜெயா டி.வி.-யின் மேலே. . .

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எதற்காக என்று காரணம் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அதெல்லாம் இருக்கட்டும். இது குறித்துக் கவனத்தை ஈர்க்கிறேன் என்று மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)



2007 ஏப்ரல் 24]

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேசுவதற்குத்தானே கூப்பிட்டிருக்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அதையெல்லாம் ஒத்துக்கொள்ள முடியாது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கவனத்திற்குக் கொண்டு வாருங்கள் என்று நீங்கள் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் சம்பந்தமில்லாமல், Subject-ஐ deviate பண்ணி, வேறு இடத்திற்குப் போவதை நான் like பண்ணமாட்டேன். (குறுக்கீடுகள்) விரும்பமாட்டேன்; அதை ஒத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** Subject-ஐ ஒட்டித்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்ன subject கொடுத்திருக்கிறீர்களோ, அதைத்தான் இங்கே பேச வேண்டும். (குறுக்கீடுகள்) ஒன்று சொல்கிறேன். கேளுங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற பெயரால், இந்த அவையில் ஒரு பிரச்சினையை எழுப்புவதாக இருந்தால், எதற்காக ஒத்திவைப்புத் தீர்மானம் என்பதைச் சுருக்கமாகத்தான் சொல்ல வேண்டும். அந்தத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டால்—இப்போது அனுமதிக்கப்படவில்லை. (குறுக்கீடு) இது அனுமதி அல்ல—சட்டமன்ற மரபின்படி, ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொண்டு வர விரும்புகிறவர் அதற்கான சுருக்கமான காரணத்தைத்தான் இப்பொழுது சொல்லலாம். முதலமைச்சரோ அல்லது ஆளுங்கட்சியின் சார்பிலேயோ பதில் சொன்னதற்குப் பின்னர், இந்த அவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டால், எதை வேண்டுமானாலும் தொடர்ந்து பேசலாம். ஆகவே, இப்பொழுது ஒரு கவன ஈர்ப்பு என்ற அந்த எண்ணத்தோடு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துச் சொல்லக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டப் பேரவைத் தலைவரிடத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். ஆனால், அவர்கள் அதை சிறப்புக்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2007 ஏப்ரல் 24

கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டு, அதில் பேசுவதற்காகத்தான் என்னை அழைத்தார்கள். அதில்தான் நான் இப்பொழுது பேசிக்கொண்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் முதலில் நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் நேற்றைக்குக் காலை 9-25 மணிக்குக் கொடுத்திருக்கிறீர்கள்; 9-30 மணிக்கு அதை எடுக்கவில்லை என்று சொல்லி, அவ்வளவு பேரும் walk out செய்தீர்கள். நான் இதைப் பரிசீலனை செய்ய வேண்டாமா? (குறுக்கீடு) இதில் என்ன இருக்கிறது, ஏது இருக்கிறது என்று தெரிந்துகொள்ள வேண்டாமா? (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பற்றிய தகவல் எனக்குத் தெரிய வேண்டாமா? (குறுக்கீடு) இதெல்லாம் இல்லாமல், நீங்கள் காலை 9-25 மணிக்குக் கொடுத்துவிட்டு, 9-30 மணிக்கு எடுக்க வேண்டும் என்று சொன்னால், என்ன நியாயம்? (குறுக்கீடுகள்) இதை ஏற்றுக்கொள்ள முடியாது. முதலில் நீங்கள் சொல்வதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். திரு. பன்னீர்செல்வம், நீங்கள் பேசுங்கள்; விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதாவது, வரப்பெற்ற அந்தக் கடிதத்தில், மிரட்டல் விடுத்தவர்கள் விடுதலைப் புலிகள் என்று இருந்ததனால், விடுதலைப் புலிகள் பற்றி நான் பேச வேண்டிய சூழ்நிலை வந்தது. அதற்காகத்தான் ராஜீவ் காந்தியினுடைய படுகொலை பற்றி நான் இங்கே இந்த நேரத்தில் சொல்ல வேண்டிய கருத்து வந்தது. அதில் நீங்கள் இடைமறித்தீர்கள். ஏனென்று சொன்னால், ராஜீவ் காந்தி இந்தத் தமிழ் மண்ணில் . . .

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Subject ஜெயா டி.வி. சம்பந்தப்பட்டது; எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தப்பட்டது. அதை மாத்திரம் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதைத்தான் நான் சொல்கிறேன்.



2007 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவனத்தை ஈர்க்கிறேன் என்று மட்டும் சொல்லுங்கள். அதைத் தவிர, வேறு எந்த Subject-ஐயும் பேச நான் allow பண்ணமாட்டேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்**: அதைத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜீவ் காந்தி assassination-பற்றி இங்கே யாருக்கும் தெரியாதா? எல்லோருக்கும் தெரியும். விஷயத்தை மாத்திரம் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்**: என்ன இது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Subject-லிருந்து deviate ஆக நான் விடமாட்டேன். கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருங்கள், அவ்வளவுதான்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்ன இது? கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு அப்படியே உட்கார வேண்டியதுதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை ஒத்துக்கொள்ள முடியாது. நீங்கள் இந்த subject-லியிருந்து வேறு subject-க்குள் போவதை நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்த அந்தத் தீர்மானத்தைப் பற்றி அவர்கள் கருத்துச் சொல்வதிலே எந்த ஆட்சேபனையும் எங்களுக்கு இல்லை. அவர் ராஜீவ் காந்தியைப் பற்றிக் குறிப்பிட்ட காரணத்தினாலே கேட்கிறேன். ராஜீவ் காந்தி தமிழகத்திற்கு வந்தபோது அவர்களது கூட்டணியை ஆதரிப்பதற்காகத்தான் வந்தார். அவர் வந்த நேரத்திலே, அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் யாரும் போய் அவரை வரவேற்கவும் இல்லை. அவர் இறந்ததற்குப் பிறகு அவரது உடலை டெல்லிக்கு அனுப்பிய நேரத்திலேயும் ஒரு அ.இ.அ.தி.மு.க. தலைவர்கூட அங்கே போய் உடன் இருந்து அனுப்பி வைக்கவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, திருமதி சோனியா காந்தி அவர்கள் வந்தபோது அவர்களுக்கு ஆறுதல் தெரிவிக்கக்கூட அ.இ.அ.தி.மு.க.காரர்கள் யாரும் அதிலே ஈடுபடவில்லை. எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், ராஜீவ் காந்தியைப் பற்றிப் பேசுவது அ.இ.அ.தி.மு.க.வுக்குச் சரியல்ல. (குறுக்கீடு)

[2007 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், subject-ஐ மாத்திரம் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் சொல்ல வந்ததைச் சுருக்கமாகத்தான் சொல்ல வந்தேன். ராஜீவ் காந்தி படுகொலைக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை இருக்கிறது. நீங்கள் சொல்லக்கூடிய subject (குறுக்கீடு) எது சம்பந்தமாக நீங்கள் கொடுத்திருக்கிறீர்களோ, அதைப் பற்றி மாத்திரம், கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ராஜீவ் காந்தி படுகொலைக்குக் காரணமானவர்கள் விடுதலைப் புலிகள்தான் என்பதனை நாடு நன்றாகவே அறியும். வழக்கும் நடைபெற்று முடிந்திருக்கிறது. தீர்ப்பும் வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த அமைப்பிலிருந்து இன்றைக்குக் கடிதம் வரப்பெற்றிருக்கின்றது. ஒரு நாட்டினுடைய பிரதமர், இளந்தென்றலாக அரசியல் வானில் வலம் வந்த ஒருவரை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், Mr. Panneerselvam, நீங்கள் Subject-லிருந்து deviate பண்ணிக்கொண்டு போகிறீர்கள். (குறுக்கீடு) அவையின் நேரத்தைக் கெடுக்கிறீர்கள். நீங்கள் Subject-ஐப் பற்றி சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். இல்லாவிட்டால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) நான் இரண்டு, மூன்று முறை சொல்லிவிட்டேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் Subject பற்றியும் சொல்ல விடமாட்டேன் என்கிறீர்கள். ராஜீவ் காந்தியைப் பற்றியும் சொல்ல விடமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) நான் subject-க்கு வந்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம், நீங்கள் எந்த subject-ஐப் பற்றிக் கொடுத்திருக்கிறீர்களோ, அந்த subject-லிருந்து deviate ஆகிப் போய்க்கொண்டிருக்கிறீர்கள். அதை நான் அனுமதிக்க முடியாது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆகவே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.



2007 ஏப்ரல் 24]

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சட்டம் ஒழுங்கைச் சீராகப் பராமரித்து, ரௌடிகள் ராஜ்ஜியத்தை ஒழித்தார்; தீவிரவாதிகளைத் தடுத்தார்; விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைத் தமிழ்நாட்டில் இல்லாமல் செய்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஒரே காரணத்திற்காக அரசியல் விமர்சனங்களை ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பான முறையில் விமர்சனம் செய்யக் கூடாதா? செய்தால் அவர்மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என்று இன்றைக்கு அச்சுறுத்தல் வந்திருக்கின்றது. ஆகவே, இன்றைக்குப் பொறுப்பில் இருக்கின்ற அரசு இதைத் தடுத்து நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது என்பதை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இந்த விஷயம் பற்றி ஒரு கடிதம் கொடுத்து, அவையிலே இதைப் பற்றித் தன்னுடைய கருத்துகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று விரும்பியபோது, மரபுப்படி, வழக்கப்படி தாங்கள் என்னிடத்திலே, அவை முன்னவரிடத்திலே அதைக் காட்டி, இது பற்றி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கடிதம் கொடுத்திருக்கிறார் என்று சொன்னபோது, இதிலேயுள்ள சாராம்சம் பற்றி காவல் துறையினரிடமிருந்து அவர்களுடைய கருத்துகளைக் கேட்டு, என்ன நடந்தது என்பதை விசாரித்து, அவருக்கு விளக்கம் அளிக்க நாங்கள் தயாராக வர வேண்டும்; அரைகுறையாக இதற்குப் பதில் சொல்ல முடியாது; ஏனென்றால், பிரச்சினையைக் கிளப்புகின்றவர், எதிர்க்கட்சியின் துணைத் தலைவர், பொறுப்பான ஒரு கட்சியினுடைய துணைத் தலைவர். பொறுப்பான முறையிலே பேசும்பொழுது, பொறுப்பான வகையிலேதான் நாம் பதில் சொல்ல வேண்டும்; ஆகவே, ஒரு நாள் அவகாசம் கொடுங்கள்; என்னவென்று விசாரித்து விவரமாக நாளைக்கு இதைப் பற்றி விளக்கம் அளிக்கிறேன் என்று நான் உங்களிடத்திலே சொன்னேன். அதை நீங்கள் இந்த அவையிலே சொல்லி, அவர்களைச் சமாதானப்படுத்தி, இன்றையதினம் பேசலாம் என்று அவர்களை உங்கள் வழிக்குக் கொண்டு வருவதற்கு முன்பு, அவர்கள் இதுதான் எங்கள் வழி என்று வெளியேறிவிட்டார்கள். உள்ளபடியே நான் வருத்தப்படுகிறேன்.

அவர்கள் நேற்றையதினமே பொறுமையுடன் காத்திருந்து, நானும் இது பற்றிய செய்திகளைச் சேகரித்து, இங்கே பதில் சொல்ல அவகாசம் அளித்திருக்கலாம். இன்றைக்கும் அவர்கள் உணர்ச்சிவயப்பட்டுப் பேசுவதிலே பொருள் இல்லாமல் இல்லை. ஏனென்றால், ஒரு கட்சியினுடைய தலைவருக்கு மிரட்டல், உயிருக்கே ஆபத்து என்பன போன்ற கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள் வரும்பொழுது, அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் முன்னணியினரானாலும், தொண்டர்களானாலும், அது பற்றி ஆத்திரப்படுவதும், அது பற்றி ஆவேசம்கொள்வதும் சகஜம்.

அந்த வகையிலே, இன்றைக்கு இந்தப் பிரச்சினை பற்றிப் பேசும்போது, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அல்லது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சற்று ஆவேசமுற்றால், அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல், இந்த அவையிலே சிறு அமளிகூட ஏற்படாத ஒரு நிலையை ஏற்படுத்துகின்ற பொறுப்பை நீங்களும், நாங்களும் சேர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் உறுதியெடுத்துக்கொள்கின்றேன். நான் எழுத்துமூலமாகச் சேகரித்த விவரங்களை இங்கே தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

முற்பகல் *10-45*

*22-4-2007* அன்று ஜெயா தொலைக்காட்சித் துணைத் தலைவர் எஸ். ரங்கநாதன் என்பவர், ஜெயா தொலைக்காட்சிக்கு "வெங்கடேசன், என்.ஜி.ஓ. காலனி, திருநெல்வேலி" என்ற rubber stamp இட்ட விலாசத்தோடு, விடுதலைப் புலிகள் என்ற பெயரில், "தமிழக முதல்வர் பற்றிய செய்திகளை வெளியிடக் கூடாது; மீறினால், செல்வி ஜெயலலிதா மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடைபெறுவது உறுதி. முடிந்தால் தடுத்துப் பார்" என்ற மிரட்டல் வாசகங்கள்கொண்ட அஞ்சல் அட்டை ஒன்று கிடைக்கப்பெற்றதாகவும், அது குறித்து நடவடிக்கை எடுக்கக் கோரி, சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் மனு ஒன்றை அளித்துள்ளார். இது குறித்து, சென்னை காவல் மத்தியக் குற்றப் பிரிவு, குற்ற எண் *184/2007*, பிரிவுகள் *506*(i), *507*(i), இ.த.ச.படி வழக்குப் பதிவு செய்து, காவல் துறையினர் ஜெயா தொலைக்காட்சி அலுவலகத்திற்கு வெடிகுண்டைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்யும் பிரிவினரோடு சென்று, சோதனை செய்து, அங்கு வெடிகுண்டு எதுவும் வைக்கப்படவில்லை என்று கண்டறிந்தார்கள். மேலும், ஜெயா தொலைக்காட்சி அலுவலகம் அமைந்துள்ள பகுதியில், காவல் ரோந்து வாகனங்கள் மற்றும் காவலர்களை அனுப்பிக் கண்காணிக்க ஏற்பாடுகள் செய்துள்ளார்கள்.





இதுபோன்ற மிரட்டல் கடிதங்கள், மிரட்டல் மின் அஞ்சல்கள், தொலைபேசி மிரட்டல்கள் அவ்வப்பொழுது முக்கிய நபர்களுக்குத் தொடர்ந்து வந்துகொண்டுள்ள ஒரு செயலாகும். பெரும்பாலும், இதுபோன்ற மிரட்டல் கடிதங்களை அனுப்புகின்றவர்கள், மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டதாலும், விளையாட்டாகவும், ஒரு சில பிரச்சினைகள் குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கவும், விஷமத்தனமாகவும், ஒரு சில பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டதாலும் அனுப்புவதாகத் தெரிய வருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், முதலமைச்சராக இருந்த காலத்தில், *2001-2006* காலக்கட்டத்தில் இதுபோன்ற மிரட்டல் கடிதங்கள் அவருக்கு வந்துள்ளன. உதாரணமாக, *9-11-2001* அன்று தமிழ் தேசிய விடுதலைப் படை என்ற பெயரிலும், *4-2-2002* அன்று தமிழ் ஈழம் என்ற பெயரிலும், *29-4-2002* அன்று இமாம் அலிகான் என்ற பெயரிலும் மின் அஞ்சல்—e-mail—மிரட்டல்களும், *20-6-2002* அன்று கோவை, பத்திரிகையாளர் சங்கத்திற்கு ஒரு அநாமதேய மிரட்டல் கடிதமும், *19-6-2002* அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரில் தினமலர் நாளிதழ் ஆசிரியருக்கு ஒரு மிரட்டல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், இதுபோன்று *11* மிரட்டல்கள் பலருக்குக் கிடைக்கப்பெற்று, அதில் மின் அஞ்சல்மூலம் இமாம் அலிகான் என்ற பெயரில் மிரட்டல் அனுப்பிய அனிதா என்ற பெண் கைது செய்யப்பட்டுள்ளார். மற்ற மிரட்டல்களை அனுப்பியவர்கள் யார் என்று இதுவரையிலே விசாரணையில் தெரிய வரவில்லை. இதேபோன்று, இந்த அரசு பதவியேற்றபிறகும், இதுபோன்ற மிரட்டல் கடிதங்கள் வந்துகொண்டுதான் உள்ளன.

முற்பகல் *10-50*

உதாரணமாக, *4-9-2006* அன்று நமது குடியரசுத் தலைவர் அவர்கள் சென்னை வந்தபோது, விமானத்தில் வெடிகுண்டு வைத்துள்ளதாகத் தொலைபேசியிலே வந்த மிரட்டல் குறித்து, வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அந்த வழக்கைக் காவல் துறையினர் ஒரே நாளில் கண்டுபிடித்து, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த பேரின்பராஜ் என்பவரைக் கைது செய்தார்கள். முதலமைச்சர் உயிருக்கு, அதாவது என்னுடைய உயிருக்கு ஆபத்து விளைவிக்கப்படும் என்று அச்சுறுத்தி, *28-11-2006* அன்று அல்-உம்மா மதானி இயக்கம் என்ற பெயரில் திருப்பூர் நகராட்சித் தலைவருக்கு ஒரு மிரட்டல் அஞ்சல் அட்டையும், ஐயப்பன் மற்றும் சரவணன் என்ற பெயரில், *10-8-2006* அன்று தமிழ்நாடு அரசு தேர்வாணையத் தேர்வுக் கட்டுப்பாட்டாளருக்கு ஒரு

மிரட்டல் கடிதமும், வீரப்பன் என்ற அநாமதேயப் பெயரில் சென்னை, தலைமைச் செயலகத்திற்கு ஒரு மிரட்டல் கடிதமும், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி, நரசம்பாளையத்தைச் சேர்ந்த ராஜா என்ற பெயரில், *16-1-2007* அன்று அனுப்பிய மிரட்டல் அஞ்சல் அட்டை ஒன்றும் கிடைக்கப்பெற்று, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகிறது. *16-3-2007* அன்று சென்னை, காவல் துறைக் கட்டுப்பாட்டு அறைக்குத் தொலைபேசியில், மாண்புமிகு முதலமைச்சர் வீட்டில் வெடிகுண்டு வைத்திருப்பதாக வந்த ஒரு மிரட்டல் குறித்து, வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. 4-4-2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்திற்கு மின் அஞ்சல்மூலம் மிரட்டல் அனுப்பிய, மும்பையில் வசிக்கும் சுப்பிரமணி என்பவர் மறுநாளே கைது செய்யப்பட்டார்.

காவல் துறையினர் இதுபோன்ற மிரட்டல் கடிதங்கள் வரும்பொழுதெல்லாம் உடனடியாகத் தீவிர விசாரணை செய்து, மிரட்டல் விடுத்த ஒரு சிலரைக் கைது செய்துள்ளார்கள். ஒரு சில அநாமதேய மிரட்டல்களுக்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லாததால், கண்டுபிடிக்க இயலாமலும் போய்விட்டன. ஆனால், இதுபோன்ற மிரட்டல்கள் வரும்பொழுது, குறிப்பிட்ட தலைவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கப்பட்டு, அசம்பாவிதம் எதுவும் நிகழாமல் காவல் துறை பார்த்து வந்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு மிரட்டல் கடிதம் அனுப்பிய அதே நபர், *20-4-2007* அன்று மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் நிர்வாக அதிகாரிக்கு, மேலே குறிப்பிட்ட அதே rubber stamp விலாசத்தோடு அல்-உம்மா என்ற பெயரில் "மதுரையில் அடுத்த சில நாளில் வெடிகுண்டுத் தாக்குதல் நடைபெறும், முடிந்தால் தடுத்துப் பார், தமிழக முதல்வர்மீது வெடிகுண்டு வீச்சு நடைபெறும்" என்றும், *21-4-2007* அன்று சென்னைத் துறைமுக நிர்வாகத் தலைவருக்கு அதே நபர், அதே rubber stamp விலாசத்தோடு, அல்-உம்மா என்ற பெயரில் "அடுத்த சில நாட்களில் தொடர் வெடிகுண்டுத் தாக்குதல் நடைபெறும், முடிந்தால் தடுத்துப் பார்; படகு வெடிகுண்டுத் தாக்குதல் நடைபெறுவது உறுதி" என்று இரண்டு கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இதிலிருந்து, இக்கடிதங்களை அனுப்பியவர் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு அனுப்பியதாகத் தெரியவில்லை. என்றாலும், இக்கடிதங்கள் அனுப்பிய நபரைக் கண்டுபிடிக்கக் காவல் துறை தீவிர





நடவடிக்கை எடுத்து வருகிறது. எதிர்க்கட்சித் தலைவருக்கு, 'இசட் பிளஸ்' மற்றும் தேசியப் பாதுகாப்புப் படை (N.S.G.) பாதுகாப்புக்குரியவர் அவர் என்பதால், நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீடு—மத்திய அரசின் மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க உச்ச நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடையினை நீக்கக் கோரி மத்திய அரசு தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது' குறித்து பேரவை விதி 56-ன்கீழ் அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஓ. பன்னீர்செல்வம், கே.ஏ. செங்கோட்டையன், டி. ஜெயக்குமார், செ. கருப்பசாமி, மற்றும் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் டி. சுதர்சனம், எஸ். பீட்டர் அல்போன்ஸ், சி. ஞானசேகரன், கு. ஹசன் அலி, கரி. இராமசாமி, கோவை தங்கம், ஆர்.எம். பழனிசாமி, ராம. சுப்புராம், பெ.சு. விஜயகுமார் மற்றும் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திருவாளர்கள் ஜி.கே. மணி, தி. வேல்முருகன் மற்றும் கி. ஆறுமுகம் ஆகியோரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திருவாளர்கள் சி. கோவிந்தசாமி, என். நன்மாறன் மற்றும் செல்வி கே. பாலபாரதி ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திருவாளர்கள் வை. சிவபுண்ணியம், சு. குணசேகரன், கே. உலகநாதன் மற்றும் தி. இராமசாமி ஆகியோரும், ம.தி.மு.க. சார்பில் திருவளர்கள் நா. இராமகிருஷ்ணன் மற்றும் வீர. இளவரசன் ஆகியோரும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். திரு. து. ரவிக்குமார் அவர்களும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாகப் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், சுருக்கமாகச் சொல்லுங்கள். கவனத்தை ஈர்க்கிறேன் என்பதோடு நிறுத்திக்கொள்ளுங்கள்.

முற்பகல் 10-55 [2007 ஏப்ரல் 24

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாடு என்று சொல்லும்போது, அதற்கு ஒரு நீண்ட நெடிய வரலாறு உண்டு. ஏனென்று சொன்னால், முதல் Communal G.O. போட்ட ஒரு மாநிலம் என்று சொன்னால், நம்முடைய தமிழ்நாடுதான். எனவே, ஆண்டாண்டு காலமாக ஆதி திராவிடர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், மிகவும் பின்தங்கியவர்கள், பழங்குடியினர்கள், சீர்மரபினர்கள், இவர்கள் அனுபவித்து வந்த அந்தச் சலுகைகள், 69 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு மண்டல் கமிஷன் அடிப்படையிலே உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியபோது, மாண்புமிகு கழகப் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைக்குத் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்தபோது, உடனடியாக இந்தப் பாதகத்திலிருந்து, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள், ஆதி திராவிடர்கள், மிகவும் பின்தங்கியவர்கள், சீர் மரபினர்களை மீட்டாக வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதி, அன்றைக்கு பாரதப் பிரதமராக இருந்த திரு. பி.வி. நரசிம்ம ராவ் அவர்களையும் சந்தித்துத் தமிழ்நாட்டினுடைய நிலைமைகளையெல்லாம் எடுத்துக் கூறி, இந்திய அரசியல் சட்டத்தின் 9-வது அட்டவணையிலே சேர்த்த பெருமை, சமூக நீதிக் காவலராக விளங்கிக்கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படிப்பட்ட ஒரு நிலையில் (குறுக்கீடு) 69 என்றுதான் சொன்னேன். இப்படிப்பட்ட ஒரு நிலையில், சமீபத்தில் மத்திய அரசு 27 சதவீதம் அளவிற்கு மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களான ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்.போன்ற நிறுவனங்களில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, உச்ச நீதிமன்றத்திலே அந்தச் சட்டத்தை challenge செய்தபொழுது, இதை அமல்படுத்தக்கூடாது என்கின்றவகையிலே ஒரு தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியபோது, அன்றைக்கும் இந்தியாவினுடைய Solicitor General-ம், Attorney General-ம் இந்த வழக்கிற்காக ஆஜராகவில்லை.

அதேபோன்று, ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் தடையை விலக்க முடியாது என்று நேற்றையதினம் உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் கூறியபோது, இந்த Solicitor General-ம், Attorney General-ம் நேற்றைக்குக்கூட ஆஜராகவில்லை. இது எப்படியிருக்கிறது



என்று சொன்னால், பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுகின்ற கதையாக இருக்கிறது. அதேபோன்று, நான் அடிப்பது போல அடிக்கின்றேன், நீங்கள் அழுவதுபோல அழுங்கள் என்று சொல்லுகின்ற கதையாகத்தான் இன்றைக்கு மத்திய அரசினுடைய நிலை இருக்கிறது என்று எல்லோரும் கருதுகின்றனர்.

மத்திய அரசும் நாங்கள்தான், மாநில அரசும் நாங்கள்தான் என மார்தட்டிக்கொள்ளும் நீங்கள், உச்ச நீதிமன்றம் தடை விதிக்க மறுத்து இருக்கின்ற இந்த நிலைக்கு, நீங்கள் என்ன நிலையை உறுதியாக எடுக்கப் போகின்றீர்கள்? நம்முடைய மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், அவருடைய மானியக் கோரிக்கையின்போது உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிகூட, எங்களுடைய முதலமைச்சர் சொல்லித்தான், அவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையிலேதான் வந்தார்கள் என்று சொன்னார்கள். இவ்வளவு செல்வாக்கை வைத்திருக்கின்ற நீங்கள், இந்த 27 சதவிகிதத்தைக் கோட்டைவிட்டுவிட்டீர்களே என்கின்ற பெரிய வேதனையையும், கண்டனத்தையும் இன்றைக்கு நாங்கள் தெரிவிக்க விரும்புகிறோம் என்று சொல்லி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடும், தமிழகத்தினுடைய அரசியல் வரலாறும் பிரிக்க முடியாதது. இந்தியா முழுவதும் சுதந்திரப் போராட்ட வரலாற்றுக்குப் பின்பு, சமூக நீதிப் போராட்டத்தினை முன்னெடுத்துச் சென்ற வரலாறும் இந்தியாவெங்கும் இருக்கின்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுதலையும், தலைமையையும் கொடுத்த ஒரு மாநிலம் இருக்கிறது என்று சொன்னால், அந்த மாநிலம் தமிழகம்தான் என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

தந்தை பெரியார் அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், அதைத் தொடர்ந்து இந்தத் தமிழகத்திற்குத் தலைமை ஏற்றிருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சமூக நீதிப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்றதோடு மட்டுமல்லாமல், இந்தச் சமூக நீதிப் போராட்டம் எந்தத் திசையிலே செல்ல வேண்டுமென்பதற்கு அகில இந்தியா முழுவதற்கும் வழிகாட்டுகின்ற மிகப் பெரிய பொறுப்பைச் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2007 ஏப்ரல் 24
முற்பகல் 11-00

சமூக நீதிப் போராட்டத்தினுடைய ஒவ்வொரு கட்டத்திலும் தமிழகத்தினுடைய பங்களிப்பு மகத்தானது. இந்திய வரலாற்றை உணர்ந்தவர்களுக்குத்தான் அது தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் இங்கே பேசுகிறபோது, நேற்றையதினம் உச்ச நீதிமன்றத்திலே இந்தியாவினுடைய தலைமை வழக்கறிஞர் ஆஜராகவில்லை என்கிற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது ஒரு தவறான குற்றச்சாட்டு என்பதை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். நேற்றையதினம் நம் நாட்டினுடைய தலைமை வழக்கறிஞரே உச்ச நீதிமன்றத்திலே ஆஜராகி, இந்த வழக்கிற்காக வாதாடி இருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே (குறுக்கீடுகள்) நேற்று ஆஜராகவில்லை என்கிற குற்றச்சாட்டைச் சொல்லி, எங்கோ மத்தியிலே இருக்கின்ற அரசும், மாநிலத்திலே இருக்கின்ற அரசும் இட ஒதுக்கீட்டுக்கு எதிராகச் சதி செய்து, உச்ச நீதிமன்றத்திலே வேண்டுமென்றே வழக்கறிஞர்களை ஆஜராகாமல் செய்துவிட்டதுபோன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கியதுபோன்று பேசினார். அவருக்கு நான் ஒன்றை மிகப் பணிவோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மத்திய அரசிலே இந்த இட ஒதுக்கீடு வந்தது, அன்னை சோனியா காந்தியின் வழிகாட்டுதலில் இருக்கின்ற டாக்டர் மன்மோகன் சிங் அரசு பதவி ஏற்ற பிறகுதான் இந்தச் சட்டம் அமலாகி, இந்த இட ஒதுக்கீடு இன்று அமலுக்கு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் இன்று உச்ச நீதிமன்றத்திலே அவர்கள் தடை செய்திருக்கிறார்கள். எனவே, அந்த இட ஒதுக்கீட்டுக்கும், சமூக நீதிக்கும், காங்கிரஸ் கட்சிக்கும், டாக்டர் கலைஞருக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்வது, அரசியலில் மிகவும் சிறுபிள்ளைத்தனமானது. (மேசையைத் தட்டும் ஒலி) இட ஒதுக்கீட்டின் வரலாறு தெரிந்த யாரும் அந்த விவாதத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினை வந்தவுடனே, ஏற்கெனவே நம்முடைய சட்டமன்றத்திலே நாம் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம். அந்தத் தீர்மானத்தினுடைய நகலை, மறுநாள் ஆந்திர மாநில அரசினுடைய முதலமைச்சர் நேரடியாக நம்முடைய சட்டமன்றத்தைத் தொலைபேசியிலே தொடர்புகொண்டு, தமிழகத்திலே நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தின் நகலை எங்களுக்கு அனுப்புங்கள். ஆந்திர சட்டசபையிலே அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று,



2007 ஏப்ரல் 24] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

நம்முடைய சட்டசபையிலே வைக்கப்பட்ட தீர்மானத்தை வாங்கித்தான் ஆந்திர சட்டசபையிலே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தப் போராட்டத்திலோ, அந்தச் சமூக நீதியினுடைய தேடுதலிலோ, வளர்ச்சியும், முன்னேற்றமும், அடித்தட்டு, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதிலோ, காங்கிரஸ் கட்சியைவிடவும், திராவிட முன்னேற்றக் கழகத்தைவிடவும் ஆர்வம் கொண்டவர்கள் இந்திய அரசியலில் எங்கேயும் இல்லை என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே முதல் Communal G.O. எங்கேயிருந்து புறப்பட்டது என்று சொன்னால், அது தமிழகத்திலிருந்துதான் புறப்பட்டது. 9th Schedule—9-வது பிரிவு இன்று மிகப் பெரிய கேள்விக்குள்ளாகி இருக்கிறது. அந்த 9-வது பிரிவு வர வேண்டுமென்ற நிர்பந்தத்தை மத்திய அரசுக்குக் கொடுத்த மாநிலம் தமிழ் மாநிலம். அன்றையதினம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்றுத்தான் இந்தியாவினுடைய முதல் பிரதமராக இருந்த பண்டித நேரு அவர்கள் அந்த அரசியல் சாசனச் சட்டத்தில் முதல் திருத்தத்தைக் கொண்டு வந்தார். அதன் பிறகு தொடர்ந்து அன்னை இந்திரா காந்தியினுடைய காலத்திலே, ராஜீவ் காந்தியினுடைய காலத்திலே, இன்று அன்னை சோனியா காந்தி வழிகாட்டுதலாக இருக்கின்ற இந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசினுடைய வரலாற்றிலே, ஒவ்வொரு சமூக நீதிப் போராட்டத்தினுடைய மைல் கல்லும் இந்த நாட்டில் காங்கிரசை சாட்சியாக வைத்து, பகுத்தறிவு இயக்கத்தை சாட்சியாக வைத்து, சுய மரியாதை இயக்கத்தை சாட்சியாக வைத்து, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர்போன்ற மாபெரும் தலைவர்களை சாட்சியாக வைத்துத்தான் நடந்ததேயொழிய, (மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் இல்லாமல் எந்த சமூக முன்னேற்றமும் நடந்ததில்லை என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடை உத்தரவைப் பற்றி ஒரு சிறிய வருத்தம் நமக்கு இருக்கிறது. சமூக நீதிப் போராட்டத்திலே எந்த வெற்றியும், போராடாமல் பெறப்பெற்றதில்லை. ஆலயங்களுக்குள்ளே போவதற்குக்கூட நமது முன்னோர்கள் மிகப் பெரிய போராட்டங்களைச் செய்துதான் ஆலயத்தின் கதவுகளைத் திறக்கச் செய்தார்கள். எனவே, இந்த அதிகாரத்தையும், முன்னேற்றத்தையும்

ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றவர்கள், அந்த அதிகார முன்னேற்றம் மறுக்கப்பட்டவர்களுக்குக் கேட்டவுடனே கொடுத்துவிடுவார்கள் என்று நான் நினைக்கவில்லை.

குமரி மாவட்டத்திலே தோள்சீலைப் போராட்டம் நடத்துகின்றபோது, அந்தப் போராட்டம் நடத்துவது தவறு என்று நீதிமன்றம் அன்று சொன்னது. (குறுக்கீடுகள்) நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டாமே? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு நேரத்தை வழங்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. இந்த வரிசையிலே இருக்கின்ற நண்பர்கள் என்னைப் பார்த்து இப்படித்தான் பேச வேண்டுமென்றோ, இவ்வளவு நேரம்தான் பேச வேண்டுமென்றோ சொல்ல முடியாது. எனக்கு இருக்கின்ற வருத்தம் என்னவென்று சொன்னால், உச்ச நீதிமன்றத்திலே இருந்து வந்திருக்கின்ற அந்தக் கருத்துகள் சில நமக்கு அச்சத்தை உண்டுபண்ணுகின்றன. தடை உத்தரவிற்காக, நம்முடைய மத்திய அரசினுடைய வழக்கறிஞர் உச்ச நீதிமன்றத்திலே வாதாடுகின்றபோது, அங்கே நீதிபதிகள் கேட்ட கேள்விக்கணைகள், சமூக நீதியினுடைய ஆர்வலர்களுடைய நெஞ்சம் வருத்தப்படுவதாக இருக்கிறது. 57 வருடம் காத்திருந்தீர்களே, இன்னும் 6 மாதம் காத்திருந்தால் என்ன என்று கேட்கின்றபோது, சமூக நீதிக்குப் போராடிய நெஞ்சங்கள் பதறுகின்றன.

*முற்பகல் 11-05*

அது மட்டுமல்ல, 100 இடங்கள்—27 இடங்களை அதிகமாகக் கொடுத்து விடுகிறோம். இதுவரை இடம் கிடைத்தவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாத அளவிற்கு, அதே நேரத்திலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டை இந்த ஆண்டே கொடுக்கின்ற அளவிற்கு நாம் இடங்களை அதிகமாகக் கூட்டுகிறோம் என்று சொன்னால்கூட உச்ச நீதிமன்றத்திற்கு அதை ஏற்றுக்கொள்கின்ற மனப்பான்மை இல்லை என்பதைப் பார்க்கின்றபோது, இட ஒதுக்கீடு என்கிற போராட்டம் இன்னும் நீண்ட நெடிய போராட்டம். அதற்கு இன்னும் அதிகமான தியாகங்கள் தேவைப்படுகின்றன என்பதைத்தான் அந்த நீதிமன்றத் தீர்ப்புகளும், அங்கே பேசப்பட்ட வார்த்தைகளும் சுட்டிக்காட்டுவதாகவே நான் நினைக்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கணம்கூடத் தாமதிக்காமல் உடனடியாக நமது பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அன்னை சோனியா காந்திக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பாரதத்தினுடைய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் அர்ஜுன் சிங் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். மத்திய அரசும் இதிலே தெளிவாக இருக்கிறது. எப்படியும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டை அளிப்பதிலே, மத்திய, மாநில அரசுகள் உறுதியாக இருக்கின்றன. அதற்குத் தலைமை ஏற்கிற தலைவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். சமூக நீதிப் போராட்டத்திற்குத் தமிழகம் தொடர்ந்து தலைமை தாங்கும், வழிகாட்டும் என்பதைச் சொல்லி, அத்தகைய நடவடிக்கைகளை எடுத்த முதலமைச்சரைப் பாராட்டி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதிக்கு மிகப் பெரிய ஒரு பங்கம் சமீப காலமாக நீதிமன்றங்களால் வரப்பெற்றிருக்கின்றன. குறிப்பாக, உயர் கல்வியில் இந்த 27 சதவிகித இட ஒதுக்கீடு இந்தியாவில் வாழ்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வர வேண்டுமென்கிற உயரிய நோக்கத்தோடு, எம் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்கள் இதற்காக இந்தியாவில் இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளினுடைய தலைவர்களையும் டெல்லி மாநகருக்கு அழைத்து, அதற்காக மாநாடுகளை நடத்தி, இந்திய நாட்டினுடைய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களைப் பல முறை சந்தித்து, இந்திய அரசை வழிநடத்துகிற அன்னை சோனியா அவர்களைச் சந்தித்து, இந்த 27 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையை உயர் கல்வியிலே இந்த ஆண்டே நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதற்காக வலியுறுத்தியதன் அடிப்படையிலும், டெல்லியிலே இருந்துகொண்டு நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களைத் தொலைபேசியிலே தொடர்புகொண்டு, 'நான் பிரதமரைச் சந்திக்கச் செல்கிறேன், அன்னை சோனியாவைச் சந்திக்கச் செல்கிறேன், நீங்களும் இந்தக் கருத்தை வலியுறுத்துங்கள்' என்று கேட்டபோது, 'நான் என்னுடைய சார்பாக திரு. தயாநிதி மாறன் அவர்களையும், திரு. பாலு அவர்களையும் அனுப்பி வைக்கிறேன், நீங்கள் செல்லுங்கள், இட ஒதுக்கீட்டிற்கு என்றும் நான் உங்களுக்குத்

துணையாக இருப்பேன்' என்று உறுதி அளித்த வரலாறுகள் உண்டு. இந்த சமூக நீதிப் போராட்டத்தினுடைய வரலாற்றில் 21 உயிர்களை இழந்து, ஒன்றரை இலட்சம் வழக்குகளை சுமந்து, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக கல்வியிலே இட ஒதுக்கீட்டிற்காகப் போராடியபோது, அதை வழங்கிய தளமாக இருந்ததும் நம்முடைய முத்தமிழறிஞர் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதையும் நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவினுடைய இட ஒதுக்கீட்டு வரலாற்றில் Kaka Kalelkar Commission-லிருந்து, ஒரு அரசையே இந்த இட ஒதுக்கீட்டிற்காகத் தூக்கி எறிந்த, இன்றைக்கும் மாபெரும் தலைவராக வீற்றிருக்கிற சமூக நீதிக் காவலர் என்று இந்திய அளவில் போற்றப்படுகின்ற திரு. வி.பி. சிங் முதல் இதற்கென்று தனித்த நெடிய வரலாறுகள் உண்டு. இந்த வரலாறுகளையெல்லாம் மண் மேடாக்குகின்ற வகையில், உதாரணத்திற்கு A.I.I.M.S., I.I.T., என்று சொல்லக்கூடிய உயர் கல்வி நிறுவனங்களில் இன்றைக்கு 500 பேராசிரியர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், வெறும் 3 சதவிகிதம் மட்டும்தான் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இன்றைக்குப் பணியில் இருக்க முடியும். அதிலும் ஆதி திராவிடர்களுக்கு இடம் இல்லை; முஸ்லிம் சிறுபான்மைச் சமுதாயத்திற்கு இடம் இல்லை, கிறிஸ்துவ சமுதாயத்திற்கு இடம் இல்லை என்கிற மிகப் பெரிய ஒரு கூற்று இதிலே உள்ளடங்கி இருக்கிறபோது, இதிலே அரசியல்ரீதியாக, இரு அவைகளும் கூடி இந்த அநீதி தொடரக் கூடாது, இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காக, மத்திய அரசு கொண்டு வந்த சட்டத்தையே இன்றைக்கு நிர்மூலமாக்குகின்ற இதுபோன்றத் தீர்ப்புகள் அரசியலமைப்புப் பிரகாரமும், இந்திய அரசின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரகாரமும் அனுமதிக்கப்படக் கூடாத ஒன்றாகும். எதற்கெடுத்தாலும், சாதாரண சத்துணவு ஆயாவிலிருந்து மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினையிலிருந்து எல்லாவற்றிலும் நீதிமன்றங்கள் தலையிடுகின்ற போக்கு என்பது, அது உயர் நீதிமன்றமாக இருந்தாலும், உச்ச நீதிமன்றமாக இருந்தாலும், ஏற்புடையதாக இல்லை என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், இன்றைக்குக் காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் இரு அரசுகளும் பேசித் தீர்வுக்கு வர முடியவில்லை என்று நாம் உச்ச நீதிமன்றத்தை அணுகியபோது, அங்கு comments செய்கின்றார்கள். 'ஏன் இரு முதல்வர்களும் பக்கத்துப் பக்கத்து மாநில முதல்வர்கள்தானே! நீங்கள் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று' ஏளனமாக comments





செய்யப்பட்டு, பத்திரிகையில் தலைப்புச் செய்திகளாக வருகின்றன. உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புக்கு இப்போது மத்திய அரசு மேல் முறையீடு செய்திருக்கிறது. இது மிகப் பெரிய பிரச்சினை. இரு அவைகளும் கூடி, அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, நாங்கள் இதற்குச் சட்டம் இயற்றியிருக்கிறோம். இந்தச் சட்டத்தை நீங்கள் தடை செய்தது தவறு என்று சொல்லி இருக்கின்றன. அதிலும் முன்னோடியாகத் தமிழகத்தினுடைய முதல்வர் அனைத்துக் கட்சிகளையும் அழைத்து, ஒரு நாள் முழுக்கக் கடை அடைப்புச் செய்து, நம்முடைய எதிர்ப்புணர்வைப் பதிவு செய்திருக்கிறோம். நம்மையொட்டி உள்ள புதுச்சேரியும், பக்கத்தில் இருக்கிற ஆந்திரப் பிரதேசமும் எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கின்றன. ஆனால், ஒட்டுமொத்த இந்திய நாட்டில் இருக்கிற 93 கோடி மக்களுக்கு எதிர்ப்பாக இந்த உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்தபோதும், இவ்வளவு எதிர்ப்புக்கணைகளை நாம் காட்டியபோதும், ஜனநாயக முறையில் நாம் சுட்டிக்காட்டியபோதும், உச்ச நீதிமன்றம் கொஞ்சம்கூட சட்டை செய்யாமல், இரு நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் இதற்குத் தடை விதித்திருக்கிறது என்று சொன்னால், இதை நிச்சயம் அனுமதிக்க முடியாது.

*முற்பகல் 11-10*

சமூக நீதியின்மீது அக்கறைகொண்டு, ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரமாகத் திகழ்ந்த பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களால், 1950-களில், முதல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பெருந்தலைவர் காமராஜர் ஆதரவோடு, பேரறிஞர் அண்ணா ஆதரவோடு திருத்தப்பட்டு, ஜவஹர்லால் நேரு அவர்களால் அன்றைக்கு உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தையே, கேலிக் கூத்தாக்குகின்ற தீர்ப்பை, ஒருபோதும் பாட்டாளி மக்கள் கட்சி அனுமதிக்காது, அதற்கான கண்டனத்தையும் இங்கே தெரிவிக்கின்ற அதேவேளையில், மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு சரியான ஒரு தீர்வைக் காண, இந்தியத் திருநாட்டுக்கு வழிகாட்டுகின்ற அளவில், 93 கோடி மக்களுடைய வாழ்வாதாரமான, கல்வி, உயர் கல்வி, மருத்துவக் கல்வி, விஞ்ஞானக் கல்வி, விமானக் கல்வி கற்கின்ற ஏழை எளிய மக்கள் இடப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்ப்பை எதிர்த்தாக வேண்டும். அனைத்துத் தலைவர்களையும் ஓரணியில் திரட்டி, அதற்கு நிச்சயம் ஒரு வழியை நீங்கள் காண வேண்டும். அதைக் காண்பதற்கு எம் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்கள் உங்களுக்கு வலது

[திரு. தி. வேல்முருகன்] [2007 ஏப்ரல் 24

கரமாகவும், அதேபோன்று எந்த நேரத்திலும் பாட்டாளி மக்கள் கட்சி ஆதரவாகவும் இருக்கும். அதற்கான நடவடிக்கையை நீங்கள் எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சரியான வழிகாட்டுதலை இந்திய நாட்டு மக்களுக்குக் காட்ட வேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாக வேண்டுகோள் வைத்து, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவதற்காக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு உச்ச நீதிமன்றம் விதித்த தடையை விலக்க வேண்டுமென்று மத்திய அரசு, உச்ச நீதிமன்றத்திலே விடுத்த கோரிக்கையை உச்ச நீதிமன்றம் நேற்றையதினம் நிராகரித்து ஒரு தீர்ப்பை வழங்கியிருப்பது, மிகவும் வேதனை அளிக்கக்கூடிய செய்தியாகும். Constitution Bench-க்கு இந்த வழக்கை விட்டு, இறுதி முடிவு எடுக்கவேண்டுமென்று வலியுறுத்தியபோது, அதைக்கூட ஏற்க மறுத்து, தொடர்ந்து வற்புறுத்தலுக்குப் பிறகு, அது பரிசீலிக்கப்படும் என்று உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. இத்தகையதொரு இட ஒதுக்கீட்டை அமல்படுத்துவதற்கு அரசியல் சட்டத்திலே சட்டபூர்வமாக, 93-வது திருத்தத்தைக் கொண்டு வந்ததன்மூலம், அரசியல் சாசனத்தைத் திருத்தி, இந்திய நாடாளுமன்றம் அதற்குச் சட்டபூர்வமான வழிவகை செய்துள்ளது. ஆகவே, நாடாளுமன்றத்தினுடைய சட்டத்திற்குப் புறம்பாக அந்தத் தடையை விதித்தவுடனே, உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடத்தி, தமிழக மக்களுடைய ஏகோபித்த உணர்வை வெளிப்படுத்துகின்ற வகையில், 6 கோடி மக்களும் ஒருமுகமாக, இந்த இட ஒதுக்கீட்டுக்கு உச்ச நீதிமன்றம் விதித்த தடைக்கு எதிராக ஒன்றுபட்டுக் குரல் எழுப்புகின்ற, அந்த உணர்வுகளை மதிக்காமல், இன்றைக்கு உச்ச நீதிமன்றம் இந்தத் தடையை இரத்துச் செய்ய முடியாது என்று தற்போது தீர்ப்பு அளித்திருப்பது மிகவும் கண்டனத்திற்குரியது.



2007 ஏப்ரல் 24] [திரு. சி. கோவிந்தசாமி]

சமீப காலங்களிலே நாடாளுமன்ற, சட்டமன்ற நடவடிக்கைகளில் நீதிமன்றங்கள் அத்து மீறித் தலையிட்டு வருவதற்கு இது மேலும் ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றது. ஆகவே, இதுபோன்ற சாதாரண மக்களின் வாழ்க்கையோடு விளையாடுகின்ற உச்ச நீதிமன்றத்தினுடைய இந்தத் தீர்ப்பு வன்மையாக ஆட்சேபனைக்குரியது என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே நேற்றையதினமே இதுகுறித்து மத்திய அரசின் கவனத்திற்கு உரிய முறையிலே எடுத்துச் சென்றிருக்கின்றார்கள். விரைவில் கூடவுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தில் இதற்கான ஒரு விரிவான, இந்த இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய சட்டபூர்வமான வழிவகைகளை நாடாளுமன்றம் உருவாக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற முயற்சிக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி துணை நிற்கும் என்று சொல்லிக்கொள்கின்றேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் அரசியல் தலைமைக் குழுவும் மத்திய அரசாங்கத்திற்கு, இந்த இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்கவும், அதை நடைமுறையில் அமல்படுத்துவதற்கும், உடனடியாக மத்திய அரசு நாடாளுமன்றத்தைக் கூட்டி, அதற்குரிய சட்டபூர்வமான வழிவகைகளை உருவாக்க வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் பதிவு செய்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை அமல்படுத்தவிடாமல் தடை செய்திருப்பது, உச்ச நீதிமன்றத்தினுடைய பிடிவாதப் போக்கையே காட்டுகின்றது. அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்குரிய முயற்சி என்ற வகையில், அதற்காகச் சிந்தித்துச் செயல்படுத்துவதற்குரிய முயற்சியைத் தமிழகத்திலே மேற்கொள்வதில், தமிழக அரசும், அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும் தெளிவான சிந்தனையோடு அதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி, அது நாடாளுமன்றத்திலும் சட்டமாக்கப்பட்டு, அதை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கின்றபோது, இப்படிப்பட்ட ஒரு தடை வந்திருக்கின்றது.

முற்பகல் 11-15

இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், அந்த நீதிபதிகள் குறிப்பிடுகின்றபோது மண்டல் கமிஷன் வழக்கிலுடைய தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்காக 15 ஆண்டு காலம் காத்திருந்த நீங்கள், 1931 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்த இட ஒதுக்கீட்டைப் பெறுவதற்காக 57 ஆண்டு காலம் பொறுத்திருந்த நீங்கள், இன்னும் ஒரு ஆண்டு காலம் ஏன் பொறுத்துக்கொள்ளக் கூடாது என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

இந்தக் கேள்வி என்பது சாதாரணமான கேள்வி அல்ல. அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவது அல்லது அவர்கள் மேலே வரக் கூடாது என்பதிலே நீதிமன்றமே இப்படி அழுத்தமான ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், இதை ஒரு சாதாரணமான விஷயமாக எடுத்துக்கொள்ள முடியாது.

வர்ணாசிரமக் கொள்கையைப் பற்றி நம்முடைய தலைவர்கள் எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறோமே, இதை எந்த அளவிற்கு ஆழமாகப் புரிந்துகொண்டிருக்கிறோம் என்பது கேள்விக்குரிய ஒன்று என்றால்கூட, அந்தக் கருத்தை உடையவர்கள் இன்னும் வேகமாகச் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதை, இந்த மாதிரியான நல்ல காரியங்களைத் தடை செய்வதிலே உறுதியாக இருக்கிறார்கள் என்பதுதான், இந்தத் தீர்ப்பின் மூலமாகத் தெரிகிறது. இதைச் சொல்கிறபோது, நீதிமன்றக் கருத்திற்கு எதிராக இருக்கிறது என்றுகூடச் சொல்லலாம். நீதிமன்றமும் இந்த நாட்டிலேதான் இருக்கிறது. அது மக்களுக்கு உட்பட்டுத்தான் செயல்படுகிறது. அது அரசுக்கு உட்பட்டுத்தான் செயல்பட வேண்டும். ஆகவே, நாடாளுமன்றத்தையும் மீறித் தீர்ப்புகளை வழங்குகின்ற இந்தப் போக்குகள் வருவது என்பது உண்மையிலேயே சாதாரண மக்களை பாதிக்கிற செயலாக இருக்கிறது. இதற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சி மிகுந்த மன வேதனையையும் வருத்தத்தையும், வெளிப்படுத்துகிறது.

குறிப்பாக, மத்திய அரசாங்கம் இதன்மீது விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தத் தீர்ப்பு வெளிவந்தவுடனேயே நம்முடைய மாநிலத்திலே, நம்முடைய தலைவர்களெல்லாம் மிகவும் கொதித்தெழுந்திருக்கிறார்கள். அதிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மத்திய அரசாங்கத்தோடு தொடர்புகொண்டு, நாடாளுமன்ற இரு அவைகளையும் உடனடியாகக் கூட்டி அதற்குத்





தக்க தீர்வு காணுவதற்கு உரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று சொல்லி இருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நாங்கள் வரவேற்கிறோம். உடனடியாக நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். அதிலே, அரசியல் சட்டத்தையே திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்து.

இப்படிப்பட்ட பாதிப்புகள் வராத வகையிலே, தேவையான மாற்றங்களைச் செய்து திருத்தப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குரிய முறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை, ஏற்கெனவே நாம் தீர்மானமாக இந்த சபையிலே நிறைவேற்றி இருக்கிறோம் என்றாலும், நாடாளுமன்றம் உடனடியாகக் கூடி, தேவையான மாற்றங்களை, சட்ட விதிகளை, அரசியல் அமைப்புச் சட்டத்தையும் திருத்த வேண்டுமென்று மீண்டும் ஒரு தீர்மானத்தை நமது சட்டமன்றத்திலே, இன்றையதினமே நிறைவேற்றி மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வலியுறுத்திச் சொல்லி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டதை எதிர்த்துக் கடந்த மாதம் தடை உத்தரவு பெறப்பட்டு, நேற்றையதினம் இரண்டு நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் ஒரு தீர்ப்பினை வழங்கியிருக்கிறது. உயர் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டினை வழங்க முடியாது என்று அந்த பெஞ்ச் தீர்ப்பு அளித்திருக்கிறது.

இந்தத் தீர்ப்பு என்பது, இடைக்காலத் தீர்ப்பு அல்ல. இறுதித் தீர்ப்பு என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு கடுமையான தீர்ப்பினை அங்கே நீதிபதிகள் வழங்கியிருக்கிறார்கள். தீர்ப்பு, இட ஒதுக்கீடு குறித்தும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு என்பதைப் பற்றியும் சொல்லப்பட்டிருப்பது மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தின் மிக முக்கியமான அம்சமாக இருக்கின்ற பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாகக் கருதுகின்ற வகையில் அங்கே ஒரு தீர்ப்பினை அந்த நீதிபதிகள் வழங்கியிருக்கிறார்கள் என்ற வருத்தத்தை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்

தெரிவிக்க விரும்புகிறேன். அதுவும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், விளையாட்டைத் தொடங்கிவிட்டு விதிமுறைகளை வகுக்க வேண்டுமென்பதை கோர்ட் விரும்பவில்லை. விதிகளை வகுத்துவிட்டுத்தான் விளையாட்டைத் தொடங்க வேண்டுமென்று அவர்கள் அரசாங்கத்திற்கு, பாராளுமன்றத்திற்கு, எச்சரிக்கை விடுவதைப்போன்ற ஒரு தீர்ப்பினை அங்கே சொல்லியிருக்கிறார்கள் என்பதை வருத்தத்தோடு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, சமுதாய ரீதியாகவும், கல்வி ரீதியாகவும், பின் தங்கியவர்களைவிட பொருளாதார ரீதியில் பின் தங்கியவர்களைத்தான் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாகக் கருத முடியும் என்கிற ஒரு தவறான தத்துவத்தை அங்கே நீதிபதிகள் தங்கள் தீர்ப்பிலே தெரிவித்திருக்கிறார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்தோடு இந்த மன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அது மட்டுமல்ல, சுப்ரீம் கோர்ட்டைவிட அரசாங்கத்தின் விதிமுறைகளைப் பெரிதாகக் கருத முடியாது என்கின்ற வார்த்தைகளையும் தீர்ப்பிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-20*

அரசாங்கத்தின் சார்பில் மண்டல் கமிஷன் வழக்கில் இட ஒதுக்கீடு வழங்குவதை சுப்ரீம் கோர்ட் அரசியல் சட்ட Bench உறுதியளித்துள்ள நிலையில், அந்தத் தீர்ப்புக்கு இந்த இடைக்காலத் தீர்ப்பு, இப்பொழுது வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பு முரணாக அமைந்திருக்கிறது என்று அங்கே சொன்னதற்குப் பிறகும், Division Bench-க்கு இறுதி உத்தரவு வழங்குவதற்கு அதிகாரம் இல்லை, அரசியல் சட்டத்தின் 145-வது பிரிவின் 3-வது உட்பிரிவின்படி நான்கு நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன Bench-க்குத்தான் அந்த உரிமை இருக்கிறது என்கின்ற வாதங்களையெல்லாம் எடுத்து வைத்ததற்குப் பிறகும், அந்த வாதத்தை ஏற்பதற்கு அந்த நீதிபதிகள் மறுத்துவிட்டார்கள்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற வகையில் இட ஒதுக்கீட்டை எப்படிப் பெற வேண்டும் என்று ஆர்வமும், அக்கறையும் நமக்கு இருக்கிறதோ, அதைவிட இந்தியத் துணைக் கண்டத்தின் மிக உயர்ந்த அமைப்பாகவும், எல்லாவற்றையும் கட்டுப்படுத்தக்கூடிய அமைப்பாகவும், ஜனநாயகத்தின் உயர்ந்த அங்கமாகவும் இருக்கின்ற பாராளுமன்றத்திலே இன்றைக்கு இயற்றப்படுகின்ற சட்டங்களையும், அந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற அரசாங்கத்தையும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் இன்றைக்கு விமர்சிக்கின்ற



அளவிற்கு ஒரு நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதையும், அந்த நிலைமை வளர்ந்து வந்தால் இந்த நாட்டில் 27 சதவிகித ஒதுக்கீடு மட்டுமல்ல, நாட்டின் ஜனநாயக முறையே கேலிக்கூத்தாகிவிடும் என்பதையும் இந்த நேரத்தில் வருத்தத்தோடு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்து, இந்த நிலைமையைப் போக்க உச்ச நீதிமன்றத்தின் இத்தகைய உத்தரவுகள் அவ்வப்போது வருவதை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்துகின்ற வகையில் பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளையும் உடனடியாகக் கூட்டி, அரசியல் சட்டத்தை எந்த வகையில் திருத்த வேண்டுமோ, மாற்றியமைக்க வேண்டுமோ, அதற்குத் தக்க நடவடிக்கையை நம்முடைய மாநில அரசும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எடுத்திட வேண்டுமென்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

***திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே வந்திருக்கின்ற இந்த உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய, சமூக நீதி உரிமையைப் பறிப்பது மட்டுமல்லாமல், ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்ற ஆதி திராவிட மக்களுடைய இட ஒதுக்கீட்டு உரிமையையும் பறிப்போம் என்கிற ஒரு அச்சுறுத்தலாகவும் இருக்கிறது என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

ஏனென்று சொன்னால், Creamy layer என்கின்ற வரையறையை முதலிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கொண்டு வந்த உச்ச நீதிமன்றம்—ஏற்கெனவே 9 நீதிபதிகள் அடங்கிய Bench வழங்கிய தீர்ப்பை, இரண்டு நீதிபதிகள் அடங்கிய Bench, over-rule செய்து—அது ஆதி திராவிட மக்களுக்கும் பொருந்தும் என்று சில மாதங்களுக்கு முன்னாலே சொன்னதை இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், இப்போது இஸ்லாமிய மக்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்கக் கூடாது என்கிற ஒரு அச்சுறுத்தலான நிலைமையையும் நீதிமன்றங்கள் ஏற்படுத்தி இருக்கின்றன. இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்த்தால், இன்றைக்கு நாடாளுமன்றமா, நீதிமன்றமா என்கிற அந்தக் கேள்வி, பெரும் பகுதியாக இருக்கின்ற மக்களா அல்லது ஒரு சில நீதிபதிகளா என்று

மாறி வந்திருக்கிறது. இது நம்முடைய ஜனநாயக அமைப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நிலையை மாற்ற, இரண்டு அவைகளையும் கூட்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, இந்த உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். செய்திகள் ஏடுகளிலே வந்திருக்கின்றன.

அது மட்டுமல்லாமல், அந்தச் சட்டத்தை நாம் 9-வது அட்டவணையிலே சேர்க்க வேண்டும். ஏற்கெனவே அரசியல் சட்ட மறு ஆய்வுக்காக நீதியரசர் திரு. வி.ஆர். கிருஷ்ணய்யர் தலைமையிலே அமைக்கப்பட்ட குழு, 9-வது அட்டவணையிலே நிலச் சீர்திருத்தச் சட்டங்களையும், இட ஒதுக்கீடுபோன்ற சமூக நீதிப் பாதுகாப்புச் சட்டங்களையும் உள்ளடக்கலாம் என்று ஒரு பரிந்துரையைச் செய்திருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்தச் சட்டங்கள் யாவும் நீதிமன்றத்தின் ஆய்வுக்கு அப்பாற்பட்ட, பாதுகாப்பைப்பெற்ற விதத்திலே 9-வது அட்டவணையிலே சேர்க்கப்பட வேண்டும். அதற்கான சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தத் தீர்ப்புகள்மூலம், பெரும்பான்மையாக இருக்கின்ற மக்களுடைய உரிமைகளைப் பறித்துவிடலாம் என்று சிலர் எண்ணுவதை நாம் கடுமையாக எதிர்த்து, அந்த எண்ணத்தை முற்றாகத் துடைத்தெறிய வேண்டும். அதற்கு இந்த அவையிலே இருக்கின்ற அனைவரும் உறுதியாக நின்று, ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் எனது கருத்தைப் பதிவு செய்து, அமைகிறேன். வணக்கம்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு அடித்தட்டு மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருடைய தலையெழுத்தையும் நிர்ணயிக்கக்கூடிய ஒரு நிலையை இன்றைக்கு நாம் காண்கின்றோம். அப்படி நிர்ணயிக்கின்ற அந்த நிலை, அவர்களைத் தலை தூக்க விடுகின்ற நிலையாக இருப்பதா அல்லது தலைதாழ வைக்கின்ற நிலையாக ஆவதா என்ற இந்த வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டிய சூழ்நிலை நமக்கு



ஏற்பட்டிருக்கின்றது. இட ஒதுக்கீடு என்பது இங்கே உரையாற்றிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எடுத்துக் கூறியதைப்போல, தமிழ்நாட்டிலேதான் அதற்கு விளை நிலம்—நாற்றங்கால்—தமிழ்நாட்டிலே விதை ஊன்றப்பட்டு, தந்தை பெரியார் அவர்களால், பேரறிஞர் அண்ணா அவர்களால், பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் பாதுகாக்கப்பட்டு, நம்முடைய எதிர்கால சந்ததி வாழ, வளம் பெற, நாடு வலிமை பெற, சமுதாயம் ஊக்கம் பெற, எத்தகைய முன்னேற்றங்களை கல்வித் துறையிலும், வேறு பல துறைகளிலும் நாம் பெற வேண்டும் என்று கருதுகிறோமோ, அதற்கெல்லாம் இடையூறாக இருக்கின்ற தடைகளை நீக்க வேண்டும் என்பதற்காகத்தான் இட ஒதுக்கீட்டைக் கேட்கிறோம்.

தடையைக் கடந்து செல்வது என்பது வேறு, ஒதுங்கிச் செல்வது என்பது வேறு. நாம் கேட்பது கடந்து செல்வதுகூட அல்ல, ஒதுங்கிச் செல்வது. அதனால்தான் ஒதுக்கீடு என்று குறிப்பிடுகின்றோம். இந்த ஒதுங்கிச் செல்கின்ற உரிமைகூட நமக்குக் கிடையாது என்று மறுக்கப்படுகிறது. அதற்கு, அந்த மறுப்புக்கு, உச்ச நீதிமன்றம் வரையிலே முத்திரை குத்தப்படுகிறதென்றால், 100 கோடி மக்களுடைய ஜாதகத்தை, அவர்களுடைய எதிர்காலத்தை ஒரு இரண்டு பேர், மூன்று பேர் நிர்ணயித்திட முடியும் என்ற ஒரு சூழ்நிலை நாட்டிலே இருப்பது ஜனநாயகத்திற்குக் கேடு, தீங்கு, பெரும் தீமை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை உலகத்திற்கு நாம் அறிவித்தாக வேண்டும். அத்தகைய உணர்ச்சிமயமான ஒரு கட்டத்திலேதான் நாம் இந்த அவையில் சில கருத்துகளை எடுத்துப் பரிமாறிக்கொண்டிருக்கின்றோம். குறிப்பாக, அ.தி.மு.க. சார்பில் உரையாற்றிய ஜெயக்குமார் அவர்களும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் உரையாற்றிய பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் உரையாற்றிய வேல்முருகன் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் உரையாற்றிய கோவிந்தசாமி அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் உரையாற்றிய சிவபுண்ணியம் அவர்களும், ம.தி.மு.க. சார்பில் உரையாற்றிய வீர. இளவரசன் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் உரையாற்றிய ரவிக்குமார் அவர்களும் ஒரே கருத்தைத்தான், பல பாணிகளிலே சொன்னாலும்கூட, எடுத்துக் கூறியிருக்கிறோம். அதுதான் இட ஒதுக்கீடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதாகும். இது தோன்றிய காலத்திலிருந்து, நீதிக் கட்சிக் காலத்திலே தமிழகத்திலே தோன்றிய காலத்திலேயிருந்து, பல்வேறு எதிர்ப்புகளை, இன்னல்களை,

இடையூறுகளையெல்லாம் இந்தக் கொள்கை சந்தித்து இருக்கின்றது. இதற்காக, தந்தை பெரியார் அவர்கள், எத்தகைய தியாகங்களைச் செய்தார், எந்த அளவிற்கு அவர் இதற்காகப் போராடினார் என்பதெல்லாம் பழைய வரலாறு. இன்றைக்கும் நம் நினைவிலே இருக்கின்ற வரலாறு.

முற்பகல் 11-30

இதை நீதிக் கட்சிக் காலத்திலே அறிமுகப்படுத்தியபோது, இதற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்கின்ற பெயர் சூட்டப்பட்டு, அந்த வகுப்புவாரியாக மக்களுக்கு உரிமைகள் அளிக்கப்பட வேண்டும் என்று அழுத்தந்திருத்தமாகக் கூறப்பட்டு, அதன் காரணமாகவே தந்தை பெரியார் அவர்கள், பேரியக்கமான காங்கிரசில் இருந்து விலக நேரிட்டது என்பதையும் யாரும் மறந்துவிடுவதற்கு இல்லை. ஆனால், அன்றைக்குப் பெரியாருடைய அந்தப் பெரும் போராட்டத்தின் விளைவாக பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் டெல்லியிலே அவர் கொண்டிருந்த தொடர்பின் காரணமாக, பண்டித நேரு அவர்களிடம் எடுத்துரைத்து, அரசியல் சட்டத்திலேயே முதல் திருத்தம், பெருமைக்குரிய திருத்தம் இந்த இட ஒதுக்கீட்டிற்காகத்தான் பெருந்தலைவர் காமராஜரால் கொண்டு வரப்பட்டது என்பதை (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நன்றி உள்ள "சூத்திரர்கள்" யாரும் மறந்துவிட முடியாது. நான் ஏன் இதை அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறேன் என்றால், "சூத்திரர்களாக" ஆக்கப்பட்டவர்கள், நாலாந்தர மக்களாக ஆக்கப்பட்டவர்கள், தங்களுடைய எழுச்சிக்காக, தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்காக, தலை நிமிர்ந்தாலே தலையைத் தட்டுகின்ற காரியம் எங்கிருந்தும் நடைபெறுகிறது. நாமே சில நேரங்களில் அந்தக் குழப்பத்திற்கு ஆளாகிறோம்.

இடைக் காலத்திலே, நம்முடைய நண்பர் ஜெயக்குமார், பன்னீர்செல்வம் ஆகியோரெல்லாம் வருத்தப்படக் கூடாது, நாமே இந்த இட ஒதுக்கீடு கல்வியில், வேலைவாய்ப்புகளில் நமக்குக் கிடைப்பது சமுதாய ரீதியிலே சரியானதா, பொருளாதார ரீதியிலே சரியானதா என்ற ஒரு வாக்குவாதம் ஏற்பட்டு, பொருளாதார அடிப்படையிலேதான் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு, 9,000 ரூபாய் என்று உச்சவரம்பு வைக்கப்பட்டு, அந்த 9,000 ரூபாய் உச்சவரம்பு வந்தால், ஒழிந்தது இந்தச் சமுதாயம் என்று திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி போன்ற கட்சிகள், இன்னும் சொல்லப் போனால், காங்கிரசில் உள்ள





இட ஒதுக்கீட்டு ஆதரவாளர்கள், இட ஒதுக்கீட்டு ஆர்வலர்கள் அவர்கள் எல்லாம்கூட ஒன்று சேர்ந்து அன்றைக்குப் போராடினோம். அந்தப் போராட்டத்தின் காரணமாகத்தான் 9,000 ரூபாய் என்ற அந்தப் பொருளாதார அடிப்படை மாற்றப்பட்டு, அன்றைக்கு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களால், அவர்தான் கொண்டு வந்தார் அதை; அவரே அந்த போராட்டத்தைக் கண்டு அவரே திருத்திக் கொண்டு, இட ஒதுக்கீட்டிற்கு உள்ள பெருமையை, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்குள்ள பெருமையை, அதற்குள்ள மகிமையை, அவரே அன்றைக்கு உணர்ந்து அதற்கு வழிவகுத்துக் கொடுத்தார் என்பது வரலாறு. எனவே, நாம் நம்முடைய உடம்பைக் கிள்ளிப் பார்த்துக்கொண்டால்கூட வருகின்ற ஒரு சிறு துளி இரத்தம்கூட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், இட ஒதுக்கீடு என்ற பெரியாருடைய இந்தக் கொள்கைகளை பிரதிபலிக்கக்கூடியதுதான் என்பதை மறந்துவிடாத காரணத்தினால்தான் இன்றைக்கு நாம் துடித்துப் போகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்றையதினம் இந்தச் செய்தி வந்தவுடன் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் எனக்கு உடனடியாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, இதற்கு என்ன செய்வது என்று கேட்டு, நான் ஒரு புதிய போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும், ஆதரவு கொடுங்கள் என்று கேட்டார்கள். எல்லோரும் சேர்ந்து அதனை ஆரம்பிப்போம். நீங்கள் ஆரம்பித்து நான் ஆதரவு கொடுப்பது பிறகு இருக்கட்டும். எல்லோரும் சேர்ந்தே ஆரம்பிப்போம். அதற்கான காலம் வரும் என்றே கருதுகின்றேன் என்று நான் அவருக்குச் சொன்னேன். உடனடியாக நான் டெல்லியிலே உள்ள பிரதமருக்கும், திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும், அர்ஜுன் சிங் அவர்களுக்கும், பரத்வாஜ் அவர்களுக்கும் கடிதம் எழுதி இருக்கின்றேன். அந்தக் கடிதத்திலே நான் குறிப்பிட்ட வாசகங்கள்தான் நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மருத்துவர் அய்யா ராமதாஸ் அவர்கள் எழுதிய அந்தக் கடிதத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. நான் குறிப்பிட்டிருப்பது, 'தற்போது உச்ச நீதிமன்றம் தடையாணையை இரத்துச் செய்ய வேண்டும் என்ற மத்திய அரசின் கோரிக்கையை நிராகரித்துவிட்ட நிலையில் நமக்குள்ள ஒரே வழி, நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் உடனடியாகக் கூட்டி, இது குறித்து விவாதித்து உரிய விரைவான முடிவெடுத்து, உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் எந்தவிதப் பின்னடைவும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்'

என்று நான் எழுதியதைப் போலவேதான், டாக்டர் அவர்களும், இதா பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக இரு அவைகளையும் கூட்டி உடனடியாக ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஆகவே, நாடு முழுதும் இருக்கின்ற நலிந்தோர், நாடு முழுதும் இருக்கின்ற அடக்கப்பட்டோர், நாடு முழுதும் இருக்கின்ற ஒடுக்கப்பட்டோர், நாடு முழுதும் இருக்கின்ற நாலாம் ஜாதி, ஐந்தாம் ஜாதி என்று தள்ளப்பட்டோர் எழுகின்ற காலம், எரிமலை பொங்குகின்ற காலமாக ஆகிவிடும். அதற்கு இடம் தராமல், மத்திய சர்க்கார் இப்பொழுதே ஒரு உரிய வழியைக் காண வேண்டுமென்று இந்த அவையின்மூலமாக, தீர்மானமாக அல்ல — தீர்மானம் தேவையில்லை—இங்கே நாம் உதிர்த்திருக்கின்ற "தீப்பொறி வார்த்தை"களே போதும் என்று கூறி, அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11-35

## 5. கவன ஈர்ப்பு

### பஞ்சு வியாபாரிகளுக்கு நூற்பாலைகள் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவு மற்றும் அரசு நூற்பாலைகளுக்குப் பஞ்சு வழங்கிய 300 வியாபாரிகளுக்கு 12 ஆண்டுகளுக்குமேலாக நிலுவைத் தொகை ரூபாய் 8 கோடி வழங்கப்படாத நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

#### அறிக்கை

தமிழ்நாட்டில் கைத்தறி மற்றும் துணி நூல் துறையின்கீழ் 18 கூட்டுறவு நூற்பாலைகள் செயல்பட்டு வந்தன. இவ்வாலைகள் துணி நூல் தொழிலில் காணப்பட்ட தொய்வு, தாராளமயமாக்கல் கொள்கை, பழுதடைந்த இயந்திரங்கள், மூலதனப் பற்றாக்குறை மற்றும் பஞ்சு விலையேற்றம்போன்ற பல்வேறு காரணங்களினால் காலப் போக்கில் சீர்குலைந்து ஒட்டுமொத்த நிகர நட்டத்துடனும், எதிர்மறையான நிகர மதிப்புடனும் செயல்பட்டு வந்தன. இதன் விளைவாக இக்கூட்டுறவு நூற்பாலைகள் பல்வேறு நிறுவனங்களுக்கும், தனியார் வியாபாரிகளுக்கும் செலுத்த வேண்டிய கடன் நிலுவைகளைத் தீர்க்க இயலாத நிலை ஏற்பட்டது.

2. 18 கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தனியார் பஞ்சு வியாபாரிகள் பஞ்சு சப்ளை செய்தவகையில் நிலுவையாக இருந்த தொகையில் 1-7-1996-க்கு முன்பாக இருந்த நிலுவையை வழங்குதல் குறித்து இவ்வியாபாரிகளுடன் பல்வேறு சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இறுதியாக 25-8-1998 அன்று நடைபெற்ற கூட்ட முடிவுகளின் அடிப்படையில் மூன்றுவிதமான வாய்ப்புகள் அடங்கிய திட்டம் ஒன்றினைத் தெரிவித்தது. இவ்வாய்ப்புகளின்படி 1-7-1996-க்கு முன்பாக நிலுவையாக இருந்த மொத்தத் தொகையில் 40 சதவிகிதத்தினைத் தள்ளுபடி செய்தும், 60 சதவிகிதத்தினைப் பெற்றுக்கொள்ளவும், தனியார் வியாபாரிகள் முன்வந்தனர். இதன்படி, ஆலைகளிலிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம்மூலம் நிதி ஏற்பாடு செய்யப்பட்டு தொகைகள் வழங்கப்பட்டன.

3. இதனிடையில், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் திரு. கண்ணையராஜ் என்பவர்மூலம் சில தனியார் வியாபாரிகளால் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு ஒன்று 1999 ஆம் ஆண்டு தொடுக்கப்பட்டது.

4. இவ்வழக்கில் 22-11-2000 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, ஏற்கெனவே வாய்ப்பினை ஒத்துக்கொண்ட வியாபாரிகளுக்கு

இணையாக வாய்ப்பினை ஒத்துக்கொள்ளாத வியாபாரிகளுக்கும், 60 சதவிகிதத் தொகையை வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்நீதிமன்ற உத்தரவினைச் செயல்படுத்தும் வகையில் அரசு ரூ.1.9077 கோடி விடுவித்தது. அத்தொகையைக் கொண்டு ஆலைகளால் கடனாகப் பெறப்பட்டு, வாய்ப்பினை ஒத்துக்கொள்ளாத வியாபாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட ஆலைகளால் தொகை வழங்கப்பட்டது. மேலும், 21-11-2001-ல் இவ்வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் தள்ளுபடித் திட்டத்தினை ஒத்துக்கொள்ளாத வியாபாரிகளுக்கு எஞ்சிய 40 சதவிகித நிலுவைத் தொகையினை வழங்க, ரூ.96,36,592-ஐ அரசு ஆலைகளுக்குக் கடனாக விடுவித்தது. இதனடிப்படையில், வாய்ப்புகளை ஒத்துக்கொள்ளாத மற்றும் 40 சதவிகிதத் தொகையினைத் தள்ளுபடி செய்யாத வியாபாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட ஆலைகளால் நிலுவைத் தீர்வு செய்யப்பட்டது.

5. இவ்வழக்கு தொடர்ந்து நிலுவையில் இருந்த நிலையில் 1-1-2005 அன்று சென்னை உயர் நீதிமன்ற முதல் பெஞ்ச் இவ்வழக்கையும், திருவாளர்கள் கக்கோரா பிரதர்ஸ், தண்டூர் என்ற நிறுவனத்தின் மேல்முறையீட்டு நீதிப் பேராணை மனுவினையும், திருவாளர் வேதாந்த சீனிவாசன் என்ற இசைவுத் தீர்ப்பாளரை நியமித்துத் தீர்வு செய்ய அனுப்பியது.

6. மேற்படி இசைவுத் தீர்ப்பாளர் ஆலைகளின் மறுப்புரைகளுக்கு எதிராகவும், அரசுக்கு எதிராகவும், பொது நல வழக்குத் தொடர்ந்த திரு. கே. கண்ணையராஜ் அவர்களை, நிலுவைத் தொகை கோரியிருந்த 122 வியாபாரிகளின் அங்கீகாரம்பெற்ற நபராகக் கொண்டு சம்பந்தப்பட்ட 7 கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் அரசு ஆகியோர்களைக் கூட்டாகவும், தனித்தனியாகவும் பொறுப்பாளியாக்கி ரூ.7.64 கோடி அசல் மற்றும் வட்டியாக வழங்கவும், தீர்வு செய்யும் நாள் வரை 18 சதவிகித வட்டி வழங்கவும் தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பினை எதிர்த்து அரசு மற்றும் ஆலைகளால் தொடரப்பட்ட அசல் மனு எண் 533/2005 தள்ளுபடி செய்யப்பட்டது.

7. இதனிடையில், கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் பஞ்சு விற்பனை செய்த தனியார் வியாபாரிகளுக்குக் கொடுக்க வேண்டிய பஞ்சு கொள்முதல் பாக்கிக்காக ரூ.19.6232 கோடியினை 18 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழிவகை முன்பணமாகத் தனியார் வியாபாரிகளுக்கு வழங்க அரசு 9-11-2005-ல் ஆணையிட்டுள்ளது. இதில் ரூ.12.2006 கோடியை, கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் வழங்கியுள்ளார்.



8. தற்போது அசல் மனு எண் 533/2005 ஆனது 5-1-2007 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் (திரு. கே. கண்ணையராஜ் என்பவரின் பொது நல வழக்கு தொடர்புடையது) அசல் மேல்முறையீட்டு மனு எண் 71/2007 அரசால் தொடுக்கப்பட்டு, சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளன. மேலும், சம்பந்தப்பட்ட 7 கூட்டுறவு நூற்பாலைகளும் தனித்தனியாக அசல் மேல்முறையீட்டு மனுக்களை சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்து அவையும் நிலுவையாக உள்ளன.

9. இதனிடையில், மேற்படி பொது நல வழக்குத் தொடர்ந்த திருவாளர் கே. கண்ணையராஜ் என்பவர், இவ்வழக்கிலேயே பல்வகை மனு ஒன்றினைத் தாக்கல் செய்து, இசைவுத் தீர்ப்பாளர் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் ரூ.8.75 கோடியைப் பின் வட்டியுடன் சேர்த்து வைப்புத் தொகையாகச் செலுத்தக் கோரியுள்ளார்.

10. ஏற்கெனவே, ஆலைகளாலும், அரசாலும் தனித்தனியாக அசல் மேல்முறையீட்டு மனுக்கள் தொடுக்கப்பட்டு நிலுவையாக உள்ள நிலையிலும், பொது நல வழக்குத் தொடர்ந்த திரு. கே. கண்ணையராஜ் அவர்களால் ரூ.8.75 கோடி பின் வட்டியுடன் சேர்த்து வைப்புத் தொகையாக வைக்கக் கோரிய பல்வகை மனு நிலுவையாக உள்ள நிலையிலும், கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பின்பேரில் சட்டப் பேரவையில் விவாதம் நடத்துவதென்பது நீதிமன்ற நடவடிக்கைகளுக்குப் பாதகமாக அமையும்.

11. மேலும், நூற்பாலைகள் பெருத்த கடன் சுமையுடன் இருந்து வரும் நிலையிலும், இவ்வாலைகளால் தீர்வு செய்யப்படாத கடனைப் பல்வேறு அமைப்புகளும், கடனாளர்களும் தீர்வு செய்யக் கோரி ஐந்தாண்டுகளுக்கொரு முறை அரசை அணுகுவதும் வழக்கத்தில் உள்ளது. அரசும் நல்லெண்ண அடிப்படையில் கடனாளர்கள் மற்றும் கடன் பெற்றோரான கூட்டுறவு நூற்பாலைகள் கடனைத் தீர்வு செய்யும் வகையில் கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் பல்வேறு காலக் கட்டங்களில் வழிவகை முன்பணம் வழங்கி வந்துள்ளது. இருப்பினும், ஏற்கெனவே வழங்கப்பட்ட வழிவகை முன்பணங்கள் சம்பந்தப்பட்ட நூற்பாலைகளால் திரும்ப செலுத்தப்படாத நிலையே நீடித்து வருகிறது. அசல் மனு எண் 533/2005-ல் 5-1-2007 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து அரசால் தொடுக்கப்பட்ட அசல் மேல்முறையீட்டு மனு எண் 71/2007, 11-4-2007 அன்று சென்னை உயர் நீதிமன்ற முதல் பெஞ்சில் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டு, எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

12. இத்தகைய சூழ்நிலையில், மூலப் பிரச்சினையானது சென்னை உயர் நீதிமன்ற விசாரணையின்கீழ் உள்ள நிலையில் இது குறித்து சட்டப் பேரவையில் விவாதம் நடத்த அவசியம் எதும் எழவில்லை.

13. சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். இதிலே இந்த 8 கோடி ரூபாய் 300 வியாபாரிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய விஷயம் குறித்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிற காரணத்தினாலே இப்பொழுது இதை செட்டில் செய்ய முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பஞ்சு கொடுத்த வியாபாரிகள், முதலிலேயே 40 சதவிகிதம் பணத்தைத் தள்ளுபடி செய்துகொண்டு, 60 சதவிகிதத்தைப் பெற வேண்டும் என்று பேச்சு வார்த்தைமூலம் முதலிலே ஒத்துக்கொள்ளப்பட்டு, பிறகு அது இடையிலே நின்று போன காரணத்தினாலும், சில பேர் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குத் தொடுத்த காரணத்தினாலும் இது தீர்க்கப்படாமல் இருக்கிறது என்ற கருத்தையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சுமார் 12 ஆண்டுகளுக்குமேலாக அரசை நம்பி, கூட்டுறவு நூற்பாலைகளை நம்பிப் பணத்தை கொடுத்திருக்கக்கூடிய பஞ்சு வியாபாரிகளுக்கு அரசு கொடுக்க வேண்டிய தொகை சுமார் ரூபாய் 8 கோடிதான். அரசை நம்பி பஞ்சைக் கொடுத்தவர்கள் ஏமாறக் கூடாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த வழக்கை வாபஸ் வாங்கிக்கொண்டு, 8 கோடி ரூபாயை பஞ்சு சப்ளை செய்த வியாபாரிகளுக்கு உடனே வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 1996 ஆம் ஆண்டுக்கு முன்னால் நடந்த செயல்பாட்டின்மூலமாக வந்த நிலுவை. அதற்குப் பின்னால் 1998 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் அரசு இதற்காக ஒரு பேச்சுவார்த்தை நடத்தி, அதிலே 40:60 என்ற முறையிலே ஒரு





செட்டில்மெண்ட் செய்யப்பட்டு அரசின்மூலமாகப் பணம் அவர்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கிறது. சில நடைமுறைச் சிக்கல்களின் காரணமாக நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினால் நீதிமன்ற ஆணையின்படிதான் இந்த அறிவிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், வருகிற காலங்களில் இந்த அரசு, உயர் நீதிமன்றத்திலே இருக்கிற இந்த வழக்கினுடைய இறுதித் தீர்ப்பின் அடிப்படையிலேதான் ஒரு முடிவு எடுக்கும் என்கிற அரசினுடைய நிலையை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 கூட்டுறவு நூற்பாலைகள் இந்தப் பஞ்சையெல்லாம் வாங்கிப் பயன்படுத்தி இருக்கின்றன. அவற்றில் இப்போது 5 ஆலைகள் மட்டுமே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய நூற்பாலைகளைத் திறப்பதற்கு அமைச்சர் அவர்கள்—குறிப்பாக, வேலூர், அரியூர் கூட்டுறவு நூற்பாலையை அமைச்சர் அவர்கள் திறக்க முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மானியக் கோரிக்கையிலேயே இதைப் பற்றிச் சொல்லப்பட்டது. நடந்துகொண்டிருக்கிற 5 நூற்பாலைகளையும் நல்ல முறையிலே மறு சீரமைப்புச் செய்து நடத்துகிற நிலையும், அதுபோல் தொடர்ச்சியாக, இருக்கின்ற நூல் ஆலைகள் குறித்து இந்த அரசு என்ன செய்யலாம் என்பதைத் தலைவர் கலைஞர் அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின்

நாற்பத்தாறாவது முதல் நாற்பத்தொன்பதாவது வரையிலான 4 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

முற்பகல் 11-10

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பதாவது முதல் நாற்பத்திரண்டாவது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 21—நெடுஞ்சாலைகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21—நெடுஞ்சாலைகள் துறை, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,201,82,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,755,75,95,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 332, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,201,82,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,755,75,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5381, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,201,82,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,755,75,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11381, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5241, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,201,82,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,755,75,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11431, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,201,82,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,755,75,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8027, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8632, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8758, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,201,82,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,755,75,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10127, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10271, திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11248, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,201,82,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,755,75,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 247, திரு. அ. தமிழரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 413, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், மெதுகும்மல் பகுதி, குழித்துறை முதல் மார்த்தாண்டம் வரை போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க பை-பாஸ்



சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,201,82,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,755,75,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1094, திரு. ஆர். ஞானதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1106, திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1168, திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, பாபநாசம் நகரத்திற்குப் புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,201,82,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,755,75,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1309, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, மேலூர்-சிவகங்கை சாலையில் கே. மலம்பட்டி அருகில் உள்ள குறுகிய பாலத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

அஞ்சாமை, நற்குடிப் பிறப்பு, நாட்டைக் காத்தல், நீதி நூல்களைக் கற்றறிதல், முயற்சியுடைமை ஆகிய ஐந்திலும் மாட்சிமையுடையவரே முதல் அமைச்சராவார் என்ற வள்ளுவனின் வாக்கிற்கேற்ப, சொன்னதைச் செய்து, செய்வதையே சொல்லி, இன்றையதினம் 6 கோடித் தமிழர்களின் உடன் பிறப்பாக விளங்கி பொற்கால ஆட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர், தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து தந்த தமிழ் மொழிக் காவலர், 81 வயதினிலும் பகட்டறியாப் பகலவன், சொல்வாக்கில் தேன் சொட்டும் முத்தமிழ் டாக்டர் கலைஞர் அவர்களையும், இளைஞர்களின் எழுச்சி நாயகன், தன் உடல்நிலையையும் பொருட்படுத்தாது பொறுப்போடு செயலாற்றி வரும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அருமை அண்ணன் தளபதி அவர்களையும், எனக்கு இந்த இனிய வாய்ப்பினை நல்கிய சட்டமன்றக் காங்கிரஸ் தலைவர் மரியாதைக்குரிய திரு. டி. சுதர்சனம் மற்றும் மரியாதைக்குரிய திரு. பீட்டர் அல்போன்ஸ் மற்றும் அக்கா யசோதா அவர்களையும் வணங்கி என் உரையைத் துவக்குகின்றேன்.

முதலில் என் உயிர் மூச்சான சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொது மக்களின் நலன் சார்ந்த கோரிக்கைகளைத் தெரிவித்து, பின்னர் நெடுஞ்சாலைத் துறை மானியத்திற்கான விவாதத்திற்கு வருகின்றேன். முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரில் நான் வைத்த கோரிக்கையை ஏற்று, சோளிங்கர், அருள்மிகு யோக நரசிம்மர், அருள்மிகு யோக ஆஞ்சநேயர் கோயிலுக்கு Rope car வசதி செய்திட உத்தரவளித்து, ரூபாய் 5.15 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதல்வருக்கு எனது தொகுதி மக்களின் சார்பாகக் கோடானு கோடி நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சோளிங்கரைச் சுற்றுலாத் தலமாக்கி, நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற கிரிவலம் வரும் பக்தர்களின் நலனை மனதிற்கொண்டு, கிரிவலப் பாதையைச் சுற்றிலும் இரவு நேரத்திலும் பக்தர்கள் பாதையைச் சுற்றி வர ஏதுவாக சோடியம் மின் விளக்குகள் அமைத்துத் தர வேண்டும். மேலும், தமிழகத்தில் உள்ள அனைத்துக் கோயில்களையும் ஒருங்கிணைத்து ராஜீவ் ஆன்மீகச் சுற்றுலா என்ற பெயரில் சுற்றுலா ஏற்பாடு செய்து தரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். சோளிங்கர் நகரத்தைப் பேரூராட்சி என்ற நிலையில் இருந்து நகராட்சி அந்தஸ்துக்குத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அடிக்கடி ஏற்படும் போக்குவரத்து நெரிசலையும், அதனால் ஏற்படும் விபத்துக்களால் பாதிக்கப்படும் மக்களையும் பாதுகாக்கும்பொருட்டு சோளிங்கரில் புறவழிச் சாலை அமைக்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-05

சோளிங்கரிலிருந்து வாலாஜா செல்ல அதிக தூரம் இருப்பதால் அவதிப்படும் மக்களின் நலன் கருதி, சோளிங்கரைத் தனித் தாலுகாவாக அறிவிக்க வேண்டுகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் சோளிங்கர் அருகில் உள்ள பாண்டியநல்லூரில் போக்குவரத்துப் பணிமனைக்காக நிலங்களையெல்லாம் கையகப்படுத்திவிட்ட நிலையில் ஒரு சில தனிநபர்களின் வேண்டுகோளுக்கிணங்க கிடப்பில் போடப்பட்ட போக்குவரத்துப் பணிமனைத் திட்டத்தை உடனே நிறைவேற்றித் தர வேண்டுகின்றேன்.

வேலூர் மாவட்டம் என்றாலே, கல்விக் கண் திறந்த காமராசர் அவர்களுக்குக் காவேரிப்பாக்கம் ஏரிதான் நினைவிற்கு வரும் என்று சொல்வார்கள். இத்தனை சிறப்பு வாய்ந்த இந்த ஏரி கடந்த 30 ஆண்டு காலமாகத் தூர் வாரப்படாமல், 15 அடிக்கு மண் தூர்ந்து மழைக் காலத்தில் தண்ணீரைத் தேக்கி வைக்க முடியாமல் போகின்றது. ஆகவே, ஏரியை உடனே தூர் வாரிச் செப்பனிட்டு, விவசாயிகள் மற்றும் பொது மக்கள் நெஞ்சில் பால் வார்க்க வேண்டும். இதேபோன்று, நெமிலி ஒன்றியத்திலுள்ள பழைமை வாய்ந்த மகேந்திரவாடி ஏரியையும் பட்ஜெட்டில் அறிவித்துள்ளதுபோல உடனே தூர் வாரிச் செப்பனிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மிகவும் பின்தங்கிய தொகுதியான சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு அரசு தொழிற்பேட்டை அமைக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.



சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரியோ அல்லது அரசு பொறியியல் கல்லூரியோ உடனே அமைக்க வேண்டுகின்றேன்.

கர்ம வீரர் காமராசரின் பிறந்த நாளைக் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்த, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பேரறிஞர் அண்ணாவின் சொல்லையே தாரக மந்திரமாக மனதில்கொண்டு ஆட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, வருகிற மே 21 ஆம் தேதி, 16-வது நினைவு தினத்தில், அமரர் ராஜீவ் காந்தியின் நினைவைப் போற்றும் வகையில், சென்னை, அரசு பொது நல மருத்துவமனையை அமரர் ராஜீவ் காந்தி அரசு பொது நல மருத்துவமனை எனப் பெயர் மாற்றம் செய்து, நூறு கோடி இந்தியர்களின் இதய சிம்மாசனத்தில் கொலு வீற்றிருக்கும் அருமைத் தலைவர் ராஜீவ் காந்திக்குப் புகழஞ்சலி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் எங்களது கோரிக்கையை ஏற்று உயர்நிலைக் கண்காணிப்புக் குழு அமைத்துத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நல்லாட்சியை நிலைப்படுத்தி வருகின்ற இத்தருணத்தில் ஆட்சிக்கு அவப் பெயர் உருவாக்கும் எண்ணத்தோடு ஒரு சில அரசு அதிகாரிகள் செயல்பட்டு வருவது வருத்தத்திற்குரியது. ஒரு சில சட்டமன்றத் தொகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி வளர்ச்சிப் பணிகளைச் செய்யவிடாமல் முட்டுக்கட்டை போடும் சில அரசு அதிகாரிகளின் செயல் வேதனைக்குரியதாகும். அந்த அரசு அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் தெரிவிக்கும் தொகுதி வளர்ச்சிப் பணிகளுக்கெல்லாம் சரிவர ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை. ஆட்சியின் நலன் கருதி, இப்படிப்பட்ட அதிகாரிகளை இனம் கண்டு, அவர்கள்மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தொகுதிக்குட்பட்ட ஓர் ஊராட்சிக் குழுத் தலைவரோ, பேரூராட்சி மற்றும் சிற்றூராட்சித் தலைவர்களோ, மக்கள் நலனை முன்னிட்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும்போது, அதைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையை ஏற்றுச் செயல்படுத்த வேண்டும் என இவ்வரசு உடனடியாக அந்தந்த மாவட்ட ஆட்சியருக்குத் தகவல் அனுப்பி, திட்டம் முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணித்து, சட்டமன்ற

உறுப்பினர்கள் அவரவர் தொகுதிகளில் சுதந்திரமாக மக்கள் நலப் பணிகளைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த மார்ச் மாதம், இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமான விடுதலைப் புலிகளுக்காக இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த பால்ரஸ் குண்டுகள் தமிழகத்தில் பிடிபட்டதும், அதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட தமிழகத்தைச் சார்ந்தவர்களும், மேலும் கடந்த ஏப்ரல் 7 ஆம் தேதி திண்டிவனத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்பும், அதனால் நடைபெற்ற உயிரிழப்புகளையும் உற்று நோக்கும்போது, தமிழகத்தின் இறையாண்மையும், அமைதிப் பூங்காவாக இருக்கும் தமிழகத்தை வன்முறை பூமியாக மாற்ற நினைக்கும் அன்னிய சக்திகளுக்கு இடம் கொடுப்பதுபோல் ஆகிவிடக் கூடாது. இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமான விடுதலைப் புலிகளுக்கு இன்றளவும் சில இயக்கங்கள், சில கட்சிகள் ஆதரவளித்து வருவது இந்நாட்டிற்கு எதிரான சதியாகும். இங்கே சட்டமன்றத்தில்கூட இந்தக் கூட்டத் தொடரில் ஒரு ம.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேச, அப்பேச்சை எங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் எதிர்க்க, அதற்கு ம.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர், அவரை அடிக்கப் பாய்ந்ததை இந்தச் சபை அறியும். ஆகவே, இனியும் தாமதிக்காமல் (குறுக்கீடுகள்) தமிழக அரசு . . .

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** Point of order.

**திரு. அருள் அன்பரசு:** Subject-ல்தான் பேசுகிறேன். இங்கே நடந்ததைத்தான் நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்) நடந்ததைத்தான் நான் பேசுகிறேன்? (குறுக்கீடுகள்) நடந்ததைத்தானே சார் நான் பேசுகிறேன்? ஆகவே, இனியும் தாமதிக்காமல் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி.

**திரு. அருள் அன்பரசு:** தமிழக அரசு ம.தி.மு.க. மற்றும் எந்த இயக்கமாக இருந்தாலும், இந்திய அளவில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளிக்கும் சக்திகளைத் தடை செய்து, 1991 ஆம் ஆண்டு தமிழகத்தில் நடைபெற்றதுபோன்ற கோரச் செயல் மீண்டும் நடக்காவண்ணம் பார்த்துக்கொள்வது தமிழக அரசின் தலையாய கடமையாகும். மேலும், கடந்த சில மாதங்களாக நம்முடைய தமிழக மீனவர்கள் கடல் பகுதிகளில் உயிரிழப்பதும் . . . (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், நான் பார்த்துச் சொல்கிறேன்.

**திரு. அருள் அன்பரசு:** உடைமைகளைப் பறிகொடுத்து வாடுவதும், அதற்கு இலங்கைக் கடற்படையினர்தான் காரணம் என்ற மாயை உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் ** ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். என்றைக்குத் தமிழகத்தில் ரோஜாவின் ராஜா அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி மனித வெடிகுண்டால் படுகொலை செய்யப்பட்டாரோ . . . (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். நான் அந்த text-ஐ வாங்கிப் படித்துவிட்டு. I will give my ruling.

**திரு. அருள் அன்பரசு:** மனித வெடிகுண்டால் படுகொலை செய்யப்பட்டார். அன்றைக்கே விடுதலைப் புலிகள்மீது இந்தியர்களுக்கும், தமிழர்களுக்கும் இருந்த அனுதாபமும், ஆதரவும் அறவே அற்றுப் போனது. இந்த நேரத்தில் ஒன்றைத் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் பாதிக்கப்படும்போதெல்லாம் அவர்களுக்கு ஆதரவாக எங்கள் காங்கிரஸ் பேரியக்கமும், கட்சித் தலைமையும் குரல் கொடுக்கத் தயங்கியதில்லை. (குறுக்கீடுகள்) ஆனால் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Mr. Ilavarasan, நான் அந்த text of the speech-ஐப் படித்துவிட்டு, if it warranted expunction, I will expunge. Otherwise, I will not.

**திரு. அருள் அன்பரசு:** அப்பாவித் தமிழர்கள் என்ற பெயரில் (குறுக்கீடு) கடந்த ஏப்ரல் 16 ஆம் தேதி காஞ்சிபுரத்தையடுத்த கோவிந்தவாடியில் நடைபெற்ற இரயில் விபத்தில் கோரமாக 11 பேர் பலியானார்கள். வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த இவர்களுடைய மரணம் நெஞ்சை உலுக்குவதாக அமைந்துள்ளது. இந்த விபத்து ஆளில்லா Railway Level crossing-ஆல், இதே பகுதியில் இந்த ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பெரிய விபத்து. இனி இது மாதிரி விபத்துக்கள் நடக்காவண்ணம் தமிழகத்திலுள்ள 1,116 ஆள் இல்லா Railway Level crossings-ல் உடனடியாக ஆட்களை நியமிக்கவும், தேவைப்படும் இடங்களில் மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாலங்கள் அமைக்கவும் மத்திய இரயில்வே துறைக்கு நாம் ஒரு அவசர கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்ப வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இனி நெடுஞ்சாலைத் துறை மானியத்திற்கான விவாதத்திற்கு வருகிறேன். ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நிற்பதில், நெடுஞ்சாலைத் துறையின் பங்கு மிக முக்கியமானது. காரணம், நாட்டில் பெருகி வருகின்ற தொழில் வளம், விவசாயத் துறையின் வளர்ச்சி, பன்னாட்டு நிதி நிறுவனங்களின் பெரிய மூலதனங்கள், பொது மக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்வது ஆகியவற்றில் முக்கியப் பங்காற்றுவது இந்த நெடுஞ்சாலைத் துறை ஆகும். ஆகவே, இந்தத் துறைக்கு ஆண்டுக்காண்டு கூடுதல் நிதி ஒதுக்கீடு என்பது அத்தியாவசியமானதும், அவசியமானதும்கூட.

தமிழகத்தில் சாலைகளைப் பொறுத்தவரையில், தேசிய நெடுஞ்சாலை 4,483 கிலோ மீட்டர், மாநில நெடுஞ்சாலைகள் 9,256 கிலோ மீட்டர், மாவட்ட முக்கியச் சாலைகள் 9,151 கிலோ மீட்டர், இதர மாவட்டச் சாலைகள் 38,256 கிலோ மீட்டர், இதில் கரும்புச் சாலைகள் 1,746 கிலோ மீட்டர். ஆக மொத்தம் 61,146 கிலோ மீட்டர் இருக்கின்றன; இவை நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படுகின்றன. 2007-2008 நிதிநிலை அறிக்கையிலே சாலை மற்றும் பாலங்கள் மேம்பாட்டு மூலதனப் பணிக்கு ரூ.2,698 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சாலைகளை நன்கு பராமரிக்க மேலும் ரூ.829 கோடி, ஆக மொத்தம் ரூ.3,527 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் மாநில நெடுஞ்சாலையில் இடை வழித் தடச் சாலைகளை இரு வழித்தடச் சாலைகளாகவும், ஒரு வழித்தடச் சாலைகளை இடை வழித்தடச் சாலைகளாகவும், இரு வழித்தடச் சாலைகளைப் பல வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தவும் மற்றும் வலுப்படுத்தவும் சுமார் 2,561 கிலோ மீட்டர் நீளச் சாலைகளுக்கு ரூ.521.99 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ.126.18 கோடியும், நடப்பு நிதியாண்டுக்கு இதற்காக ஒதுக்கப்பட்ட ரூ.356.97 கோடியும் சேர்த்தால் மொத்தம் ரூ.483.15 கோடிதான் வருகிறது. இது கடந்த ஆண்டைவிட ரூ.11.84 கோடி குறைவு என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இதேபோல, மாவட்ட முக்கியச் சாலைகளுக்குக் கடந்த 2006-2007 ஆம் ஆண்டில் நிலுவையிலிருந்த பணிகளையும், புதிய பணிகளாக, சாலைகளை அகலப்படுத்தவும், வலுப்படுத்தவும் ரூ.535.28 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் 2007-2008 ஆம் ஆண்டில், கடந்த ஆண்டில் இரண்டாம் கட்டமாக அனுமதிக்கப்பட்ட 172 கிலோ



மீட்டர் சாலைகளை அகலப்படுத்த, பலப்படுத்த ஒதுக்கப்பட்ட ரூ.103.33 கோடியையும், இந்த ஆண்டு ஒதுக்கியுள்ள ரூ.370.81 கோடியையும் சேர்த்து ரூ.474.14 கோடிதான். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் ரூ.61.14 கோடி குறைவுதான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாவட்ட இதர சாலைகளைப் பொறுத்தவரை, 1,746 கிலோ மீட்டர் கரும்புச் சாலைகளைச் சேர்த்து மொத்தம் 38,256 கிலோ மீட்டர் ஆகும். இதில் பழுதடைந்த சாலைகள் எவ்வளவு தூரம் என்பது குறிப்பிடப்படவில்லை. இந்தச் சாலைகள்தான் போதிய பராமரிப்பின்றி உள்ளன. இதற்குக் கடந்த ஆண்டு ரூ.166.04 கோடிதான் ஒதுக்கப்பட்டது. இதில் 1,870 கிலோ மீட்டர் நீளச் சாலை சீரமைக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் இதற்கு ரூ.148.25 கோடிதான் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

சாலைப் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.820.26 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 1996 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் நபார்டு நிதியுதவியுடன் ஏறத்தாழ 5,521 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அதற்குப் பிறகு, கடந்த ஆண்டுதான் சுமார் 2,000 கிலோ மீட்டர் என்ற அளவிற்குப் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டும் கணிசமாக இதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை வரவேற்கிறேன். அதேபோல, கிராமச் சாலைகளுக்கு, அவற்றைப் புதுப்பிக்க ரூ.135 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும் வரவேற்கத்தக்கது.

பிற்பகல் 12-15

பேருந்துகள் செல்லும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்குக் கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியைவிடப் பல மடங்கு கூடுதலாக ஒதுக்க வேண்டும். ஏனென்றால், கிராமப் பகுதிகளில் இயக்கப்படும் பேருந்துகள் மற்றும் மினி பேருந்துகள்தான் மக்களின் போக்குவரத்துச் சேவையைப் பூர்த்தி செய்கின்றன. இந்தப் பேருந்துகள் செல்லும் சாலைகள்தான் அதிக அளவில் செப்பனிடப்படவும், புதிதாகப் போடப்படவும் வேண்டியுள்ளன. ஆகவே, இந்தச் சாலைகளைச் சீரமைக்கக் கூடுதல் நிதியினை ஒதுக்கித் தர வேண்டுகின்றேன்.

நம்முடைய அரசு, சாலைப் பணிகளுக்கான estimate cost-ஐ உயர்த்தியிருக்கின்றது. ஆகவே, ஒப்பந்ததாரர்கள் சாலைப் பணிகளை

நிறைவேற்றும்போது, அவற்றின் தாம் சிறிதும் குறைவில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பல இடங்களில் தரம் குறைவாகப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், போடப்படுகின்ற சாலையின் ஆயுட்காலம் முடிவதற்குள்ளாக மீண்டும், மீண்டும் போடுகின்ற சூழ்நிலை உள்ளது.

கடந்த அம்மா ஆட்சியில், மதுராந்தகம்-வெண்ணாங்குப்பட்டு சாலை; இது 0.0 கிலோ மீட்டரிலிருந்து 8.0 கி.மீ. வரை அவசரப் பழுதுபார்ப்பு என்ற தலைப்பில் ஒரு டெண்டர் 25-1-2005 அன்று விடப்பட்டுள்ளது. பணி முடிக்கப்பட்ட நாள் 27-2-2005. இதற்காக வழங்கப்பட்ட தொகை ரூ.3,99,996/-. இதே சாலையில் அவசரப் பழுதுபார்ப்பு என்ற தலைப்பில் 8.0 கிலோ மீட்டரிலிருந்து 12.00 கி.மீ. வரையுள்ள சாலைக்கு டெண்டர் விடப்பட்ட நாள் 21-2-2005. பணி முடிக்கப்பட்ட நாள் 23-3-2005. இதற்காக வழங்கப்பட்ட தொகை ரூ.4,95,880/-. இதே சாலையில் அவசரப் பழுதுபார்ப்பு என்ற தலைப்பிலே, 12.0 கிலோ மீட்டரிலிருந்து 36.0 கி.மீ. வரையுள்ள சாலைக்கு டெண்டர் விடப்பட்ட நாள் 23-2-2005. பணி முடிக்கப்பட்ட நாள் 23-3-2005. இதற்காக வழங்கப்பட்ட தொகை ரூ.4,45,852/-. அதாவது, மேற்கண்ட சாலையில் 0.0 கிலோ மீட்டரிலிருந்து, 36.0 கி.மீ. வரையிலான சாலைப் பணி முடிக்கப்பட்ட நாள் 23-3-2005 ஆகும். ஆனால், அதே பணியை மீண்டும் 0.0 கிலோ மீட்டரிலிருந்து 36.0 கி.மீ. வரை, போட்ட சாலையையே 36.0 கி.மீ. வரை புதுப் பணி என்ற திட்டத்தின்கீழ் மேம்படுத்த, 18-3-2005 அன்று மீண்டும் ஒரு டெண்டர் விடப்பட்டு, அப்பணி 28-4-2006 அன்று முடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதற்காக வழங்கப்பட்ட தொகை ரூ.1,14,55,501/- ஆகும்.

ஆக, போட்ட சாலையே மீண்டும் போடப்பட்டுள்ளதாக ஆவணங்கள் தெரிவிக்கின்றன. ஒரே நிதியாண்டில் ஒரே வேலைக்காக இரண்டு தலைப்புகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. அதுபோல அல்லாமல், பதவியேற்று இந்த ஓராண்டு காலத்தில், பல புதிய சாலைகளையும் போட்டு, பழைய சாலைகளையும் செப்பனிட்டு, சிறப்பான முறையிலே, முதல்வருக்கேற்ற முத்தான தம்பியாக மக்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்ட நான் கடமைப்பட்டுள்ளேன்.



எனது சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, சோளிங்கர்-பாணாவரம் சாலையிலுள்ள Railway Level Crossing-லும், சோளிங்கர்-அரக்கோணம் சாலையிலுள்ள Railway Level Crossing-லும் நீண்ட நேரம் காத்துக் கிடக்கும் பொது மக்களின் வாட்டத்தைப் போக்குகின்ற வகையிலே இரயில்வே மேம்பாலங்கள் அமைத்துத் தரப்பட வேண்டும். தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்க வரிக் கட்டணங்கள் மிக அதிகமாக வசூலிக்கப்படுகின்றன. அதைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நெடுஞ்சாலைகளிலே வேகத் தடை அமைக்கும்போது, விபத்து ஏற்படாதவண்ணம் அமைக்க வேண்டும். அரசின் முக்கிய நடவடிக்கையாக, மத்திய நெடுஞ்சாலைகளிலும், மாநில நெடுஞ்சாலைகளிலும், ஒளிரும் தன்மையுடைய தகவல் பலகைகள் (Flourescent Boards) அமைக்கப்பட வேண்டும். நெடுஞ்சாலைகளிலே Road Divider அமைக்கப்படும்போது, உறுதியான வகையிலும், ஒளிரும் தன்மையுள்ள sticker-களும் ஒட்டப்பட வேண்டும். நெடுஞ்சாலைகளில் பராமரிப்பு மற்றும் சீர் செய்கின்ற பணிகள் நடைபெறும்போது, பணி நடைபெறும் இடத்திற்குக் குறைந்தது 500 அடிக்கு முன்னதாகவே, ஒளிரும் தன்மையுள்ள தகவல் பலகைகளை வைக்க வேண்டும். சாலைகளின் இரு ஓரங்களிலும் உள்ள மணல் துகள்களை மாதத்திற்கு இரு முறையாவது சுத்தம் செய்ய வேண்டும்.

சாலைகள் எல்லாம் கடந்த ஆட்சிக் காலத்தில் பேப்பர் ரோஸ்டாகவே போடப்பட்டது. இனி வரும் காலங்களில் சாலைகள் கல் தோசைகளாகப் போடப்பட வேண்டும். (குறுக்கீடு) சென்னையில் போக்குவரத்து நெரிசல் இல்லாவிட்டாலும், அதை இணைக்கின்ற புறநகர்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருங்கள். திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாகப் பேசினால் நாங்கள் தலையிடவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் தோசையைப்போல தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேப்பர் ரோஸ்ட். (குறுக்கீடு) பேப்பர் ரோஸ்ட் என்று சொன்னார்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** பேப்பர் ரோஸ்ட் அப்படியா நடந்தால், நீங்கள் எந்த நடவடிக்கையை வேண்டுமானாலும் எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அவரால் அதை நிரூபிக்க முடியுமா? இல்லையென்றால், அவைக் குறிப்பேட்டிலிருந்து அதை எடுக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை நாம் ரோஸ்டை ஊத்தப்பமாகச் சுட்டுவிடலாம். *(சிரிப்பு) (குறுக்கீடு)*

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேப்பர் ரோஸ்ட்டை ஊத்தப்பமாகச் சுட்டுவிடலாம். *(சிரிப்பு)*

**திரு. டி. சுதர்சனம்:** கடந்த காலத்தில் சாலைகளை பேப்பர் போன்று போட்டார்கள்; இப்போது தோசையைப் போன்று போட வேண்டுமென்று சொல்கிறார்கள். இதிலே எந்தவிதமான ஆட்சேபனையுமில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, ஊத்தப்பம்.

**திரு. டி. சுதர்சனம்:** இதில் என்ன ஆட்சேபனை என்று தெரியவில்லை. எனக்கொரு சந்தேகம் ஏற்படுகிறது. சென்ற ஆட்சிக் காலத்திலே சாலைகளைப் போடாமலேயே போட்டதாகச் சொன்ன வரலாறுகள் உண்டு. அதையெல்லாம், காலம் வரும்போது நாங்கள் இங்கே சொல்கிறோம். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அவர் பேசட்டும்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அவர்கள் இவ்வளவு கீழே இறங்கிப் பேசுவார் என்று நான் நினைக்கவில்லை. போடாமலேயே பணம் எடுக்க முடியும் என்று சொன்னால், போடாத ரோடுகளுக்கு நீங்கள் கமிஷன் வைக்கத் தயாராக இருக்கிறீர்களா என்பதை இந்த அவையின்மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்துக் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, மானியக் கோரிக்கையின்போது விளக்கமாக விவாதிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இது பற்றி ஒரு வினாவினை எழுப்பினார்கள். அதற்குரிய விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்தோம். நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கோரியபடி அந்தத் துறையிலே பணியாற்றி ஓய்வுபெற்ற திரு. தாணு பிள்ளை என்பவருடைய தலைமையிலே விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. முதல் கட்ட விசாரணை நடந்திருக்கின்றது. அடுத்த கூட்டம் அடுத்த மாதம் 3 ஆம் தேதி கூடவிருக்கின்றது. அதனுடைய அறிக்கை வந்துகொண்டிருக்கின்றது. விரைவில் அதனுடைய உண்மை வெளிச்சத்திற்கு வரும். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**திரு. பா. வேல்துரை:** Sir. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதில் ஒன்றும் விளக்கம் தேவையில்லையே? *(குறுக்கீடு)*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, ஊத்தப்பம் என்று சொல்லிவிட்டோமே!

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை, இல்லை. சென்ற ஆட்சிக் காலத்தில், போடாத சாலைகளைப் போட்டதாகப் புகார்கள் வந்து, விசாரிக்கப்பட்டு, அதற்காக உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடரப்பட்டதெல்லாம் உண்டு. அப்படியில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள் அதற்கெல்லாம் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். *(குறுக்கீடு)*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது--எங்களுடைய துணைத் தலைவர் அவர்கள் சென்ற ஆண்டு போன நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையின்போது பேசுகிறபோதே அவர் தெளிவாகச் சொன்னார். இதுபோன்று சில அதிகாரிகள் செய்ததற்கு அன்றைக்கே அவர்கள்

suspend செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதும் இங்கே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த ஆட்சிக் காலத்திலே (குறுக்கீடு) வேண்டுமானால் உங்களையும் இழுப்பார்கள்; உங்கள் ஆட்சியிலும் அப்படிச் செய்வார்கள்; ஆகவே, இந்த நிலை உருவாகியிருக்கிறது என்பதை அவர் விளக்கிச் சொல்லியிருக்கிறார். போன முறை நீங்கள் பேசுகிறபோது, அவர் இந்த அவையிலேயிருந்து இதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். உயர் நீதிமன்றத்தில் வழக்கு இருந்தாலும், அந்த வழக்கிலே என்ன தீர்ப்பு வருகிறது என்பதைப் பார்த்துவிட்டுத்தான்—நீதிமன்றத் தீர்ப்பிலே நாம் தலையிடக் கூடாது என்பது விதியிலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. (குறுக்கீடு) Sir, விசாரணைக் கமிஷன் அறிக்கையை அடுத்த மாதம் அவையில் வைக்கப் போகிறோம் என்று சொன்னார்.

**திரு. பா. வேல்துரை:** Sir . . .

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான விஷயம். (குறுக்கீடு)

**திரு. டி. சுதர்சனம்:** இந்த அவையிலே சொல்லப்பட்ட குற்றச்சாட்டு. செங்கல்பட்டு கோட்டத்தில், ஒரே ஒரு எடுத்துக்காட்டு. மதுராந்தகம்-வெண்ணாங்குப்பட்டு சாலை 0.0 கிலோ மீட்டரிலிருந்து 8.0 கிலோ மீட்டர் வரை அவசரப் பழுதுபார்ப்பு என்ற தலைப்பில் ஒரு டெண்டர் 25-1-2005 அன்று விடப்பட்டுள்ளது. பணி முடிக்கப்பெற்ற நாள் 27-2-2005. அதற்காக வழங்கப்பட்ட தொகை ரூ.3,99,996/-. இதே சாலை, அவசரப் பழுதுபார்ப்பு என்ற தலைப்பில் 8.0 கிலோ மீட்டரிலிருந்து 12.0 கிலோ மீட்டர் வரைக்கான டெண்டர் விடப்பட்ட நாள் 21-2-2005. பணி முடிக்கப்பட்ட நாள் 22-3-2005. இதற்காக வழங்கப்பட்ட தொகை ரூபாய் 4,95,880/- இதே சாலையில் அவசரப் பழுதுபார்ப்பு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** இதே சாலையில் அவசரப் பழுதுபார்ப்பு என்ற தலைப்பில் 12.0 கிலோ மீட்டரிலிருந்து 36.0 கிலோ மீட்டர் வரைக்கான டெண்டர் விடப்பட்ட நாள் 23-2-2005. பணி முடிக்கப்பட்ட நாள் 23-3-2005. இப்படி ஒரு பெரிய . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பெரிய லிஸ்ட்டே போய்க்கொண்டிருக்கிறது.

**திரு. டி. சுதர்சனம்:** பெரிய சரித்திரமே இருக்கிறது. அதற்காக, அப்படியில்லை என்று மாண்புமிகு நம்முடைய எதிர்க்கட்சி கொறடா அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்வாரா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே discussion வேண்டியதில்லை. ஏனென்று சொன்னால், விசாரணை கமிஷனில் இருக்கிறது என்பதாலே, இதிலே discussion வேண்டியதில்லை.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே புராணத்தைப் போன ஆண்டு பாடினார்கள். அதே புராணத்திற்கு அண்ணன் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. முருகவேல். (குறுக்கீடு)

**திரு. அருள் அன்பரசு:** Deputy Speaker Sir. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள், கடந்த ஆட்சியில் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதிகாரிகள் suspend செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இல்லை, அதற்கு நேர்மாறாக அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. முருகவேல். (குறுக்கீடு)

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Sir, நான் text-ஐப் படிக்கிறேன் என்று சொல்கிறேன். கொஞ்ச நேரம் பொறுத்துக்கொள்ளுங்கள். Text type அடித்து வர வேண்டும். (குறுக்கீடு) ஒரே second-ல் உரையை முடிக்கச் சொல்லுங்கள்.

*பிற்பகல் 12-25*

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகளில் கார்களில் செல்கையில் விபத்து ஏற்பட்டால், உயிரிழப்பு அதிகம் ஏற்படுகின்றது. இதையெல்லாம் தவிர்ப்பதற்காக, air bag என்றும், air balloon என்றும் பொருத்தப்பட்டு, விபத்து ஏற்படும் நேரத்தில் விரிந்து, உயிரிழப்பு ஏற்படுவதைத் தவிர்க்கிறது. ஆனால், கார் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், 10 இலட்சத்திற்கும் மேல் விலையுள்ள கார்களில்தான் அதைப் பொருத்துகின்றன. இனி, கார் நிறுவனங்கள் தான் தயாரிக்கும் அனைத்து வகை கார்களிலும் air bag-ஐக் கட்டாயம் பொருத்தி விற்பனை செய்ய வேண்டுமென்று தமிழக அரசு சட்டம் கொண்டு வர வேண்டும்.

ரிஷிவந்தியம் ஒன்றியம், மணலூர்பேட்டை -தியாகதுருகம் சாலையில் உள்ள கீழத்தேனூர் அருகில் உள்ள கெடிலம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ஒன்றைக் கட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, கரும்பு அபிவிருத்திச் சாலைத் திட்டத்தின்கீழ் உள்ள சாலைகளை நெடுஞ்சாலைத் துறையின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும். அரியலூர் தொகுதியிலுள்ள மருதையாற்றின் குறுக்கே சுண்டக்குடி-அம்பலவர்கட்டளை இடையே ஒரு புதிய மேம்பாலமும், ஆதனூர்-மழவராயநல்லூர் இடையே பாலம் ஒன்றும் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. அருள் அன்பரசு:** ஒரே ஒரு நிமிடம். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. முருகவேல். (குறுக்கீடு) இல்லை, முடியாது.

**திரு. கே. முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. முருகவேல், உங்கள் குரலை உயர்த்திப் பேசுங்கள்.

**திரு. கே. முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தில், பின்தங்கிய தொகுதியான முதுகுளத்தூர் தொகுதியில்



நிறுத்தி எனக்கு சட்டப் பேரவை உறுப்பினராக முகவரி தந்த முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம், நல்லாட்சி தரும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் எங்கள் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு கழகப் பொருளாளர் அவர்களுக்கும், தென்மண்டலத் தளபதி, அஞ்சா நெஞ்சன், அண்ணன் மு.க. அழகிரி அவர்களுக்கும், மாவட்டச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தேர்தல் பிரச்சாரத்திற்கு வருகை தந்து, என்னை வெற்றிபெறச் செய்த மாண்புமிகு மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் தயாநிதி மாறன் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கும், முன்னாள் அமைச்சரும், இளையான்குடி சட்டப் பேரவை உறுப்பினருமான திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் அவர்களுக்கும், முதுகுளத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கூட்டணிக் கட்சியினருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நெடுஞ்சாலையிலே பேசுவது மாதிரியே போகிறதே? (சிரிப்பு) (குறுக்கீடு) அப்படியென்றால் குறுக்கிடக் கூடாது.

**திரு. கே. முருகவேல்:** இராமநாதபுரம் மாவட்ட மக்களின் கண்ணீரைத் துடைத்து, தண்ணீரைப் பெற்றுத் தரக்கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு, கிள்ளித் தருகின்ற காலத்தில், ரூ.616 கோடியினை அள்ளிக் கொடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை தந்து, அத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியும், தென்மாவட்டங்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு மிகவும் உதவியாக அமையவுள்ள சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றித் தந்த தமிழினத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களுக்கும் இராமநாதபுரம் மாவட்டத்து மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சபையின் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள், இந்தத் துறையில் கடந்த ஐந்தாண்டு காலமாக அமைச்சராக இருந்த காலத்தில், பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்திற்கு

ஒரு முறைகூட வந்தது கிடையாது. அப்படி வந்து எந்தப் பணிகளையும் ஆய்வு செய்யவில்லை. ஆனால், தமிழக முதல்வர் அவர்களின் ஆணையை ஏற்று, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், இந்த 11 மாதங்களில் எங்கள் மாவட்டத்திற்கு நான்கு முறை வந்து, சாலைப் பணிகளை ஆய்வு செய்து, விரைவுபடுத்தினார். அமைச்சர் அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள மாநில நெடுஞ்சாலைகளில் 9.250 கிலோ மீட்டர் சாலையினை இரு வழிச் சாலையாக மாற்ற முடிவெடுத்திருப்பது மிகவும் பாராட்டிற்குரியது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாலைகளைப் பிற மாவட்டங்களில் உள்ள சாலைகளோடு ஒப்பிட்டால் மிகவும் மோசமாக உள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்குக் கிழக்குக் கடற்கரைச் சாலை மிகவும் அவசியமாகும். இந்தச் சாலைப் பணிகள் வேகமாக நடைபெற வேண்டும். எனவே, கிழக்குக் கடற்கரைச் சாலைப் பணிகளை விரைவுபடுத்த அரசு முயற்சி எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், சாலைப் பணிகள் இரண்டாண்டுகளுக்குள் முடிக்கப்பட்டு, இரு வழிச் சாலையாக மாற்றப்படும் என்று தேர்தல் அறிக்கையில் கூறியதை நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாலைகளைச் சீரமைத்திட சிறப்புத் திட்டம் தீட்டி, ஒரே நேரத்தில் எல்லாச் சாலைகளையும் சீரமைக்க வேண்டுமென்றும், வைகை ஆற்றில் இரண்டு புதிய பாலங்களும், கமுதி-பார்த்திபனூர் சாலையில் மூன்று பழைய குறுகிய பாலங்களுக்குப் பதிலாக புதிய பாலங்களும், சாயல்குடி-அருப்புக்கோட்டை சாலையில் குருவாடி அருகே இரண்டு பாலங்களும் புதிதாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமெனத் தமிழினத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி. திரு. முருகவேல், நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே. முருகவேல்:** கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வேலையிழந்த 10,000 சாலைப் பணியாளர்களில், வறுமையின் காரணமாக இறந்தவர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்கி, அக்குடும்பங்களுக்கு மீண்டும் வாழ்வளிக்க



வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, சாலைப் பணிகளுக்கு சாலைப் பணியாளர்களை நியமிப்பதுபோல, 25 கிலோ மீட்டருக்கு ஒருவர்வீதம் சாலை ஆய்வாளர்களை நியமிப்பார்கள். ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் சாலை ஆய்வாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்படாத காரணத்தினால், காலியாக உள்ளன. எனவே, சாலை ஆய்வாளர் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில், கண்மாய்கள் நிறைந்த மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டமும் ஒன்று. இம்மாவட்டத்திலுள்ள கண்மாய்களைத் தூர் வாரவும், குறிப்பாக, நாராயண் காவேரி, ரகுநாத காவேரி, சங்கர தேவன் கால்வாய், மேலநாட்டார் கால்வாய், கீழநாட்டார் கால்வாய், கூத்தன் கால்வாய், களரிக் கால்வாய் ஆகியவற்றைத் தூர் வார நடவடிக்கை எடுத்திட வேண்டுமென மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கமுதியிலுள்ள அபிராமம் அருகேயுள்ள ஆதி திராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிக்கொண்டிருந்த அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலை கடந்த ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டுவிட்டது. அதை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

யாதவர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஆடு வளர்ப்போர் நல வாரியம் அமைக்க வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தெய்வீகத் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நூற்றாண்டு விழாவிற்கு ரூபாய் 50 இலட்சம் நிதி ஒதுக்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நூற்றாண்டு விழாவிற்குக் கூடுதல் நிதி வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் பசும்பொன் கிராமத்தில் முத்துராமலிங்கத் தேவர் நினைவு கலைக் கல்லூரி தொடக்கப்பட்டது. அந்தக் கல்லூரிக்குக் கூடுதல்

வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, நெடுஞ்சாலைக்கென தனியாக ஒரு துறையைத் தொடங்கிய கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, நெடுஞ்சாலைத் துறை, ஒன்றியச் சாலை, கிராம ஊராட்சிச் சாலை உட்பட அனைத்துச் சாலை ஓரங்களிலும் நிழல் தரும் மரக் கன்றுகளை நட்டு வளர்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

வளைவான அனைத்துப் பழைய சாலைகளையும், வளைவின்றி நேராக அமைத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் விபத்துக்கள் குறையும்; ஓரளவு தூரமும் குறையும்.

சாலையோர ஆக்கிரமிப்புகளை அடியோடு நீக்கிட வேண்டுமெனவும், ஆக்கிரமிப்புக்கு இடம் தராமல் கண்காணித்திட வேண்டுமெனவும், சாலை விபத்துக்களைத் தடுக்க சிறப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முருகவேல், சுருக்கமாகப் பேசினாலும் நன்றாகப் பேசினார். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம். உங்களுக்கு 15 minutes தான். (குறுக்கீடு) நீங்கள் E.C. Road, ஓடிக்கொண்டேயிருக்க வேண்டியதுதான்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த எங்களுடைய தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், எங்களுடைய மாண்புமிகு சின்ன அய்யா அவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறை என்பது நாட்டின் வளர்ச்சிக்கு வித்திடுகிற துறையாக விளங்கிக்கொண்டிருக்கிறது. நாட்டின் முக்கியமான கட்டமைப்புகளில் முதலிடம் வகிப்பது சாலைப் போக்குவரத்து ஆகும். நெடுஞ்சாலைத் துறைக்கென தனியாக நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அமைச்சரை நியமித்து, இந்தத் துறை மிகவும் வலுவாக இருக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்தும் வகையிலே உருவாக்கியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.



அதேபோன்று, இந்தத் துறை இன்றைக்குப் பல சாதனைகளைப் படைத்து வருகிறது என்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் சாலைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில், மகாராஷ்டிராம், குஜராத்துக்கு அடுத்தபடியாகத் தமிழகம் இருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. நம் நாட்டிலே இன்றைக்கு இருக்கின்ற 1,88,700 கிலோ மீட்டர் சாலைகளில், 61,444 கிலோ மீட்டர் சாலைகள் நெடுஞ்சாலைத் துறையினாலே பராமரிக்கப்படுகின்றன. இது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

அதேபோன்று, வளர்ந்து வரும் தமிழகத்தில் தொழிற்புரட்சி, கல்விப் புரட்சி, பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி எனப் பல கோணங்களிலே நம்முடைய அரசினுடைய துறைகள் சிறப்பாகச் செயலாற்றி, அதற்கான பல கட்டமைப்பு வசதிகளைச் செய்துகொண்டிருக்கிற வேளையிலே, இதற்கெல்லாம் அடிப்படைத் தேவையாக நம்முடைய சாலை வசதி இருந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே, இன்னும் கூடுதலாக நாம் நிதியை ஒதுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

அதேபோன்று, தமிழகத்திலே, தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் சாலைகள் ஏறக்குறைய ஐந்து தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு, அவற்றிலே தொகுப்பு ஒன்றிலே, ஆற்காடு-திருவாரூர் சாலை, தொகுப்பு இரண்டிலே, நாகப்பட்டினம்-கட்டுமாவடி சாலை, தொகுப்பு மூன்றிலே, கட்டுமாவடி-இராமநாதபுரம் வரையுள்ள சாலை, தொகுப்பு நான்கிலே, இராமநாதபுரம்-தூத்துக்குடி வரையுள்ள சாலை, தொகுப்பு ஐந்திலே, இராமநாதபுரம்-கும்பகோணம் புறவழிச் சாலை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ஏறக்குறைய 1,024 கோடி ரூபாய் செலவிலே அதற்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, அதிலே நான்கு பணிகள் தொடங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணிகளை வெகுவிரைவிலே முடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, நெடுஞ்சாலைத் துறைக்கு, அதனுடைய சாலைகளை மேம்படுத்துவதற்காக அதிகமான நிதியை ஒதுக்கிக்கொண்டிருக்கிறோம். ஆனால், கிராமங்களில் இருக்கின்ற கிராமச் சாலைகள் இன்னும் சரியான முறையிலே போடப்படாமல் மண் சாலைகளாக இருந்துகொண்டிருக்கின்றன.

அவற்றையும் சிமெண்ட் சாலைகளாகவும், தார்ச் சாலைகளாகவும் மாற்றினால், கிராமங்களில் ஓடுகின்ற பேருந்துகளுக்கு வாப்பிரசாதமாக இருக்கும். எனவே, கிராமச் சாலைகளை மேம்படுத்துவதற்குக் கூடுதலான நிதியை ஒதுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஒரு வழிச் சாலைகளாக நம்முடைய மாநிலச் சாலைகள் இருந்து கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மேட்டூர்-கொளத்தூர்-பாலாறு போன்ற சாலைகள் இன்றைக்கு ஒரு வழிச் சாலைகளாக இருந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சாலைகளையெல்லாம் இரு வழிச் சாலைகளாக அல்லது நான்கு வழிச் சாலைகளாக மாற்றுவதற்கான முயற்சியை நம்முடைய அரசு எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே இனி வரும் காலக்கட்டங்களிலே சாலைப் பணிகளை மேற்கொள்கின்றபொழுது, மேடு, பள்ளமான சாலைகளே இருக்கக் கூடாது என்கிற நிலையை நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்டு நடத்துவதற்கு, சுடு கலவை இயந்திரத்தின்மூலம் அனைத்துச் சாலைகளையும், போடுவதற்கான முயற்சியை நம்முடைய அரசு எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், சாலைகளில் போகிறபொழுது, அதிகமாக மேடு, பள்ளங்கள் இருக்கின்றன. அதனாலே விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது. அதனால் ஒரே மாதிரியான, சீரான சாலைகளை அமைத்துக் கொடுப்பதற்கு நம்முடைய அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு சாலைப் பணிகளோ அல்லது மேம்பாலப் பணிகளோ நடக்கின்றபொழுது, ஒப்பந்தக்காரர்கள் அந்தப் பணிகளைத் தொடங்குகின்றபொழுது, குறிப்பிட்ட இடங்களிலே, அந்தப் பணி ஆரம்பிக்கிற இடத்திலிருந்து முடிகிற வரையிலே அறிவிப்புப் பலகைகளை வைக்க வேண்டும். அந்தத் திட்டங்களின் மதிப்பீடு எவ்வளவு என்பதையும், அதிலே செய்யப்படுகிற பணிகளுக்கான கலவைகள், அது தாராக இருந்தாலும், ஜல்லியாக இருந்தாலும், சிமெண்ட் வேலையாக இருந்தாலும், இந்த அளவிற்குக் கலக்க வேண்டும் என்பதையும், இத்தனை அடி உயரத்திற்கு அந்தச் சாலைகள் போடப்பட வேண்டும் என்பதையும் அதிலே உறுதியிட்டுச் சொல்ல வேண்டும் . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை வரவேற்கத்தக்கது. கடந்த நிதிநிலை ஆண்டிலிருந்தே, எடுக்கப்பட்ட ஒவ்வொரு பணியையும் யார் செய்கிறார்கள், அதனுடைய மதிப்பீடு எவ்வளவு, அதை எவ்வளவு காலத்திற்குள் முடிக்க வேண்டுமென்ற விளக்கும் பெயர்ப் பலகைகளை அங்கே வைக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. சாலைகளை அகலப்படுத்துகின்ற நேரத்திலே, விபத்துக்கள்கூட ஏற்படுகின்றன. அதனையும் சரியான முறையில் கையாண்டு, விபத்துக்களைத் தவிர்க்க வேண்டுமென்று துறைப் பொறியாளர்களிடம் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. நிச்சயம் தொடர்ந்து, அதை இன்னும் முழுமையாக, சரியாக இந்தத் துறை கையாளும்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேபோன்று, பணி செய்யக்கூடிய சாலைகளிலே பயன்படுத்தக்கூடிய பொருட்களினுடைய விகிதாச்சாரத்தையும் அதிலே குறிப்பிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்தப் பணிகளைக் கண்காணிப்பதற்காக அரசியல்வாதிகள் அல்லாது அந்தப் பகுதியில் இருக்கும் சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு அதிகாரிகள் உள்ளிட்ட கண்காணிப்புக் குழுவை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய சகோதரர், பண்ருட்டி தொகுதி உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களுடைய கோரிக்கை, சென்னை-கும்பகோணம் சாலையிலே பண்ருட்டி முதல் கண்டரக்கோட்டை வரை மற்றும் பண்ருட்டி முதல் வடலூர் இரயில் நிலையம் வரை செல்லும் சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. குண்டும், குழியுமாக இருக்கின்றன. அது பற்றிக் கேட்டால், இப்போது அவை தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன; அதனாலே நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் அச்சாலைகளைப் பயன்படுத்தக்கூடிய சாலைகளாக மாற்ற முடியாது என்று சொல்வதாகச் சொல்கிறார்கள். அவற்றை உடனடியாகச் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், தேசிய நெடுஞ்சாலை 45, தாம்பரத்திலிருந்து திண்டிவனம் வரையிலே, அருமையான சாலையினைப் போட்டு இருக்கிறார்கள். அடுத்த பணியாக, இன்றைக்கு திண்டிவனம்-விழுப்புரம் வரையுள்ள சாலையை அகலப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். எஞ்சியிருக்கின்ற திருச்சி வரையுள்ள சாலையை உடனடியாக நான்கு வழிப் பாதையாக மாற்ற வேண்டும்.

அதேபோன்று, திருச்சியிலிருந்து மதுரை வரையிலே உள்ள அந்தச் சாலையை அகலப்படுத்துகின்ற பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. அதையும் துரிதப்படுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், திண்டிவனதிலே இரவு நேரங்களில் பெரும்பாலும் விபத்துக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அப்படி விபத்துக்கள் ஏற்படுகின்றபோது, மணிக்கணக்கிலே வாகனங்கள் நின்று விடுவதால், இரவு நேரங்களிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. இதையெல்லாம் உடனடியாகக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு இந்தச் சாலைகளை நான்கு வழிச் சாலைகளாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

நிறையப் பேச வேண்டும். இருந்தாலும், முதலில் என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன். என்னுடைய தொகுதியிலே செங்கல்பட்டு-திருப்போரூர் சாலை உள்ளது. அதைக் கடந்த ஆட்சியிலே அப்பொழுது இருந்த நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக 4¾ கோடி ரூபாயிலே நாங்கள் முடித்துவிடுவோம் என்று சொன்னார்கள். 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரையிலும் அதை அகலப்படுத்தவில்லை. அந்தச் சாலையை அகலப்படுத்தினால், பழைய மகாபலிபுரம் சாலையுடன் இணைக்கிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அந்தப் பகுதியிலே பல்வேறு தொழிற்சாலைகள் பெருகி வருவதன் காரணத்தினாலே, தென் மாவட்டங்களிலிருந்து வருபவர்கள் சென்னைக்குள் செல்லாமல் செங்கல்பட்டிலேயிருந்து நேராக திருப்போரூர் வழியாக பழைய மகாபலிபுரம் சாலையிலே செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, அந்தச் சாலையை உடனடியாக இரு வழிச் சாலையாக மாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



அது மட்டுமல்லாமல், செங்கல்பட்டு நகரம் பழமையான நகரம். அந்த நகரத்திலே தேசிய நெடுஞ்சாலை மிகக் குறுகிய அளவிலே இருக்கிறது. செங்கல்பட்டு-மதுராந்தகம் சாலையாக இருந்தாலும், காஞ்சிபுரம்-செங்கல்பட்டு சாலையாக இருந்தாலும், செங்கல்பட்டு-திருக்கழுக்குன்றம் சாலையாக இருந்தாலும் மிகக் குறுகிய அளவிலே இருக்கின்றன. வாகனங்கள் செல்ல முடியாமல் அதிக நெருக்கடியாக இருக்கின்றன. எனவே, அந்தச் சாலைகளை அகலப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, எனது தொகுதியிலே மணப்பாக்கம்-ஒத்திவாக்கம் சாலை மிக மோசமாக இருக்கிறது. அதேபோன்று, கரும்பு வழிச் சாலையாக இருக்கிற நெரும்பூர்-பாண்டூர்-கன்னிக்கோயில் சாலையை உடனடியாகப் புதுப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, என்னுடைய கோரிக்கையாக ஒவ்வோர் ஆண்டும் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்; மாமல்லபுரம்-கல்பாக்கம், திருக்கழுக்குன்றம்-செங்கல்பட்டு-காஞ்சிபுரம்-அரக்கோணம்-திருத்தணி-திருப்பதி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க வேண்டுமென நான் கோரிக்கை வைத்துக்கொண்டு இருக்கிறேன். அதையும் செய்து தர வேண்டும்.

அதேபோன்று, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களிலே இருக்கிற சாலைப் பணியாளர்களுக்கு இதுவரையிலே பணி நிரந்தரம் வழங்கப்படவில்லை. அதை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இப்பொழுது சாலைகளிலே உள்ள நிறைய மரங்களை வெட்டிக்கொண்டிருக்கிறோம். ஆனால், சாலை ஓரங்களிலே புதிய மரங்களை நடாமல் இருந்துகொண்டிருக்கிறோம். அசோக சக்கரவர்த்தி அன்றைக்கே சாலைகளின் இரு புறமும் மரங்களை வைத்தார். அதேபோன்று நாமும் தமிழகத்திலே உள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான அத்தனை சாலைகளிலும் மரங்களை வைக்க வேண்டும். அதேபோன்று, ஏராளமான இடங்கள் சாலை ஓரங்களிலே காலியாக இருப்பதாலே அவை ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் மரங்களை நட்டு, ஒரு பசுமைப் புரட்சியை நாட்டிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், கிழக்குக் கடற்கரைச் சாலையிலே ஏராளமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. பத்திரிகைகளிலே

பார்க்கிறோம். மாமல்லபுரம், கல்பாக்கம், கோவளம், மரக்காணம், களப்பாக்கம் போன்ற பகுதிகளிலேயெல்லாம் அடிக்கடி விபத்துக்கள் நடக்கின்றன. விபத்திலே குடும்பத்தோடு இறந்துவிடுகிற ஒரு அவல நிலை இருந்துகொண்டிருக்கிறது. அந்தச் சாலைகளிலே ஏராளமான வளைவுகள் இருக்கின்றன. அதனாலேதான் அவற்றை Zig-zag Curves என்று சொல்கிறார்கள். அதுபோன்ற Curve-களையெல்லாம் உடனடியாக நீக்கி சாலைகளை நேர்ப்படுத்தினால் விபத்துக்களைத் தடுக்க முடியும் என்ற என்னுடைய வேண்டுகோளையும் வைத்து, அதேபோன்று, R.R. ஆக ஏற்கெனவே போடப்பட்ட சாலைகள் இன்றைக்குக் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. அது பற்றி நெடுஞ்சாலைத் துறையிடம் கேட்டால், அந்தச் சாலைகளை நாங்கள் எடுத்துக்கொள்ளமாட்டோம் என்று சொல்கிறார்கள். அதேபோன்று, ஒன்றியச் சாலைகள் பற்றி அவர்களிடம் சொன்னால், நாங்கள் எடுக்கமாட்டோம் என்று சொல்கிற நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் நெடுஞ்சாலைத் துறையே கண்காணிக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கிராம மண் சாலைகள் தார்ச் சாலைகளாக நபார்டு திட்டத்தில் மாற்றப்பட்டவை பராமரிக்கப்படாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். 1996-லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் 4-வது முறை முதலமைச்சராக இருந்தபொழுது, ஏறத்தாழ 5,500 கிலோ மீட்டர் மண் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டன. அதைப் பராமரிப்பதன் அவசியத்தை அறிந்துதான் கடந்த நிதியாண்டிலே நெடுஞ்சாலைத் துறைக்கு, பராமரிப்பிற்கு ரூபாய் 200 கோடியும், ஊரக வளர்ச்சித் துறைக்கு ரூபாய் 103 கோடியும் அளிக்கப்பட்டதன் காரணமாக ஏறத்தாழ 3,500 கிலோ மீட்டர் அளவிலே அத்தகைய சாலைகள் பராமரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். E.C. Road பற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் நன்கு அறிவார்கள். அதற்காக அச்சாலையில் ஆய்வுப் பணியை மேற்கொண்டு விபத்துக்கள் நடப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று அவர் எடுத்துரைத்து, அதற்காக இன்றைக்கு ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதன் காரணமாக, E.C. சாலையில் ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்காக நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின் ஆராய்ச்சி மையத்தின்மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனுடைய ஆய்வு



அறிக்கைகள் பெறப்பட்டிருக்கின்றன. அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அதேபோன்று, இன்றைக்கு வேலூரிலேயிருந்து வருபவர்கள், நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள் எல்லாம் ஒரு மணி நேரம், ஒன்றே கால் மணி நேரத்தில் நாங்கள் பூந்தமல்லி வரையிலே வந்துவிடுகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், பூந்தமல்லியிலேயிருந்து சட்டப் பேரவைக்கு வருவதற்கு ஒன்றரை மணி நேரம் ஆகிறது என்கிறார்கள். நாங்கள்கூட செங்கல்பட்டிலேயிருந்து 25 நிமிடங்களில் தாம்பரம் வருகிறோம். ஆனால், தாம்பரத்திலேயிருந்து சென்னைக்கு வருவதற்கு ஒரு மணி நேரம், ஒன்றே கால் மணி நேரம் ஆகிறது. இதற்குக் காரணம், சாலைகள் குறுகலாக இருப்பதால்தான். எனவே, சாலைகளை அகலப்படுத்த வேண்டும்.

அதேபோன்று, வட்டச் சாலைகள், R.R. என்கிற சாலைகளெல்லாம் இன்னும் சரி செய்யப்படாமல் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், குரோம்பேட்டை, பல்லாவரத்திலே இருக்கிற அந்த ஆரச் சாலைகள் ஏற்கெனவே நம்முடைய ஆட்சியிலேதான் நான்கு வழிச் சாலை பல்லாவரத்திலேயிருந்து துரைப்பாக்கம் வரையிலே போடப்பட்டிருக்கிறது. அதற்கான சாலை மேம்பாலம், அதாவது railway மேம்பாலம் கட்டப்படாமலே இருப்பதால் அந்தச் சாலை பயன்பாட்டிற்கு வரவில்லை. இப்பொழுதுதான் அந்தப் பணி நடந்துகொண்டிருக்கிறது.

அதேபோன்று, துரைப்பாக்கத்திலேயிருந்து ஈஞ்சம்பாக்கத்திற்கு இரண்டே கிலோ மீட்டர்தான் தூரம் இருக்கிறது. கிழக்குக் கடற்கரைச் சாலையிலே அதைச் சேர்க்க வேண்டும். அதைச் சேர்த்தால்தான் கிழக்குக் கடற்கரைச் சாலையிலிருந்து நேராக விமான நிலையத்திற்கு வருவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. இல்லையென்று சொன்னால், அவர்கள் அடையாறு பகுதியைச் சுற்றிக்கொண்டு விமான நிலையத்திற்கு வருகிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே, அந்தச் சாலையை இணைப்பதற்கான முயற்சியை நம்முடைய அமைச்சர் எடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஒவ்வொரு முறை மழை வந்தாலும், நீலகிரி மாவட்டத்திலே இருக்கிற மக்களுக்கு மிகப் பெரிய பாடு. அங்கே அடிக்கடி மண் சரிவு ஏற்படுகிறது. எந்தெந்தப் பகுதிகளிலெல்லாம்

இந்த மண் சரிவு ஏற்படுகிறது என்பதை முன்பே கணக்கிட்டு, அந்தச் சாலைகளில் மண் சரிவே ஏற்படாமல் இருப்பதற்கான வாய்ப்பை நம்முடைய அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

இப்போது, தொடர் வண்டித் துறையிலே மிகப் பெரிய சகாப்தத்தை ஏற்படுத்தி இருக்கிற இரண்டு அமைச்சர்கள், எங்களுடைய கட்சியின் அமைச்சர்கள், எங்களுடைய தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அ.கி. மூர்த்தி அவர்களும், அதையடுத்து இப்போது மாண்புமிகு திரு. அரங்க. வேலு அவர்களும் மிகப் பெரிய சாதனையைச் செய்து வருகிறார்கள். அதற்கு உதாரணம், கடந்த 50 ஆண்டுகளிலே வெறும் 40 மேம்பாலங்கள்தான் நமிழகத்திலே இருந்தன. ஆனால், அவர்கள் வந்த அந்த 5 ஆண்டுகளிலே 83 மேம்பாலங்களை, இந்தியாவிற்கு ஒதுக்கிய மேம்பாலங்களில் மூன்றில் ஒரு பங்கைத் தமிழ்நாட்டிற்கு அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. ஏனென்று சொன்னால், அவ்வளவு மேம்பாலங்களைக் கொடுத்து, அந்தப் பணிகள் நடைபெறுகின்ற வாய்ப்பு இருந்தாலும், அந்த வேலைகள் மிக மந்த கதியிலேதான் இருக்கின்றன. அவற்றைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, என்னுடைய தொகுதியில் இருக்கிற செங்கல்பட்டு மேம்பாலம், சிங்கப்பெருமாள் கோயில் மேம்பாலம், வண்டலூர் மேம்பாலம், கூடுவாஞ்சேரி மேம்பாலம் போன்ற மேம்பாலங்கள் ஆரம்ப நிலையிலேயே இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, உடனடியாக அவற்றைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கடந்த ஆட்சியினுடைய நினைவுச் சின்னமாகப் பெரம்பூர் இரயில்வே மேம்பாலம் இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பணிகளை உடனடியாகத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்து விடுகிறேன், துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** அதேபோன்று, மதுரை எல்லீஸ் நகரினுடைய தொடர் வண்டி மேம்பாலம் இன்னும் முடிவடையாத நிலையில் இருக்கிறது. அதை உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய நிதிநிலைச்



செயலாக்க சாதனைப் புத்தகத்திலே பக்கம் 10-லே, நெடுஞ்சாலைத் துறையில் மாவட்ட இதர சாலைகளுக்கான பணிகளுக்கு 2006-2007-லே 4,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது இந்த நிதியாண்டிலே 3,120 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட இதர சாலைகளைத்தான் அதிகமாகப் பயன்படுத்துகிற பொது மக்கள் இருக்கிறார்கள். அந்தச் சாலைகளை மேம்படுத்துவதற்குக் கூடுதலாக நிதியை ஒதுக்க வேண்டும். அதேபோன்று, வெள்ளம், புயல்போன்றவற்றால் பாதிக்கப்பட்ட சமயங்களிலே, சாலைகளை மேம்படுத்துவதற்காக நிதி ஒதுக்கப்படாமல் வெறும் ஆயிரம் ரூபாய் மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தமிழகத்திலே கடந்த ஆண்டு 2006-லே மட்டும், 55,145 விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம், வாகனப் பெருக்கம் அதிகமாகி விட்டதுதான். ஆனால், அதற்கேற்ற சாலைகள் இல்லை என்கிற குறைபாடு வல்லுநர்களாலே சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, கடந்த 5 ஆண்டுகளை ஒப்பிடுகிறபோது, இரண்டு மடங்காக நம்முடைய வாகனப் போக்குவரத்து அதிகமாகி இருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டுவிடுவேன்.

**திரு. கி. ஆறுமுகம்:** ஒரே நிமிடத்தில் உரையை முடித்து விடுகிறேன். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் பார்த்தால், 51 இலட்சம் வாகனங்கள் மட்டுமே இருந்தன. ஆனால், இன்றைக்கு 91 இலட்சம் வாகனங்கள் தமிழகத்திலே இருக்கின்றன. சாலைகள் குறுகி இருப்பதாலும், அவற்றை விரிவுபடுத்தாததாலும், புதிய மேம்பாலங்களை அதிக அளவிலே கொண்டு வராததாலும் விபத்துக்கள் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, பல்வேறு நகர்ப்புறங்களில் சாலைகளை அகலப்படுத்தி, புதிய வட்டச் சாலைகளை, ஆரச் சாலைகளை அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, சென்னைப் புறவழிச் சாலை. (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன். சென்னைப் புறவழிச் சாலை, தாம்பரத்திலிருந்து மதுரவாயல் வரையிலே 19 கிலோ மீட்டர் சாலை இன்றைக்கு மிக அருமையாகப் போடப்பட்டுக்கொண்டிருக்கிறது. அது இரு வழிச் சாலையாக இருந்தது, நான்கு வழிச் சாலையாகப் போடப்படுகிறது.

அதேபோன்று, சென்னை மாநகரைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு நான்கு மேம்பாலங்களைக் கட்டி வருகிறார்கள். கத்திப்பாராவிலே கட்டப்படுகிறது. அதேபோன்று கோயம்பேட்டிலே கட்டப்படுகிறது, அம்பத்தூர் பகுதியிலே கட்டப்படுகிறது. இப்படி அடுக்கு மேம்பாலங்களையெல்லாம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். பல்வேறு மாநகரப் பகுதிகளிலும் இதுபோன்று அடுக்கு மேம்பாலங்களைக் கட்டுவதற்கும், அங்கிருக்கிற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்குமான பணிகளை நம்முடைய அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* கடைசி, ஓரேயொரு விஷயம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'ஓரேயொரு' என்று எத்தனை தடவை சொல்வீர்கள்?

**திரு. கி. ஆறுமுகம்:** உரையை முடித்து விடுகிறேன். நம்முடைய அரசின் இலக்காக, ஒரு குறிக்கோளாக, எங்களுடைய கருத்தாகச் சொல்கிறோம். தமிழகத்தில் சாலைகளில் எந்தவிதத் தடங்கலுமின்றி வாகனங்கள் குறைந்தபட்சம் ஒன்றரை மணி நேரத்தில் விபத்தின்றி 100 கிலோ மீட்டர் கடப்பதற்கான அளவிற்குச் சாலைகளை மேம்படுத்துவதற்கு இந்தத் துறை செயலாற்ற வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன். உங்களுக்கு ஏழு நிமிடங்கள்.

***திரு. என். நன்மாறன்:** அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவிற்கிணங்க, 10 நிமிடங்களாக ஒதுக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, அதற்குள்ளாகவே உரையை முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேசப் பணித்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன். இன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் முன்முயற்சியும், அக்கறையும்கொண்டு செயல்படுவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி பார்க்கிறது, வரவேற்கிறது என்பதைத்



தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயம், போடப்படும் சாலைகள் தரமாக இருக்க வேண்டும், உரிய முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்பதையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

*பிற்பகல் 12-50*

சாலைகள் நான்காகப் பிரிக்கப்படுகின்றன. அவை, தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் என்று நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில், பல தனியார் நிறுவனங்கள் Toll Gate வரிகள்மூலம் வசூல் செய்துகொண்டிருக்கின்றார்கள். எவ்வளவு காலம் இந்த வசூல் நடக்கும் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். சாலைகளைப் போடும்போது, அவை எப்போது தொடங்கும், எப்போது நிறைவுபெறும், திட்ட மதிப்பீடு எவ்வளவு, ஒப்பந்ததாரர்கள் யார் என்பனபோன்ற விவரங்களை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்பதையும் கேட்டுக்கொள்கிறோம்.

போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, சாலைகளைப் போடுவதாகத் திட்டமிட்டு, அதன் பணிகள் தாமதப்படுத்தப்படுவதால், அதுவே போக்குவரத்துக்கு சிரமத்தை ஏற்படுத்துவதாக மாறிவிடுவதாகவும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எனவே, இக்குறையைப் போக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

கொள்கை விளக்கக் குறிப்பில், மாநில மற்றும் மாவட்ட அளவிலான நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்துவோர் அடங்கிய ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், குழு பற்றிய விவரத்தை அவைக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகராட்சிகளில், ஊர்ப்புறங்களில் சாலைகளைப் போடுவதற்கு ஒப்பந்ததாரர்கள் வருகின்றார்கள். எடுத்த வேலையை அரையும், குறையுமாக விட்டுவிடுகின்றார்கள். என்ன நடந்தது என்ற விவரங்களை அறிய முற்பட்டால், அவர்கள் யார் என்றேகூடத் தெரியவில்லை. மீண்டும் tender விடுகிறோம் என்று அதிகாரிகள் கூறுகின்றார்கள். மக்கள், மக்கள் பிரதிநிதிகளிடம்தான் முறையிடுகின்றார்கள். ஆகவே, இதில் ஒரு transparent--ஒளிவுமறைவற்ற தன்மை வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகள் போடப்பட்டவுடனே காணாமல் போய்விடுகின்றன. மக்கள் மத்தியில் பல்வேறுவிதமான யூகமான பேச்சுக்கள் வருகின்றன. எனவே, இந்தக் குறைகள் களையப்பட வேண்டும். சாலைகளுக்காக ஒதுக்கப்படும் நிதி சாலைகளுக்கே பயன்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறச் சாலைகள்தான் இதனால் மிகவும் பெரும் பாதிப்புக்கு ஆளாகின்றன. இடையில் புகுந்து பல பேர் செய்யும் தவறுகள் அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

சாலை ஆய்வாளர்கள் பணியிடம் நிரப்பப்பட்டு, சாலைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். சாலைப் பணியாளர்களுக்கு வெவ்வேறு வேலைகளை ஒதுக்குவதாகவும், அதனால் சாலை அமைப்புப் பணிகளில் பாதிப்புகள் ஏற்படுவதாகவும் குறைபாடு இருக்கின்றது. இதைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறையில் சாலைகளில் அவ்வப்போது ஏற்படும் குழி, பள்ளங்கள், சாலைப் பணியாளர்கள்மூலம் கடந்த காலத்தில் ஜல்லி, தார் போன்றவற்றைப் பயன்படுத்தி patch போடப்பட்டுச் செப்பனிடப்பட்டன. சாலைப் பணியாளர்கள் அரசின் சார்பில் இதை நிறைவேற்றி வந்தார்கள். கடந்த ஆட்சி அவர்களைப் பணி நீக்கம் செய்தபின், இவ்வேலைகளை அரசே செய்யும் நிலை மாறி, ஒப்பந்ததாரர்களிடம் விடப்பட்டன. இதனால் தரம் குறைகிறது. ஆகவே, சாலைப் பணியாளர்கள்மூலம் இப்பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்குத் தேவையான பொருட்கள் துறைமூலம் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். ஒவ்வொரு சாலையிலும் சாலையோர மழை நீர் வடிகால், கால்வாய்களை அமைத்து, அருகிலுள்ள ஏரி, குளங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த மழை, வெள்ளக் காலங்களில் கிராமச் சாலைகள், நகர்ப்புறச் சாலைகள் மிகவும் பாதிப்படைந்துள்ளன. அவற்றைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாலைகளை அமைக்க இரப்பர் பயன்பாட்டை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாலைகள் சரியில்லாததால், பல கிராமங்களில் பேருந்து வசதிகூட இல்லாமல் மக்கள் சிரமம் அடைகின்றார்கள். இது போக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர், தருமபுரி போன்ற மாவட்டங்கள் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட தாலுகாக்களில் கோட்ட, உட்கோட்ட



அலுவலகங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாலைகளில் அமைக்கப்படும் தரமற்ற வேகத் தடைகளால் சில இடங்களில் விபத்துக்கள் ஏற்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, வேகத் தடைகளைச் சீரமைக்க உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையிலுள்ள பதிவுரு எழுத்தர்கள் பதவி உயர்வு இல்லாமல் இருக்கின்றார்கள். ஓட்டுநர்களாக இருந்தவர்கள் துலக்குநர்களாக மாற்றப்பட்டுள்ளனர். இதுபோலப் பல குறைபாடுகள் இருக்கின்றன. இவற்றைப் போக்குவதற்காக, துறை வாரியாக சங்கத் தலைவர்களை அணுகி, ஊழியர்களுக்கு உரிய நீதி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட வியாசர்பாடி இரயில்வே மேம்பாலம் விரைவில் கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். தொடக்க விழா இரு முறை நடத்தப்பட்டும்கூட இன்னும் அந்தப் பணி நிறைவுபெறவில்லை. குமரி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே திருவட்டாறு தொகுதியில், திக்குறிச்சி-வல்லக்கடவு பாலம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கீரிப்பாறை பாலம் ஏற்கெனவே இருந்து, இடிந்துவிட்டதைப் புதிதாக அமைக்கத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மங்காடு பாலம் கட்டும் பணி 11 வருடங்களாக நடக்கிறது. ஆமை வேகம், நத்தை வேகம் என்பதைவிடவும் மோசமான வேகமாக இருக்கின்ற காரணத்தினால், இந்த மங்காடு பாலப் பணியை விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

குடியாத்தம் தொகுதி, மோர்தானா அணை ஆற்றின் குறுக்கே கொட்டாரம் மதகு, ஜிட்டப்பள்ளி பகுதியில் பாலம் அமைக்க வேண்டும். கோவை, ஒண்டிப்புதூர்-தும்மநாயக்கன்பாளையம் இரயில்வே மேம்பாலப் பணி மூன்று வருடங்களாக நடைபெறுகிறது. விரைவில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பூர் மையத்தில் ஓடக்கூடிய நொய்யல் ஆற்றின் கரையின் இரு புறமும் சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அரூர் தொகுதியில் அனுமன்தீர்த்தம் பாலம் ஆபத்தான நிலையில் உள்ளது. அதைப் புதுப்பிக்க வேண்டும். பழங்குடி மக்கள் பகுதியான கோட்டப்பட்டி, ஆவாலூர் பகுதியில் பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டும் இன்றும் பணி நிறைவுபெறவில்லை.

திண்டுக்கல் தொகுதியில் குடகனாறு, சந்தனவர்த்தி ஆறுகளைக் கடக்கப் பாலங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். மதுரை, எல்லீஸ் நகர், தத்தநேரி, கூடல் நகர் பாலங்கள் விரைவில் முடிக்கப்பட வேண்டும். மேலூர் தாலுகா, கீழவளவு பாலம் சீரமைக்கப்பட வேண்டும். கோச்சடை, விளாங்குடி இடையே வைகை ஆற்றில் பாலம் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பசும்பொன் தேவர் திருமகன் சிலை இருக்கக்கூடிய கோரிப்பாளையம் பகுதியில் ஒரு சுரங்கப் பாதை, சென்னை, அண்ணா சாலையில் இருப்பதைப்போல அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கீழவெளி வீதியில் தூய மரியன்னை உயர்நிலைப் பள்ளிப் பகுதியில் ஒரு சுரங்கப் பாதையை அமைத்து, மாணவர்கள் போக்குவரத்திற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகப் பணிகள் தமிழ்நாடு மின் வாரியத்தில் இணைக்கப்படும் என்று ஏற்கெனவே, இதே அவையில் எங்களுடைய தலைவர், ஜனநாயக மாதர் சங்கத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ் அவர்கள் பேசியபோது, அதை அரசு ஏற்றுக்கொண்டது. ஆனாலும், இன்றும் அந்தப் பணி நிறைவுபெறவில்லை. விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக ஊழியர் பிரச்சினைகளிலும் உரிய நடவடிக்கை எடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். நாகைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

துறைமுகங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் தனியார் பயன்பாடு அதிகரிக்கப்படக்கூடிய ஒரு தொனி இருக்கிறது. எனவே, தனியார் துறை ஊக்குவிப்பு என்பது தவிர்க்கப்பட வேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் எங்களுடைய கருத்துகளைக் கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன், உங்களுக்கு 7 நிமிடங்கள்தான்.

***திரு. எஸ். இராசசேகரன்:** பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையின்மீது எங்களுடைய கருத்துகளை இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். குறிப்பாக, நெடுஞ்சாலைத் துறை மிகச் சிறப்பாக இந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்று வருகின்றது. அதனுடைய அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டங்களுக்கும் சென்று ஆய்வு நடத்தி, சிறு விஷயங்களைக்கூடப் பரிசீலித்து, அதற்கான முடிவுகளை எடுக்கின்ற ஒரு அமைச்சராக இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்குத் தமிழகத்தில் தனிநபர் வருமானத்தையும், தமிழ்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியையும் முக்கியமாகக் கொண்டிருக்கக்கூடியதுதான் நெடுஞ்சாலைத் துறை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அந்த நெடுஞ்சாலைத் துறை நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, மாவட்டச் சாலைகள் அல்லது வேறு பல சாலைகள் என்று சொல்லி, நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, இப்போது தேசிய நெடுஞ்சாலைகளுக்கும், மாநில நெடுஞ்சாலைகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற காரணத்தினால் பல்வேறு திட்டங்கள் இந்தப் பகுதிகளிலே நிறைவேற்றப்படுகின்றன. அதை நாங்கள் வரவேற்கின்றோம். அதே நேரத்தில், கிராமங்களையும் சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள நான் ஆசைப்படுகின்றேன். குறிப்பாக, என்னுடைய தொகுதியில் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நான்கு ஊராட்சிகளுக்கு இதுவரையில் போக்குவரத்து வசதியே கிடையாது. ஏனென்று சொன்னால், அங்கே சாலை வசதியே கிடையாது. சாலை வசதி இல்லாத காரணத்தால், அந்தப் பகுதிகளுக்கு போக்குவரத்து இல்லை. ஆகவே, சாலைகளை முதலில் போட வேண்டுமென்று சொன்னால், சாலைகளுக்கான பணிகள் இதுவரை நடைபெறவில்லை. குறிப்பாக அதைத்தான் நான் குறிப்பிடுகின்றேன். கிராமப்புறச் சாலைகளை முக்கியமாக எடுத்து, அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, கிராமப்புறச் சாலைகள் என்கிறபோது, அவற்றைப் போட்டுவிட்டு ஒரு ஐந்தாண்டு

காலத்திற்கு அதைப் பற்றித் திரும்பிப் பார்க்காமலேயே இருந்துவிடுவதால் அந்தச் சாலைகள் கெட்டுவிடுகின்றன. அந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்கான வசதிகள் செய்யப்படவில்லை. குறிப்பாக, சாலைப் பணியாளர்கள் என்கின்றபோது நெடுஞ்சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகளைத்தான் அவர்கள் பராமரிக்கிறார்களே தவிர, சாதாரண கிராமப்புறங்களில் உள்ள சாலைகளைப் பராமரிப்பது கிடையாது. பராமரிப்பது என்று சொன்னால், 5 ஆண்டுகளுக்குப் பின்பு மேலும் ஒரு தடவை தார் போடுவது என்பதுதான் பராமரிப்பு அல்ல. அதற்குப் பதிலாக, அந்தச் சாலைகளின் side -களில் மண்ணை வெட்டிப் போட்டு அவற்றைச் சீரமைக்க வேண்டும். ஆகவே, சாலைப் பணியாளர்கள் கிராமப்புறச் சாலைகளையும் பராமரிப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டும்.

பிற்பகல் 1-00

அதைப்போல, மாவட்டச் சாலைகளை எடுத்துக்கொள்கின்றபோது கிராமச் சாலைகளையும் சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது 500 பேர் வாழுகின்ற பகுதிக்குச் சாலைகள் இணைக்கப்பட வேண்டும் என்கின்ற திட்டத்திலே 1.6 என்கின்ற அடிப்படையில் சாலையினுடைய நீளத்தைக் கணக்கிட்டு கிராமச் சாலைகளை எடுக்க வேண்டும் என்று இருக்கிறது. தமிழ்நாடு அரசு அதைச் செயல்படுத்தி வருகின்றது. 300 பேர் வாழக்கூடிய முறையில் அதைச் சுருக்கி, 1 கிலோ மீட்டரும் எடுத்துக்கொள்ளலாம் என்கின்ற அளவுக்கு அந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். ஏனென்று சொன்னால், கிராமப்புறங்களில் 300 பேர், 200 பேர் வாழுகின்ற சிறு, சிறு பகுதிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அதை, அந்த 300 பேராகச் சுருக்கி, ஒரு கிலோ மீட்டர் சாலையாக உருவாக்க வேண்டும். 1.6 என்பதை மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள நான் விரும்புகின்றேன்.

அடுத்து, கிழக்குக் கடற்கரைச் சாலை. கிழக்குக் கடற்கரைச் சாலை என்பது வேகமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதைப்போல, மாநகராட்சிப் பகுதிகளில் சாலைகளும், பாலங்களும் அதிகப்படுத்தப்பட்டு, கட்டப்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய சாலைகள் செப்பனிடப்படுவதில்லை. அங்கெல்லாம் புதிதாகச் சாலைகள், பாலங்கள் அமைக்கப்படுவதில்லை என்கின்ற நிலை இருக்கின்றது. ஆகவே, சென்ற நிதி ஆண்டில் நெடுஞ்சாலைத்



துறையினுடைய அமைச்சருடைய அறிவிப்பில் எங்களுடைய தொகுதிக்கென்று ஓர் அறிவிப்பு வந்தது. கருப்பட்டிபட்டி பாலம் ரூபாய் 1.25 கோடிக்குக் கட்டப்படும் என்று அறிவிப்பு வந்தது. ஆனால், அந்த அறிவிப்பு, அறிவிப்போடு இருக்கிறது என்பதை அமைச்சரிடத்திலும் சொல்லியிருக்கின்றேன். அது பற்றி சம்பந்தப்பட்ட செயலாளரிடத்திலும் சொல்லி இருக்கிறோம். ஆகவே, இந்த நிதியாண்டில் அதைக் கட்டாயமாக எடுத்து நிறைவேற்ற வேண்டும்.

அதைப்போல, என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய கொத்தமங்கலம் இசுகுபட்டி ஊராட்சியில் இருக்கக்கூடிய நாகபொத்தினபள்ளம் என்கின்ற இடத்தில் காமராசர் காலத்தில் கட்டப்பட்ட பாலம் இடிந்திருக்கின்றது. அது செப்பனிடப்பட வேண்டும். அதைப்போல, மணமடைக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய ஒரு பாலம் செப்பனிடப்பட வேண்டும்.

குறிப்பாக, கிண்டியில் உள்ள அந்தத் தொழிற்பட்டறையும், அதேபோல புதுக்கோட்டையில் இருக்கக்கூடிய அந்தத் தொழிற்பட்டறையும் இந்த இரண்டு தொழிற்பட்டறைகளும் இயக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகளைச் சொல்வதற்கு முன்னால் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு சாலைப் போக்குவரத்தில் விபத்தினால் மரணங்கள் அதிக அளவில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. விபத்துக்கள் அதிக அளவில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதில் சில விபத்துக்களில் 10 பேர், 5 பேர் இறந்தால் மாநில முதல்வர் அவர்கள் நிதியிலிருந்து அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. சில பேருக்குத்தான் கொடுக்கப்படுகிறதே தவிர, எல்லோருக்கும் அது கொடுக்கப்படவில்லை. ஆகவே, (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்கள் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute தான்.

**திரு. எஸ். இராசசேகரன்:** ஆகவே, அந்த விபத்துக்களில் இறந்த குடும்பத்தினர் அனைவருக்கும் அந்த நிதி வழங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகளை இங்கே சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, சாலை வசதி இல்லாத திருப்பக்கோவில்-மணமடை பகுதியில் சாலை அமைக்கப்பட வேண்டும். இலைக்கடிவிடுதி-திருமணஞ்சேரி சாலை அமைக்கப்பட வேண்டும். காடம்பட்டி-முதலிப்பட்டி சாலை அமைக்கப்பட வேண்டும். பாப்பாப்பட்டி-முதலிப்பட்டி சாலை அமைக்கப்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்தோடு இணைக்கின்ற ஒரு பாதை, கறம்பக்குடி—நரங்கிப்பட்டு தோப்பு நாயகம் சாலை அமைக்கப்பட வேண்டும். கறம்பக்குடி-நரங்கிப்பட்டு வெள்ளாள இணைப்புச் சாலை அமைக்கப்பட வேண்டும். கருகிழத் தெரு ஆர்ச்சிலிருந்து தஞ்சை மாவட்டத்தை இணைக்க ஒரு சாலை அமைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பாலங்கள் என்கிறபோது, இசுகுபட்டி ஊராட்சி, நாகரெத்தினபள்ளம் பாலம், செங்கமேடு ஊராட்சியிலுள்ள காட்டாற்றின்மீது பாலம் கட்டப்பட வேண்டும்.

அண்டக்குளம் சாலை மிகவும் சீர்கெட்ட நிலையிலே இருக்கிறது என்று இங்கே பேசிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சாலையைப் பற்றி ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தச் சாலையைப் போட்டு 3 ஆண்டுகளே ஆகின்றன. அவ்வளவு மோசமாக அந்தச் சாலையைப் போட்டது யார் என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும். அதைப் பற்றி ஒரு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன். ஏழு நிமிடங்கள்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை என்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்பாட்டிற்கும், கிராமச் சாலைகளை இணைப்பதற்கும், மாணவ, மாணவியர்கள் உயர் கல்வி பெறுவதற்கும், தொழில்கள் பெருகுவதற்கும், இனிய பயணம் மேற்கொள்வதற்கும், இந்த நெடுஞ்சாலைத் துறை, தன்னுடைய சீரிய கடமையைச் செய்து வருகின்றது. நெடுஞ்சாலைத் துறையின் உள்கட்டமைப்புகளான சாலைகள், பாலங்கள், வடிகால்கள்போன்றவைகளுக்காக அதிகமான நிதி ஒதுக்கப்படுகின்றபட்சத்தில், பராமரிப்பிற்குக் குறைந்த நிதி



ஒதுக்குவது என்பது கொஞ்சம் வேதனை அளிக்கின்றது. கார் வாங்கிவிட்டு, காரை உரிய நேரத்தில் பராமரிக்கத் தவறுவோமேயானால், ஆபத்தில் சிக்கிக்கொள்வோம். வீட்டைக் கட்டிவிட்டு, வீட்டைப் பராமரிக்கத் தவறுவோமேயானால், அதனுடைய பொலிவும், அழகும் இழந்துவிடும். ஆகவே, சாலைப் பராமரிப்பு என்பது மிக முக்கியம். சாலைப் பராமரிப்பு இல்லையென்றால், அதுதான் விபத்திற்குக் காரணமாக அமைகின்றது. சாலைகளிலே இயங்குகின்ற பேருந்துகள் விரைவாகவும், துரிதமாகவும், பாதுகாப்பாகவும் செல்கின்ற வகையிலே, தற்காலத்தில் அல்லது எதிர்காலத்தில் போடப்படுகின்ற சாலைகள் நல்ல தரத்தோடு, திறத்தோடு இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்ற இந்த வேளையில், தமிழ்நாட்டிலே உள்ள அத்தனை ஒரு வழிச் சாலைகளையும், இரு வழிச் சாலைகளாக மாற்றுவது அரசின் கொள்கையாக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், இரு வழிச் சாலைகளாக மாற்றுகின்றபோது, மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் வழிகாட்டுதல் முறையை இந்த அரசு கடைப்பிடிக்கின்றதா என்பதனையும் நான் கேட்க விரும்புகின்றேன்.

அதைப்போல, நபார்டு வங்கியின் உதவிமூலமாக ஒரு பேருந்து மூன்று ஆண்டுகள் தொடர்ந்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இயங்குகின்றபோது, அந்தச் சாலை பிற மாவட்டச் சாலைகளைப்போல, மெட்டல் சாலை, தார்ச் சாலைகளாக மாற்றப்படும் என்று கொள்கை அளவில் முடிவு எடுத்தாலும்கூட, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலே போடப்படுகின்ற சாலைகள் கண்காணிப்பு இல்லாததன் காரணமாக அந்தச் சாலைகள் விரைவில் பழுதடைந்து விடுகின்றன. அந்தச் சாலைகளில்தான் அதிகமாக லாரிகள் போக்குவரத்து இயக்கப்படுகின்றது. கட்டை டிராக்டர் போக்குவரத்து இயக்கப்படுகின்றது. நெடுஞ்சாலைகள் வண்டிகள் போக்குவரத்து இயக்கப்படுகின்றது. நெடுஞ்சாலைகள் மேம்பாட்டிற்காக ஒரு பெரிய தொகையை அரசு ஒதுக்கீடு செய்கின்றபோது, அதில் ஒரு பைசாகூட சிந்தாமல், சிதறாமல், வீணாகாமல், முழுமையாகச் சாலைகளுக்கே பயன்படுகின்ற வகையிலே, அரசு அதைக் கவனத்தோடு செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சாலைப் பயன்பாட்டாளர்கள் மகிழ்வினைப் பெறுவதற்காக, சாலை ஓரத்திலே ஆங்காங்கே சாலைப் பூங்காக்கள், ஓரப் பூங்காக்கள் வைத்து, இன்றைக்கு அவை பராமரிக்கப்படாத

நிலையில் இருக்கின்றன. சாலை போடப்படுகின்றபோது, அந்தப் பூங்காக்கள் வைக்கப்படுகின்றன. பிறகு அரசும் மறந்துவிடுகிறது. ஆகவே, இந்தப் பூங்காக்களைப் பராமரிப்பதற்காகத் தனியாகப் பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

அதைப்போல, நான்கு வழிச் சாலைகள் அமைக்கப்படுகின்றபோது, அந்தப் பயணிகளின் மகிழ்விற்காகவும், இனிய சுகத்திற்காகவும், ஓட்டுநர்களுடைய பாதுகாப்பிற்காகவும், ஒவ்வொரு 200 கிலோ மீட்டர் தொலைவில் ஓய்வு அறை, உணவு விடுதி, கழிப்பறை வசதிகள், வணிகக் கடைகள் மற்றும் பெட்ரோல் பங்க்போன்ற அந்த அம்சங்கள் இருந்தால், விபத்து குறைவதோடு, பயணிகளும் மகிழ்வார்கள்.

அதைப்போல, சாலை விபத்துக்கள் எதனால் ஏற்படுகின்றன என்று ஆய்வு செய்து, சாலை விபத்துக்களைத் தடுப்பதற்கு, சாலைகள் முழுவதுமாக, சாலை விபத்துக்கள் ஏற்படாத வகையிலே தகவல் பலகைகள், எச்சரிக்கைப் பலகைகள், ஒளிரும் பலகைகள், மினுக்கிகள் வைத்து, சாலை விபத்துக்களைத் தடுக்கின்ற முயற்சியினை அரசு எடுக்க வேண்டும்.

அதைப்போல, அகலச் சாலைகளாக மாற்றுகின்றபோது, அந்த அகலச் சாலைகள் பராமரிப்பு இல்லாததன் காரணமாக, சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. சில இடங்களில், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கம்பத்திலிருந்து குமுளி வரைக்கும் செல்கின்ற சாலை, அதிகமாக வழவழப்பு கொண்ட சாலையாக இருப்பதால் அந்தச் சாலையில் வாகனங்கள் செல்கின்றபோது, மழை தூரும்போது, tyre-க்கும், சாலைக்கும் grip கிடைக்காமல் பெரும்பாலான வாகனங்கள் விபத்துக்குள்ளாகின்றன. எங்கெங்கே வழவழப்பான சாலைகள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் அடையாளம் கண்டு, அந்த வழவழப்பான சாலைகளை மாற்றிச் சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோல, தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் விபத்துக்கள் நடக்கின்றன; சாலை விபத்துக்கள் சில குறிப்பிட்ட இடங்களில்தான் அடிக்கடி நடக்கின்றன. அந்தக் குறிப்பிட்ட இடங்களில் சாலை விபத்துக்கள் எதனால் ஏற்படுகின்றன; எதற்காக ஏற்படுகின்றன; என்ன



காரணத்திற்காக ஏற்படுகின்றன என்பதனை அரசு ஆய்வு செய்து, அதையும் சீர் செய்ய வேண்டும்.

அதேபோல, சாலை ஓரங்களிலே மரக் கன்றுகளை அவசியம் வைக்க வேண்டும். நெடுஞ்சாலைத் துறை மரக் கன்றுகளை வைத்துவிடுகின்றன. சாலை போடும்போது மரக் கன்றுகள் வைக்கப்படுகின்றன. ஆனால், அதைத் தண்ணீர் ஊற்றி வளர்ப்பது பராமரிப்பது, சமூக விரோதக் கும்பல்கள் அவற்றை வெட்டாமல் தடுப்பதுபோன்ற பணிகளைச் செய்வதற்குத் தனியாகப் பணியாளர்களும், நிர்வாக அமைப்பும் அவசியம் தேவை என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான சாலைகளில் மழை பெய்து, வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது, சாலைகளின் குறுக்கே அந்தத் தண்ணீர் வருகிறது. பேருந்து இயக்கம் தடைப்படுகின்றது. சில நேரங்களில் விபத்துக்கள்கூட ஏற்படுகின்றன. எனவே, அந்த இடத்தை அடையாளம் கண்டு, சிறு பாலங்கள், குறும் பாலங்கள் கட்டுவது, வடிகால் வசதி அமைத்து தருவது முக்கிய அம்சங்களாகும். சாலை மேம்பாட்டிற்கு, சாலை நலனுக்கு வடிகால் என்பது மிக முக்கியமான அம்சம் என்பதனை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். நகர்ப்புறச் சாலைகளிலே மிதி வண்டி ஓட்டுநர்களுக்கு, பாதசாரிகள் நடப்பதற்குத் தனியாக இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், கிராமப்புறச் சாலைகளிலே அதுபோன்ற இடங்கள் ஒதுக்கப்படாததன் விளைவாக பல விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றது.

அதைப்போல, சாலை மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வருகின்றபோது, அதில் நில இழப்பீடு, வணிகக் கட்டட இழப்பீடு, குடியிருப்பு மனை இழப்பீடு, இவையெல்லாம் இருப்பதால் அவற்றுக்கு இழப்பீட்டுத் தொகையை விரைவில் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கிராமப்புறங்களிலே சாலைகளை அமைக்கும்போது இரு புறமும் நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. நஞ்சை நிலங்கள் இருக்கின்ற காரணத்தால், அந்த நிலத்தின் ஈரம் அந்தச் சாலையில் ஊடுருவி, விரைவில் அந்தச் சாலைகள் பழுதடைந்துவிடுகின்றன. அதிகமாகச் செலவு செய்து அந்தச் சாலைகளைப் போடுகின்றபோது, இரு புறங்களிலும் வடிகால் அமைப்பது மிக முக்கியம் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, சாலைகளில் கொட்டப்படுகின்ற பொருட்களைச் சேகரிக்கும்போது, அதை ஒழுங்காக, (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். முறையாக அதை ஓரத்தில் கொட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கம்பம்—குமுளி சாலையை மேம்படுத்த வேண்டும். கம்பம் மெட்டுச் சாலையை மேம்படுத்த வேண்டும்.

தேனி, வருஷநாடு வழியாகச் செல்கின்ற இராசபாளையம் சாலையை மேம்படுத்த வேண்டும். இது தொடர்பில்லாத விஷயம் என்று சொன்னாலும்கூட, தேனியில் இருந்து கம்பம் வரைக்கும் இரயில்வே போக்குவரத்தை நீட்டிக்கின்ற வகையிலே, இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன், 10 நிமிடங்களுக்குள் பேசி முடியுங்கள்.

***திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தப் பேரவையிலே உரையாற்றுகின்ற இந்த நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த எங்கள் இதய தெய்வம், சமூகத்தில் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்ற 69 சதவிகித இட ஒதுக்கீட்டை ஏற்படுத்திய சமூக நீதி காத்த வீரத் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் தாரகை, மாண்புமிகு அம்மா அவர்கள் வாழ்கின்ற காலத்தில் வாழ்வதையே பெருமையாகக் கொண்டு, அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்குகின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், நம்பம்பட்டி என்னும் கிராமத்தில் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை ஈன்றெடுத்த என் தாய், தந்தையரை வணங்கி, சாதாரணத் தொண்டனான எனக்கு, குளத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட வாய்ப்பளித்து, என்னை வெற்றிபெறச் செய்த சிங்க நிகர்த் தலைவி, நான்காம் தமிழாம் அறிவியல் தமிழ் கண்ட இதய தெய்வம் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதங்களில் கோடானு கோடி என் இதயங்கனிந்த நன்றிப் பூக்களைக் காணிக்கையாக்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சிக்கு விசுவாசத்தோடு வாக்களித்து, குளத்தூர் தொகுதி மீண்டும் அம்மா அவர்களின் எஃகுக் கோட்டை என்பதை நாட்டுக்கு உணர்த்திய என் தொகுதி வாழ் வாக்காளப் பெருமக்களுக்கும், வெற்றிக்காக உழைத்த இயக்க முன்னோடிகளுக்கும் கூட்டணிக்



கட்சியைச் சார்ந்த தலைவர்களுக்கும், தோழர்களுக்கும் அம்மாவின் புகழ் காக்கும் கழகத் தொண்டர்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

எனக்கு நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையைத் தொடங்குகிறேன். ஒரு நாட்டின் பொருளாதாரம் உயர, மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, தொழில் வளம் பெருகி உயர, ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சிக்கு உறுதியான உள்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டுமானால், நேர்த்தியான சாலைகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்ற சிறப்பின் தத்துவத்தை அம்மா அவர்கள் உணர்ந்து இருந்த காரணத்தாலே, சாலை வசதிக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

பிற்பகல் 1-15

1996-2001 வரை 5 ஆண்டு காலத்தில் 23 ஆயிரத்து 123 கி.மீ. சாலைகள் அமைத்தும் 435 பாலங்களும் கட்டப்பட்டுள்ளன. ஆனால் எங்கள் அம்மாவின் ஆட்சிக் காலத்தில் 2001-2006 வரை 48,247 கி.மீ. சாலைகள் போடப்பட்டு, 890 பாலங்கள் கட்டப்பட்டன. இது 1996-2001 வரை ஆட்சியில் போடப்பட்டதைவிட இரண்டு மடங்கு அதிகமான சாலைகள் மற்றும் பாலப் பணிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன எங்கள் அம்மாவின் ஆட்சிக் காலத்தில் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வழிச் சாலைகளாகவும் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) சரி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ந. சுப்ரமணியன்:** நான்கு வழிச் சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டாலும், அன்றாடம் பத்திரிகை ஊடகங்களைப் பார்த்தால், விபத்து நடக்காத நாட்களே இல்லையென்று சொல்லும் அளவுக்கு நிலைமை உள்ளது. அதேபோன்று, சாலைகளில் அடிக்கடி விபத்துக்கள் நேரக்கூடிய இடங்களைக் கண்டறிந்து, அப்பகுதிகளை நன்முறையில் சீரமைத்து, விலை மதிப்பற்ற உயிர்ப் பலியைத் தடுத்திட வேண்டும். இதற்கு நாம் பல முனைகளில் ஆய்வு நடத்திட வேண்டும். விபத்து நடக்கும் சாலைகளின் அமைப்பு, சரியான கோணம் (curve design), வளைவு, தரம், சாலைகளின் அகலக் குறைவு

காரணமா, வாகனத்தின் தர நிலை காரணமா வாகன ஓட்டுநரின் கவனத் தடுமாற்றமா என ஆய்வு செய்து, அதற்கேற்ப சாலைகள் உருவாக்கப்பட வேண்டும். அதேபோல, சாலைகளில் பள்ளிகள் மற்றும் மக்கள் செறிவுள்ள இடங்களில் நவீன வேகத் தடைகளை அமைத்திட வேண்டும். சாலை மையப் பிரிப்புகள், சந்திப்புக்களை மேம்படுத்துதல், சாலைகளின் பக்கவாட்டில் தேவையான இடங்களில் தடுப்புச் சுவர்கள் கட்டுதல் சாலைக் குறியீடுகள், போக்குவரத்து signal-கள் அமைத்தல், பிரதிபலிப்பான்கள்—reflectors முதலியனவற்றைத் தேவையான இடங்களில் பொருத்தி, சீரான போக்குவரத்திற்கு வழிவகை காண வேண்டும்.

சாலை விபத்துக்களில் உயிர் இழப்பவர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு, சாலை வரியில் குறிப்பிட்ட சதவிகிதம் செஸ் வரி விதிக்கப்பட்டு, சட்டம் இயற்றப்பட்டதாகக் கருதுகிறேன். அப்படி ஒருவேளை சட்டம் இயற்றப்படவில்லையென்றால்கூட, இழப்பீடு வழங்குவதற்கு என, குறிப்பிட்ட சதவிகிதம் செஸ் விதித்து சட்டம் இயற்றி, அதன்மூலம் விபத்தில் உயிர் இழப்பவர்களுக்கு உடனடியாக நிவாரண உதவித் தொகை வழங்க வேண்டும். அல்லது விபத்துக்களுக்கு என்று ஒரு தனி நிதியையே ஒதுக்க வேண்டுமென்ற ஒரு ஆலோசனையை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மேல்நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் crude oil-லிருந்து பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் உட்பட 18 விதமான பொருட்களில் சாலை போடப் பயன்படுவது தாரும் ஒன்று. தாரைத்தான் சாலை போடப் பன்னெடுங்காலமாகப் பயன்படுத்தி வருகிறோம். தாருக்குத் தண்ணீர் விரோதி என்று சொல்வது உண்டு. ஒரு மழை பெய்துவிட்டால் தார்ச் சாலை பெயர்ந்து, குண்டும், குழியுமாக ஆகிவிடுகிறது. பிறகு, மீண்டும் அதே சாலையைப் போட வேண்டியிருக்கிறது. எனவே, எக்காரணத்தை முன்னிட்டும், மழைக் காலங்களில் தார்ச் சாலை போடுவதைத் தவிர்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இதைப் பற்றி ஆய்வு நடத்தும்படிக் கேட்டு, கிண்டியில் உள்ள Highways Research Institute-இடம் அறிக்கையைக் கேட்டுப் பெறலாம். இந்த அறிக்கையில் கூறப்பட்டதுபோல, பரிட்சார்த்தமாக சாலை போட்டுப் பார்க்கலாம். நீடித்து வந்தால் அதையே பின்பற்றலாம் என்ற என்னுடைய கருத்தையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

குடியிருப்புப் பகுதிகளில் செல்லும் சாலைகளில், சாலையை மேம்படுத்துதல் என்ற பெயரில் சாலையின் உயரம் உயர்ந்துகொண்டே



செல்கின்ற காரணத்தினால், சாலையோர வீடுகளின் வாயிற்படிக்கட்டு தாழ்ந்து மழை நீர் வீட்டுக்குள் சென்று அங்கு குடியிருப்போர் மிகுந்த அவதிக்குள்ளாகிறார்கள். எனவே, அதுபோன்ற சாலைகளைக் கண்டறிந்து, சிமென்ட் சாலைகளாக அமைத்துக் கொடுக்கவும், பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இழப்பீடு மற்றும் மாற்றுக் குடியிருப்பும் வழங்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். சாலையில் தார் போட உபயோகிக்கும் எமல்சன் பிட்டுமென் மண்ணெண்ணெய் சேர்க்கப்படாமல் power sprayer கொண்டு Tack coat அடிக்கப்பட வேண்டும். அந்தத் தார் பச்சை நிறத்திலிருந்து கறுப்பு நிறமாக மாறிய பிறகுதான் தார்க் கலவையைப் பரப்ப வேண்டும். பெரும்பாலான ஒப்பந்தக்காரர்கள், முறையாக எமல்சன் பிட்டுமென்னை உபயோகிப்பதில்லை. இதனால் சாலையின் தரம் குறைவாக அமைந்து, நாளடைவில் பழுதடைந்துவிட ஏதுவாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Hot mix Plant மூலம் தார்க் கலவையை டிப்பர் லாரியில் 30 கி.மீ.யிலிருந்து 40 கி.மீ. தூரம் கொண்டு சென்று, காலம் கடந்து அந்தக் கலவையைப் போட்டு, தார் பரப்பும் வேலையைச் செய்வதால், தாரின் இலகுத் தன்மை குறைந்து, தரமான சாலை அமைய வாய்ப்புகள் குறைவு என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். சாலைச் சந்திப்புக்களின் மத்தியில் வைக்கப்பட்டுள்ள கிரில்கள் அதிகப்படியான உயரம் உள்ளதால், எதிரே வரும் வண்டி, ஓட்டுநரின் பார்வைக்குத் தெரிவதில்லை. எனவே, அவ்வாறு வைக்கப்படும் கிரில்களின் அளவைக் குறைத்து, போக்குவரத்து இடையூறைத் தவிர்த்திட வேண்டுகிறேன். சாலைகளின் நடைபாதை ஓரங்களிலுள்ள புளிய மரங்களால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுத்திட, அதுபோன்ற இடங்களைக் கண்டறிந்து, அந்த மரங்களை வெட்டி, அகற்றிவிட்டு, சாலைகளின் ஓரங்களில் நிழல்/பயன் தரும் மரக்கன்றுகள் நடப்பட வேண்டும். சாலை ஓரத்தில் பலன் தரும் மரங்கள் இன்னும் நடப்படாமல் உள்ள சாலைகளில் போக்குவரத்து மாசினைக் கட்டுப்படுத்திடவும், ஊராட்சிகளுக்கு வருவாய் கிடைத்திடவும், ஆக்கிரமிப்புகளைத் தடுத்திடவும் சாலையின் எல்லை ஓரத்தில் பலன் தரும் மரங்களை நட்டுப் பாதுகாக்க வேண்டும். நூற்றாண்டைத் தாண்டிய மரங்களை வேரோடு அழிக்க ஒரு பொக்லைன் இயந்திரத்தால் ஒரு நொடிப் பொழுதில் முடிந்துவிடும். ஆனால், பலன் தரும் மரங்களை உருவாக்குவது மிகக் கடினம். எனவே, ஒரு மரத்தை வெட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டால், புதியதாக 10 மரக் கன்றுகளை நட்டுப் பாதுகாக்க வேண்டும்.

அதேபோன்று, schedule of rate-ல் அனுமதிக்கப்பட்ட கிராவல் குவாரிகளில், unyielded quarry—போதுமான கிராவல் இல்லாத குவாரிகளைக் கண்டறிந்து நீக்கிவிட்டு, நல்ல தரமான சாலைக் கற்கள் உள்ள குவாரிகளைக் கண்டறிந்து, அனுமதிக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒப்பந்தக்காரர்களுக்கும் விலை கட்டுபடியாகும். சாலைகளும் தரத்துடன் அமையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

அதேபோல், சில மாவட்ட முக்கியச் சாலைகளில் ரோலர் வைத்து, தார் பரத்துதல் செய்யும்போது வைப்ரேட்டரி ரோலர் வைத்துத்தான் உருட்டுகிறார்கள். ஆனால், ஒரு சில ஒப்பந்ததாரர்கள் வைப்ரேட்டர் மெஷினை on செய்யாமல் வெறுமனே ரோலரை மட்டும் உருட்டுவதால், சாலைகளுக்கு நல்ல காம்பாக்ஷன் (compaction) கிடைக்காமல் சீக்கிரமே பழுதடைந்துவிடுகின்றன. அதுபோன்ற பணிகள் நடப்பதைக் கண்டறிந்து, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மேலும், சில இடங்களில் சாலைகளின் ஓரத்திலுள்ள மின் கம்பங்களை அகற்றி, சாலைகளின் எல்லைப் பகுதிகளில் நட்டு வைத்தால், விபத்தைத் தடுப்பதோடு ஆக்கிரமிப்பையும் தடுக்கலாம்.

அடுத்தபடியாக, எனது தொகுதிக்கு வருகிறேன். மணப்பாறையிலிருந்து சீகம்பட்டி, பாட்னாம்பட்டி, கவராப்பட்டி, செரளப்பட்டி வழியாக விராலூர் வரை N.H. 45-B-ல் இணையும் வழித்தடத்தில் புதியதாக நகரப் பேருந்து இயக்கப்பட வேண்டும். திருச்சி-மேலூர் N.H. 45-B சாலையில் இராசநாயக்கன்பட்டியிலிருந்து பூதகுடி வரை புதியதாக நகரப் பேருந்து இயக்கப்பட வேண்டும்.

மணப்பாறை முதல் இலுப்பூர் சாலையில் கோராலிக்குடியில் பிரிந்து ஜெயமங்கலம், அத்திப்பள்ளம் வழியாக மீண்டும் மணப்பாறை-இலுப்பூர் சாலை வரை வந்தடையும் வழித்தடத்தில் ஒரு புதிய பேருந்து இயக்கப்பட வேண்டும்.

புதுக்கோட்டையிலிருந்து வாழமங்கலம், மோசகுடி வழியாக கீரனூர் வரை நகரப் பேருந்து இயக்கப்பட வேண்டும். புதுக்கோட்டையிலிருந்து செல்லுகுடி, சிறுஞ்சுனை, மேட்டுப்பட்டி, மாராயப்பட்டி, மாங்குடி வழியாக அன்னவாசல் வரை புதியதாகப் பேருந்து இயக்கப்பட வேண்டும்.



புதுக்கோட்டையிலிருந்து தர்க்கா, புத்தாம்பூர், பூங்குடி, காவேரி நகர் வழியாக நார்த்தாமலைக்கு நகரப் பேருந்து இயக்கப்பட வேண்டும். மணப்பாறை-விராலிமலை-திருநல்லூர் வரும் நகரப் பேருந்தினை மதியம் 12-00 மணியிலிருந்து 2-00 மணிக்குள் இரண்டு தடவை கூடுதலாக இயக்க வேண்டும்.

மணப்பாறை-விராலிமலை செல்லும் நகரப் பேருந்தை காலை 7 மணிக்கு இலுப்பூரில் எடுத்து 8 மணிக்கு மணப்பாறை வந்து சேருமாறு, பள்ளிக் குழந்தைகளின் வசதிக்காக ஒரு பேருந்து கூடுதலாக இயக்கப்பட வேண்டும். திருச்சி-மேலூர் N.H. 45-B சாலையிலிருந்து இராசநாயக்கன்பட்டியில் பிரியும் இடையப்பட்டி, புதுப்பட்டி, அக்கல்நாயக்கன்பட்டி வழியாக இயங்கி வந்த 45-ஏ நகரப் பேருந்து மீண்டும் இயக்கப்பட வேண்டும்.

புதுக்கோட்டையிலிருந்து உப்பிலியக்குடி வரை வரும் நகரப் பேருந்தைக் கூடுதலாக ஒரு சிங்கிள் இயக்கிட வேண்டும். கீரனூரிலிருந்து சின்னபாண்டுரார்பட்டி வழியாகச் செல்லும் கே-2 நகரப் பேருந்தை மாலை நேரத்தில் 4-30 மற்றும் 6-00 மணிக்குக் கூடுதலாக இயக்குதல் வேண்டும்.

கீரனூரிலிருந்து உடையாம்பட்டி வழியாக ராப்பூசல் வரை இயக்கப்படும் நகரப் பேருந்தை வெள்ளாஞ்சார், காலாடிப்பட்டி சத்திரம் வரை நீட்டித்து இயக்கிட வேண்டும். திருச்சியிலிருந்து இனாம்குளத்தூர், பொருவாய் வழியாக விராலிமலைக்கு காலை 8-00 மணிக்கு வரும் எல்.எஸ்.எஸ். 120 நகரப் பேருந்தை காலை 7-00 மணிக்கு ஒரு தடவை கூடுதலாக வந்து செல்லுமாறு இயக்குதல் வேண்டும்.

கீரனூரிலிருந்து சிவகாமிபுரம் வழியாகச் செல்லும் நகரப் பேருந்து மருங்கிப்பட்டி வரை இயக்கப்பட வேண்டும். கீரனூரிலிருந்து ராப்பூசல் வழியாக இலுப்பூர் வரை செல்லும் கே-5 நகரப் பேருந்தை 2 சிங்கிள் இலுப்பூர் வரையிலும், 2 சிங்கிள் குரும்பட்டி வரையிலும் இயக்க வேண்டும்.

கீரனூரிலிருந்து விராலிமலைக்குக் கூடுதலாக ஒரு நகரப் பேருந்து நீர்பழனி, பேராம்பூர், ஆலங்குளம் வழியாக இயக்கப்பட வேண்டும். திருச்சி-செங்களூர் வரை இயக்கப்படும் நகரப் பேருந்து எண் 100-ஐ கிள்ளுக்கோட்டை வரை மலையடிப்பட்டி வழியாக இயக்க வேண்டும்.

கீரனூரிலிருந்து நீர்பழனி, வெம்பணி வழியாக மலம்பட்டி வரை நகரப் பேருந்தினை இயக்க வேண்டும். திருச்சியிலிருந்து கீரனூர் வரை வரும் நகரப் பேருந்தை காலை, மாலை இரண்டு வேளைகளிலும் கூடுதலாக 2 சிங்கிள் இயக்க வேண்டும். புதுக்கோட்டையிலிருந்து கீரனூர் செல்லும் எண் 8 நகரப் பேருந்தை வெள்ளனூர் வழியாக பூங்குடி வரை சென்று, காவேரி நகர் வழியாக கீரனூர் வரை இயக்கப்பட வேண்டும்.

திருச்சியிலிருந்து விராலிமலை, கொடும்பாளூர் சத்திரம், கோவில்பட்டி வழியாக துவரங்குறிச்சி செல்லும் புறநகர் பேருந்தினை கொடும்பாளூர் சத்திரம் அருகில் உள்ள காளப்பனூரில் அவசியம் நின்று செல்ல ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், சீக்கிரம்.

**திரு. ந. சுப்ரமணியன்:** கீரனூரிலிருந்து விளாப்பட்டி, மாத்தூர், மருதம்பட்டி வழியாக இலுப்பூர் வரை வரும் நகரப் பேருந்தினை, பள்ளி மாணவர்களின் சிரமத்தைப் போக்கிடும் வகையில் கூடுதலாக ஒரு நகரப் பேருந்து இயக்கப்பட வேண்டும். அடுத்ததாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் நிதியாண்டுக்குரிய நெடுஞ்சாலைகள் துறை மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்ய வாய்ப்பளித்த, தந்தை பெரியாரின் துணிவையும், பேரறிஞர் அண்ணாவின் கனிவையும் ஒருங்கேபெற்று, எங்களுக்கெல்லாம் தந்தை பெரியாராகவும், பேரறிஞர் அண்ணாவாகவும், தலைமையேற்று நடத்திக்கொண்டிருக்கின்ற தமிழகத்தின் ஒப்பற்ற தலைவர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) நிறைகுடம் நீர் தளும்பாது என்பதற்கு உதாரணமாக, இயக்கப் பணியிலும், ஆட்சிப் பணியிலும், தலைவருக்குத் தோளோடு தோள் நின்று பணியாற்றிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) 'Do or die' என்ற சித்தாந்தத்தை மாற்றி, 'Do and die' என்கின்ற சித்தாந்தத்தைக் கழக இளைஞர் அணியினுடைய நெஞ்சிலே பதிய வைத்து, எங்களையெல்லாம் மக்கள் பணியிலே ஈடுபடுத்தி



வழிநடத்திக்கொண்டிருக்கின்ற கழக இளைஞர் அணியினுடைய செயலாளரும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருமான ஆருயிர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், என்னுடைய தொகுதியிலிருந்து மூன்றாவது முறையாக இந்த மாமன்றத்தில் நுழைவதற்கு உறுதுணையாக இருந்த நல்ல உள்ளங்களுக்கும் நன்றி கூறி, மானியக் கோரிக்கையின் பதிலுரைக்கு வர நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-25

*"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது*
*தூக்கங் கடிந்து செயல்"*

என்று வள்ளுவர் சொன்னார். அதற்கேற்ப, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தந்த பொருள், "மனக் குழப்பமின்றித் தெளிவாக முடிவு செய்யப்பட்ட ஒரு செயலை, தளர்ச்சியும் தாமதமும் இல்லாமல் விரைந்து செயல்படுத்த வேண்டும்" என்கின்ற பொருளுக்கேற்ப இந்தத் துறையில் பொறுப்பேற்று நாங்கள் வழிநடத்திச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றோம் என்பதையும் இந்த நேரத்தில் அடக்கத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

போக்குவரத்தைப் பொறுத்தளவில், மக்கள் நான்கு வழிகளைப் பயன்படுத்துகிறார்கள். தரை வழி, இருப்புப் பாதை வழி, நீர் வழி, வான் வழி என்று நான்கு வகைகள் இருந்தாலும், ஒரு சாதாரணனும், சாமானியனும், குப்பனும், சுப்பனும் பயன்படுத்தக்கூடிய போக்குவரத்து தரை வழிப் போக்குவரத்து என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க வாய்ப்பில்லை. அந்த அடிப்படையில், பரந்து விரிந்து கிடக்கும் இந்தியாவினுடைய பரப்பளவு, ஏறத்தாழ 31,66,414 சதுர கிலோ மீட்டர். இதில் தமிழகத்தினுடைய பரப்பளவு 1,30,058 சதுர கிலோ மீட்டரைக் கொண்டு, 11-வது பெரிய மாநிலமாகத் திகழ்ந்துகொண்டிருக்கின்றது. இதிலேதான், பரந்து விரிந்து கிடக்கும் தமிழகத்தினுடைய பொருளாதார முன்னேற்றம், மக்கள் குடியேற்றம், நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மக்களுடைய சமூக மாற்றங்களுக்குத் தேவைப்படும் தகுந்த கட்டமைப்பாகச் சாலைகளும் பாலங்களும் விளங்குகின்றன என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இவ்வாறான கட்டமைப்பைப் பராமரிப்பதற்கு இந்தத் துறை 1946 ஆம் ஆண்டு துவங்கப்பட்டிருக்கின்றது. இதே ஏப்ரல் மாதத்தில் இந்த ஏப்ரல் மாத நிறைவிலே, இந்தத் துறை 60 ஆண்டு கால பணி நிறைவு செய்யவிருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சாலைகளினுடைய விவரங்களைப் பற்றி இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்குத் தமிழகத்தினுடைய சாலைகளினுடைய மொத்த நீளம், ஏறத்தாழ 1,88,700 கிலோ மீட்டர் ஆகும். இதிலே, உள்ளாட்சித் துறை, பொதுப் பணித் துறை, வனத் துறை போன்ற துறைகளினுடைய பராமரிப்பு போக, மீதமிருக்கின்ற 61,446 கிலோ மீட்டர் நீளச் சாலையை மத்திய, மாநில அரசுகள் பராமரித்து வருகின்றன. இதிலே இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்ற 4,483 கிலோ மீட்டரில் 3,239 கிலோ மீட்டரை அவர்கள் நேரடியாக இன்றைக்குப் பராமரித்து வருகிறார்கள். அதனால்தான், இன்றைக்குத் 'தமிழகம் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் நான்கு வழிச் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல, மீதமிருக்கின்ற 1,224 கிலோ மீட்டர் நீள தேசிய நெடுஞ்சாலையை, மத்திய தரை வழிப் போக்குவரத்துத் துறையினுடைய அமைச்சகத்தினுடைய நிதியைப் பெற்று, இன்றைக்கு மாநில அரசு பராமரித்து வருகிறது.

நேரடியாகப் பராமரிப்பில் இருக்கக்கூடிய S.H. என்கிற மாநில நெடுஞ்சாலைகளினுடைய நீளம் 9,256 கிலோ மீட்டர். அதேபோல, M.D.R. என்கின்ற மாவட்ட முக்கியச் சாலையினுடைய நீளம் 9,451 கிலோ மீட்டர். அதேபோல, O.D.R. என்கின்ற மாவட்ட இதர சாலை, அதேபோல அதிலே கரும்புச் சாலை உட்பட இன்றைக்கு ஏறத்தாழ 38,256 கிலோ மீட்டர் இருக்கின்றன.

பாலங்களினுடைய எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், பெரிய பாலங்களாக 1,209 பாலங்களும், சிறு பாலங்களாக ஏறத்தாழ 7,700 பாலங்களும், தாம்போகிகளாக 99,518-ம், இரயில்வே மேம்பாலங்கள் 144-ம், இரயில்வே கீழ்ப்பாலங்கள் ஏறத்தாழ 76-ம் இன்றைக்கு இந்தத் துறையின்மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, நாங்கள் கடந்த நிதியாண்டிலே மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்கின்றபோது, சரியாக 101-வது நாள். அதற்குப் பிறகு நேற்றோடு 345 நாட்களை நிறைவு செய்து, இன்றைக்கு 346-வது நாள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதில், கடந்த 101 நாட்களிலே நாங்கள் செய்தது, முன்பு செய்த பணிகளை, ஏற்கெனவே நடைபெற்று வந்த பணிகளை நாங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வந்தோம், பணிகளைப் பராமரித்து வந்தோம், சாலைகளையும், பாலங்களையும். அதற்கடுத்துத்தான், கடந்த நிதியாண்டிலே தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஏறத்தாழ 3,272 கோடி ரூபாயைத் தந்தார்கள். அந்த அடிப்படையில்தான் பல திட்டங்களை எடுத்துச் செயல்படுத்தினோம். அதற்காக மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, தொழில்நுட்ப ஒப்புதலும் வழங்கப்பட்டு, அந்தப் பணிகளெல்லாம் ஒப்பந்ததாரர்கள்மூலமாக இன்றைக்கு நடந்து வருகின்றன. சில பணிகளில் இன்றுவரைக்கும் திட்டம்சார்ந்த பணிகளை நிறைவு செய்திருக்கின்றோம். அதேபோல, திட்டம்சாராத பணிகளையும் நிறைவு செய்திருக்கின்றோம். திட்டம் சார்ந்தவைகளை, சாலைகளை அகலப்படுத்துகின்ற பணிகளும் வலுப்படுத்துகின்ற பணிகளும், அதேபோல பாலப் பணிகளும் இன்றைக்குத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. வருங்காலங்களிலேயும் அவற்றை விரைந்து செயல்படுத்துவோம் என்பதையும், இந்த 255 நாளிலே மகத்தான சாதனைகளைப் புரிந்திருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, அதிலிருந்த இடர்ப்பாடுகள் எந்த அளவிற்குக் களையப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் அன்றைக்கே கேள்வி நேரத்தில் ஒரு பதிலைச் சொன்னேன். அன்றைக்கு இருந்த பொறியாளர்களின் பணியிடங்கள் ஏறத்தாழ 250 காலியாக இருந்தன. பதவி உயர்வு வழங்கப்படாமல் அவர்களுக்குப் பணி நியமனம் . . .

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

அமைச்சர், one minute. மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு அவர்கள் பேசும்போது ** என்று ஒரு வாசகத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வாசகம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** அந்த 250 பணியிடங்கள், அதாவது தலைமைப் பொறியாளர்களில் 7 பணியிடங்களில் 4 காலியாக இருந்தன. 27 கண்காணிப்புப் பொறியாளர் பணியிடங்களில் 17 இடங்கள், கோட்டப் பொறியாளர்களில் 120 இடங்களில் 51 இடங்கள் காலியாக இருந்தன. உதவிக் கோட்டப் பொறியாளர்களில் 430 இடங்களுக்கு ஏறத்தாழ 114 இடங்கள் காலியாக இருந்தன. இவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு கட்டமாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டு, நியமனம் செய்யப்பட்டார்கள். அதற்குப் பிறகு, உதவிப் பொறியாளர்களுடைய எண்ணிக்கை இன்றைக்கும் 270 காலியாக இருக்கின்றன. அதிலே 215 இடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு, அதற்குரிய நடவடிக்கையை எடுங்கள் என்று நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவுறுத்திய காரணத்தினாலே, அவர்களுடைய அறிவுறுத்தலின்பேரில் அதற்குரிய பணி நடைபெற்று, கடந்த பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி தேர்வு நடைபெற்றிருக்கிறது. வருங்காலத்திலே அந்தப் பணியிடங்கள் விரைவாக நிரப்பப்படவிருக்கின்றன. மீதம் இருக்கின்ற இளநிலைப் பொறியாளர் பணியிடங்கள் குறித்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்ற காரணத்தினால், அதற்கேற்ப இந்த அரசு முடிவெடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதேபோல, துறை வளர்ச்சியின் பல்வேறு பணிகள் குறித்து, கடந்த நிதிநிலை ஆண்டிலே நாம் சொன்னோம். முதல் அறிவிப்பாக, ஒப்பந்தப்புள்ளி ஒழிப்பு என்று சொன்னோம். கடந்த காலத்திலே 15 பணிகள், 20 பணிகள் என்று சொல்லி package general என்ற முறையைப் புகுத்தி, இந்தத் துறையில் ஒரு கறுப்பு அத்தியாயத்தையே உருவாக்கிய ஒரு சூழ்நிலைகூட இருந்தது. அந்த அடிப்படையில், அந்தத் தொகுப்பு ஒப்பந்த முறை ஒழிக்கப்பட்டு, இன்றைக்கு ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வருகின்றது. ஏறத்தாழ நம்முடைய அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும், மாவட்டத்திற்கு வந்து பணிகளைப் பார்வையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அந்த அடிப்படையில், இதுவரை 26 மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து, அங்கிருக்கின்ற மாவட்ட

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஆட்சித் தலைவர்களை வைத்து, அனைத்துத் துறை அதிகாரிகளையும் அழைத்து வைத்து, மக்கள் பிரதிநிதிகளின் முன்னிலையிலே ஆய்வுப் பணிகள் நடைபெற்று, பணிகளை மேற்கொண்டு விரைந்து செயல்படுத்த உத்தரவிடப்பட்டிருக்கின்றது. அதற்குப் பிறகு பணிகள் இன்றைக்கு வேகமாக நடந்து வருகின்றன.

அதேபோல, பாலப் பணிகள் இன்றைக்கும் தொய்வாக நடக்கின்றன என்பதை வெளிப்படையாக நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், கடந்த காலத்திலே கட்டுமானப் பொருட்களுடைய விலையேற்றமே இல்லை என்கின்ற அளவிலே இருந்தது. அதற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மற்றும் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோரிடம் கூறியதன் அடிப்படையில், இந்த இடைப்பட்ட காலத்திலே மட்டும் வருடத்திற்கு ஒரு முறையாவது கட்டுமானப் பொருட்களுடைய விலை நிதிநிலைக்கேற்ப உயர்ந்தது. கடந்த ஆண்டு மட்டும் இரு முறை நிர்ணயம் செய்யப்பட்டது. வெளிமார்க்கெட்டிற்கேற்ப விலை நிர்ணயம் செய்யப்பட்டது. குறிப்பாக, இந்த முறை மட்டும் இந்த ஆட்சியில், 245 நாட்களில் இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, இரண்டு முறை கட்டுமானப் பொருட்களுடைய விலையேற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, ஒரு பாலம் கட்டுகிறோம் என்று சொன்னால், அங்கிருக்கின்ற கண்காணிப்புப் பொறியாளருக்கு ஒரு கோடி ரூபாய் வரைக்கும்தான் மதிப்பீடு தயார் செய்கின்ற அதிகாரம் இருந்தது. இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. ரூபாய் ஒரு கோடிக்கு மேலே ஒரு ரூபாய் என்று சொன்னாலும், சென்னையிலிருக்கின்ற வடிவமைப்பினுடைய தலைமைப் பொறியாளருக்கு வர வேண்டும். அவர்தான் அந்த இடத்தைப் பார்வையிட்டு, அதற்குரிய வடிவமைப்பை நிர்ணயம் செய்யக்கூடிய சட்டம் இருந்தது. இனிமேல் இரண்டு கோடி ரூபாய் வரை அங்கிருக்கின்ற கண்காணிப்புப் பொறியாளரே மதிப்பீடுகளைத் தயார் செய்துகொள்ளலாம் என்கிற ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, பொறியாளர்களுடைய தொழில்நுட்ப அங்கீகாரம். கோட்டப் பொறியாளரைப் பொறுத்தவரையில், முன்பு 30 இலட்சம் ரூபாய் வரை தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்படலாம். இனிமேல் ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் வரைக்கும் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்குகின்ற ஆணை வெளியிடப்பட்டு இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). அதேபோல, கண்காணிப்புப் பொறியாளரை

எடுத்துக்கொண்டால், முன்பு ஒரு கோடி ரூபாய் வரை அவர் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கலாம். ஆனால், இனிமேல் இரண்டு கோடி ரூபாய் வரை அவரே தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கலாம் என்ற புதிய உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, தலைமைப் பொறியாளருக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இருந்தது. இரண்டு கோடி ரூபாய்க்குமேல் என்று உத்தரவு வழங்கப்பட்டிருக்கின்றது. ஒரு ஒப்பந்தப்புள்ளி கோருகின்ற அதிகாரம் ஒரு கோட்டப் பொறியாளருக்கு 6 இலட்சம் ரூபாய் வரைதான் என்றிருந்தது. ஆனால், இனிமேல் 15 இலட்சம் ரூபாய் வரை அவர் ஒப்பந்தப்புள்ளியைக் கோரலாம். அதேபோல, கண்காணிப்புப் பொறியாளருக்கு 30 இலட்சம் ரூபாய் வரை என்றிருந்த அதிகாரத்தை இப்பொழுது ஒரு கோடி ரூபாய் வரை என்று உயர்த்தியிருக்கிறோம். அதேபோல, தலைமைப் பொறியாளருக்கு ஒரு கோடி ரூபாய் வரை என்றிருந்தது. இரண்டு கோடி ரூபாய் வரை ஒப்பந்தப்புள்ளி கோருகிற அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இனிமேல் இரண்டு கோடி ரூபாய்க்குமேலே இருந்தால்தான் ஆணையத்திற்கு அனுப்ப வேண்டுமென்கிற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திட்டப் பணிகளைப் பொறுத்தவரை, இரண்டு வகையாகக் குறிப்பிடலாம். நேரடியாகத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற நேரத்தில், அரசுப் புறம்போக்கு இருந்தால், அதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. இரயில்வே மேம்பாலம் கட்டுகிறோம் என்று சொன்னாலும், புதியதாக சாலையை அகலப்படுத்துகிறோம் என்று சொன்னாலும் துறைக்கு நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த அடிப்படையிலே, நிலத்தைக் கையகப்படுத்தாமலேயே திட்டங்களை அறிவிப்பதால், அந்தத் திட்டங்கள் பாதியோடு நிற்பது மட்டுமல்ல, அதனால் மக்களுக்கு இடையூறும் ஏற்பட்டது. நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதிக்கு நாங்கள் முதல் முறையாகச் சென்றோம். ஆலந்தூர் நகராட்சிப் பகுதியிலே இரயில்வே மேம்பாலம் ஏறத்தாழ 'ட' வடிவிலே உள்ளது. அந்த இரயில்வே மேம்பாலத்தின் ஒரு பகுதி சென்னை மாவட்டத்தையும், இன்னொரு பகுதி காஞ்சிபுரம் மாவட்டத்தையும் இணைக்கக்கூடியதாக இருந்தது. அதிலே நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. பணிகளும் நடைபெறவில்லை. பாதியோடு நின்று இருந்தது. காரணம் கேட்டதற்கு, நிலம் கையகப்படுத்தாத காரணத்தால் ஒப்பந்ததாரர்கள் அதைச் செய்யவில்லை என்று சொன்னார்கள். இனிமேல் எந்தப்



பணி செய்வதாக இருந்தாலும், நிலத்தைக் கையகப்படுத்திவிட்டுத்தான் செய்ய வேண்டும் என்று, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன், அதற்குரிய உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

பிற்பகல் 1-35

அதேபோல, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே என்று சொல்லக்கூடிய அளவிலே, இன்னும் சொல்லப் போனால், துறையினுடைய ஒரு இரகசியம் வெளியேறிவிட்டது என்றுதான் நான் கருதுவேன். அந்த அடிப்படையில் மரங்களைப் பற்றி அதிகமாகப் பேசினார்கள், வரவேற்கத்தக்கது. அந்த அடிப்படையில் பார்த்திருப்பீர்கள் என்றால், பல சாலைகளின் ஓரங்களில் உள்ள மரங்களில் வர்ணம் பூசுகின்ற நிலைமைகூட இன்றைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. முன்பு சுற்று வட்ட அளவிலே paint அடித்திருப்பார்கள். இப்பொழுது chess board மாதிரிக் கட்டம் கட்டமாக கறுப்பு, வெள்ளையிலே paint அடிக்கப்பட்டு வருகிறது. அதையும் இன்றைக்கு சாலைப் பணியாளர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். சமீப காலங்களில்--மரங்களுக்கு எண்களே இடப்படாமல் முன்பெல்லாம் இருந்தது. தற்போது மறைந்துவிட்டது. யாராவது மரத்தை வெட்டி எடுத்துச் சென்றால்கூட, மரத்தைக் கண்டுபிடிக்க முடியாத அளவிலே சூழ்நிலை இருந்தது. இனிமேல், அவசியம் இருக்கின்ற அனைத்து மரங்களுக்கும் எண்கள் போட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாங்கள் மே 15 ஆம் தேதிக்கு மேல் அறிவிப்பதாக இருந்தோம். அனைவரும் மரத்தைப் பற்றிப் பேசியதால், இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய பிறந்த நாள் ஜூன் 3 ஆம் தேதி வருகிறது. அன்றைக்கு இந்தப் பணி துவங்க இருக்கின்றது. இதற்காகத் துறையில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் தயாராக இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாங்கள் செயல்படுத்தப் போகிறோம். அனைத்து அரசுச் சாலைகளிலும் அந்த மரங்களை நட இருக்கின்றோம். அதைப் பேணிக் காக்கவும் தயாராக இருக்கின்றோம்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கம்பம் இராமகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டார்கள். சாலையினுடைய சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று சொன்னார்கள். முதற்கட்டமாக, இப்பொழுது பார்த்தீர்களானால், நம்முடைய மாநில நெடுஞ்சாலைகளில் மஞ்சள் paint அடித்த கற்கள் சாலையினுடைய எல்லையை நிர்ணயம் செய்யக் கூடிய அளவிலே நடப்பட்டுக் கொண்டு வருகின்றன.

இதற்கடுத்த கட்டமாக, மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளிலும் அந்த முறை கடைப்பிடிக்கப்படவிருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள்கூட, அவர்களுடைய முதல்வர் ஆட்சியிலே ஏறத்தாழ 46 ஆயிரம் கிலோ மீட்டர் சாலை பராமரிக்கப்பட்டது கடந்த 5 ஆண்டிலே என்று இங்கே சொன்னார்கள். அந்தப் புள்ளிவிவரம் தவறான புள்ளிவிவரம்தான். இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்ற கடந்த ஓராண்டு மட்டும் ஏறத்தாழ 11,500 கிலோ மீட்டர் சாலைகள் பராமரிப்பதற்காகவும், மேம்படுத்துவதற்காகவும் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் ஒரு சாதனையாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த ஆண்டும் எவ்வளவு நிதி வழங்கியிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அந்த அடிப்படையில் இன்றைக்கு ஏராளமான சாலைப் பணிகள் நடைபெறவிருக்கின்றன. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுப் பணிகள் திட்டத்தின்மூலம் நடைபெற்ற பணிகளைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். வேலூர் மாவட்டம், ஆற்காட்டிலிருந்து தூத்துக்குடி வரை 11 மாவட்டங்களை இணைக்கக்கூடிய சாலைத் திட்டம் ஏறத்தாழ 742 கிலோ மீட்டர், 2,160 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம் உலக வங்கி ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகிறது. அரசு பொறுப்பேற்ற பிறகு, அதைப் போய்ப் பார்த்தோம். அதைப் பற்றி ஆய்வு செய்தோம். திட்ட இயக்குநரும் இல்லை. அங்கே தேவையான அளவிற்குப் பொறியாளர்களும் இல்லை. அந்தப் பணியைச் செய்வதற்கு நிலம் கையகப்படுத்தப்படவில்லை. குடிநீர்க் குழாய்கள் அப்புறப்படுத்தப்படவில்லை. அங்கே பணிகள் தொய்வாக



இருந்து, உலக வங்கிகூட அதை இரத்துச் செய்கிறோம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு நாங்கள் எல்லாம் முயற்சி எடுத்து, அதை நிச்சயமாக நாங்கள் செய்கிறோம் என்று சொல்லி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன், திட்ட இயக்குநர் நியமிக்கப்பட்டார். பொறியாளர்கள் நியமிக்கப்பட்டு, அதற்குரிய நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதற்கென்று தனியாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, இன்றைக்கு அந்தப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. வேலூர் மாவட்டம் ஆற்காட்டில் துவங்கி, தூத்துக்குடி வரை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய 11 மாவட்டங்களை இணைக்கக்கூடிய 742 கிலோ மீட்டர் சாலை; அந்த அடிப்படையில் இந்தப் பணிகளும் துரிதமாகக் கடந்த ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்றன என்பதை இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, இன்றைக்குத் தொழில் பூங்காவை இணைக்கின்ற வகையிலும், இன்னும் சொல்லப் போனால், தொழிற்சாலைகளை உருவாக்கக்கூடிய அளவிலே நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், தொழில் பெருவழிச் சாலை என்றுகூடக் குறிப்பிட்டார்கள்; அந்த அடிப்படையில் கடந்த நிதியாண்டு தொழில் துறை மானியத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் குறிப்பிட்டார்கள். ஒரகடம் பகுதிக்கு ஏறத்தாழ 300 கோடி ரூபாயில் சாலைகளும், பாலங்களும் அமைக்கப்பட்டு, அங்கே அமையக்கூடிய தொழிற்சாலைகளுக்கும் சாலைகள் அமைத்துத் தரப்படும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில், 300 கோடி ரூபாய் திட்டத்தில் ஒரகடம் பகுதியில், சிங்கப்பெருமாள் கோயிலிலிருந்து ஒரகடம் வரையும், அதேபோல, வண்டலூரிலிருந்து ஒரகடம் வரையும், இரண்டு சாலைகளும் நான்கு வழிச் சாலைகளாக மாற்றப்படுகின்றன. ஒரகடத்தில் இருந்து தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கக்கூடிய அளவில், நோக்கியா தொழிற்பேட்டை வரை ஏறத்தாழ ஆறு வழிச் சாலையாகவும், அங்கே மேம்பாலங்கள் அமைய இருப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை அரசுக்குக் கிடைக்க இருக்கின்றது. விரைவில் அந்தப் பணியும் நடைபெற இருக்கின்றது. அதேபோல, தொழில்நுட்ப விரைவுச் சாலை மத்திய கைலாஷில் இருந்து சிறுசேரி வரையில் முதல் கட்டமாகவும், அதற்குப் பிறகு ஏறத்தாழ 25 கிலோ மீட்டர் சிறுசேரி முதல் கிழக்குக் கடற்கரைச் சாலையை இணைக்கின்ற வகையிலும் ஆறு வழிச் சாலையாக மாற்றுவதற்காக

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிலம் கையகப்படுத்துவதற்காக மட்டும் 70 கோடி ரூபாய் தந்து, அதற்குரிய பணிகள் விரைந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேபோல, கோவையிலே இரயில்வே நிலையத்தையும், விமான நிலையத்தையும் இணைக்கக்கூடிய அளவிலே ஆறு வழிச் சாலை அமையவுள்ளது. ஏற்கெனவே இருக்கிற அந்த மாநிலச் சாலையை L & T bye-pass, நீலாம்பூர் புறவழிச் சாலையில் இருந்து உப்பிலிபாளையம் மேம்பாலம் வரை இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதற்காக, அதை ஆறு வழிச் சாலையாக மாற்றுவதற்காக முதல்வர் அவர்கள் 27 கோடி ரூபாயை முதல் கட்டமாக வழங்கி இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

அதேபோல, பேசிய அனைத்து உறுப்பினர்களும் நெடுஞ்சாலை பற்றி மட்டுமே பேசிவிட்டார்கள். கடல் பகுதியை ஒட்டிய உறுப்பினர்கள் யாரும் இதிலே பேசவில்லை. அதனால், கடல்சார் வாரியத்திற்குப் போகவில்லை என்று நான் நினைக்கிறேன். எனவே, நான் அவர்களை, மாமன்ற உறுப்பினர்களை கடல்சார் வாரியத்திற்கு அழைத்துச் செல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடல்சார் வாரியம் 1997 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், முதல்வராக இருக்கும்போது துவங்கப்பட்டது. 15 சிறு துறைமுகங்கள் இதிலே கட்டுப்பாட்டிலே இருக்கின்றன. அரசுத் துறைமுகங்கள் 7-ம், தனியார் முதலீட்டில் 8-ம் இயங்கி வருகின்றன. அவற்றிலே அரசுத் துறைமுகங்கள் அரசுத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய துறைமுகங்கள், கடலூர், நாகப்பட்டினம், பாம்பன், இராமேஸ்வரம், வாலிநோக்கம், கன்னியாகுமரி, குளச்சல். குளச்சலைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மத்திய அரசின்மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமரைச் சந்தித்த நேரத்தில் அவரிடம் கடிதம் தந்து, அதற்குரிய முயற்சியும் எடுத்து, அந்தப் பணியும் இன்றைக்கு விரைவாக நடைபெற்று வருகின்றது.

நாகைத் துறைமுகமும், கடலூர் துறைமுகமும் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்குரிய வளர்ச்சிப் பணிகள் ஆசிய வங்கியின் உதவியோடு மொத்தம் ஏறத்தாழ 50-52 கோடி ரூபாய் மதிப்பிலே நடைபெற்றுக்கொண்டு வருகிறது.



தனியார் துறைமுகங்களான, காட்டுப்பள்ளி, எண்ணூர், திருச்சோபுரம், பி.ஓய்.03 எண்ணெய் வளப் பகுதி, திருக்கடையூர், புன்னக்காயல், மணப்பாடு, கூடங்குளம் ஆகிய துறைமுகங்களில் அந்தந்த நிறுவனங்களுக்கு ஏற்ப பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன.

அதேபோல, பூம்புகார் போக்குவரத்துக் கழகமும் இந்தத் துறையோடு இணைக்கப்பட்டு, நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த அந்தக் கப்பல் போக்குவரத்துக் கழகம், கடந்த நிதியாண்டிலிருந்து இலாபத்திற்கு வந்திருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் சொல்லிக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் 8 பேர் இங்கே பேசினார்கள். சிறந்த ஆலோசனைகளை இங்கே இந்தத் துறையினுடைய வளர்ச்சிக்காகத் தந்திருக்கின்றார்கள். தொகுதிகளுடைய பணிகள் குறித்தும் கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அவற்றை எல்லாம் நிச்சயம் இந்தத் துறை பரிசீலித்து அதற்குரிய நடவடிக்கையை நிச்சயம் எடுக்கும் என்பதைத் தெரிவித்து, அறிவிப்புகளுக்கு வர இருக்கின்றேன். அந்த அடிப்படையில் இந்தத் துறையைச் சீரமைப்பது பற்றி அறிவிப்புகளிலே குறிப்பிட விரும்புகிறேன்.

**துறையைச் சீரமைத்தல்:** நெடுஞ்சாலைத் துறையினைச் சீரமைக்கவும், பலப்படுத்தவும் உலக வங்கித் திட்டத்தின்கீழ் பன்னாட்டு ஆலோசகர்களின் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளன. அவற்றைச் செயல்படுத்தும்விதத்தில் பல்வேறு அலகுகளின் பணிகளை மறுபகிர்மானம் செய்து அரசு ஆணை வழங்கியுள்ளது.

இத்துறையின் நிர்வாகச் சீரமைப்பின் மற்றொரு பகுதியாகப் பொறியாளர்களின் மதிப்பீடுகளுக்குத் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யும் நிதி வரம்புகளை உயர்த்தியும் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

மேலும், நெடுஞ்சாலைத் துறையின் பல்வேறு தலைமைப் பொறியாளர்களை ஒருங்கிணைக்க, துறைத் தலைவர் (Director General) எனும் புதிய பதவியினை உருவாக்கும் பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது. அதன்மீது விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**சாலை அமைப்பதில் புதிய தொழில்நுட்பம்:** அரசு சாலைகளை அகலப்படுத்தும்போது அடித்தளத்திற்கு நீர்க்கோப்பு கப்பிக் கலவை 75 மி.மீ. கனத்தில், அதாவது 3 அடுக்குகள், 4 அடுக்குகள் என்று

சொல்லிப் பணிகள் நடைபெறுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சாலையில் பள்ளம் தோண்டப்பட்டு, 6 மாதங்கள், 7 மாதங்கள் அந்தப் பணிகள் நடைபெற்று வரும். அந்தத் தொழில்நுட்பத்தை மாற்றி, புதிதாக இப்பொழுது இந்திய சாலைக் குழுமம் (I.R.C.) ஈரப்பதக் கற்கலவை (Wet Mix Mecadam) என்கின்ற புதிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. அந்த அடிப்படையில், இன்றைக்கு தேசிய நெடுஞ்சாலைப் பணிகள்கூட அந்த முறையில்தான் நடைபெற்று வருகின்றன. இந்த முறையில் சிறிய கற்கள் அடங்கிய கலவை பயன்படுத்தப்படுவதாலும், இயந்திரங்கள்மூலமாக நேர்த்தியாக அமைக்கப்படுவதாலும், சாலையின் தரத்தில் 100 சதவிகிதம் இறுக்கமும், செறிவும் உருவாக்கப்படுகிறது. மேலும், சுற்றுச்சூழல் மாசுபடாமலும், பணிகளைத் துரிதமாகவும் செய்ய முடியும். இந்தப் புதிய நடைமுறையை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கடைப்பிடித்து வருகிறது. எனவே, பழமையான நீர்க்கோப்புக் கப்பிக் கலவைக்குப் (WBM) பதிலாக புதிய முறையான ஈரப்பதக் கலவை (WMM) முறை மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளை அகலப்படுத்தும் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**காலத்திற்கேற்பக் கணினிமயமாக்கல்:** இத்துறையின் செயலாக்க அமைப்புகளை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும், தேவையான கணிப்பொறிகளைக்கொண்டு, துறையின் ஒவ்வொரு பகுதியிலும் வலுவான தகவல் தொழில்நுட்பப் பிரிவு அமைக்கப்படவுள்ளது. மேலும் பல்வேறு நிலங்கள் மற்றும் மண்ணின் தன்மைக்கு ஏற்றாற்போல் விவரங்களைச் சேகரிக்கும் வண்ணம், புவியியல் தகவல் தொழில்நுட்பம் (Geo Informatic System) பயன்படுத்தப்படவுள்ளது.

பிற்பகல் 1-45

**தரக் கட்டுப்பாடு அமல்:** இங்கேகூட அனைத்து உறுப்பினர்களும் பேசும்போது, தரத்தை மேம்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறைப் பணிகளைத் தரமாகச் செய்ய வேண்டுமென்று எங்களுக்கு அறிவுறுத்தியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே, நெடுஞ்சாலைத் துறையில் செயல்படுத்தும் பணிகளின் தரத்தை, அவற்றின் செயலாக்கத்தின்போது சரிபார்த்து, உறுதிசெய்வது அவசியமெனக் கருதி, இவ்வாறு முறையான தரக் கட்டுப்பாட்டுப் பணிகளை



மேற்கொள்வதற்காக வட்ட அளவிலும், கோட்ட அளவிலும் தேவையான தரக் கட்டுப்பாட்டு அமைப்புகள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன.

**பாலங்களில் நடைபாதை அமைத்தல்:** இப்போது விபத்துக்கள் பெருமளவில் நடப்பதை அறிவோம். இன்றைக்குப் பாலப் பகுதிகளில் விபத்துக்கள் நடைபெறும்போது பெரிய விபத்தாக மாறுகின்றன. பாலத்தை உடைத்துக்கொண்டு, நீர்வழிப் புறம்போக்கிலே, நீர்வழிப் பாதையிலே வாகனங்கள் விழுந்து, பலர் உயிரிழப்பு ஏற்படும் நிலை ஏற்படுகிறது. அதை முடிந்த அளவு தவிர்க்க வேண்டுமென்று, எண்ணி முதலில் நகரப் பகுதிகளில் மட்டும் பாலத்தின் ஓரத்தில் நடைபாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. இனி எந்த இடத்தில் பாலம் அமைத்தாலும், நடைபாதை அமைத்துத்தான் அந்தப் பாலம் அமைக்கப்பட வேண்டுமென்கிற முடிவை மாநில அரசு இன்றைக்கு எடுத்திருக்கிறது. விபத்துக்களைத் தடுக்கின்ற வகையிலே அந்த முடிவு எடுக்கப்பட்டு, இனிமேல் புதிய பாலங்கள் கட்டும்போது நடைபாதைகள்கொண்ட பாலங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

**சாலை வகைப்பாட்டை மாற்றியமைத்தல்:** சாலைகளை வகைப்படுத்துகின்ற வகையிலே, இந்த ஆண்டு மாவட்ட இதர சாலைகளாக இருக்கின்ற ஏறத்தாழ 2,000 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் மாவட்ட முக்கியச் சாலைகளாக மாற்றப்பட இருக்கின்றன.

**ஈப்புகள் மற்றும் சீருந்துகள் வழங்குதல்:** இன்றைக்குப் பணிபுரிகின்ற பணியாளர்களுக்குத் தேவையான ஈப்புகள் வழங்குகின்ற வகையிலே, கண்காணிப்புப் பொறியாளர் மட்டத்திலே இருக்கக்கூடியவர்களுக்கு 20 சீருந்துகளும், கோட்டப் பொறியாளர், உதவிக் கோட்டப் பொறியாளர் மட்டத்தில் இருப்பவர்களுக்கு 60 ஈப்புகளும் வழங்குகின்ற வகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏறத்தாழ 3½ கோடி ரூபாய் வழங்கியிருக்கின்றார்கள்.

**சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்:** இன்றைக்கு அதில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகளைத் தனியாகக் கண்காணிப்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு தலைமைப் பொறியாளரையும், ஏற்கெனவே T.N.U.D.P.-ல் பணிபுரிந்து வருகின்ற கண்காணிப்புப் பொறியாளருடன் கூடுதலாக இன்றைக்கு C.M.D.P. பணிகளைப் பார்வையிடுவதற்காக ஒரு கண்காணிப்புப் பொறியாளர், மொத்தம் இந்தத் தலைமைப்

பொறியாளர்கீழ் 2 கண்காணிப்புப் பொறியாளர்களும், 1 கோட்டப் பொறியாளர்களும் பணிபுரிய இருக்கின்றார்கள்.

**மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோருதல்:** நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்ததற்கிணங்க, நெடுஞ்சாலைத் துறையில் தற்பொழுது ஒப்பந்தப் படிவங்களை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்குகின்ற நேரத்திலே பல்வேறு பிரச்சினைகள் எழுவதை முன்னிட்டு, இந்த ஆக மின்னணு முறையிலே ஒப்பந்தங்களைச் செயல்படுத்துவதற்கு, ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதற்கு இன்றைக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

**கருணை அடிப்படையில் வாரிசுகளுக்கு வேலை:** துறையிலே பணி காலத்திலே காலமானவர்களுக்குப் பதிலாக, அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை வழங்குகின்ற வகையிலே 300 சாலைப் பணியாளர் பணியிடங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, இதுவரை 100 பேர்களுக்குப் பணி வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களின் விவரம் தெரியவில்லையென்றால்கூட, அந்தக் குடும்பத்தாருக்குத் தலைமைப் பொறியாளர் மட்டத்திலிருந்து, 'ஒரு வேலைவாய்ப்பு இருக்கின்றது; அந்த வேலைவாய்ப்பை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள்' என்று ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் விவரங்கள் வருமானால், அவற்றையும் பரிசீலித்து, உடனடியாகப் பணி நியமனம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல, 22 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 18 தட்டச்சர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள், சாலை ஆய்வாளர்களை நியமிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்தத் துறைக்கு ஏறத்தாழ 1,801 சாலை ஆய்வாளர்கள் தேவை. இன்றைக்கு காலியாகவுள்ள சாலை ஆய்வாளர்கள் பணியிடங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 703. சாலை ஆய்வாளர்களைப் பணி நியமனம் செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். I.T.I. படித்த மாணவர்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்க இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**தருமபுரி கோட்டம்:** இன்றைக்கு, தருமபுரி, கிருஷ்ணகிரி என்று இரண்டு மாவட்டங்களாக நிருவாக அளவிலே செயல்பட்டு



வந்தாலும், அதற்கு ஒரே கோட்டப் பொறியாளர்தான் இதுவரை பணிபுரிந்து வருகிறார். மக்கள் பிரதிநிதிகளிடத்திலிருந்தும், அங்கிருக்கின்ற மக்களிடத்திலிருந்தும், மாவட்ட நிருவாகத்திடமிருந்தும் இதற்காகக் கோரிக்கை வந்தவுடன், தருமபுரிக்குத் தனிக் கோட்டப் பொறியாளர் 1-5-2007-லிருந்து செயல்பட இருக்கிறார் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**பள்ளிப்பட்டில் உட்கோட்டம்:** அதேபோல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் பேசுகின்றபோதெல்லாம், பள்ளிப்பட்டுக்கு உட்கோட்டம் தேவையென்று சொல்வார். அந்த அடிப்படையில் அவருடைய கோரிக்கையும் இங்கே நிறைவேற இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், மண் சாலைகளாக உள்ள கிராமச் சாலைகளை மேம்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். இன்னும் சொல்லப் போனால், இந்தக் கிராமச் சாலைத் திட்ட அலகு என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் 1972 ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோது தனிப் பிரிவாகவே ஏற்படுத்தினார்கள். அதற்குப் பிறகுதான் கிராமச் சாலைகளுக்காக நபார்டு வங்கியினுடைய கடனுதவி பெற்றுப் பல்வேறு சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. எப்பொழுதெல்லாம் அவர் முதல்வராகப் பொறுப்பேற்கிறாரோ, அப்பொழுதெல்லாம் கிராமச் சாலைகள் உயிர்பெறுகின்றன. அந்த அடிப்படையில், நடப்பாண்டிலே முதற்கட்டமாக 222 கோடி ரூபாயிலே 961 கிலோ மீட்டர் நீளச் சாலையையும், 18 மாவட்டங்களில் ரூபாய் ஒரு கோடிக்கு அதிகமான மதிப்பீட்டில் 27 பாலங்களையும் அமைக்க இன்றைக்குத் தாக்கீது ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. விரைவில் ஒப்புதல் கிடைத்து, அந்தப் பணியும் தொடங்கப்பட இருக்கின்றது. இதில் 80 சதவிகித நிதி நபார்டு வங்கியினுடைய நிதி; 20 சதவிகிதம் மாநில அரசினுடைய நிதி. இதில் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், பாலம் தேவையென்று சொன்னால், நபார்டு வங்கியிலிருந்து அலுவலர்கள் வந்து அந்த இடத்தைப் பார்வையிட்டு, சாலை தேவைதான், பாலம் தேவைதான் என்று அவர்கள் ஒப்புதல் வழங்கிய பிறகு, அதற்குரிய ஒப்புதல் பெறப்பட்டபின் அதற்கான திட்டப் பணிகள் இங்கே நடைபெறும். அந்த அடிப்படையிலேதான் இப்போதும் நடைபெற்று வருகிறது.

பிற்பகல் 1-50

**சுனாமி மறுவாழ்வுத் திட்டம்:** ஆழிப் பேரலையால் எந்த அளவிற்குக் கடலோர மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன என்பது உங்களுக்குத் தெரியும். அந்த அடிப்படையில், சுனாமி மறுவாழ்வுத் திட்டத்திற்காக மத்திய அரசால் ராஜீவ் காந்தி தொகுப்புத் திட்டத்தில் நடப்பாண்டில் சுமார் ரூ.278 கோடி மதிப்பில் 175 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளுக்கும், 57 பாலப் பணிகளுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணியும் துவங்க இருக்கிறது.

ஈரோடு நகரின் மையப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால், அங்கே போக்குவரத்தை எளிதாக்குகிற வகையில், ஈரோடு-பெருந்துறை-காங்கேயம் சாலையில் நடப்பாண்டில் ரூ.20 கோடி மதிப்பில் ஒரு மேம்பாலம் உருவாக்கப்பட இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**பழுதடைந்த பாலங்களுக்குப் பதிலாக புதிய பாலங்கள்:** பழுதடைந்த பாலங்கள் என்பவை குறிப்பாக டெல்டா பகுதிகளிலே ஆங்கிலேயர் காலத்திலே கட்டப்பட்ட R.C. பாலங்கள், பேருந்துகளோ, கனரக வாகனங்களோ செல்கின்ற நேரத்தில் அங்கே விபத்துக்கள், பாலம் தானாகக் கீழே இறங்கக்கூடிய நிகழ்வு ஏற்படுகிறது. அதைத் தவிர்க்கின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டில் ஏறத்தாழ 160 கோடி ரூபாய் மதிப்பில் புதிய பாலங்களைக் கட்டுவதற்காக இன்றைக்கு அனுமதி தந்திருக்கிறார்கள்.

**புறவழிச் சாலைகள்:** போக்குவரத்தை எளிமையாக்குகின்ற வகையிலே புறவழிச் சாலைகளை அமைக்கின்ற பணியை இன்றைக்கு மத்திய அரசும் நடத்தி வந்தாலும், மாநில அரசும் அதற்கேற்ப ஒத்துழைக்கின்ற வகையிலும், மக்களுக்கு எளிதாக அந்தச் சாலைகளில் செல்கின்ற வகையிலே புறவழிச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. அந்த வகையிலே, இன்றைக்குப் பெருகி வரும் வாகனப் போக்குவரத்து, தமிழ்நாட்டிலே பல நகரங்களிலே போக்குவரத்து நெரிசலையும், விபத்துக்களையும் ஏற்படுத்துவதால், இத்தகைய நெரிசலைக் குறைப்பதற்காகவும் புறவழிச் சாலை அமைத்திட வேண்டும் என்ற அடிப்படையில், காஞ்சிபுரம், பெரம்பலூர், தஞ்சாவூர், எட்டுக்குடி, ஓசூர், இராசிபுரம், தாராபுரம், திருத்துறைப்பூண்டி, (மேசையைத் தட்டும் ஒலி) ஈரோடுபோன்ற நகரங்களுக்கும், அதேபோல, திரு. ரங்கராஜன் அவர்கள் பார்க்கிறார்கள் என்று நினைக்கின்றேன். அவருக்காக, கடந்த ஆண்டே பட்டுக்கோட்டைக்கு



அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதுவும் நடைமுறைப்படுத்தப்படும். அதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 37 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள்.

தொழிற்சாலைப் பகுதி சாலை மேம்பாடு என்கிற வகையிலே, திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே, பங்கல் கிராமத்தில் சிப்காட் தொழில் வளாகம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பகுதியை இணைப்பதற்கான 9 கிலோ மீட்டர் நீளச் சாலையை அமைப்பதற்காக, இந்த ஆண்டு ஏறத்தாழ 10 கோடியே 20 இலட்சம் ரூபாயை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.

**எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குச் சாலை வசதி:** எண்ணூர் துறைமுகப் பகுதியிலே அமையவுள்ள எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு (SEZ) சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளன. அந்த அடிப்படையில், காட்டுப்பள்ளி ஊராட்சியைச் சேர்ந்த 3½ கிலோ மீட்டர் நீளச் சாலையும், அதேபோல உப்பங்கழிக் கால்வாய் மற்றும் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுவதற்காகவும் ரூ.16 கோடி செலவில் 'அசைடு' திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

நபார்டு சாலைகள் பராமரிப்புப் பற்றி ஏற்கெனவே நான் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தேன். அந்த அடிப்படையில் ஏறத்தாழ 5,521 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1996-லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை முதல்வராக இருக்கும்பொழுது அமைக்கப்பட்டன. கடந்த நிதியாண்டில் ஏறத்தாழ 2,000 கிலோ மீட்டர் சாலைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. அதுபோக, ஊரக வளர்ச்சித் துறையின்மூலமும் எடுக்கப்பட்டன. இந்த ஆண்டும் ஏறத்தாழ 1,200 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணியை எடுப்பதற்காக, பராமரிப்பிற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.

**தமிழ்நாடு வேளாண்மைத் திட்டச் சாலைகள் பராமரிப்பு:** கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு அந்தச் சாலைகள் அமைக்கப்பட்டன. அந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்காக கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய 500 கிலோ மீட்டர் நீள கிராமச் சாலைகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அதற்காக நடப்பாண்டில் சுமார் 10 கோடி ரூபாயை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.

**கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டச் சாலைகள் பராமரிப்பு:** தமிழ்நாட்டிலுள்ள 1,746 கிலோ மீட்டர் கரும்புச் சாலைகளைப் பராமரிப்பதற்காக இந்த ஆண்டு 1,000 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், 60 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**தேசிய நெடுஞ்சாலை நில எடுப்புப் பணிகள்:** இப்பணிகளுக்காக முழு ஒத்துழைப்பையும் மாநில அரசு நெடுஞ்சாலைத் துறைக்கு வழங்கி வருகிறது. இதுவரை ஏறத்தாழ இந்த 10 மாத காலத்தில் மட்டும் சுமார் 900 எக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல, மேலும் அதனுடைய விரிவாக்கப் பணிக்காக நான்கு வழிச் சாலையாக்கப்படுகின்ற நேரத்தில் அந்தச் சாலையில் இருக்கின்ற மின் கம்பங்கள், குடிநீர்க் குழாய்கள், அங்கிருக்கின்ற கேபிள் வயர்கள் போன்றவற்றையெல்லாம் மாற்றி அமைப்பதற்காக இன்றைக்கு மாநில அரசு முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது.

**மாநில அரசின் உறுதுணை ஒப்பந்தம்:** தேசிய நெடுஞ்சாலையை அமைக்கின்ற நேரத்தில், விரிவாக்கப் பணிக்காக இன்றைக்கு ஆணையத்திற்கு மாநில அரசு State Support Agreement என்கின்ற முறையிலே, அதனுடைய பணிகளுக்காகவும் ஒப்பந்தம் செய்யப்பட்டு, அந்தப் பணியையும் ஊக்கப்படுத்தி வருகிறது. அதை அறிவிப்பிலே விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கின்றேன்.

அதேபோல, கோட்டக்கரையிலே கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட மழை வெள்ளத்தில் ஒரு பேருந்து அடித்துச் செல்லப்பட்டு, இராமநாதபுரம் மாவட்டத்திலே ஏறத்தாழ 45 பேர்களுக்கு உயிரிழப்பு ஏற்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். அந்தப் பாலம் நம்முடைய மாண்புமிகு மத்திய நிதி அமைச்சருடைய தொகுதிக்குட்பட்டது. 14-4-2007 ஆம் தேதி அதற்காக அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்றது. ஏறத்தாழ 12 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அந்தப் பாலம் புதிதாகக் கட்டப்படும்.

அதேபோல, மத்திய சாலை நிதித் திட்டம் என்கிற முறையிலே இன்றைக்கு நம்முடைய மாநிலத்திலே விற்கப்பட்டு வருகிற பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றிலிருந்து விகிதாச்சார அடிப்படையிலே மத்திய அரசு நமக்குப் பிரித்துத் தரக்கூடிய நிதியில் இந்த ஆண்டு மட்டும் 144 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அதற்காக இந்த



ஒதுக்கப்பட்டிருக்கிறது. சுமார்
ஆண்டு சுமார் 61 கோடி ரூபாய்
83 கோடி ரூபாய்க்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

**இரயில்வே மேம்பாலங்கள்:** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, இரயில்வே துறை அதற்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த நிதியாண்டிலே மட்டும் 39 இரயில்வே மேம்பாலங்கள் கட்டுவதற்கு மத்திய இரயில்வே துறை ஒப்புதல் அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே சரி பாதித் தொகையாகக் கணக்கிட்டு, மாநில அரசும், மத்திய இரயில்வே துறையும், அந்தப் பாலங்களைக் கட்டுவதற்காக இந்த ஆண்டு தலா 500 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றன. மாநில அரசு மட்டும் இன்றைக்கு 500 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

கன்னியாகுமரி படகுத் துறையில் புதிய படகுகள் வாங்குகின்ற வகையிலே, கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவித்துள்ளவாறு, கன்னியாகுமரி படகுத் துறைக்கு 30 ஆண்டுகள் பழமை வாய்ந்த எம்.எல். தாமிரபரணி மற்றும் எம்.எல். பாகிரதி ஆகிய இரண்டு படகுகளுக்குப் பதிலாக, இரண்டு புதிய படகுகள் வாங்குவதற்காக 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குச் சிறு துறைமுகங்கள் எத்தளவிற்குப் புத்துணர்வு பெற்றிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். திருவள்ளூர் மாவட்டம், எண்ணூர் பெருந்துறைமுகத்திற்கு வடக்கில் உள்ள காட்டுப்பள்ளி 1999-ல் சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டது. இப்போது அங்கு நம்முடைய சிறப்புப் பயன்பாட்டு நிறுவனம் (SPV) அமைத்து, அதன்மூலம் சுமார் 1,000 கோடி ரூபாய் செலவில் கப்பல் கட்டும் தளம் உருவாக்கப்படவிருக்கிறது.

**கடலூரிலே கப்பல் கட்டும் தளம்;** கடலூர் மாவட்டம், புதுக்குப்பம் மற்றும் ரெட்டியார்பேட்டை ஆகிய கிராமங்களுக்கிடையே 45,000 முதல் 75,000 டன்கள் வரை கொள்ளளவைத் தாங்கக்கூடிய கப்பல்களைக் கட்டுவதற்கு 'Good Earth' என்கிற கப்பல் கட்டும் நிறுவனம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய முன்னிலையிலே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கடந்த 15-2-2007 அன்று

கையெழுத்திட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் செயலாக்கத்திற்கு வரவிருக்கிறது.

**நாகை மாவட்டத்தில் புதிய துறைமுகம்:** '[illegible] இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்' என்கிற நிறுவனம், நாகப்பட்டினம் மாவட்டத்திலே ஏறத்தாழ 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவிலே, 2,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய plant-ஐ உருவாக்கவிருக்கிறார்கள். அதற்கு நிலக்கரியைக் கொண்டு வருவதற்காக, 750 கோடி ரூபாய் மதிப்பிலே ஒரு சிறு துறைமுகம் அமையவிருக்கிறது. அந்தத் துறைமுகத்திற்குத் 'திருக்குவளைத் துறைமுகம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்று, பெருமையோடு அந்தச் செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் 8 பேர் இங்கே பேசினார்கள்; அரிய கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயம் அதையெல்லாம் இந்தத் துறையும், அரசும் பரிசீலிக்கும். அந்த அடிப்படையிலே, ஏறத்தாழ 420 வெட்டுத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் படித்துப் பார்த்தேன். நான் சொல்வதெல்லாம் உண்மை; உண்மையைத் தவிர வேறு எதுவுமில்லை. நிச்சயமாகப் படித்திருக்கிறேன். அது மட்டுமல்ல; நான் கையில் வைத்துள்ள இந்தக் குறிப்புகள் வெட்டுத் தீர்மானங்களுக்குரிய குறிப்புகள். இவை மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு மானியக் கோரிக்கைகளில், நெடுஞ்சாலைத் துறை குறித்துப் பேசிய குறிப்புகள். அவற்றையெல்லாம் குறிப்பெடுத்திருக்கின்றேன். அவற்றையும் இந்தத் துறை பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். செங்கல்பட்டு கோட்டத்தில், புக்கத்துறை-உத்திரமேரூர் சாலை, 2005-2006-ல் கிட்டத்தட்ட 19.350 கி.மீ. பணி எடுக்கப்பட்டு, அந்தச்



சாலை 2.70 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட, அதாவது, B.M., மற்றும் S.D.B.C., ஆகிய வேலைகள் செய்யப்பட்டு, சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. இந்த வருடம் 2006-2007 ஆம் நிதியாண்டில் அதே சாலையை மீண்டும் அகலப்படுத்துவதற்காக எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். அந்தச் சாலையை ஏற்கெனவே 2006-ல் அகலப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், போடப்பட்ட சாலையின்மீதே, மீண்டும் அதே அளவில் சாலையைப் போடுவதற்காக ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டிருக்கின்றது. ஆகவே, புதிதாகப் போடப்பட்ட சாலைக்கு 5.25 கோடி ரூபாய் என்ற அளவிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, இதில் இருக்கின்ற உண்மைத் தன்மையை அறிந்து தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் நல்ல பல செய்திகளையும், நல்ல பல திட்டங்களையும் அறிவித்ததற்காக நான் மனதாரப் பாராட்டுகிறேன். கடலூர் மாவட்டத்திற்கு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வுக்கு வந்தபோது, கும்பகோணம்-சென்னை நெடுஞ்சாலையில் அமைந்திருக்கின்ற பண்ருட்டி இரயில்வே மேம்பாலத்தை உடனடியாகக் கட்டித் தர வேண்டும்; முதல்வர் அவர்களிடத்திலும் நான் கோரிக்கை வைத்திருக்கிறேன் என்று சொன்னபோது, ஆய்வுக் கூட்டத்திலேயே, 21 கோடி ரூபாய்க்கு அந்தத் திட்டம் தயார் செய்யப்பட்டிருக்கிறது; இந்த அறிவிப்பில் அது இடம்பெறும் என்று சொன்னார்கள். 39 மேம்பாலங்களுக்காக 500 கோடி ரூபாய் அறிவித்திருக்கிற நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடம், பண்ருட்டிக்கான அந்த இரயில்வே மேம்பாலமும் இதில் அடங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் இல்லை என்கிற காரணத்தினால் விளக்கமாக ஒவ்வொரு பாலப் பணியைப் பற்றியும் நான் குறிப்பிடவில்லை. எனவே, நிச்சயமாக அது குறித்து ஒவ்வொரு மாண்புமிகு உறுப்பினருக்கும், கடந்த ஆண்டு எடுக்கப்பட்டது. நபார்டு வங்கியினுடைய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாததால், இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றது. பொது வேலைகள் மூலம் ஏறத்தாழ 80 கோடி ரூபாயும், கிராமச் சாலைத் திட்டத்தின் மூலம் 222 கோடி ரூபாயும், திட்டங்கள் பிரிவின் மூலம் ஏறத்தாழ 240 கோடி ரூபாயும், மேலும் ராஜீவ் காந்தி தொகுப்புத் திட்டம் போன்ற வகைகளிலே இரயில்வே மேம்பாலங்களும், பல்வேறு பாலப் பணிகளும், சாலைப் பணிகளும் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன. நிச்சயமாக, விரைவில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது குறித்து துறை செய்தியை அனுப்பி வைக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண் 21—நெடுஞ்சாலைகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலைகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,201,82,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,755,75,95,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-4-2007) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

113. மானியக் கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலைகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

114. நெடுஞ்சாலைகள் துறை பற்றிய நிதிநிலைச் செயலாக்கச் சாதனைகள், 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

115. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

116. "தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்" என்கிற புத்தகம். (தமிழ்)

117. "சூடாகும் பூமி" என்கிற சிறு நூல். (தமிழ்)

118. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை. (2006-2007)

[2007 ஏப்ரல் 24

119. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தேழாவது அறிக்கை (2006-2007)

120. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தெட்டாவது அறிக்கை (2006-2007)

121. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை (2006-2007)

122. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை (2006-2007)

123. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை (2006-2007)

124. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்திரண்டாவது அறிக்கை (2006-2007)



## இணைப்பு

*(420 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 21—நெடுஞ்சாலைகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

### 1. முன்னுரை:

1.1. இந்தியாவின் மொத்தப் பரப்பளவான 31,66,414 சதுர கி.மீ.-ல் தமிழ்நாடு 1,30,058 சதுர கி.மீ பரப்பளவுடன் 11-வது பெரிய மாநிலமாகவும், நகர்ப்புறப் பகுதிகள் அதிகமுள்ள மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு அடுத்ததாக மூன்றாவது மாநிலமாகவும் திகழ்கிறது. மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றம், மக்கள் குடியேற்றம், மாநகர் மற்றும் நகர்ப்புறங்களின் வளர்ச்சி, சுற்றுச்சூழல் தரம், எரிபொருள் பயன்பாடு, சமுதாய உள்கட்டமைப்பு ஆகியவற்றை நிர்ணயிப்பதிலும், அனைத்திற்கும் மேலாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் மாநிலத்தின் சாலைக் கட்டமைப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. மேம்பட்ட சாலைக் கட்டமைப்பு வசதிகள் இருந்தால்தான் திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகள் எதிர்பார்த்த பலன்களைத் தரும்.

1.2. 31-3-2007 அன்றுள்ள நிலவரப்படி, தமிழ்நாட்டிலுள்ள சாலைகளின் மொத்த நீளம் சுமார் 1,88,700 கி.மீ. ஆகும். இதில் நெடுஞ்சாலைத் துறையின்கீழ் 61,446 கி.மீ. நீளச் சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. சாலைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அதாவது, சாலை வசதியில் தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 286 கி.மீ. நீளச் சாலைகள் என்ற அளவில், இந்தியாவின் சராசரி அளவான 258.20 கி.மீ.-ஐவிட அதிகமாக உள்ளது. மேலும், 100 சதுர கிலோ மீட்டருக்கு 137 கி.மீ. நீளச் சாலைகள் என்ற நிலையில் இந்தியாவின் சராசரி 74.90 கி.மீ. அளவைவிடவும் அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டிலுள்ள சாலைகள், (அ) அரசுச் சாலைகள் (ஆ) கிராமச் சாலைகள் மற்றும் ஏனைய சாலைகள் என இரு வகைகளாகப்

பிரிக்கப்பட்டுள்ளன. சிறந்த சாலை அமைப்புகளை உருவாக்கி பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் முதன் முறையாக நெடுஞ்சாலைகளுக்காகத் தனித்தொரு துறை ஏப்ரல், 1946-ல் தோற்றுவிக்கப்பட்டு பவள விழா ஆண்டை நிறைவு செய்துள்ளது.

1.3. அரசுச் சாலைகளின் மொத்த நீளம் 61,146 கி.மீ. ஆகும். அதன் விவரம் பின்வருமாறு:—

| | (i) சாலைகளின் வகைகள் | | (நீளம்-கி.மீ.) |
|---|---|---|---|
| (அ) | தேசிய நெடுஞ்சாலைகள் | — | 4,183 |
| (ஆ) | மாநில நெடுஞ்சாலைகள் | — | 9,256 |
| (இ) | மாவட்ட முக்கியச் சாலைகள் | — | 9,451 |
| (ஈ) | மாவட்ட இதர சாலைகள் (1,746 கி.மீ. கரும்புச் சாலைகள் உட்பட) | — | 38,256 |

| | (ii) பாலங்களின் விவரம் | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| (அ) | பெரிய பாலங்கள் | — | 1,209 |
| (ஆ) | சிறிய பாலங்கள் | — | 7,692 |
| (இ) | தாம்போகிகள் | — | 99,518 |
| (ஈ) | இரயில்வே மேம்பாலம்/கீழ்ப்பாலம் | — | 220 |

தேசிய நெடுஞ்சாலைகளின் பெரும் பகுதியினை தேசிய நெடுஞ்சாலை ஆணையமும், மீதமுள்ள பகுதிகளை மைய அரசின் நிதியுதவியுடன் மாநில அரசும் பராமரித்து வருகின்றன. மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளை மாநில அரசின் நிதியைக்கொண்டு நெடுஞ்சாலைத் துறை பராமரித்து வருகிறது.

## 2. நெடுஞ்சாலைத் துறையின் நோக்கம் மற்றும் குறிக்கோள்:

2.1. "சாலை உபயோகிப்போர் நலனைக் கருத்தில்கொண்டு, நவீனத் தொழில்நுட்பம், சிறந்த நடைமுறைகள் மற்றும் தேவையான நிதி இடங்களில் பொருத்தமான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவது.



மேலும், துறையிலும் துறைக்கு வெளியேயும் உள்ள பல்வேறு வளங்களைப் பயன்படுத்தித் திறம்பட நிர்வகிப்பது" என்பதே துறையின் நோக்கமாகும்.

2.2. "மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமுதாய நலனுக்குத் தொடர்ந்து வழிவகுக்கும் பாதுகாப்பான, மேம்பட்ட மற்றும் சுற்றுச்சூழலைப் பாதிக்காத சாலைக் கட்டமைப்பை உருவாக்கிப் பராமரிப்பதும்" இத்துறையின் குறிக்கோளாகும்.

## 3. இலக்குகள்:

மேற்காணும் நோக்கங்களையும், குறிக்கோளையும் அடையும் விதத்தில் சாலைக் கட்டமைப்பை நிர்வகிக்கவும், பராமரித்து மேம்படுத்தவும் பின்வரும் இலக்குகள் மற்றும் செயல் திட்டங்களைத் துறை நிர்ணயித்துள்ளது:

- ❖ இந்திய சாலைக் கழகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி சாலைக் கட்டமைப்பினை அகலப்படுத்தி மேம்படுத்தல் மற்றும் ஓடுதளத்தின் தரத்தைப் பேணிக் காத்தல்
- ❖ கிராமப் பகுதிகளுக்கும், நகர்ப் பகுதிகள் மற்றும் விற்பனை மையங்களுக்கும் இடையே உள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்துதல்
- ❖ தொழிற்சாலைப் பகுதிகள் மற்றும் நகர்ப் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல்
- ❖ வலுவிழந்த பாலங்களுக்குப் பதிலாகவும், பாலங்கள் இல்லாத இடங்களிலும் மற்றும் இரயில்வே குறுக்கிடும் சாலைகளிலும் புதிய மேம்பாலங்கள் கட்டுதல் மற்றும் குறுகிய பாலங்களை அகலப்படுத்துதல், குறிப்பாகக் காவிரிப் பாசனப் பகுதியிலுள்ள பாலங்களுக்கு முன்னுரிமை அளித்தல்
- ❖ சாலை மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ஒட்டுமொத்தச் சாலைக் கட்டமைப்புக்காகத் தகவல் தொகுப்பு மையம் ஒன்றினை உருவாக்கி, சிறந்த சாலை மேலாண்மைக்கு உதவுதல்

### செயல் திட்டங்கள்

- ❖ துறையின் செயல்பாடு மற்றும் செயல் திறனை மேம்படுத்தும் வகையில் துறையின் நிர்வாக அமைப்பை மாற்றி அமைத்தல்

- மாநிலத்தில் உள்ள அனைத்து மாநில நெடுஞ்சாலைகளையும் படிப்படியாக இருவழிப் பாதையாக அகலப்படுத்துதல்
- வாகனப் போக்குவரத்து அதிகமுள்ள மாவட்ட முக்கிய சாலைகளைக் கண்டறிந்து, அவற்றினை முக்கியத்துவத்திற்கு ஏற்ப அகலப்படுத்துதல்
- மாவட்ட இதர சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்தும் திட்டங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளை இணைக்கும் சாலைகளுக்கு முன்னுரிமை அளித்தல்
- பேருந்து வழித்தடங்களாக உள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும், 500-1000 மக்கள் தொகையுள்ள கிராமங்களை இணைக்கும் கிராமச் சாலைகளையும் நபார்டு வங்கியின் கடனுதவி மற்றும் மாநில அரசு நிதிப் பங்களிப்போடு மாவட்ட இதர சாலையின் தரத்திற்கு மேம்படுத்துதல்
- போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ஆரச் சாலைகள், வட்டச் சாலைகள், புறவழிச் சாலைகள், மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் அமைத்தல்
- சாலை விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைப்பதற்காக, சாலைப் பாதுகாப்புச் செயல் திட்டம் ஒன்றினை உருவாக்குதல் மற்றும் கண்டறியப்பட்டுள்ள விபத்துப் பகுதிகளை மேம்படுத்துதல்
- விபத்துக்களைத் தவிர்க்கவும், குறைக்கவும், சாலையில் பாதுகாப்புக் குறைவான புதிய பகுதிகளைக் கண்டறிந்து, அங்கு சாலைக் கட்டமைப்பை மேம்படுத்துதல்
- மிக முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளைப் பொது மற்றும் தனியார் கூட்டுப் பங்கேற்புமூலம் மேம்படுத்துதல்
- சாலைத் தொடரில் தேவைக்கேற்ப வாய்க்கால் வசதியினை ஏற்படுத்தி, தடையற்ற போக்குவரத்திற்கு உதவுதல்
- அரசுச் சாலைகளிலுள்ள மரங்களை நன்கு பராமரிப்பதுடன் புதிய மரங்களை வளர்த்தல்



## 4. நெடுஞ்சாலைத் துறையை மேம்படுத்துதல் மற்றும் அதற்கான திட்டங்களைச் செயல்படுத்துதல்:

நெடுஞ்சாலைத் துறையானது சாலை மேம்பாட்டுக்கான தனித் துறையாக 1946 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, கடந்த 61 ஆண்டு காலமாகத் திறம்படச் செயல்பட்டு வருகிறது. இத்துறையின்மூலம் மேற்கொள்ளப்படும் சாலைக் கட்டுமானப் பணிகளை உலகத் தரத்திற்கு இணையாகச் செயல்படுத்தவும், அதன்மூலம் குறைந்த செலவில் தரமான சாலைகளை ஏற்படுத்தவும் இத்துறையினை வலுப்படுத்துவது அவசியமாகிறது. இந்த நோக்கத்தின் அடிப்படையில், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உலக வங்கி இத்துறையை மேலும் மேம்படுத்துவதற்கு உதவ முன்வந்துள்ளது.

அதன் ஒரு பகுதியாக, உலக வங்கியின் வழிகாட்டுதலின்படி, பூஸ் ஆலன் பிரைவேட் லிமிடெட் என்ற ஆலோசகர் நிறுவனம் நெடுஞ்சாலைத் துறையில் தற்சமயம் உள்ள நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அமைப்பினை ஆராய்ந்து, இதனை மேம்படுத்துவதற்காகச் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் குறித்த பரிந்துரைகளை 1999 ஆம் ஆண்டில் வழங்கியது. இப்பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய 2001 ஆம் ஆண்டு ஸ்மெக் (SMEC) இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் நியமிக்கப்பட்டது. இந்நிறுவனத்தினர் முன்னர் பெறப்பட்ட பரிந்துரைகளை ஆராய்ந்து செயல்படுத்தும் நடைமுறைகளைக் குறித்து அறிக்கையினை அளித்துள்ளனர். இவ்வறிக்கையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

### 4.1. துறையின் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அமைப்பினை மாற்றியமைத்தல்

(அ) துறைக்குப் புதிய தலைமைப் (Director-General) பதவியினை உருவாக்கி, இவரது கட்டுப்பாட்டில் துறையின் தலைமைப் பொறியாளர்கள் செயல்படுவது.

(ஆ) தற்போது தலைமைப் பொறியாளர் (பொது) பிரிவில் உள்ள பணிப் பளுவினை ஆராய்ந்து, அதனடிப்படையில் நிர்வாகம் தொடர்பான நேர்வுகளைப் புதிதாக உருவாக்கப்படவுள்ள துறைத் தலைவரின் கட்டுப்பாட்டிற்கு [illegible]

227571
சென்னை-600 009

(இ) சாலை மேம்பாடு மற்றும் பராமரிப்பு பணிகளைத் தலைமைப் பொறியாளர் பராமரித்தல் மற்றும் இயக்குதல் என்ற அலகின்கீழ் செயல்படுத்துவது

(ஈ) தற்போது செயல்பட்டு வரும் வடிவமைத்தல் மற்றும் ஆய்வு அலகோடு திட்டமிடும் பிரிவினையும் இணைப்பது

(உ) களப் பணியாளர்களைப் பணிகளின் அளவிற்கேற்ப பகிர்ந்து மாற்றியமைப்பது

## 4.2. துறையினை நவீனமயமாக்குவதற்கு கணிப்பொறிகளைப் பயன்படுத்துதல்

(அ) வளர்ந்து வரும் தகவல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினை நெடுஞ்சாலைத் துறையிலும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நோக்குடன், கணிப்பொறிகளின் உதவியுடன் துறையை நவீனமயமாக்குவது

(ஆ) உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் வரை கணிப்பொறிகளின் பயன்பாட்டினை அறிமுகப்படுத்தி அதன்மூலம் துறையின் செயல்பாட்டினை மேம்படுத்துவது

## 4.3. துறையின் செயல்பாடு குறித்த கொள்கைகள் உருவாக்குதல்

(அ) மேம்படுத்தப்பட்ட தரக் கட்டுப்பாட்டுக் கொள்கையினைச் செயல்படுத்துவது

(ஆ) சுற்றுச்சூழல் பராமரிப்புக் கொள்கையைக் கடைபிடிப்பது

(இ) சாலைப் பயன்பாட்டாளர்களின் பாதுகாப்புக் கொள்கையைச் செயல்படுத்துவது

(ஈ) துறைக்கான நிதியினைத் திட்டமிட்டுச் செலவிடுவது

(உ) நெடுஞ்சாலைத் துறைக்கென கையேடு தயாரித்து வெளியிடுவது

ஸ்மெக் இன்டர்நேஷனல் லிமிடெட் அளித்த மேற்கூறிய ஆலோசனைகளின் சாதக பாதகங்களை ஆராய்ந்து, அவற்றை சரியான முறையில் செயல்படுத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. இதனை நடைமுறைப்படுத்துவது பற்றி விரைவில் முடிவு செய்யப்படும்.



## 4.4. நெடுஞ்சாலைத் துறையின் பல்வேறு அலகுகளுக்கு இடையே பணிப் பகிர்மானம்

துறையின் நிர்வாகத்தினைச் சீரமைக்கும் வகையில் பல்வேறு அலகுகளின் பணிகளைப் பின்வருமாறு மறுபகிர்மானம் செய்து அரசு ஆணை வழங்கியுள்ளது:

### (அ) பொது அலகு

- துறையின் அனைத்துப் பணியாளர் தொடர்பான நடவடிக்கைகள்
- துறையின் ஒட்டுமொத்த நிதிநிலை அறிக்கை
- மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் பராமரிப்பு
- பகுதி-2 திட்டங்கள் செயலாக்கம்
- வெள்ளம் மற்றும் சுனாமிபோன்ற இயற்கைப் பேரிடர் நிவாரணப் பணிகள்
- ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்
- சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் (சாலைப் பணிகள்)
- பொது—தனியார் பங்கேற்புத் திட்டங்கள்
- அரசால் அவ்வப்போது ஒப்படைப்பு செய்யப்படும் பணிகள்

### (ஆ) தேசிய நெடுஞ்சாலை அலகு

- தேசிய நெடுஞ்சாலை மூலப் பணிகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள பாலங்கள் மற்றும் சாலைகள் பராமரிப்புப் பணிகள்
- புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டப் பணிகள்
- மலைப் பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம்
- மேற்கு மலைத் தொடர் பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம்
- பழங்குடி மக்கள் பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம்

- பாரத் நிர்மாண் திட்டம்
- பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலை மேம்பாட்டுத் திட்டம்
- இதர அனைத்து மைய அரசுத் திட்டங்கள்
- தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III

**(இ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகு**

- நபார்டு நிதி உதவியின்மூலம் சாலை மற்றும் சிறு பாலப் பணிகள்
- நபார்டு நிதி உதவியுடன் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பராமரிப்பு மற்றும் மேம்பாடு
- ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் [illegible] பணிகள்

**(ஈ) திட்டங்கள் அலகு**

- அரசு நிதியின்மூலம் பாலப் பணிகள் மற்றும் நபார்டு நிதி உதவியின்கீழ் பெரிய பாலப் பணிகள்
- கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம்
- சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்ட மேம்பாலப் பணிகள்
- இரயில்வே பணிகள் திட்டத்தின்கீழ் இரயில்வே மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலப் பணிகள் மற்றும் ஆரச் சாலைகள்

**(உ) வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகு**

- புதிய பாலப் பணிகளில் ஆய்வு மேற்கொள்ளுதல்
- பாலங்களுக்கு வடிவமைப்பு தயாரித்தல்
- ரூ. 2.00 கோடி மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள பாலப் பணிகளுக்குக் கட்டுமான வடிவமைப்பு வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல்
- அரசால் அவ்வப்போது செய்யுமாறு பணிக்கப்படும் பணிகள்



**(ஊ) நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்**

- நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகள்
- சாலைப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வளர்ச்சிப் பணிகள்
- தரக் கட்டுப்பாட்டுப் பணிகள், மண்டல ஆய்வகங்கள் நிறுவுதல் மற்றும்
- அரசால் அவ்வப்போது செய்யுமாறு பணிக்கப்படும் பணிகள்

**(எ) தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்**

- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள்
- தமிழ்நாடு சாலை சிறப்புப் பராமரிப்புப் பணிகள்
- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (BOT) பணிகள்
- உலக வங்கி நிதி உதவியிலான பாலப் பணி
- துறை அமைப்புகளை பலப்படுத்துதல் மற்றும் செயல் திட்டங்களை அமல்படுத்துதல்.

**4.5. பொறியாளர்களின் ஒப்பளிப்பு வரம்பை அதிகரித்தல்**

இத்துறையின் நிர்வாகச் சீரமைப்பு நடவடிக்கையின் மற்றொரு பகுதியாக, பொறியாளர்களின் மதிப்பீடுகளுக்குத் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்குதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யும் நிதி வரம்புகளையும் பின்வருமாறு உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது:

| வ. எண் | அலுவலர் | தற்போதைய வரம்பு | உயர்த்தப்பட்ட வரம்பு |
|---|---|---|---|
| அ. மதிப்பீடுகளுக்குத் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்குதல் | | | |
| 1. | கோட்டப் பொறியாளர் | ரூ. 30 இலட்சம் வரை | ரூ. 50 இலட்சம் வரை |
| 2. | கண்காணிப்புப் பொறியாளர் | ரூ. 1.00 கோடி வரை | ரூ. 2.00 கோடி வரை |
| 3. | தலைமைப் பொறியாளர் | ரூ. 1.00 கோடிக்கு மேல் | ரூ. 2.00 கோடிக்கு மேல் |

| வ. எண் | அலுவலர் | தற்போதைய வரம்பு | உயர்த்தப்பட்ட வரம்பு |
|---|---|---|---|
| | **ஆ. ஒப்பந்தப்புள்ளி ஏற்பு** | | |
| 1. | கோட்டப் பொறியாளர் | ரூ.6.00 இலட்சம் (5% கூடுதல் வரை) | ரூ.15.00 இலட்சம் (3% கூடுதல் வரை) |
| 2. | கண்காணிப்புப் பொறியாளர் | ரூ.6.00 இலட்சம் (10% கூடுதல் வரை) 30.00 இலட்சம் (5% கூடுதல் வரை) | ரூ.15.00 இலட்சம் (6% கூடுதல் வரை) ரூ.100.00 இலட்சம் (3% கூடுதல் வரை) |
| | ஒப்பந்ததாரர்கள் முன் தகுதி மூலம் தேர்வு செய்யும் வரம்பு | ரூ.1.00 கோடிக்கு மேலுள்ள பணிகள் | ரூ.2.00 கோடிக்கு மேலுள்ள பணிகள் |
| 3. | தலைமைப் பொறியாளர் | ரூ.30.00 இலட்சம் (10% கூடுதல் வரை) ரூ. 100.00 இலட்சம் (5% கூடுதல் வரை) | ரூ.100.00 இலட்சம் (6% கூடுதல் வரை) ரூ.200.00 இலட்சம் (3% கூடுதல் வரை) |
| 4. | தலைமைப் பொறியாளர்கள் குழுமம் | ரூ.100.00 இலட்சம் (10% கூடுதல் வரை) | ரூ.50 இலட்சம் வரை (6% மேல் கூடுதல்) |
| 5. | ஒப்பந்தப்புள்ளி ஆணையம் | ரூ.1.00 கோடிக்கு மேல் | வ.எண் 3 மற்றும் 4-ல் அளிக்கப்படாத அதிகார வரம்பிற்கு. 3% அல்லது 6%. கூடுதல் வரம்பிற்கு ஏற்றபடி ரூ.2.00 கோடிக்கு மேல் |

## 5. ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP):

ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் இந்திய சாலைக் கழகத்தால் (IRC) நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் படிப்படியாக அகலப்படுத்தி மேம்படுத்தப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு.

### 5.1. மாநில நெடுஞ்சாலைகள்

இச்சாலைகள் மாவட்டத் தலைமையிடங்கள், முக்கிய நகரங்கள், மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அண்டை



மாநிலங்களை இணைக்கின்றன. இந்திய சாலைக் கழகத்தின் நெறிமுறைகளைப் பின்பற்றி, குறைந்தபட்சம் 75% அளவு மாநில நெடுஞ்சாலைகளை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில், அனைத்து மாநில நெடுஞ்சாலைகளையும் இரு வழித்தடச் சாலைகளாகப் படிப்படியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்ற ஆண்டு மேல்நிலைப்படுத்தப்பட்ட 2,663 கி.மீ. நீளச் சாலைகளையும் சேர்த்து மொத்தம் 9,256 கி.மீ நீளச் மாநில நெடுஞ்சாலைகளில் 4,978 கி.மீ. நீளச் சாலைகள் பல/இரு வழித்தடச் சாலைகளாகவும், 4,278 கி.மீ. நீளச் சாலைகள் இடை/ஒரு வழித்தடச் சாலைகளாகவும் இருந்தன.

2006-07 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக ரூ. 283.80 கோடி மதிப்பில், மாநில நெடுஞ்சாலைகளில் 664 கி.மீ. நீள ஒரு/இடை வழித்தடச் சாலைகளை இரு வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தவும், 169 கி.மீ. நீள ஒரு வழித்தடச் சாலைகளை இடை வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தவும், 29 கி.மீ. இரு வழித்தடச் சாலைகளைப் பல வழிதடச் சாலைகளாக அகலப்படுத்தவும், 217 கி.மீ. சாலைகளை வலுப்படுத்தவும் அரசு ஒப்புதல் அளித்தது.

இது தவிர, நிலுவையிலிருந்த 987 கி.மீ. மற்றும் புதிய பணிகள் 500 கி.மீ., ஆக மொத்தம் 1,487 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் ரூ. 241.19 கோடி மதிப்பில் சென்ற ஆண்டில் செய்து முடிக்கப்பட்டன.

சென்ற ஆண்டு 2 ஆம் கட்டமாக ரூ. 126.18 கோடி மதிப்பில் 326 கி.மீ. நீள ஒரு/இடை வழித்தடச் சாலைகளை அகலப்படுத்தவும், 67 கி.மீ. நீள ஒரு வழித்தடச் சாலைகளை இடை வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தவும், 17 கி.மீ. நீள இருவழித்தடச் சாலைகளைப் பல வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தவும், 29 கி.மீ. நீளச் சாலைகளை உறுதிப்படுத்தவும் அரசு ஒப்புதல் அளித்தது. இப்பணிகளும், தற்போது நிலுவையிலுள்ள பணிகளும் நடப்பு ஆண்டில் செய்து முடிக்கப்படும். நடப்பு ஆண்டில் இப்பணிகளுக்காக ரூ. 356.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஒப்பளிப்புச் செய்யப்பட்ட பணிகள் அனைத்தையும் செய்து முடிக்கும்போது, மாநில நெடுஞ்சாலைகள் 6,204 கி.மீ. இரு வழித்தடச் சாலைகளாகவும், 3,052 கி.மீ. இடை/ஒரு வழித்தடச் சாலைகளாகவும் இருக்கும். இதில் 2007-08-ல் சுமார் 750 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 5.2. மாவட்ட முக்கியச் சாலைகள்

மாவட்டத்திலுள்ள உற்பத்தி மற்றும் விற்பனை மையங்களை இணைக்கும் வகையிலும், இந்த மையங்களை முக்கிய நெடுஞ்சாலைகளோடு இணைக்கும் வகையிலும் மாவட்ட முக்கியச் சாலைகள் அமைந்துள்ளன. இச்சாலைகளில் குறைந்தபட்சம் 65% அளவிற்கு இந்திய சாலைக் கழகத்தின் நெறிமுறைகளைப் பின்பற்றி மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இலக்கின்படி, ஒரு வழித்தடச் சாலைகளாக உள்ள அனைத்து மாவட்ட முக்கியச் சாலைகளையும் இரு வழித்தடச் சாலைகளாகவோ, இடை வழித்தடச் சாலைகளாகவோ படிப்படியாக மாற்ற இந்த அரசு முடிவு செய்துள்ளது.

சென்ற ஆண்டில் மேல்நிலைப்படுத்தப்பட்ட 3,812 கி.மீ. நீளச் சாலைகளையும் சேர்த்து மொத்தம் 9,451 கி.மீ. நீள மாவட்ட முக்கியச் சாலைகளில் 2,033 கி.மீ. பல/இரு வழித்தடச் சாலைகளாகவும் 7,418 கி.மீ. இடை/ஒரு வழித்தடச் சாலைகளாகவும் இருந்தன.

2006-07 ஆம் ஆண்டில் மாவட்ட முக்கியச் சாலைகளில் ரூ.294.80 கோடி மதிப்பில் 525 கி.மீ. ஒரு/இடை வழித்தடச் சாலைகளை இரு வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தவும், 634 கி.மீ. ஒரு வழித்தடச் சாலைகளை இடை வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தவும், 4 கி.மீ. இரு வழித்தடச் சாலைகளைப் பல வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தவும், 226 கி.மீ. சாலைகளை வலுப்படுத்தவும், 26 சிறு பாலங்கள் கட்டவும் அரசு ஒப்புதல் அளித்தது.

இது தவிர, நிலுவையிலிருந்த 1,089 கி.மீ. மற்றும் புதிய பணிகள் 400 கி.மீ., ஆக மொத்தம் 1,489 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் ரூ.240.48 கோடி மதிப்பில் சென்ற ஆண்டில் செய்து முடிக்கப்பட்டன.

மேலும், 2 ஆம் கட்டமாக மாவட்ட முக்கியச் சாலைகளில் ரூ.103.33 கோடி மதிப்பில், 18.5 கி.மீ. ஒரு/இடை வழித்தடச் சாலைகளை இரு வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தவும், 244 கி.மீ. ஒரு வழித்தடச் சாலைகளை இடை வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தவும், 43 கி.மீ. நீளச் சாலைகளை வலுப்படுத்தவும் அரசு ஒப்புதல் அளித்தது. இப்பணிகளும், நிலுவைப் பணிகளும் நடப்பு ஆண்டில் செய்து முடிக்கப்படும். நடப்பு ஆண்டிற்கு ரூ. 370.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



மேற்கூறிய புதிதாக ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ள பணிகள் அனைத்தையும் செய்து முடிக்கும்போது, 2,537 கி.மீ. நீளம் இரு வழித்தடச் சாலைகளாகவும், 6,707 கி.மீ. நீளம் இடை/ஒரு வழித்தடச் சாலைகளாகவும் இருக்கும்.

## 5.3. மாவட்ட இதர சாலைகள்

கிராமப்புற உற்பத்தி மையங்கள், விற்பனை மையங்கள் ஆகியவற்றை வட்டத் தலைமையிடங்கள் மற்றும் அருகில் உள்ள பிரதான சாலைகளுடன் மாவட்ட இதர சாலைகள் இணைக்கின்றன.

மொத்தமுள்ள 38,256 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகளில் கரும்புச் சாலைத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட 1,746 கி.மீ. நீளக் கரும்புச் சாலைகளும் அடங்கும். பெரும்பாலான மாவட்ட இதர சாலைகள் ஒரு வழித்தடச் சாலைகளாகவே உள்ளன. இவற்றில், குறைந்தபட்சம் 50% சாலைகளை இந்திய சாலைக் கழகத்தின் நெறி முறைகளுக்கேற்ப படிப்படியாக மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

2006-07 ஆம் ஆண்டில், ரூ.143.80 கோடி மதிப்பில் 28 கி.மீ. ஒரு/இடை வழித்தடச் சாலைகளை இரு வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தவும், 174 கி.மீ. ஒரு வழித்தடச் சாலைகளை இடை வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தவும், 1,153 கி.மீ. சாலைகளை மேம்படுத்தவும், 27 சிறு பாலங்கள் மற்றும் பாலங்கள் கட்டவும் அரசு ஒப்புதல் அளித்தது.

இவற்றில், நிலுவைப் பணிகளையும் சேர்த்து 2006-07-ல் ரூ. 166.04 கோடி செலவில் 1,870 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் நடப்பு ஆண்டில் முடிக்கப்படும். இப்பணிகளுக்காகவும், புதிய பணிகளுக்காகவும் நடப்பு ஆண்டில் ரூ. 148.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.4. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதி செய்தல்

ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்தும் திட்டம் 2006-07 ஆம் ஆண்டு முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. ஆதி திராவிடர் நலத் துணைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, மொத்த மக்கள் தொகையில் 50%-க்கும் அதிகமாக ஆதி திராவிட மக்கள் வசிக்கும் குக்கிராமங்களுக்குச் செல்லும் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்தும் பணிகள்

மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் மாவட்ட இதர சாலைகளில், 2006-07 ஆம் ஆண்டில் ஆதி திராவிட மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.125.98 கோடி மதிப்பில் 997 கி.மீ. சாலைகளை வலுப்படுத்த அரசு ஒப்புதல் அளித்தது.

இவற்றில், சென்ற ஆண்டில் ரூ. 35.37 கோடி செலவில் 300 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் செய்து முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள பணிகள் 2007-08 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். இப்பணிகளுக்காகவும், புதிய பணிகளுக்காகவும் இந்நிதியாண்டில் ரூ. 85.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. பகுதி—2 திட்டம்:

2006-07 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 30.10 கோடி மதிப்பில் புதிதாக 9 பாலப் பணிகள் மற்றும் 19 சாலைப் பணிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்தது. இவற்றுடன், நிலுவைப் பணிகளும் சேர்த்து 19 பாலப் பணிகள், 30 கி.மீ. நீளச் சாலைப் பணிகளும் மொத்தம் ரூ.24.85 கோடி செலவில் முடிக்கப்பட்டன. பிற பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இவை நடப்பாண்டில் முடிக்கப்படும்.

2007-08 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.10 கோடி மதிப்பில் புதிய பணிகள் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

ரூபாய் கோடியில்

| வ. எண் | சாலையின் வகை | பாலப் பணி | | சாலைப் பணி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண் | மதிப்பு | எண் | மதிப்பு | எண் | மதிப்பு |
| 1. | மாநில நெடுஞ்சாலை | 1 | 0.40 | 3 | 3.40 | 4 | 3.80 |
| 2. | மாவட்ட முக்கியச் சாலை | | | 2 | 0.75 | 2 | 0.75 |
| 3. | மாவட்ட இதர சாலை | | | 1 | 1.50 | 1 | 1.50 |
| 4. | பழுதடைந்த பாலங்களைச் சீரமைத்தல் | 1 | 3.40 | | | 1 | 3.40 |
| 5. | ஆராய்ச்சி மேம்பாடு | | | | | 4 | 0.20 |
| 6. | இயந்திரங்களும், கருவிகளும் | | | | | 9 | 0.35 |
| | மொத்தம் | 2 | 3.80 | 6 | 5.65 | 21 | 10.00 |



நிலுவைப் பணிகளுக்கும், புதிய பணிகளுக்கும் சேர்த்து நடப்பு ஆண்டில் ரூ. 54.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. 2006-07-ல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட முக்கியத் திட்டங்கள்:

அரசின் பல்வேறு அறிவிப்புகளைத் தொடர்ந்து, பின்வரும் முக்கியப் பணிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### 7.1. திட்டக்குடியில் புதிய பாலம்

திட்டக்குடி பேரூராட்சி சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டும் பணிக்கு ரூ. 3.15 கோடி மதிப்பில் சிறப்பு இனமாகக் கருதி ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதற்கான மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது; நடப்பாண்டில் பணிகள் துவங்கப்படும்.

### 7.2. திருப்பூர் சுற்றுச் சாலை

திருப்பூர் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் தொழில் வளர்ச்சியின் காரணமாக அதிக அளவில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, திருப்பூர் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், சுற்றுச் சாலையை அமைக்கவும், ரூ. 70 கோடி மதிப்பில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2 இரயில்வே மேம்பாலங்கள், 6 உயர்மட்டப் பாலங்கள், 14 கி.மீ. ஊராட்சி ஒன்றியச் சாலைகள் உள்ளிட்ட 98.60 கி.மீ. இணைப்புச் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முன்னேற்றத்தில் உள்ள சாலைப் பணிகள் 2007-08-ல் முடிக்கப்படும்; இரயில்வே மேம்பாலப் பணிகளுக்கான ஆய்வு முடிந்த பிறகு பணிகளைத் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 7.3. விருத்தாசலத்தில் புதிய பாலம்

கடலூர்-விருத்தாசலம் சாலையில் மணிமுக்தா ஆற்றின் குறுக்கே சுமார் 126 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட செங்கல் வளைவுப் பாலம், 13-11-2004 அன்று பெய்த பெருமழையால் பலத்த சேதமடைந்தது. இந்த இடத்தில் புதிய 4 வழிப் பாலம் ஒன்றை ரூ. 5.75 கோடி மதிப்பில் கட்ட அரசு ஒப்புதல் அளித்தது. பாலம் மற்றும் அதனைச் சார்ந்த இதர பணிகள் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

### 7.4. துறையூர் புறவழிச் சாலை

பயண நேரத்தைக் குறைக்கவும், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும் முசிறி-துறையூர்-ஆத்தூர் சாலையில் துறையூர் நகருக்கு 3.00 கி.மீ. நீளத்தில் புறவழிச் சாலை ரூ. 3.81 கோடி செலவில் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டது. புறவழிச் சாலை அமைப்பதற்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிகள் முடிவுற்றதும் புறவழிச் சாலைப் பணி துவங்கப்படும்.

### 7.5. பிற அறிவிப்புகள்

அரசின் பிற அறிவிப்புகளின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் சம்பந்தப்பட்ட தலைப்புகளின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 8. சிறப்பு தொழில் பெருவழிச் சாலைத் திட்டம்:

### 8.1. தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை (முதல் கட்டம்)

சென்னை மத்திய கைலாஷ் முதல் பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள சிறுசேரி வரையுள்ள 20.10 கி.மீ. நீளச் சாலையையும், 2 கி.மீ. நீள கிழக்குக் கடற்கரைச் சாலை இணைப்புச் சாலையையும் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணியைத் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் துணை நிறுவனமான தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனம் (ITEL) மேற்கொண்டுள்ளது. இச்சாலை சர்வதேசத் தரத்தில் 6 வழித்தடங்கள், இயந்திரம் பொருத்தப்படாத வாகனங்களுக்கென 2 வழித்தடங்கள் மற்றும் 2 சேவைப் பாதைகளைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இட வசதிக்கேற்றவாறு சாலையின் மையப் பகுதி அழகுபடுத்தப்படும். மேலும், நெடுஞ்சாலைக் கண்காணிப்பு, 24 மணி நேர அவசர மருத்துவ சிகிச்சை உதவி மையங்கள், வாகன இழுவை அமைப்பு வசதிகளும் இச்சாலையில் ஏற்படுத்தப்படும். இட வசதிக்கேற்றவாறு நிழல் தரும் மரங்களை நடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நிதி ஆதாரங்களைத் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனமே திரட்டிக்கொள்ளவும், குறிப்பிட்ட காலத்திற்குச் சுங்கம் வசூலித்துக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிலம் கையகப்படுத்துவதற்காக அரசு ரூ. 43 கோடி வழங்கியுள்ளது. மேலும், நடப்பு ஆண்டில் கூடுதலாக



ரூ. 36.76 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. முதல் தொகுப்பில் சுமார் 3 கி.மீ நீளச் சாலைப் பணிகள் முடிவுற்றுள்ளன. பிற தொகுப்புகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளைத் துரிதப்படுத்தி இவ்வாண்டு முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சாலையின் இருமருங்கிலும் உள்ள அனைத்து தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் இந்த விரைவுச் சாலை சிறந்த தொழில் இணைப்புச் சாலையாகச் செயல்படுவதுடன், இப்பகுதியில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன் வேலைவாய்ப்புகளையும் கணிசமான அளவில் உருவாக்கவும் பயன்படும்.

### 8.2. தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை விரிவாக்கம்

கடந்த மானியக் கோரிக்கையின்போது அறிவித்தவாறு, தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலையின் விரிவாக்கமாக சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரை 25.3 கி.மீ நீளச் சாலையினை மேம்படுத்தவும், அதற்கான நில எடுப்புப் பணிகளுக்கும் முதல் கட்டமாக ரூ. 70 கோடி அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு நில எடுப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 8.3. ஒரகடம்–தொழிற்பூங்கா சாலைக் கட்டமைப்பு வசதிகள்

2006-07 ஆம் ஆண்டு தொழில் துறை மானியக் கோரிக்கையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, மாநிலத்தில் சிறப்பு தொழில் பெருவழிச் சாலை உருவாக்கப்பட உள்ளது. இச்சிறப்புப் பெருவழிச் சாலையில் தொழில் பூங்காக்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நகரியங்கள் அமைக்கப்பட்டு, அவை விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களுடன் விரைவு நெடுஞ்சாலைகள்மூலம் இணைக்கப்படும். இப்பெருந்திட்டத்தின் ஒரு பகுதியாக ஒரகடம் தொழிற்பூங்கா சாலைக் கட்டமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், தேசிய நெடுஞ்சாலை-4-க்கும், தேசிய நெடுஞ்சாலை—45-க்கும் இடையே உள்ள ஒரகடம் பகுதியில் தொழிற்பூங்கா மற்றும் தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதால், அவற்றுக்குத் தேவையான சாலை வசதிகளை மேம்படுத்த ரூ. 300 கோடி மதிப்பில் பின்வரும்

மாநிலச் சாலைகளை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது:

| | |
|---|---|
| (அ) சிங்கப்பெருமாள்கோயில்-திருப்பெரும்புதூர் சாலை—கி.மீ.0/0-24/6. | 24.60 கி.மீ. |
| (ஆ) வண்டலூர்-வாலாசாபாத் சாலை—கி.மீ. 30/4-63/8. | 33.40 கி.மீ. |
| மொத்தம் | 58.00 கி.மீ. |

இப்பணிகளின் விவரம் பின்வருமாறு:

சிங்கப்பெருமாள்கோயில்-திருப்பெரும்புதூர் சாலைப் பகுதி மற்றும் வண்டலூர்-வாலாசாபாத் சாலைப் பகுதி, தேசிய நெடுஞ்சாலை 45-ஐயும், தேசிய நெடுஞ்சாலை 4-ஐயும் இணைக்கும் சாலையில் சிங்கப்பெருமாள்கோயில் முதல் ஒரகடம் சந்திப்பு வரை 12.6 கி.மீ நீளத்திற்கு நான்கு வழிப் பாதையாகவும், ஒரகடம் முதல் திருப்பெரும்புதூர் வரை 12 கி.மீ. நீளத்திற்கு ஆறு வழிப் பாதையாக அகலப்படுத்தவும் வண்டலூர்-வாலாசாபாத் சாலையில் வண்டலூர் முதல் ஒரகடம் வரையில் 20 கி.மீ. நீளத்திற்கு நான்கு வழிப் பாதையாகவும், ஒரகடம் முதல் வாலாசாபாத் வரை 13.4 கி.மீ. நீளத்திற்கு இரு வழிப் பாதையை வலுப்படுத்தவும், ஒரகடம் கூட்டு சந்திப்பில் ஒரு மேம்பாலம் அமைக்கவும் விரிவான திட்ட அறிக்கை ஆலோசகர்கள்மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வறிக்கைகள் கிடைக்கப்பெற்றதும் இச்சாலைகள் அமைக்கத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்த வருவாய்த் துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்கு அரசு ரூ.56 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்தவுடன், இத்திட்டம் நடப்பாண்டில் (2007-08) செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். சாலைப் பணிகளுக்குத் தனியாக நடப்பாண்டில் ரூ. 20 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 9. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் (CMDP):

இத்திட்டம் முற்றிலும் மாநில அரசு நிதியினைப் பயன்படுத்திச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சென்னை மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் போக்குவரத்து மற்றும் சாலை வசதிகளை



மேம்படுத்த 2003-04 ஆம் ஆண்டு முதல் ரூ.756.26 கோடி மதிப்பில் 254 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2005-06 வரை ரூ. 20.40 கோடி மதிப்பிலான 49 பணிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டிருந்தன.

2006-07-ல் ரூ. 88 கோடி செலவில் 28.97 கி.மீ. நீள 7 சாலைப் பணிகளும், 4 பாலப் பணிகளும் மற்றும் சென்னை மாநகரை அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் 5 பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 479.92 கி.மீ. நீள 113 சாலைப் பணிகளும், 76 பாலப் பணிகளும் பல்வேறு நிலைகளில் உள்ளன.

மேலும், இத்திட்டத்தின்கீழ் 2005-2006-ல் 6 சாலை மேம்பாலங்கள், ஒரு இரயில்வே மேம்பாலம் மற்றும் 4 ஆற்றுப் பாலங்கள், ஆக மொத்தம் 11 பாலங்கள் ரூ.219 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவற்றுள், மறைமலையடிகள் பாலம்--இரும்புலியூர் சாலையில் பள்ளிக்கரணை அருகே ஒரு மேம்பாலப் பணியும் மற்றும் பக்கிங்காம் கால்வாயில் உள்ள பாலத்தை அகலப்படுத்தும் பணியும் விரைவில் துவங்கும் நிலையில் உள்ளன. இரு சாலை மேம்பாலங்களுக்கும் மற்றும் ஒரு இரயில்வே மேம்பாலத்திற்கும் ஆலோசகர்களிடம் மதிப்பீட்டுடன் விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இத்திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மற்ற பணிகளுக்கு ஆலோசகர்கள்மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் 3 பணிகள் மெட்ரோ இரயில் திட்டத்தின் வழித்தடப் பாதையில் அமைந்துள்ளன. இவ்வழித் தடப் பாதை இறுதி செய்யும் நிலையில் உள்ளதால், விரைவில் ஆய்வுப் பணிகளை முடித்து, கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்பணிகளுக்காக நடப்பாண்டில் மொத்தம் ரூ.250.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. சாலைப் பாதுகாப்புச் செயல் திட்டம்:

பாதசாரிகள், மிதிவண்டிகள் மற்றும் பேருந்துகளில் பயணிப்போர் தொடர்பான சாலை விபத்துக்களை வெகுவாகக் குறைக்கும்பொருட்டு, சாலைப் பாதுகாப்புச் செயல் திட்டம் ஒன்றை உருவாக்கிச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 2% அளவுக்கு விபத்து விகிதத்தைக் குறைத்தாலே, நிறைய உயிர்களைக் காக்க

முடியும். சாலைக் குறைபாடுகளால் ஏற்படும் விபத்துக்களைக் குறைக்க நெடுஞ்சாலைத் துறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக அறிவியல்ரீதியான ஆராய்ச்சி செய்யவும், புள்ளிவிவரங்களை சம்பந்தப்பட்ட துறைகளுக்கிடையே பகிர்ந்துகொள்ளவும், விபத்து தொடர்பான விவரங்களை அவ்வப்போது சேகரித்துப் பகுப்பாய்வு செய்யவும் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:

- அறிவியல்ரீதியான ஆராய்ச்சி செய்து, விபத்துக்கள் தொடர்பான புள்ளிவிவரங்களை சம்பந்தப்பட்ட துறைகளுக்கிடையே பகிர்ந்துகொண்டு, விபத்து தொடர்பான புள்ளிவிவரங்களை அவ்வப்போது சேகரித்துப் பகுப்பாய்வு செய்தல்.
- சாலைப் பாதுகாப்பு நடைமுறைகளை அறிமுகம் செய்தல்: விபத்துப் பகுதிகளைக் கண்டறிந்து நிவர்த்திப் பணிகளை மேற்கொள்ளுதல், வடிவமைப்பு மற்றும் கட்டமைப்புத் தொழில் நுட்பத்தைக் கடைப்பிடித்தல்.
- போதிய எண்ணிக்கையிலான தொழில்நுட்பப் பணியாளர் மற்றும் நவீனக் கருவிகளுடன் போக்குவரத்துப் பொறியியல் அமைப்பை வலுப்படுத்துதல்.
- சாலைகளில் உள்ள வேகத் தடைகளால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்கும்பொருட்டு, சாலைச் சந்திப்புகளில் தேவைப்படும் இடங்களில் ஒரே மாதிரியான, புதிய வகை வேகத் தடைகளை அமைக்க நடவடிக்கை எடுத்தல்.
- மாநிலம் முழுவதும் 300 இடங்கள் விபத்துப் பகுதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 50 இடங்களில் ரூ. 37.89 கோடி செலவில் முன்னுரிமை அடிப்படையில் நவீனத் தொழில் நுட்பத்துடன் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. சந்திப்பு மேம்பாடுகள், நேர்ப்பாடுகளைத் திருத்தி அமைத்தல்போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்.

### 10.1. சீரான வேகத் தடைகள் அமைத்தல்

சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள வேகத் தடையே சில நேரங்களில் விபத்துக்குக் காரணமாகிவிடுகிறது. அதை அறிந்து, மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான வேகத் தடைகளை அமைக்க முடிவு செய்யப்பட்டது.



உயிர்ச் சேதம் விளைவிக்கும் விபத்துக்கள், குறிப்பாக இரு சக்கர வாகன விபத்துக்கள் சிலவற்றுக்குப் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஒழுங்கற்ற வேகத் தடைகளே முக்கியக் காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. உடனடித் தீர்வாக, 1,468 ஒழுங்கற்ற வேகத் தடைகள் கண்டறியப்பட்டு, 982 வேகத் தடைகள் உரிய தரத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 586 வேகத் தடைகளை மாற்றியமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சாலைகளில் உள்ள வேகத் தடைகளால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்கும்பொருட்டு, சாலைச் சந்திப்புகளில் தேவைப்படும் இடங்களில் ஒரே மாதிரியான, புதிய வகை வேகத் தடைகளை அமைத்துப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். பிரதான சாலையை இணைக்கும் அனைத்துக் குறுக்குச் சாலைகளிலும் வேகத் தடைகள் அமைக்கப்பட உள்ளன.

### 10.2. விபத்துப் பகுதிகளை மேம்படுத்துதல்

தமிழ்நாட்டில் 300 விபத்துப் பகுதிகள் கண்டறியப்பட்டு, அவற்றில் 50 விபத்துப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 4 தொகுப்புகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் 18 தொகுப்புகளில் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும். மீதமுள்ள பகுதிகளில் நில எடுப்புப் பணிகள் முடித்தபின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். இவற்றில் சில இடங்களை மாநில அரசு நிதியின்கீழ் மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

### 10.3. வழிகாட்டிப் பலகைகள்

வாகன ஓட்டுநர்களுக்குத் தெளிவாக வழிகாட்டும் வகையில் ஒரே மாதிரியான வண்ணம் மற்றும் அளவில் இந்திய சாலைக் கழகக் குறியீடுகளின்படி வழிகாட்டிப் பலகைகள் அனைத்து அரசுச் சாலைகளிலும் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 11. சிறந்த சாலைப் பராமரிப்பு:

11.1. பெரும் முதலீட்டில் உருவாக்கப்பட்ட சாலைகளைப் பாதுகாப்பதற்குக் கால முறைப் பராமரிப்பு மிகவும் அவசியமாகும். சாலைப் பராமரிப்புப் பணிகளின் பயன்கள் பின்வருமாறு:

- பொதுச் சொத்தான சாலையின் தேய்மான சதவீதத்தைக் குறைத்தும், சாலையின் சேவைக் காலத்தை நீட்டித்தும் பாதுகாக்கின்றன.

- சிறந்த ஓடுபாதையை அளிப்பதன்மூலம் வாகன இயக்கச் செலவைக் குறைக்கிறது.
- மழைக் காலங்களிலும் சாலைகளைப் போக்குவரத்துக்கு ஏற்றதாக்குகின்றன.
- சாலை உபயோகிப்போரின் பாதுகாப்பிற்கும் வழிவகுக்கிறது.

11.2. சாலைப் பராமரிப்பில் சாதாரணப் பழுதுபார்ப்புகள், கால முறைப் புதுப்பித்தல், சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் அவசரப் பழுதுபார்ப்பு என்ற 4 கூறுகள் அடங்கியுள்ளன. சாலைப் பராமரிப்பிற்குத் தேவையான செலவினைக் கணக்கிடுவதற்கு இந்திய அரசு சில குறியீடுகளை நிர்ணயித்துள்ளது. பராமரிப்புப் பணிகளுக்காகக் கடந்த காலங்களில் போதிய நிதி ஒதுக்கீடு வழங்கப்படவில்லை; ஆனால், சென்ற ஆண்டு முதல் நிதி ஒதுக்கீடு கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

11.3. 2006-07-ல் சாலைப் பராமரிப்புப் பணிகளுக்காக மொத்தம் ரூ.801.37 கோடி ஒதுக்கப்பட்டது. இதில், அரசுச் சாலைகள் பராமரிப்புகளுக்காக ரூ. 525.25 கோடியும், 1996 முதல் 2001 முடிய நபார்டு நிதி உதவியுடன் மேம்படுத்தப்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைப் பராமரிப்புகளுக்காக ரூ.160.00 கோடியும், ஊரக வளர்ச்சித் துறைமூலமாக ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைப் பராமரிப்புகளுக்காக ரூ.103.60 கோடியும், கரும்புச் சாலைப் பராமரிப்புகளுக்காக ரூ.12.52 கோடியும் வழங்கப்பட்டது. பராமரிப்பு நிதியைப் பயன்படுத்தி 6,283 கி.மீ நீள அரசுச் சாலைகளிலும், பாலங்களிலும் புதுப்பிக்கும் பணிகளும் மற்றும் இதர பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

11.4. நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை 5,521 கி.மீ நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டன. அதன் பிறகு, இச்சாலைகளில் பராமரிப்புப் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, இச்சாலைகளில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்து 2006-07 ஆம் ஆண்டில் 2,000 கி.மீ நீளமுள்ள சாலைகளில் புதுப்பிக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் சாலைப் பராமரிப்புப் பணிகளுக்காக மொத்தம் ரூ. 826.26 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், அரசுச் சாலைகள் பராமரிப்புகளுக்காக ரூ.509.51 கோடியும், நபார்டு நிதி



உதவியில் மேம்படுத்தப்பட்டபின் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் பராமரிப்புகளுக்காக ரூ.200 கோடியும், ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் உள்ள சாலைப் பராமரிப்புகளுக்காக ரூ.103.60 கோடியும், கரும்புச் சாலைப் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.13.15 கோடியும் பயன்படுத்தப்படும்.

## 12. நபார்டு கடனுதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்:

### 12.1. மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மேம்பாடு செய்தல்

இத்திட்டத்தின்கீழ் நிலுவையிருந்த 1,242 கி.மீ நீளச் சாலைப் பணிகளும், 17 பாலப் பணிகளும் 2006-07 ஆம் ஆண்டில் மேம்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றில், 1,046 கி.மீ நீளச் சாலைப் பணிகளும், 9 பாலப் பணிகளும் ரூ.83.77 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 196 கி.மீ நீளச் சாலைப் பணிகளும், 8 பாலப் பணிகளும் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்படும்.

இத்திட்டத்திற்கு இவ்வாண்டில் ரூ.20.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 12.2. அரசுச் சாலைகளில் பாலங்கள் கட்டுதல்

நபார்டு கடனுதவித் திட்டத்தின்கீழ் 2006-07 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைத் துறை பொது அலகின்மூலம் அரசுச் சாலைகளில் ரூ.120.34 கோடி மதிப்பில் 265 பாலங்கள் கட்டவும், 31 கி.மீ நீள 6 சாலைகளை மேம்படுத்தவும் அரசு ஒப்புதல் அளித்தது. நபார்டு கடனுதவித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தையும் ஒரே அலகின் கட்டுப்பாட்டில் கொண்டு வர அரசு தீர்மானித்தது. அதன்படி, மேற்குறிப்பிடப்பட்டவாறு முடிவுற்ற சாலைப் பணிகள் நீங்கலாக நிலுவையிலுள்ள பாலப் பணிகள் நடப்பாண்டில் நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகின்மூலம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன. இப்பணிகளில் 150 பாலப் பணிகளை நடப்பாண்டில் முடிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.66.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 24

## 12.3. கிராமச் சாலைகள் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 500 முதல் 1,000 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்களை இணைக்கும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் இதர மாவட்டச் சாலைகளின் தரத்திற்கு மேம்பாடு செய்யப்படுகின்றன. பள்ளிகள், வியாபாரத் தலங்களை முக்கியச் சாலைகளுடன் இணைக்கும் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இத்திட்டம் துவங்கப்பட்டு இதுவரை 4,029 கி.மீ நீளச் சாலைப் பணிகளும் 47 பாலப் பணிகளும் ரூ.434.27 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 1,790 கிராமங்கள் தார்ச் சாலை வசதிபெற்றுள்ளன. மீதமுள்ள 117.40 கி.மீ நீளச் சாலைப் பணிகளும், 6 பாலப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இவற்றின் மதிப்பு ரூ.19.90 கோடி ஆகும். இப்பணிகள் அனைத்தும் நடப்பாண்டில் முடிக்கப்படும்.

மேலும், சென்ற ஆண்டு அறிவித்தவாறு ரூ.96.61 கோடி மதிப்பில் 477 கி.மீ நீள புதிய சாலைப் பணிகளுக்கும், 11 பாலப் பணிகளுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளும் நடப்பாண்டில் நிறைவேற்றப்படும்.

தவிர, இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 655 கி.மீ நீளச் சாலைப் பணிகள் மற்றும் 31 பாலப் பணிகளை ரூ.146.12 கோடி மதிப்பில் மேற்கொள்ளக் கருத்துரு அனுப்பப்பட்டு, நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது. வங்கியின் ஒப்புதல் கிடைத்தபின் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.135.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12.4. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தார்ச் சாலை வசதி செய்தல்

ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்கீழ் மொத்த மக்கள் தொகையில் 50%-க்கு அதிகமாக ஆதி திராவிடர்கள் உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்யப்படுகிறது. இத்திட்டம் துவங்கப்பட்டு இதுவரை 1,366 கி.மீ. நீளச் சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 26 பாலப் பணிகள் ரூ.141.20 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 647 ஆதி திராவிட கிராமங்கள் தார்ச் சாலை வசதிபெற்றுள்ளன.



2007 ஏப்ரல் 24]

மேலும், சென்ற ஆண்டு அறிவிப்பின்பேரில் இத்திட்டத்தின்கீழ் 94.00 கி.மீ நீளச் சாலைப் பணிகள் மற்றும் 6 பாலப் பணிகள் ரூ.25.47 கோடி மதிப்பில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நடப்பாண்டில் செய்து முடிக்கப்படும்.

தவிர, இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் புதிதாக 158.00 கி.மீ நீளச் சாலைப் பணிகள் மற்றும் 9 பாலப் பணிகளை ரூ.34.65 கோடி மதிப்பில் மேற்கொள்ளக் கருத்துரு அனுப்பப்பட்டு, நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது. வங்கியின் ஒப்புதல் கிடைத்ததும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.30.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12.5. பேருந்து வழித்தடச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மூன்று ஆண்டுகளுக்குமேல் பேருந்துகள் இயங்கி வரும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மாவட்ட இதர சாலைகளின் தரத்திற்கு இணையாக தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் துவங்கப்பட்டு இதுவரை மொத்தம் 2,747 கி.மீ. நீளச் சாலை மேம்பாட்டுப் பணிகளும், 48 பாலப் பணிகளும் ரூ.247.44 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

சென்ற ஆண்டு அறிவிப்பின்படி இத்திட்டத்தின்கீழ் 312 கி.மீ நீளச் சாலைப் பணிகள் மற்றும் 7 பாலப் பணிகளை ரூ.62.92 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகள் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மேலும், இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் புதிதாக ரூ.41.54 கோடி மதிப்பில் 148.00 கி.மீ நீளச் சாலைகளை மேம்பாடு செய்வதற்கும், 7 பாலங்கள் கட்டுவதற்கும் கருத்துருக்கள் அனுப்பப்பட்டு, நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளன. வங்கியின் ஒப்புதல்பெற்றுப் பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.66.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12.6. பேருந்து செல்லும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்பாடு செய்தல்

2005-2006 ஆம் ஆண்டில் புதிய திட்டமாக நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் பேருந்து செல்லும் 1,213 கி.மீ நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்பாடு செய்யவும் மற்றும் 6 பாலங்கள் கட்டவும் ரூ.116.67 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப் பட்டது. இவற்றில் 667 கி.மீ நீளச் சாலைப் பணிகள் மற்றும் 2 பாலப் பணிகள் ரூ.80.75 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 546 கி.மீ நீளச் சாலைப் பணிகளும், 4 பாலப் பணிகளும் வெவ்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் அனைத்தும் நடப்பாண்டில் முடிக்கப்படும்.

நடப்பு ஆண்டில் இப்பணிகளுக்கு ரூ.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12.7. காவிரிப் பாசனப் பகுதிகளில் பாலங்கள் கட்டுதல்

கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ரூ.83.23 கோடி செலவில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் காவிரி டெல்டா பகுதிகளில், தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் 48 பாலங்கள் கட்டுவதற்கும், மற்ற மாவட்டங்களில் 7 பாலங்கள் கட்டுவதற்கும் மற்றும் 417 கி.மீ நீளமுள்ள 139 கரும்புச் சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்துவதற்கும் அரசு ஒப்புதல் அளித்தது.

இவற்றில் இதுவரை 37 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட பாலப் பணிகள் தவிர மீதமுள்ள 13 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை நடப்பாண்டில் முடிக்கப்படும். மேலும் 368.12 கி.மீ நீளமுள்ள 127 சாலைப் பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் நீக்கப்பட்ட பணிகளைத் தவிர எஞ்சிய 46.26 கி.மீ நீளமுள்ள 10 சாலைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இவையும் நடப்பாண்டில் முடிக்கப்படும். நடப்பாண்டில் இப்பணிகளுக்கு ரூ.9.12 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 121.50 கோடி மதிப்பில் 4 பாலப் பணிகளுக்கு நபார்டு வங்கியின் நிதியுதவி கோரி முன் மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. அவற்றுக்கு ஒப்புதல்பெற்றுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.



## 13. மாநில அரசின் நிதி உதவிமூலம் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேம்பாடு செய்தல்:

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் மண் மற்றும் கப்பிச் சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.100 கோடி மதிப்பில் 1,456 கி.மீ நீளச் சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றில் 1,367 கி.மீ நீளச் சாலைப் பணிகள் ரூ.88.74 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 89 கி.மீ நீளச் சாலைப் பணிகளும், ஒரு பாலப் பணியும் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் நடப்பாண்டில் முடிக்கப்பட்டுவிடும்.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்கு நிலுவையில் உள்ள பணிகளுக்கு மட்டும் ரூ.7 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் சுனாமி அவசர கால உதவித் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் சுனாமி தாக்கிய கடலோர மாவட்டங்களாகிய திருவள்ளூர், கடலூர் மற்றும் நாகப்பட்டினத்தில் 5 பெரிய பாலப் பணிகளை ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் ரூ.42.70 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ஆலோசகர்கள்மூலமாகச் செய்து முடிக்கப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதல்பெற்று தற்போது அனைத்துப் பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. நடப்பாண்டில் இப்பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளபடும்.

மேலும், கடலூர் மாவட்டத்தில் கிழக்குக் கடற்கரையையொட்டி ஆலப்பாக்கத்திலிருந்து திருச்சோபுரம், பெரியகுப்பம், புதுக்குப்பம், சின்னூர் மற்றும் பரங்கிப்பேட்டை வழியாக அண்ணன்கோவில் வரை செல்லும் 21.4 கி.மீ நீளமுள்ள புதிய சாலைப் பணிக்கு ரூ.12 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.41 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15. பொது – தனியார் பங்கேற்புமூலம் சாலை மேம்பாடு:

கடந்த ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் சாலைத் திட்டங்களுக்கு, தேவைக்கும் குறைவாகவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்துள்ளது. இதனால் மேம்பாட்டுப் பணிகள், கால முறைப் பராமரிப்புப் பணிகள்,

மற்றும் வலுப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதில் பாதிப்பு ஏற்பட்டது மட்டுமின்றி, தற்போதுள்ள சாலைக் கட்டமைப்பைத் தொடர்ந்து நல்ல நிலையில் பராமரிப்பதிலும் பெருத்த சிரமம் ஏற்பட்டது. தற்போது பராமரிப்புப் பணிகளுடன் மேம்பாட்டுப் பணிகளையும், புறவழிச் சாலை அமைத்தல்போன்ற பணிகளையும் ஒரே நோத்தில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் முக்கியச் சாலை மேம்பாட்டில் தனியார் பங்களிப்பையும் நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

முதல் கட்டமாக, கோவையில் புறவழிச் சாலை அமைத்தல், சென்னை அருகே காரனோடையில் உயர்மட்டப் பாலம் கட்டுதல் போன்ற பணிகள், கட்டுதல், இயக்குதல், ஒப்படைத்தல் (BOT) அடிப்படையில் தனியார் பங்கேற்புடன் செய்து முடிக்கப்பட்டுள்ளன. பின்னர், சென்னை முதல் பாண்டிச்சேரி வரையிலான கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகள், தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணியும், கட்டுதல், இயக்குதல், ஒப்படைத்தல் (BOT) அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிலும் புதிய சாலைகள் மற்றும் பாலப் பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ளன.

## 16. இரயில்வே மேல்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல்:

அரசுச் சாலைகளில் ஒரு நாளைக்கு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இரயில்-வாகன அலகுகள் (TVU) உள்ள இடங்களில் இருப்புப் பாதை குறுக்கிடும் பகுதியில் இரயில்வே மேல்/கீழ்ப் பாலங்கள் கட்டும் பணி முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இரயில்வே பணித் திட்டத்தின்கீழ் இப்பணிகளுக்கு அணுகுச் சாலைகள் உட்பட இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்கு ஆகும் செலவை மாநில அரசும், மைய அரசின் இரயில்வே அமைச்சகமும் சமமாகப் பகிர்ந்துகொள்கின்றன.

1999 முதல் 2005 வரை உள்ள 6 ஆண்டுகளில் 17 இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவற்றில் மார்ச் 2006 வரை 9 இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் முடிக்கப்பட்டன. மேலும், 4 இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் 2006-2007 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. பிற பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.



மேலும், 2006-2007 ஆம் ஆண்டில் 25 இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு ஆலோசகர்மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இவ்வறிக்கைகள் பெறப்பட்டபின் ஒப்பந்தப்புள்ளி கோரி, பணிகள் துவங்கப்படும்.

தவிர, மாநில அரசு கேட்டுக்கொண்டவாறு 2007-2008 ஆம் ஆண்டில் 39 இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் இரயில்வே பணித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றை முன்னுரிமை அடிப்படையில் கட்டுவதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இப்பணிகளுக்கு நடப்பாண்டில் ரூ.171.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 17. உள்வட்டச் சாலை / ஆரச் சாலைகள்:

### 17.1. சென்னை உள்வட்டச் சாலை

சென்னை நகரின் தென் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்பொருட்டு 9.4 கி.மீ நீளத்தில் தெற்கு உள் வட்டச் சாலை அமைக்க அரசு ஒப்புதல் அளித்தது. 4.40 கி.மீ நீளச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 5 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் நில எடுப்புப் பணிகளில் ஏற்பட்ட தாமதத்தால் மேற்கொள்ளப்பட இயலவில்லை. தற்போது நில எடுப்பு முடிந்து சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு பாலப் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் கட்டுமானப் பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்பணிகளுக்கு நடப்பாண்டில் ரூ.12.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 17.2. மதுரை ஆரச் சாலைகள்

மதுரையைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளை இணைக்கும் சாலைகளை மேம்படுத்துவதற்காக ஹட்கோ வங்கி நிதியுதவியுடன் 123.20 கி.மீ நீளமுள்ள 12 சாலைகள், ஒரு இரயில்வே மேம்பாலம் மற்றும் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு முதல் கட்டமாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவற்றில் எல்லீஸ் நகர் இரயில்வே

மேம்பாலம் தவிர அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன. எல்லீஸ் நகர் இரயில்வே மேம்பாலப் பணியை நடப்பாண்டில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசு சென்ற ஆண்டு அறிவித்தவாறு, இதன் 2 ஆம் கட்டமாக ரூ. 70.6 கோடி மதிப்பில் 123.20 கி.மீ நீளமுள்ள 11 சாலைகளை மேம்பாடு செய்யவும் அரசு ஒப்புதல் அளித்தது. இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. விரைவில் வேலை உத்தரவு வழங்கி, பணிகள் துவங்கப்படும்.

நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.41.83 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 18. ஹட்கோ நிதியுதவித் திட்டங்கள்:

2003-2004 ஆம் ஆண்டில் ரூ.60 கோடி மதிப்பில் ஹட்கோ நிதியுதவியுடன் 61 பாலங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் 48 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் நீக்கப்பட்ட பாலப் பணிகள் தவிர, எஞ்சிய 8 பாலப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இவை நடப்பாண்டில் முடிக்கப்படும்.

நடப்பு நிதியாண்டில் இப்பணிகளுக்கு ரூ.2.80 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 19. கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம்:

கரும்பு ஆலைகளிலிருந்து பெறப்படும் தீர்வையைப் (Cess Fund) பயன்படுத்தி, கரும்பு விளையும் பகுதிகளிலிருந்து ஆலைகளுக்குச் சாலைகள் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2004-2005 ஆம் ஆண்டில் ரூ. 10.98 கோடியில் 63.32 கி.மீ. நீள 27 கரும்புச் சாலைகளை அமைக்கவும், 4 பாலங்களை கட்டவும் அனுமதி வழங்கப்பட்டது. அவற்றில் இதுவரை 53.65 கி.மீ. நீள 24 சாலைப் பணிகளும், ஒரு பாலப் பணியும் முடிக்கப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட பணிகள் தவிர எஞ்சிய ஒரு சாலைப் பணியும், 3 பாலப் பணிகளும் இந்த நிதியாண்டில் முடிக்கப்படும்.

மேலும், 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 24.78 கோடியில் 148.85 கி.மீ நீள 78 சாலைகளை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 70 பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. இவை தவிர, பராமரிப்பு நிதியின்மூலம் 270 கி.மீ நீள 198 சாலைகளில் தனி/கால முறைப் பழுதுபார்த்தல் பணிகள் சென்ற ஆண்டில் செய்யப்பட்டுள்ளன.



## 20. தேசிய நெடுஞ்சாலைகள்:

மாநிலத் தலைநகரங்கள், பெரும் துறைமுகங்கள், பெரிய தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகியவற்றை இணைக்கும்வண்ணம் தேசிய நெடுஞ்சாலைகள் அமைந்துள்ளன. தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 4,483 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளில் 3,239 கி.மீ. நீளச் சாலைகளை, அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகளை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) மேற்கொண்டுள்ளது. எஞ்சியுள்ள 1,244 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகளில் மைய அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியினைக்கொண்டு மேம்பாடு, பராமரிப்பு மற்றும் புதுப்பிக்கும் பணிகளை இத்துறை மேற்கொள்கிறது.

தேசிய நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தும் பணிகளுக்கு தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறது. இப்பணிகளுக்கு 1-4-2002 முதல் 1-4-2006 வரை 549.12.20 எக்டேர் நிலம் மட்டுமே கையகப்படுத்தப்பட்டது. இந்த அரசின் தீவிர முயற்சியால் கடந்த ஓர் ஆண்டில் மட்டும் 897.65.48 எக்டேர் நிலம் கையகப் படுத்தப்பட்டுள்ளது. தற்போது பணி நடைபெறும் 1,947 கி.மீ. நீளச் சாலைப் பகுதியில் இதுவரை 1,147 கி.மீ. பகுதியில் நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்து விட்டது. எஞ்சிய பகுதிகளிலும் நில எடுப்பு விரைவில் முடிக்கப்படும்.

தவிர, இச்சாலைகளில் உள்ள மின் கம்பங்கள், கேபிள்கள், குடிநீர்க் குழாய்கள் முதலியவற்றையும் மாற்றியமைக்க மாநில அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கின்றது.

மேலும், தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் செயல்படுத்தப்படும் 14 தொகுப்புகளில் 12 தொகுப்புகளுக்கு மாநில அரசு, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மற்றும் ஒப்பந்தக்காரர் இடையேயான மாநில அரசின் உறுதுணை ஒப்பந்தம் (State Support Agreement) கையெழுத்திடப்பட்டுள்ளது. இதில் தே.நெ. 7-ல் 6 தொகுப்புகளும், தே.நெ.45-ல் 3 தொகுப்புகளும், மற்றும் தே.நெ.45பி, தே.நெ. 47, தே.நெ. 67-ல் தலா ஒரு தொகுப்பும் அடங்கும். மீதமுள்ள இரண்டு தொகுப்புகளுக்கும் விரைவில் கையெழுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசின் இத்தகைய சீரிய முயற்சியின் காரணமாக தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்படும் சாலைப் பணிகள் தற்போது மிகவும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

[2007 ஏப்ரல் 24

## 20.1. தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் (NHDP)

தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டங்களான தங்க நாற்கரத் திட்டம், வடக்கு-தெற்குப் பகுதி இணைப்புத் திட்டம், துறைமுக இணைப்புத் திட்டம், இதர திட்டங்கள் மற்றும் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் பகுதி 3-ன்கீழ் தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழிப் பாதைகளாக மாற்றும் பணிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றின் விவரம் பின்வருமாறு:

### (அ) பகுதி–1: தங்க நாற்கரத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், தேசிய நெடுஞ்சாலை எண் 4, 5, 7 மற்றும் 46-ல் மொத்தம் 342 கி.மீ. நீளச் சாலைகள் ரூ. 1,193 கோடி மதிப்பீட்டில் நான்கு வழிப் பாதையாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அதில், 338 கி.மீ. நீளத்திற்குப் பணிகள் முடிவடைந்துள்ளன. தே.நெ. 4-ல் மதுரவாயல்-வேலப்பன்சாவடி சந்திப்புப் பகுதியில் (கி.மீ. 11.0-18.0)-ல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### (ஆ) பகுதி–2: வடக்கு–தெற்குப் பகுதி இணைப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் தே.நெ. 7 மற்றும் 47-ல் (சேலம்-கொச்சின் பகுதி) மொத்தம் 756 கி.மீ. நீளச் சாலைகள் ரூ. 4,011 கோடி மதிப்பீட்டில் நான்கு வழிப் பாதையாக மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில், 34 கி.மீ. நீளச் சாலையில் பணிகள் முடிவடைந்துள்ளன. 722 கி.மீ. சாலையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### (இ) துறைமுக இணைப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் தே.நெ. 7A-ல் (பாளையங்கோட்டை-தூத்துக்குடி சாலை) 47 கி.மீ. நீளச் சாலைப் பகுதி ரூ. 231 கோடி மதிப்பீட்டில் நான்கு வழிப் பாதையாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. இச்சாலைப் பணிகள் மார்ச் 2008-க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், சென்னை-எண்ணூர் துறைமுக இணைப்புத் திட்டமும் (Ennore-Manali Road Improvement Project) தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த "சென்னை-எண்ணூர் துறைமுகச் சாலை நிறுவனம்" என்ற பெயரில் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உள்வட்டச்



2007 ஏப்ரல் 24]

சாலையின் வடக்குப் பகுதி, மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைச் சாலை, திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலை மற்றும் எண்ணூர் விரைவுச் சாலை ஆகியவற்றை மாநில அரசு இத்திட்டத்திற்காக ஒப்படைத்துள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.309 கோடி ஆகும்.

இத்திட்டத்தில் பின்வரும் பணிகள் அடங்கும்:

- ❖ எண்ணூர் விரைவுச் சாலையில் கடல் அரிப்புத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.
- ❖ தற்போதுள்ள எண்ணூர் விரைவுச் சாலையினை இரு புறமும் 7.5 கி.மீ நீளத்திற்கு 4 வழித்தடச் சேவைச் சாலைகளுடன் சாலையாக அகலப்படுத்துதல்.
- ❖ திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலையை (9.0 கி.மீ.) மேம்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல். (TPP road)
- ❖ மணலி எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை (5.4 கி.மீ.) மற்றும் உள்வட்டச் சாலையினை (8.10 கி.மீ. ) வலுப்படுத்துதல்

மேற்கண்ட பணிகளில் கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எண்ணூர் விரைவுச் சாலைப் பணிகளை மேற்கொள்வதற்கு முன்னர் இச்சாலைப் பகுதிகளில் உள்ள 1,824 குடியிருப்புகளுக்கு மாற்றுக் குடியிருப்புகள் கட்டும் பணி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிகள் டிசம்பர் 2007-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர், சாலைப் பணிகள் துவங்கப்படும். திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இச்சாலையை அகலப்படுத்துவதற்காக நிலம் கையகப்படுத்துவதற்கு அரசின் பங்காக ரூ.8.92 கோடி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதர சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

### (ஈ) இதர திட்டங்கள்

தேசிய நெடுஞ்சாலை 45-ல் தாம்பரம்-திண்டிவனம் பகுதியில் 93 கி.மீ. சாலை நான்கு வழிப் பாதையாக 2004-2005-ல் அகலப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக திண்டிவனம்-திருச்சி பகுதியில் 204 கி.மீ. நீளச் சாலைப் பகுதியை நான்கு வழிப் பாதையாக அகலப்படுத்தும் பணிகள் ரூ. 1,260 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

மேலும் தே.நெ. 45பி-ல் திருச்சி-மதுரைப் பகுதியில் 125 கி.மீ. நீளச் சாலையை நான்கு வழிப் பாதையாக மாற்றும் பணிகள் ரூ. 420 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

## 20.2. தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம்—பகுதி—3

இத்திட்டத்தின்கீழ் 1,476 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகள் நான்கு வழிப் பாதையாக அகலப்படுத்தும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்கீழ் அமைத்தல், நிர்வகித்தல், ஒப்படைத்தல் (BOT) எனும் முறையில் மேற்கொள்ளப்படவுள்ளன. இப்பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:

### (அ) பணிகள் நடைபெற்று வரும் சாலைப் பகுதிகள்

தே.நெ. 45பி-மதுரை-அருப்புக்கோட்டை-தூத்துக்குடி -128 கி.மீ.

### (ஆ) பணிகள் ஒப்படைக்கப்பட்டவை

- தே.நெ. 67-தஞ்சாவூர்-திருச்சி-56 கி.மீ.

### (இ) ஒப்பந்த நிலையில் உள்ளவை

- தே.நெ. 45-திண்டுக்கல்-திருச்சி-(80 கி.மீ.)
- தே.நெ. 67-திருச்சி-கரூர்-(81 கி.மீ.)
- தே.நெ. 68-சேலம்-ஆத்தூர்-உளுந்தூர்பேட்டை-(134 கி.மீ.)
- தே.நெ. 66-தமிழ்நாடு-பாண்டிச்சேரி எல்லை-திண்டிவனம்-(36 கி.மீ.)

### (ஈ) விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளவை

- தே.நெ. 45-விரிவு-திண்டுக்கல்-பெரியகுளம்-தேனி-(73 கி.மீ.)
- தே.நெ. 220-தேனி-குமுளி-(57 கி.மீ.)
- தே.நெ. 49-மதுரை-இராமேஸ்வரம்-தனுஷ்கோடி- (180 கி.மீ.)
- தே.நெ. 67-நாகப்பட்டினம்-தஞ்சாவூர்-(80 கி.மீ.)
- தே.நெ. 67-[illegible]த்தூர்-மேட்டுப்பாளையம்-(45 கி.மீ.)
- தே.நெ. 66-கிருஷ்ணகிரி-திருவண்ணாமலை-திண்டிவனம்-(170 கி.மீ.)



- தே.நெ. 47-கேரளா / தமிழ்நாடு எல்லை-கன்னியாகுமரி-(56 கி.மீ.)
- தே.நெ. 205-தமிழ்நாடு / ஆந்திரா எல்லை-திருத்தணி-சென்னை-(94 கி.மீ.)
- தே.நெ. 210-திருச்சி-காரைக்குடி-இராமநாதபுரம்-(200 கி.மீ.)

இவை தவிர, கோவை-ஊட்டி-கூடலூர் (தே.நெ. 67 விரிவு) சாலையானது தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், கோவை மாநகர எல்லைக்குள் விடுபட்ட 12 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலை 67-ன் சாலைப் பகுதியை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைத்து மேம்படுத்துமாறு மைய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 20.3. சென்னை புறவழிச் சாலை

சென்னை புறவழிச் சாலைக் கட்டுமானப் பணியின் முதற்கட்டமாக கடந்த 2002 ஆம் ஆண்டில் தாம்பரம் முதல் மதுரவாயல் வரை 19 கி.மீ. நீளத்தில் இரு வழித் தடச் சாலை அமைக்கப்பட்டது. தற்போது, 2 ஆம் கட்டமாக இச்சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தவும், சேவைச் சாலைகள் அமைக்கவும், மதுரவாயல் (தே.நெ. 4) முதல் புழல் (தே.நெ. 5) வரை 13 கி.மீ. நீளத்திற்குப் புதிய சாலை அமைக்கவும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் ரூ. 405 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 20.4. சென்னையில் அடுக்குப் பாலம் மற்றும் மேம்பாலம் அமைத்தல்

கத்திப்பாரா சந்திப்பு, கோயம்பேடு சந்திப்பு, பாடி சந்திப்பு மற்றும் சென்னை விமான நிலைய முகப்புப் பகுதி ஆகிய நான்கு இடங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் அடுக்குப் பாலம் மற்றும் மேம்பாலங்கள் கட்டுதல்போன்ற பணிகளை ரூ. 196 கோடி மதிப்பில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மேற்கொண்டுள்ளது. கோயம்பேடு முதல் மதுரவாயல் வரையிலான 4 கி.மீ. நீளச் சாலைப் பகுதியினை நான்கு வழித்தடங்கள்கொண்ட சாலையாக அகலப்படுத்தி, சாலையின் இரு புறமும் சேவைச் சாலைகளை அமைக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன.

கத்திப்பாரா சந்திப்பு, பாடி சந்திப்பு மற்றும் சென்னை விமான நிலைய மேம்பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோயம்பேடு பாலம் அமைக்கும் பணிக்கான முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 20.5. புதிதாக அறிவிக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்பு

புதிதாக அறிவிக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளான தே.நெ. 226 (தஞ்சாவூர்-மானாமதுரை சாலை) மற்றும் தே.நெ. 227 (திருச்சி-சிதம்பரம் சாலை) ஆகியவை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### 20.6. பிற தேசிய நெடுஞ்சாலைகள்—திட்டம் மற்றும் பராமரிப்புப் பணிகள்

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 4,183 கி.மீ. ஆகும். இதில் 1,244 கி.மீ. நீளச் சாலைகள் மைய அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியினைப் பயன்படுத்தி மாநில அரசின் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவின்மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 98.58 கோடி மதிப்பில் 18 பணிகளுக்கு மைய அரசு ஒப்புதல் வழங்கியது. இப்பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

புறவழிச் சாலைகளுக்கான கருத்துருக்கள்:

- தேசிய நெடுஞ்சாலை 49 விரிவில் உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, போடி நகரங்களுக்குப் புறவழிச் சாலை அமைப்பதற்கான நேர்ப்பாடு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு நில எடுப்பு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.
- சில புறவழிச் சாலைகளுக்கான சாத்தியக்கூறு மற்றும் விரிவான தொழில்நுட்ப ஆய்வுப் பணிக்கு மதிப்பீடு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவை

  -சேத்தூர் புறவழிச் சாலை (தே.நெ. 208)

  -சொக்கம்பட்டி புறவழிச் சாலை (தே.நெ. 208)

  -மதுரை புறவழிச் சாலை

  -பொள்ளாச்சி புறவழிச் சாலை (தே.நெ. 209)



- தேசிய நெடுஞ்சாலை 209-ல் உடுமலைப்பேட்டை புறவழிச் சாலை அமைக்க நில எடுப்பு மதிப்பீடு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
- பாண்டிச்சேரி புறவழிச் சாலை அமைப்பதற்கான நில எடுப்புக் கருத்துரு, நில நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்டவுடன் தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம், 2001, பிரிவு 15 (1)-ன் கீழ் அறிவிக்கை வெளியிடப்படும். நில எடுப்பு முடிவடைந்த பின் புறவழிச் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

இவை தவிர,

- தேசிய நெடுஞ்சாலை 208-ல் கி.மீ. 227/10-ல் கவுண்டா ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைப்பதற்கான நில எடுப்பு மதிப்பீடு ரூ.5.38 இலட்சத்திற்கு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும், கட்டுமானப் பணிகளுக்கான மதிப்பீடு ரூ. 338 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
- தேசிய நெடுஞ்சாலை 209-ல் கி.மீ. 151/4-ல் ஈச்சனாரியில் இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு மற்றும் விரிவான தொழில்நுட்ப ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது.
- பழுதடைந்த நிலையிலுள்ள 15 சிறு பாலங்களைத் திரும்பக் கட்டுவதற்கான ரூ. 1,422 இலட்சத்திற்கான மதிப்பீடுகளில், ரூ. 779 இலட்சத்திற்கு 11 மதிப்பீடுகளுக்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மீதமுள்ள 4 மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், நடப்பு நிதியாண்டில் திட்டப் பணிகளுக்காக மைய அரசிடமிருந்து சுமார் ரூ.90 கோடி நிதி ஒதுக்கீடு எதிர் பார்க்கப்படுகிறது.

## 21. மத்திய சாலை நிதித் திட்டம் (CRF):

2000 ஆம் ஆண்டில் பெட்ரோல் மற்றும் டீசல்மீதான சிறப்புத் தீர்வை விதிப்பதன்மூலம் கிடைக்கப்பெறும் நிதியைப் பயன்படுத்தி மத்திய சாலை நிதியினை மைய அரசு ஏற்படுத்தியுள்ளது.

இந்நிதியிலிருந்து 2001 முதல் 2005 வரை ரூ. 118.31 கோடி மதிப்பிலான 552 பணிகளுக்கு மத்திய அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டது. இதில் 543 பணிகள் செய்து முடிக்கப்பட்டன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2005-2006 ஆம் ஆண்டில் ரூ. 36.36 கோடி மதிப்பில் 19 பணிகளுக்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு இப்பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன. மேலும், 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 113.80 கோடி மதிப்பில் 67 பணிகளுக்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நடப்பு ஆண்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 125 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 22. பிற திட்டங்கள்:

### 22.1. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தில் ஈரோடு, கோயமுத்தூர், திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய எட்டு மாவட்டங்களில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. 2006-2007-ல் ரூ. 102.80 இலட்சத்திற்கு 16 பணிகள் மேற்கண்ட எட்டு மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றன. மேலும், 2007-2008 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.107 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 22.2. பொருளாதாரம் மற்றும் அண்டை மாநில இணைப்புச் சாலைத் திட்டம்

பொருளாதாரம் மற்றும் அண்டை மாநிலங்களுக்கு இடையேயான முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தில் (Economic and Inter, State Connectivity Scheme) ரூ.16.91 கோடி மதிப்பீட்டில் பாலாற்றின் குறுக்கே பழைய பாலாறு சாலையில் கி.மீ.0/0-1/4-ல் உள்ள பாலத்திற்குப் பதிலாக புதிய நான்கு வழிப் பாலம் அமைக்க மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. மேலும், இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் 69.8 கி.மீ. நீளமுள்ள சாலையினை மேம்பாடு செய்ய ரூ. 23.38 கோடி மதிப்பிலான கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.



## 23. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்–III (TNUDP-III):

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ் சென்னையிலும் மற்றும் புறநகர்ப் பகுதிகளிலும் 148.87 கி.மீ. நீளத்திற்கு ரூ. 330 கோடி மதிப்பில் 19 சாலைப் பணிகளும், ரூ. 154.19 கோடி மதிப்பில் 9 சாலை மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்களும், ரூ. 4.60 கோடி மதிப்பில் 3 சுரங்க நடைபாதைகளும் மற்றும் ரூ. 200 கோடி மதிப்பில் 3 மேம்பாலங்களும் சேர்த்து மொத்தம் ரூ. 688.79 கோடி மதிப்பிலான பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 19 சாலைப் பணிகளில் 2 பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கைகளுக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் 2 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மீதமுள்ள 11 பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கைகளுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தவிர, 4 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

உலக வங்கியின் விதிமுறைகளின்படி இத்திட்டங்களால் பாதிக்கப்படுவோர்க்கு மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வுப் பணிகளை (Resettlement and Rehabilitation) நிறைவேற்றுவதுடன், சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளையும், நில எடுப்புப் பணிகளையும் முடிக்க வேண்டியுள்ளதால், இத்திட்டத்தின் செயலாக்கத்தில் சுணக்கம் ஏற்பட்டது. ஆனால், இதற்கான சிறப்புச் செயலாக்கப் பிரிவுகளை (PIU) அரசு ஏற்படுத்தி, பணிகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 24. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்:

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் மொத்தம் ரூ. 2,160 கோடி மதிப்பில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதில் உலக வங்கியின் கடனுதவி ரூ. 1,670 கோடி; தமிழ்நாடு அரசின் பங்கு ரூ.490 கோடி ஆகும். 2003-2004 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் செயலாக்க காலம் மார்ச், 2009 வரையாகும்.

இத்திட்டம் மூன்று முக்கிய அம்சங்களைக்கொண்டதாகும்.

- 11 மாவட்டங்களை இணைக்கும் வகையில் 742 கி.மீ. நீளச் சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் தரம் உயர்த்துதல்.

- மாநிலச் சாலைகள் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளில் 2,000-கி.மீ.-ல் சிறப்புப் பராமரிப்பு மற்றும் சாலைப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்.
- நெடுஞ்சாலைத் துறையின் அமைப்புகளைப் பலப்படுத்துதல் மற்றும் செயல் திட்டங்களை அமல்படுத்துதல்.

## 24.1. சாலை மேம்பாடு மற்றும் தரம் உயர்த்துதல்

மொத்தம் சுமார் 742 கி.மீ. சாலைகளை 5 தொகுப்புகளாகப் பிரித்து, அவற்றுள் 4 தொகுப்புகளில் பன்னாட்டு ஒப்பந்தம் கோரப்பட்டு, உலகத் தர அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொகுப்புகளில் அடங்கியுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:

**தொகுப்பு-1:** ஆற்காடு முதல் திருவாரூர் வரை மற்றும் 9 புறவழிச் சாலைகள் (ஆரணி, போளூர், திருவண்ணாமலை, திருக்கோயிலூர், விருத்தாசலம், அரியலூர், திருவாரூர், சிதம்பரம் மற்றும் சீர்காழி) மற்றும் போளூர் - செங்கம், ஜெயங்கொண்டம் - அரியலூர் சாலைப் பகுதிகள் - 393 கி.மீ., மதிப்பு ரூ.611.70 கோடி.

**தொகுப்பு-2:** நாகப்பட்டினம் முதல் கட்டுமாவடி வரை மற்றும் 3 புறவழிச் சாலைகள் (முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம்) - 116.60 கி.மீ., மதிப்பு ரூ.198.77 கோடி.

**தொகுப்பு-3:** கட்டுமாவடி முதல் இராமநாதபுரம் வரை-99.80 கி.மீ., மதிப்பு ரூ.143.40 கோடி.

**தொகுப்பு-4:** இராமநாதபுரம் முதல் தூத்துக்குடி வரை-117.90 கி.மீ. மதிப்பு ரூ.119 கோடி.

**தொகுப்பு-5:** கும்பகோணம் மற்றும் இராமநாதபுரம் புறவழிச் சாலைகள்-15கி.மீ. நீளம், மதிப்பு ரூ.51.45 கோடி. விரிவான திட்ட அறிக்கை ஆலோசகர்கள்மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கை கிடைக்கப்பெற்றபின் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, பணிகள் மேற்கொள்ளப்படும்.

### திட்டச் செயலாக்கம்:

சாலை தரம் உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளும்போது பாதிக்கப்படுபவர்களுக்காக மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுத் திட்டங்கள், உலக வங்கியின் விதிமுறைகளுக்குட்பட்டு, அரசுசாரா



நிறுவனங்கள்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றுச்சூழல் திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. நில எடுப்புப் பணிகள் பெரும்பாலும் நில உரிமையாளர்களிடம் பேச்சுவார்த்தைமூலம் மேற்கொள்ளப்படுகின்றன. பேச்சுவார்த்தைமூலம் முடியாத நில எடுப்புப் பணிகளுக்கு மட்டும் தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001-ன்படி கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்குத் தேவைப்படும் மொத்தம் 391.25 எக்டேர் நிலப்பரப்பில் மார்ச், 2007 வரையிலும் 337.96 எக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு வரை 30.6% பணிகள் முடிக்கப்பட்டு, ரூ.661 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**பாலங்கள் கட்டுதல்:** மொத்தம் 84 சிறு பாலங்கள், 44 பெரிய பாலங்கள் மற்றும் 9 இரயில்வே மேம்பாலங்கள் கட்டப்படவுள்ளன. (போளூர், விருத்தாசலம், அரியலூர், சீர்காழி, நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை ஆகிய இடங்களில் தலா ஒரு இரயில்வே மேம்பாலம், திருவண்ணாமலையில் இரண்டு இரயில்வே மேம்பாலங்கள்).

## 24.2. சிறப்பு சாலைப் பராமரிப்புப் பணிகள்

நான்கு ஆண்டுகளில் சுமார் 2,000 கி.மீ. நீளச் சாலைகள் சிறப்புப் பராமரிப்பு செய்யப்படவுள்ளன. இவற்றுள், 2004-2005-ல் மாநில மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகள் 634 கி.மீ. நீளத்தில் 15 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு, பராமரிப்புப் பணிகள் ரூ.242.55 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 14 தொகுப்புகள் முடிவடைந்துள்ளன. முடிவடையாத ஒரு தொகுப்பு மட்டும் 2 ஆம் ஆண்டுப் பணிகளில் சேர்க்கப்பட்டு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது.

இரண்டாம் ஆண்டிற்கான பராமரிப்புப் பணிகள் 274 கி.மீ. நீளத்தில் 12 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு ரூ.109.47 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 8 தொகுப்புகளுக்குப் பணிகள் துவங்கி நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 4 தொகுப்புகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மூன்றாம் ஆண்டிற்கான பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கான சாலைகளைத் தெரிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 24.3. விபத்துப் பகுதிகள் – பாதுகாப்பு நடவடிக்கைகள்

தமிழகத்தில் மொத்தம் 300 விபத்துப் பகுதிகள் கண்டறியப்பட்டன. அவற்றுள் 50 விபத்துப் பகுதிகளில் முதற்கட்டமாக மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டன. இவற்றில் 4 பகுதிகளுக்கான பணிகள் ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. 18 பகுதிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரி, பணிகளைத் துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பிற பகுதிகளில் நில எடுப்பு மற்றும் ஆயத்தப் பணிகள் முடிந்தபின் மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். இதில் சில பகுதிகளை மாநில அரசின் நிதியுடன் மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 24.4. சாலைப் பாதுகாப்பு

சாலைப் பாதுகாப்பை மேம்படுத்த தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

- ❖ விபத்து பற்றிய தகவல்களைத் துல்லியமாகக் கணக்கிட்டு, நவீன முறையில் சம்பந்தப்பட்ட துறைகளினை பேர் பரிமாற்றம் செய்து செயல்பட, சாலை விபத்துப் புள்ளிவிவர மேலாண்மைத் திட்டம் கணினிமூலம் செயல்படுத்துதல்.
- ❖ சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை மேம்படுத்தக் காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறையுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் தொகுப்புப் பகுதியில் விழிப்புணர்வு இயக்கம் உருவாக்குதல்.
- ❖ நெடுஞ்சாலைத் துறைப் பொறியாளர்களுக்கு சாலைப் பாதுகாப்பு திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தப் பயிற்சி அளித்தல்.
- ❖ சாலைப் பாதுகாப்புக் கொள்கை தயாரித்து, அதனை விளம்பரப்படுத்திச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

## 24.5. தகவல் தொழில்நுட்பத் திட்டத்தின் பயன்பாடு

இத்துறையின் செயலாக்க அமைப்புகளை வலுப்படுத்தத் தேவையான கணிப்பொறிகளைக்கொண்டு ஒரு வலுவான தகவல் தொழில்நுட்பப் பிரிவு துறையின் ஒவ்வொரு அலகிலும் அமைக்கப்படவுள்ளது. மேலும், ஒவ்வொரு நிலப் பகுதிக்கும் ஏற்றாற்போல் செய்தி சேகரிக்கும்வண்ணம் புவியியல் தகவல் தொழில்நுட்பம் (GIS) பயன்படுத்தப்பட்டுள்ளது.



## 24.6. சாலை மேலாண்மை

சாலை மேலாண்மை அமைப்பை முறைப்படுத்த ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிய சாலை மேலாண்மை அமைப்பானது, சாலைகள், பாலங்கள், போக்குவரத்து பற்றிய அனைத்து விவரங்களையும் அடக்கியதாக இருக்கும்.

இந்த அமைப்பு, சாலைகளின் நிலை பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், சாலைகளை முன்னுரிமை அடிப்படையில் மேம்பாட்டுப் பணிகளுக்காகத் தெரிவு செய்யவும் பயன்படும்.

## 24.7. சாலைப் பயன்பாட்டாளர்களின் கருத்தாய்வு

சாலைகளின் தரம் மற்றும் நிலை குறித்துக் கணிக்க, சாலைகளைப் பயன்படுத்துவோரிடம் மாநிலம் முழுவதும் கருத்தாய்வு நடத்தப்பட்டது. இவ்வாய்வு முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வின் அடிப்படையில் எதிர்காலத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டுத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான நெடுஞ்சாலை பயன்படுத்துவோர் அடங்கிய ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. சாலைப் பயன்பாட்டாளர்களின் முதல் கருத்தரங்கினை 26-2-2007 அன்று சென்னையில் நடத்தி, பயன்படுத்துவோரின் கருத்துகள் பெறப்பட்டுள்ளன. சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும்போது பயன்பாட்டாளர்களின் கருத்துகளையும் கவனத்தில்கொண்டு செயல்படுத்தப்படும்.

## 25. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள்:

சென்னையிலுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, 50 ஆண்டுகளாகத் தனது ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை முடிவுகள்மூலம் நெடுஞ்சாலைத் துறைக்குத் தேவையான பல தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகிறது. இதன் முக்கியப் பணிகள் பின்வருமாறு:

- செயல் முறைசார்ந்த ஆராய்ச்சி
- தொழில்நுட்பப் பயிற்சி
- தரக் கட்டுப்பாடு

மேற்சொன்ன பணிகளுக்காக நான்கு ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன.

### அ. மண் மற்றும் அடித்தளப் பொறியியல் ஆய்வுக் கூடப் பணிகள்

- ➢ கலிபோர்னியா தாங்கு திறன் விகிதம் (CBR) சோதனைமூலம் மண்ணின் உறுதிப்பாட்டைக் கண்டறிதல்
- ➢ மண் துகள்களின் அளவுகள் மற்றும் மண்ணின் இளகும் தன்மை (Atterberg limit) கண்டறிதல்
- ➢ மண் கரையில் மண்ணின் நிலையான ஊடுருவும் சோதனை மூலம் இறுகிய தன்மையைக் கண்டறிதல்
- ➢ பாலங்களுக்கான தூண்களின் தாங்கு திறனைப் பரிசோதித்தல்

### ஆ. கற்கலவை மற்றும் கட்டுமான ஆய்வுக் கூடப் பணிகள்

- ➢ பாலப் பணிகளுக்குத் தேவையான பல்வேறு கட்டுமானங்களின் கலவை விகிதத்தை நிர்ணயித்தல்
- ➢ சிமெண்ட் சோதனை மற்றும் அவற்றின் ஒத்திசைவு தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளுதல்
- ➢ கான்கிரீட் பகுதிகளைச் சேதப்படுத்தாமல் அவற்றின் தரத்தை ஆய்வு செய்தல்

### இ. நிலக்கீல் மற்றும் சரளைக் கற்கள் ஆய்வுக் கூடப் பணிகள்

- ➢ பகுதி-அடர்த்தி (Semi Dense) நிலக்கீல் கான்கிரீட்டின் மற்றும் முழு-அடர்த்தி நிலக்கீல் கான்கிரீட்டின் கலவை விகிதத்தை நிர்ணயித்தல்
- ➢ நிலக்கீலின் ஊடுருவும் சோதனை, இளகும் தன்மை, மீளும் இழுவைத் தன்மை ஆகிய சோதனைகள் மேற்கொள்ளுதல்
- ➢ நிலக்கீல் கான்கிரீட்டின் கலவை விகிதத்தை நிர்ணயித்தல்

### ஈ. போக்குவரத்து மற்றும் போக்குவரவு ஆய்வுக் கூடப் பணிகள்

- ➢ சாலையில் மேடுபள்ளத்தை அறிவதற்கு பம்ப் இண்டிகேட்டர் பரிசோதனை செய்தல்



- ➢ போக்குவரத்து அளவுக் கணக்கெடுப்பு மற்றும் வண்டியின் அச்சு எடைக் கணக்கெடுப்பு ஆகியவற்றின்மூலம் சாலைத் தளத்தின் கனத்தைக் கணக்கிட உதவுதல்

பகுதி-2 திட்டத்தின்கீழ் *2006-2007* ஆம் ஆண்டு ரூ. *46* இலட்சம் மதிப்பில் பின்வரும் நான்கு ஆராய்ச்சிப் பணிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியது:

- ➢ தேசிய நெடுஞ்சாலை (NH) *45*—கி.மீ *0/0-56/0*-ல் விபத்துக்களைத் தவிர்க்கும்பொருட்டு தக்க ஆய்வு செய்தல்.
- ➢ கிழக்குக் கடற்கரைச் சாலையில் (ECR) விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான ஆய்வு மேற்கொள்வது
- ➢ நிலக்கீல் குளிர் கலவையைப் பயன்படுத்தி சாலையில் பள்ளங்களை நிரப்பி, அதன் தன்மையை ஆராய்ச்சி செய்தல்
- ➢ பருவ கால மாறுபாட்டிற்கேற்ப, சாதாரண நிலக்கீல் மற்றும் ரப்பர் கலந்த நிலக்கீலைப் பயன்படுத்திப் போடப்படும் சாலைத் தளத்தின் தன்மையை ஆய்வு செய்தல்

இந்த ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் முடிவுகள் தெரிய *2* ஆண்டு காலம் ஆகும். ஆய்வுகளின் இறுதி அறிக்கைகள் *2008-2009*-ல் சமர்ப்பிக்கப்படும்.

நெடுஞ்சாலைத் துறையால் செயல்படுத்தப்படும் பணிகளிலிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பல்வேறு பரிசோதனைகள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டன. கடந்த ஆண்டில் சாலைப் பணிகள் தொடர்பாக *6,012* பரிசோதனைகளும், பாலம் தொடர்பாக *41* பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. நடப்பாண்டில் சுமார் *7,000* பரிசோதனைகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 25.1. தரக் கட்டுப்பாடு செயல்பாட்டுத் திட்டம்

நெடுஞ்சாலைத் துறையின்மூலம் சாலை மற்றும் பாலப் பணிகளுக்காகப் பெருமளவில் நிதி செலவிடப்படுகிறது. இப்பணிகளின் தரத்தினை உறுதி செய்யவும், முறையாகப் பராமரிக்கவும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் பல ஆய்வுகளை மேற்கொள்கிறது. இதன்மூலம் சாலை மற்றும் பாலங்களின் பயன்பாட்டுத் தன்மையை உறுதிப்படுத்தவும், நீட்டிக்கவும் உதவி வருகிறது.

[2007 ஏப்ரல் 24

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின்கீழ் இயங்கும் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோவை மண்டல ஆய்வகங்கள் மூலமும், 15 உட்கோட்டங்கள்மூலமும் தமிழகமெங்கும் சாலை மற்றும் பாலப் பணிகளில் தரக் கட்டுப்பாடு சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தர நிர்ணய ஆய்வுகள் அவ்வப்போது பரவலாக மேற்கொள்ளப்பட்டு, அதன்மூலம் தரமான வேலைகள் நடைபெறுவதை உறுதி செய்ய முடிகிறது.

## 25.2. தகவல் தொகுப்பு வங்கி

சாலைகள் மற்றும் பாலங்களின் தொழில்நுட்ப விவரங்களையும், பிற விவரங்களையும் உடனடியாக அறிந்துகொள்ளத் தகவல் தொகுப்பு வங்கி உருவாக்கப்பட்டுள்ளது. திட்டப் பணிகளை நிறைவேற்றத் தேவையான அனைத்து விவரங்களும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இதில் 614 பெரிய பாலங்கள், 3,108 சிறு பாலங்கள், மாநிலச் சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் 6,900 இடங்களில் 1999 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட போக்குவரத்துக் கணக்கெடுப்பு விவரங்களைப் பெற்றுக் கணினியில் பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளன. பாலங்களுக்குத் தனிக் குறியீட்டு (unique) எண்ணிட்டு, சீரிய முறையில் பராமரிக்க சிறப்பான செயல் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. 2005 ஆம் ஆண்டு போக்குவரத்துக் கணக்கெடுப்பு விவரங்கள் நிரந்தரக் கோட்டங்களிலிருந்து பெற்றுக் கணினியில் சேமிக்கப்பட்டு வருகிறது.

மாநில நெடுஞ்சாலைகளில் மொத்தம் 159 பெரிய பாலங்கள் மற்றும் 774 சிறு பாலங்கள் உள்ளன. இவற்றில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின்மூலம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் 12 பெரிய பாலங்கள், 69 சிறு பாலங்கள் மறுகட்டுமானம் செய்யப்பட வேண்டியவை எனக் கண்டறியப்பட்டுள்ளன. இவ்விவரங்களைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அனைத்து மாவட்ட முக்கியச் சாலைகளில் பாலம் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

## 25.3. பயிற்சித் திட்டம்

சாலை மற்றும் பாலங்களைத் திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் நவீனத் தொழில் நுட்பங்களைக் களப் பொறியாளர்கள் அறிந்துகொள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் பயிற்சி அளிக்கிறது. தற்போது துறையிலுள்ள



2007 ஏப்ரல் 24]

அனைத்து உதவிக் கோட்டப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், மண், நிலக்கீல், கற்காரை, போக்குவரத்து மற்றும் கணினி ஆகியவற்றில் ஒவ்வொரு மாதமும் 5 நாட்களுக்குத் தரக் கட்டுப்பாடு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## 25.4. புதிய கருவிகள் வாங்குதல்

சாலை மற்றும் பாலப் பணிகள் தொடர்பான அனைத்துப் பரிசோதனைகளையும் மேற்கொள்ளும் வசதி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளது. துறையில் மேற்கொள்ளப்படும் முக்கியப் பணிகளுக்கு தேவைப்படும் நிலக்கீல் மற்றும் கான்கிரீட் கலவைகள், சாலைகளின் அடித்தள வடிவமைப்பு ஆகியன இவ்வாராய்ச்சி நிலையத்தால் நிர்ணயம் செய்யப்படுகிறது. பரிசோதனை மற்றும் தர நிர்ணயத்திற்குத் தேவையான நவீனக் கருவிகள் இந்நிலையத்தில் உள்ளன. இதனை மேலும் மேம்படுத்தும் வகையில் 2007-2008 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பில் நவீனக் கருவிகளை வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 26. ஆய்வு மற்றும் வடிவமைப்பு:

## 26.1. செயல்பாடுகள்

நெடுஞ்சாலைத் துறையிலுள்ள வெவ்வேறு பிரிவுகளின் வாயிலாக நிறைவேற்றப்படும் பாலப் பணிகளுக்கான வடிவமைப்பு, வரைபடங்கள் மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணியை இப்பிரிவு மேற்கொள்கிறது. ஆய்வுப் பிரிவானது, பாலப் பணிகளுக்குத் தேவைப்படும் கள விவரங்களைச் சேகரித்து, மதிப்பீடு தயாரிக்கும் பொருட்டு வடிவமைப்புப் பிரிவிற்கு வழங்குகிறது. அதனடிப்படையில் வடிவமைப்புப் பிரிவு பின்வரும் பணிகளை மேற்கொள்கிறது:

- பல்வேறு திட்டங்களின்கீழ் நிறைவேற்றப்படும் ரூ.2.00 கோடி மதிப்பிற்கு மேற்பட்ட பால வேலைகளுக்கான வடிவமைப்பு, வரைபடங்கள் மற்றும் மதிப்பீடு தயாரித்தல்
- பாலப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளோடு பெறப்படும் உத்தேச மற்றும் விரிவான மாற்று வடிவமைப்பினை ஆய்வு செய்து கருத்துரை/ஒப்புதல் வழங்குதல்

- பாலப் பணிகள் நடைபெறும்போது மண்ணின் தன்மை மாறுபட்டால் பொருத்தமான கடைக்கால் அமைப்புகளை வடிவமைத்துக் கொடுத்தல் மற்றும் பாலங்களின் அமைப்பில் மாற்றம் தேவையெனில் அவற்றுக்கு மாற்று வடிவமைத்தல்
- மிகப் பெரிய கனரக வாகனங்கள் சாலையில் செல்வதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக ஆய்வு செய்து தக்க பரிந்துரை செய்தல்
- பிற துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் நிறைவேற்றப்படும் பால வேலைகளுக்கான வடிவமைப்பினை ஆய்வு செய்து ஒப்புதல் வழங்குதல்
- அரசிடமிருந்து பெறப்படும் குறிப்பிட்ட பணிகளுக்கு வடிவமைப்பு மற்றும் ஆய்வுப் பணிகள் தொடர்பான கருத்துரை வழங்குதல்

## 26.2. வடிவமைப்பில் கணினி மென்பொருட்களின் பயன்பாடு:

பாலப் பணிகளின் கட்டமைப்புப் பகுதிகளான அடித்தளம், தாங்கு தூண்கள், உத்திரங்கள் மற்றும் மேற்கட்டுமானம் ஆகியவற்றிற்கான வடிவமைப்பும், வரைபடங்களும் நவீன மென்பொருட்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

2006-2007 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பாலப் பணிகளுக்கான வடிவமைப்பு மற்றும் மதிப்பீடுகளின் விவரங்கள் பின்வருமாறு:—

| வ. எண் | கட்டமைப்பு | மதிப்பீட்டுத் தொகை | | |
|---|---|---|---|---|
| | | ரூ.100 இலட்சம் முதல் ரூ.500 இலட்சம் வரை | ரூ.500 இலட்சத்திற்கு மேல் | மதிப்பீடுகள்/ பிரேரணைகள்/ வடிவமைப்புகளின் எண்ணிக்கை |
| 1. | இரயில்வே மேம்பாலங்கள் | — | 20 | 20 |
| 2. | ஆற்றுப் பாலங்கள் | 23 | 9 | 32 |
| | மொத்தம் | 23 | 29 | 52 |

இவ்வாறு சென்ற ஆண்டில் சுமார் ரூ.335 கோடி மதிப்புள்ள 52 பாலப் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன.



பணிகளைத் துரிதப்படுத்தும் வகையில் நெடுஞ்சாலைத் துறையின் பொறியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புதிய பணிப் பகிர்மானத்தின்படி ரூ.2.00 கோடி மதிப்பிற்குட்பட்ட பாலப் பணிகளுக்கு வட்ட அளவில் புதிய பாலங்கள்/சாலைகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்படும். ரூ.2.00 கோடி மற்றும் அதற்கு மேற்பட்ட பாலப் பணிகளுக்கு வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகின்மூலம் மேற்கொள்ளப்படும்.

நடப்பு ஆண்டில் தயாரிக்கப்படவிருக்கும் பாலப் பணிகளுக்கான வடிவமைப்புகள், மதிப்பீடுகள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | கட்டமைப்பு | மதிப்பீட்டுத் தொகை | | மதிப்பீடுகள்/ பிரேரணைகள்/ வடிவமைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | ரூ. 200 இலட்சம் முதல் ரூ.500 இலட்சம் வரை | ரூ.500 இலட்சத்திற்கு மேல் | |
| 1. | இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப் பாலங்கள் | — | 16 | 16 |
| 2. | ஆற்றுப் பாலங்கள் | 13 | 5 | 18 |
| 3. | புதிய திட்டங்கள் | — | — | 26 |
| | மொத்தம் | 13 | 21 | 60 |

நடப்பாண்டில் புதிதாகத் தயாரிக்கப்படவுள்ள பணிகளின் உத்தேச மதிப்பீடு சுமார் ரூ.400 கோடியாகும்.

## 27. தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (TNRIDC):

தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் தமிழக அரசால் டிசம்பர் திங்கள் 2004 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சாலைக் கட்டமைப்புப் பணிகளுக்கான திட்டங்கள் வகுத்து, ஒருங்கிணைந்து, செயலாக்க உருவாக்கப்பட்டது. இக்கழகம்மூலமாக ஓரகடம் தொழிற்பூங்கா சாலைக் கட்டமைப்பு வசதிகள், பாரத் நிர்மாண் திட்டம், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

### 27.1. பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்

கிராமப்புறங்களில் 500-லிருந்து 1,000-க்குட்பட்ட மக்கள் தொகையுள்ள குடியிருப்புகளுக்கு 2007-க்குள் தார்ச் சாலை வசதி

[2007 ஏப்ரல் 24

செய்து கொடுப்பதற்காக 2001-02 ஆம் வருடம் மைய அரசு இத்திட்டத்தைத் துவக்கியது.

இத்திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் புதிய இணைப்புச் சாலை அமைப்பதற்கும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்துவதற்கும், மைய அரசு 2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை ரூபாய் 731.92 கோடி 5 கட்டங்களில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இவற்றில் முதல் மூன்று கட்டங்களுக்கான சாலைப் பணிகள் ஊரக வளர்ச்சித் துறைமூலமும், நான்காவது கட்டப் பணிகள் நெடுஞ்சாலைத் துறைமூலமாகவும் செயல்படுத்தப்பட்டன. 5-வது கட்டப் பணிகள் ஊரக வளர்ச்சித் துறைக்கு மீண்டும் மாறுதல் செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

820 கி.மீ. நீளமுள்ள நான்காவது கட்டச் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.117.27 கோடி மைய அரசுமூலம் தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திற்கு அனுமதித்தது. 2006-2007 வரை 474 கி.மீ. நீளமுள்ள பணிகள் முடிக்கப்பட்டன. நடப்பாண்டில் ஜூன் மாதத்திற்குள் மீதமுள்ள பணிகள் அனைத்தும் முடிக்கப்படும்.

### 27.2. பாரத் நிர்மாண் திட்டம்

2005 ஆம் ஆண்டில் மைய அரசு அறிவித்த இத்திட்டம் கிராமப்புற உள்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும்.

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்கு 11,115 கி.மீ. இலக்கு நிர்ணயம் செய்து, இதை 2005-2006 முதல் 2008-2009 வரை உள்ள 4 ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி மொத்தச் சாலைகளில் 60% நீளச் சாலைகளை மைய அரசு நிதி உதவியுடன் மேம்படுத்தவும், 40% நீளச் சாலைகளை மாநில அரசு நிதியுடன் புதுப்பிக்கவும் வேண்டும். இதன்படி 6,669 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்படுத்தவும், 4,446 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மாநில அரசு நிதியுடன் புதுப்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மாநில அரசு நிதியில் 2006-2007-ல் வரை 9,517 கி.மீ. நீள இதர மாவட்டச் சாலைகள் புதுப்பிக்கப்பட்டுவிட்டன.

மைய அரசு நிதியைப் பயன்படுத்தி மேம்படுத்த நிர்ணயம் செய்த இலக்கு 6,669 கி.மீ. நீளச் சாலைகளுக்கு முதற்கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்ட 3,321 கி.மீ. மொத்த நீளமுள்ள 1,148 சாலைப்



2007 ஏப்ரல் 24]

பணிகளின் பட்டியல் அடிப்படையில், ஆலோசகர்மூலம் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப்பணி முடிந்தவுடன் மைய அரசின் ஒப்புதல்பெற்றுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மீதமுள்ள 2,000 கி.மீ. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளும், 1,000 கி.மீ. இதர மாவட்டச் சாலைகளும் இரண்டாம் கட்டமாக மொத்தம் 3,000 கி.மீ. சாலைகள் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 27.3. சிறப்பு தொழில் பெருவழிச் சாலை

2006-2007 ஆம் ஆண்டு தொழில் துறைக்கான மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் சிறப்பு தொழில் பெருவழிச் சாலை ஒன்று உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் அரசு ஓரகடம் பகுதியில் புதிய சிறப்பு பெருவழிச் சாலைத் திட்டத்திற்கு ரூ.300 கோடி மதிப்பில் அனுமதி அளித்துள்ளது. இதில் தொழில் பூங்காக்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நகரியங்கள் அமைக்கப்பட்டு, துறைமுகம் மற்றும் விமான நிலையங்களுடன் இணைக்கப்படும்.

## 28. தமிழ்நாடு கடல்சார் வாரியம்:

தமிழ்நாட்டிலுள்ள கடற்கரையின் நீளம் சுமார் 1,000 கிலோ மீட்டர் ஆகும். இங்கு சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 3 பெரிய துறைமுகங்களும், 15 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன. 1963 ஆம் வருடப் பெருந்துறைமுகக் கழகச் சட்டத்தின்படி அமைக்கப்படும் பெருந்துறைமுகங்கள் மைய அரசின் கட்டுப்பாட்டிலும், 1908 ஆம் வருட இந்தியத் துறைமுகச் சட்டத்தின்படி அமைக்கப்படும் சிறு துறைமுகங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை நிர்வகித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வந்த தமிழ்நாடு அரசின் துறைமுகத் துறையானது 18-3-1997 முதல் தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டம், 1995 (தமிழ்நாடு சட்டம் 4/1996)-ன்படி தமிழ்நாடு கடல்சார் வாரியமாக

மாற்றியமைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலை மற்றும் துறைமுகத் துறை அமைச்சர் அவர்கள் இவ்வாரியத்தின் அலுவல்சார் தலைவராகச் செயல்பட்டு வருகிறார்.

**28.1. தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்கள்**

| அரசுத் துறைமுகங்கள் | தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் |
|---|---|
| 1. கடலூர் | 1. காட்டுப்பள்ளி |
| 2. நாகப்பட்டினம் | 2. எண்ணூர் சிறு துறைமுகம் |
| 3. பாம்பன் | 3. திருச்சோபுரம் |
| 4. இராமேசுவரம் | 4. பி.ஒய்.03 எண்ணெய் வளப் பகுதி |
| 5. வாலிநோக்கம் | 5. திருக்கடையூர் |
| 6. கன்னியாகுமரி | 6. புன்னக்காயல் |
| 7. குளச்சல் | 7. மணப்பாடு |
| | 8. கூடங்குளம் |

தமிழ்நாட்டில் தற்போதுள்ள சிறு துறைமுகங்களில் கப்பல் அணையும் தள வசதி இல்லாததால், கப்பல்களைக் கடலில் நங்கூரமிட்டு நிறுத்தி மிதவைகள்மூலமாகச் சரக்குகள் இறக்கி, ஏற்றப்படுகின்றன.

**28.2. சிறு துறைமுகங்களின் செயல்பாடுகள்**

அரசுத் துறைமுகங்களில் தற்போது நாகப்பட்டினம் துறைமுகத்தில் சிறு கப்பல்கள்மூலம் சிமெண்ட், மொலாசஸ் ஏற்றுமதியும், சமையல் எண்ணெய் மற்றும் தேங்காய்ப் புண்ணாக்கு இறக்குமதியும் நடைபெறுகிறது. பாம்பன் கால்வாயில் சிறு கலன்கள் இக்கால்வாயைக் கடப்பதற்கு வழிகாட்டப்படுகின்றன. கன்னியாகுமரியில் சுற்றுலாப் பயணிகளின் படகுப் போக்குவரத்து நடைபெறுகிறது. ஏனைய அரசுத் துறைமுகங்களில் தற்போது செயல்பாடு ஏதுமில்லை.

தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் தொழில் முனைவோரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக இயக்கப்படுகின்றன. இங்கு அடிப்படை வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய



அனைத்துப் பொறுப்புகளும் அவர்களைச் சார்ந்ததாகும். எண்ணூர் மற்றும் திருக்கடையூர் துறைமுகங்களில் கப்பலிலிருந்து திரவ அமோனியா மற்றும் நாப்தா ஆகியவை கடலுக்கடியில் பதிக்கப்பட்டுள்ள குழாய்களின் வழியாகக் கரையிலுள்ள சேமிப்புக் கலன்களுக்கு நேரடியாக இறக்குமதி செய்யப்படுகிறது.

எட்டு தனியார் முதலீட்டுத் துறைமுகங்களில் எண்ணூர் சிறு துறைமுகம் (திருவள்ளூர்), பி.ஒய்.03 எண்ணெய் வளப் பகுதி (கடலூர்), கூடங்குளம் (திருநெல்வேலி) மற்றும் திருக்கடையூர் (நாகப்பட்டினம்) ஆகிய நான்கு துறைமுகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள நான்கு தனியார் முதலீட்டுத் துறைமுகங்களும் இன்னும் செயல்படத் துவங்கவில்லை.

**28.3. சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகளின் விவரம்**

**(அ) அரசுத் துறைமுகங்கள்**

| வ.எண் | துறைமுகம் | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் | சிமெண்ட் மற்றும் மொலாசஸ் | சமையல் எண்ணெய், தேங்காய்ப் பிண்ணாக்கு மற்றும் கச்சா எண்ணெய் |

**(ஆ) தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்**

| வ. எண் | துறைமுகம் | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|---|
| 1. | எண்ணூர் சிறு துறைமுகம் | — | திரவ அமோனியா |
| 2. | பி.ஒய்.03 எண்ணெய் வளப் பகுதி | கச்சா எண்ணெய் | — |
| 3. | திருக்கடையூர் | — | நாப்தா |
| 4. | கூடங்குளம் | — | இயந்திரங்கள் |

சுனாமி பாதிப்பால், கையாளப்பட்ட சரக்குகளின் அளவு 2005 ஆம் ஆண்டில் 7.10 இலட்சம் டன்களாகக் குறைந்தது. சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபின் சரக்குகளின் அளவு 8 இலட்சம்

டன்களாக அதிகரித்துள்ளது. இதனால் வாரியம் இலாபகரமாக இயங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் சுமார் 10 இலட்சம் டன் கையாளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 28.4. சிறு துறைமுகங்களின் மேம்பாட்டிற்கான கொள்கை

தொழிற்சாலைகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியமானதென இவ்வாரியம் உணர்ந்துள்ளது. ஆகவே, துறைமுகம் சார்ந்த தொழிற்சாலைகளான எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றின் தனிப்பட்ட உபயோகத்திற்கென துறைமுகங்கள், தோணித்துறைகள் மற்றும் நங்கூர மிதவைகள் ஆகியவற்றை, கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் மாற்றுதல் (BOOT) முறையில் தனியார் பங்கேற்பின்மூலமாக அமைப்பதற்கு இவ்வாரியத்தின் உதவியுடன் அரசு ஊக்குவித்து வருகிறது.

இவ்வாரியம் தொழிற்சாலைகளுக்கும், துறைமுகங்களுக்குமான நெருங்கிய தொடர்பினை உணர்ந்து, துறைமுகம்சார்ந்த எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள் மற்றும் அனல் மின் நிலையங்களுக்காகத் தனியார் துறைமுகங்கள், தோணித்துறை, நங்கூர மிதவைகள் ஆகியவற்றை அமைக்க ஊக்குவித்து வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்கான முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவதற்காக சிறு துறைமுகக் கொள்கையினை அரசு வகுத்துச் செயல்படுத்தி வருகிறது. இதில் தற்போதைய தேவைக்கேற்ப மாற்றங்கள் செய்வது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### துறைமுக மேம்பாட்டுக் கொள்கையின் முக்கிய அம்சங்கள்

தொழிற்சாலைகளுக்கும், துறைமுகங்களுக்கும் இடையே உள்ள நல்லுறவினை மேலும் மேம்படுத்துவதும் மற்றும் துறைமுகத்தின் மேம்பாட்டினைத் தொழில் வளர்ச்சியுடன் இணைத்துச் செயல்படுத்துவதும் இவ்வாரியத்தின் நோக்கம் ஆகும். தனியார் பங்கேற்கும் வகையில் அதிக அளவிலான தனியார் முதலீட்டுத் துறைமுகங்களை உருவாக்கி, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதே இவ்வாரியத்தின் குறிக்கோளாகும்.



### (i) நோக்கம்

- ❖ நிலக்கரி, நாப்தா, எண்ணெய், இயற்கை வாயு ஆகியவற்றைத் தமது தனி உபயோகத்திற்காக இறக்குமதி செய்வதற்கான வசதிகளை துறைமுகம்சார்ந்த அனல் மின் நிலையங்கள் அளித்தல்
- ❖ ஏற்றுமதிசார்ந்த தொழில்களையும், துறைமுகம்சார்ந்த தொழில்களையும் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் மேம்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்
- ❖ நெடுஞ்சாலைகள் மற்றும் இருப்புப் பாதைகளின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் கிழக்குக் கடலோரப் பகுதியில் கப்பல் போக்குவரத்து வசதிகளை உருவாக்குதல்
- ❖ சுற்றுலா, உல்லாசப் படகு மற்றும் கரையோர வாணிபம் ஆகியவற்றை ஊக்குவித்தல்
- ❖ கப்பல் பழுதுபார்த்தல், கப்பல் உடைத்தல் மற்றும் மிதவைக் கலன்கள் கட்டுவதற்கான வசதிகளை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும் வசதி செய்தல்

### (ii) கொள்கை வழிமுறைகள்

**தனியார் பங்கேற்பு**

- ❖ மொத்த அளவிலான சரக்குகள், சரக்குப் பெட்டகங்கள் மற்றும் திரவ நிலையிலான பெட்ரோலியத் தயாரிப்புகள், இரசாயனங்கள்போன்ற அனைத்துப் பொருட்களையும் கையாளும் வகையில் பல்நோக்குத் துறைமுக வசதிகளைச் சிறு துறைமுகங்களில் பொது மற்றும் தனியார் பங்கேற்பின் மூலமாக மேம்படுத்துதல்

**தனியார் முதலீட்டுத் தோணித்துறைகள்**

- ❖ தொழில் முனைவோரின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் துறைமுகம்சார்ந்த தொழிற்சாலைகளுக்கான தனியார் முதலீட்டுத் தோணித்துறைகளை உருவாக்குவதற்கு அரசு அனுமதியளிக்கும். கணிசமான அளவில் முதலீடு செய்யும் தனியார் நிறுவனங்கள் கடலோரங்களில் ஏற்படுத்தும் துறைமுகம்சார்ந்த வசதிகளுக்காகத் தனிப்பட்ட மற்றும் வணிக ரீதியான தோணித்துறைகளை உருவாக்கத் தேவையான இட வசதியளிக்கப்படும்.

**அணுகுமுறை**

- துறைமுகங்கள், தோணித்துறைகளைக் கட்டுதல் மற்றும் மேம்பாடு செய்தல் குறித்து வெளிப்படையான (Transparent) வழிமுறைகள் வகுக்கப்பட்டுத் தனியார் பங்கேற்பின்மூலம் ஒவ்வொரு கருத்துருவும் அதன் தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும். தனியார் பங்கேற்பினை ஊக்குவிப்பதே கொள்கைத் தொகுப்பின் சாராம்சமாகும். இதற்காக ஒவ்வொரு கருத்துருவும் அதனதன் தனித்தன்மையடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**(iii) செயல் முறைத் திட்டம்**

- உலக அளவிலான அறிவிப்புகள், ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதன்மூலம் வெளிப்படையான தன்மை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.
- இத்திட்டங்கள், கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOOT) அடிப்படையில் செயல்படுத்தப்படும்.
- மேற்கூறிய திட்டங்கள் முதலில் 30 ஆண்டுகளுக்கும், பின்னர் 50 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக்கூடியதாகவும் இருக்கும்.
- கையாளப்படும் சரக்குகளுக்கு நியாயமான கட்டணத் தொகை வசூலிக்கப்படும்.

**28.5. துறைமுக மேம்பாட்டுப் பணிகள்**

**அ. அரசுத் துறைமுகங்கள்**

**(i) குளச்சல் துறைமுகம்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இத்துறைமுகம் சர்வதேசக் கப்பல் வழித்தடத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளதுடன், கரையிலிருந்து ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவான தூரத்திலேயே சுமார் 15 மீட்டருக்கும் அதிகமான ஆழத்துடன் உள்ளது. மேற்கண்ட சிறப்புத் தன்மைகளின் காரணமாக, ரைட்ஸ் (RITES) லிமிடெட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட "போர்ட்ஸ் விஷன் 2020" அறிக்கையில், குளச்சல் துறைமுகம் சரக்குப் பெட்டகங்களைக் கையாளுவதற்குத் தகுதியுள்ள துறைமுகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மைய அரசின் உதவி



கோரப்பட்டது. இதனையடுத்து, சேது சமுத்திரக் கழகம் விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசகர் நியமிக்கும் பணியை மேற்கொண்டுள்ளனர். இத்திட்டத்திற்கு அதிகளவு முதலீடு தேவைப்படுமென்பதால் இத்துறைமுகத்தை மைய அரசிடம் ஒப்படைத்து, மைய அரசின் கப்பல் போக்குவரத்து அமைச்சகம் மூலமாக சர்வதேச சரக்குப் பெட்டக மாற்று முனையத்துடன்கூடிய பெருந்துறைமுகமாக மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(ii) கடலூர் துறைமுகம்**

கடலூர் மாவட்டத்தில் கடலூர் பவர் கம்பெனி நிறுவனத்தினர் நிலக்கரியை எரிபொருளாகக்கொண்டு செயல்படும் 1,320 மெகாவாட் திறன்கொண்ட அனல் மின் நிலையத்தினைக் கடலூரில் தியாகவல்லி கிராமத்தில் சுமார் ரூ.6,000 கோடி முதலீட்டில் அமைத்திட உத்தேசித்துள்ளனர். இம்மின் நிலையத்திற்கு ஆண்டொன்றுக்குத் தேவையான 3.5 மில்லியன் டன் நிலக்கரியைக் கையாளும் வகையில் சுமார் ரூ.325 கோடி செலவில் ஒரு தோணித்துறை அமைக்கக் கொள்கை அளவிலான அனுமதி 19-1-2007 அன்று இந்நிறுவனத்திற்கு இவ்வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கடலூர் துறைமுகத்தினை, பொது மற்றும் தனியார் பங்கேற்பின்மூலம் மேம்படுத்துவது பற்றி அரசு தற்போது பரிசீலித்து வருகிறது.

டிசம்பர் 2004-ல் ஏற்பட்ட சுனாமியின்போது துறைமுகக் கட்டுமானங்களான நீர்த் தடுப்பிகள்போன்றவை சேதமுற்றதுடன், உப்பனாற்றின் ஆழமும் குறைந்தது. சுனாமியால் பாதிப்படைந்த கட்டுமானங்களை ரூ.14.41 கோடி மதிப்பில் மறுசீரமைப்புச் செய்வதற்காக ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியிலிருந்து தமிழ்நாடு அரசு ஒப்பளித்துள்ளது. 2006-2007-ல் ரூ.5.50 கோடி மதிப்பிலான பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடப்பாண்டில் முடிவடையும்.

**(iii) நாகப்பட்டினம் துறைமுகம்**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள இத்துறைமுகத்திற்குத் சமையல் கப்பல்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. சமையல் எண்ணெய் மற்றும் தேங்காய்ப் பிண்ணாக்கு இறக்குமதியும், மொலாசஸ் ஏற்றுமதியும் நடைபெற்று வருகிறது. சிமெண்ட் மற்றும் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தினர் பனங்குடியில்

அமைந்துள்ள தங்களது கச்சா எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைக்கான கச்சா எண்ணெயைக் கையாளத் தனியார் முதலீட்டுத் தோணித் துறையை நிறுவியுள்ளனர். இதன்மூலம் தொடர்ந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வருகின்றனர். மேலும், இத்தோணித்துறைமூலம் பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்திடவும் உத்தேசித்துள்ளனர்.

சுனாமியின்போது துறைமுகக் கட்டுமானங்களான சரக்குக் கொட்டகைகள், நீர்த் தடுப்பிகள், சரக்கு கையாளும் இடம், எடை மேடை, மின் விளக்குகள் ஆகியவை சேதமடைந்தன. மேலும், கடுவையாற்றின் ஆழமும் குறைந்தது. சுனாமியால் பாதிப்படைந்த கட்டமைப்புகளை ரூ.50.52 கோடி மதிப்பில் மறுசீரமைப்புச் செய்வதற்காக ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியிலிருந்து தமிழ்நாடு அரசு ஒப்பளித்துள்ளது. கடந்த நிதியாண்டில் ரூ.4.50 கோடி மதிப்பிலான பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடப்பாண்டில் முடிவடையும்.

### ஆ. தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்

#### (i) திருவள்ளூர் மாவட்டத்தில் அமையவுள்ள காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளம்

- திருவள்ளூர் மாவட்டத்தில், எண்ணூர் பெருந்துறைமுகத்திற்கு வடக்கில் உள்ள காட்டுப்பள்ளி 1999-ல் சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் தனியார் பங்கேற்புடன் இணைந்து ஒரு சிறப்புப் பயன்பாட்டு நிறுவனம் (SPV) அமைத்து, சுமார் ரூ.1,000 கோடி செலவில் கப்பல் கட்டும் தளம் உருவாக்க உத்தேசித்துள்ளது.

#### (ii) கடலூர் மாவட்டத்தில் அமையவுள்ள தனியார் முதலீட்டுக் கப்பல் கட்டும் தளம்

குட்எர்த் கப்பல் கட்டும் நிறுவனம் 45,000 முதல் 75,000 டன்கள் வரை கொள்ளளவுகொண்ட கப்பல்கள் கட்டுவதற்கான கப்பல் கட்டும் தளம் ஒன்றினை ரூ.1,000 கோடி முதலீட்டில் கடலூர் மாவட்டத்தில் புதுக்குப்பம் மற்றும் ரெட்டியார்பேட்டை ஆகிய கிராமங்களுக்கிடையே அமைப்பதற்கான கொள்கை அளவிலான அனுமதி இவ்வாரியத்தால் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான



புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 15-2-2007 அன்று கையொப்பமிடப்பட்டது.

#### (iii) திருச்சோபுரம் துறைமுகம்

கடலூர் மாவட்டத்தில் நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தாரால் நிறுவப்பட உள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைக்காகக் கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்ப் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்காக, திருச்சோபுரம் சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டது. இத்துறைமுகம் சுங்கத் துறைமுகமாகவும் மைய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. துறைமுகமாகவும் மைய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இங்கு கடல்சார் கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதற்கான சுற்றுச்சூழல் தடையின்மைச் சான்றிதழ் மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரங்களைத் திரட்டி, பணிகளைத் துவங்க இந்நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

#### (iv) நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமையவுள்ள தனியார் முதலீட்டுத் துறைமுகம்

மெக்னமாரா இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.10,000 கோடி முதலீட்டில் அமைக்கவுள்ள 2,000 மெகாவாட் திறன்கொண்ட அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்வதற்காகத் தனியார் துறைமுகம் ஒன்றினைத் திருக்குவளை அருகில் ரூ.750 கோடி செலவில் அமைப்பதற்காக இவ்வாரியம் கொள்கை அளவிலான அனுமதி அளித்துள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 21-3-2007 அன்று கையொப்பமிடப்பட்டது.

#### (v) மணப்பாடு துறைமுகம்

இந்தியன் பவர் பிராஜக்ட் லிமிடெட் நிறுவனத்தார் வேம்பாரில் நிறுவ இருக்கும் 2,000 மெகாவாட் திறன்கொண்ட இயற்கை வாயு மூலமான மின் உற்பத்தித் திட்டத்திற்கு ஆண்டொன்றுக்குத் தேவைப்படும் 2.5 மில்லியன் டன் திரவ இயற்கை வாயுவை இந்தியன் கேஸ் லிமிடெட் நிறுவனம்மூலமாகக் கையாளுவதற்காகத் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மணப்பாடு சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டு, இத்திட்டத்திற்காக 100 ஏக்கர் அரசு நிலம் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

### இ. நாகப்பட்டினம் மற்றும் இராமேசுவரம் துறைமுகங்களை மேம்படுத்துதல்

#### (i) நாகப்பட்டினம்

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டப் பணிகள் நிறைவடைந்தவுடன் நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடல் வாணிபம் மேலும் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு ஏற்ப நாகப்பட்டினம் துறைமுகத்தினை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக ஆலோசகர் நியமனம் செய்ய சேது சமுத்திரக் கழகத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இத்திட்ட அறிக்கை பெறப்பட்ட பின்னர் இத்துறைமுகத்தை மேம்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

#### (ii) இராமேசுவரம்

சேது சமுத்திரக் கழகத்தின் கலங்களின் பயன்பாட்டிற்காகவும், மீன்பிடித் துறைமுகம் மற்றும் சரக்குகளைக் கையாளும் வசதிகளை ஏற்படுத்தவும் ஒருங்கிணைந்த துறைமுகம் ஒன்றினை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசகர்களை நியமிக்க சேது சமுத்திரக் கழகத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இத்திட்ட அறிக்கை பெறப்பட்ட பின்னர் இத்துறைமுகம் சேது சமுத்திரக் கழகத்தின் உதவியுடன் மேம்படுத்தப்படும்.

### 28.5. சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம்

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தின்கீழ் இராமேசுவரம் பகுதியில் அமைந்துள்ள பாக் ஜலசந்தியையும், மன்னார் வளைகுடாவையும் அதிக எடைகொண்ட கப்பல்கள் கடந்து செல்லும் வகையில் கடல் பகுதி ஆழப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவின் கிழக்குக் கடற்கரையினையும், மேற்குக் கடற்கரையினையும் இணைக்கும் கடல் வழியில் சுமார் 400 கடல் மைல் தூரத்தினையும் (Nautical Miles) 36 மணி நேரக் கப்பல் பயண நேரத்தினையும் குறைப்பதற்கு இத்திட்டம் உதவும். இந்நோக்கத்திற்காக மைய அரசால் நிறுவப்பட்ட சேது சமுத்திரக் கழகம்மூலம் ஆழப்படுத்தும் பணி துவங்கப்பட்டு, தற்போது நடைபெற்று வருகிறது. சேது சமுத்திரக் கழகத்தின் தேவைக்காக, தனுஷ்கோடி மற்றும் மண்டபம் பகுதியில் சுமார் 112 ஏக்கர் நிலத்திற்கு சேது சமுத்திரக் கழகம் கோரியவாறு தமிழக அரசு முன்அனுமதி வழங்கியுள்ளது. மேலும், தோண்டப்படும்



மண்ணை ஒதுக்கிப் பயன்படுத்துவதற்காக தனுஷ்கோடிப் பகுதியில் சுமார் 2,007 ஏக்கர் நிலத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 29. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்:

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான அனல் மின் நிலையங்களுக்கு ஒதுக்கப்படும் மொத்த நிலக்கரியை இந்தியத் துறைமுகங்களிலிருந்து ஏற்றி வருவதற்காகப் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11-4-1974 அன்று கம்பெனிகள் சட்டம், 1956-ன்படி நிறுவப்பட்டது. இப்பணிகளை மேற்கொள்வதற்காக இக்கழகமானது மூன்று கப்பல்களைச் சொந்தமாக வாங்கி இயக்கி வருகிறது. மேலும், தேவைக்கேற்பத் தனியார் துறையிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் கப்பல்களைப் பெற்று நிலக்கரியைக் கையாள்வதற்குப் பயன்படுத்துகிறது.

### 29.1. இயக்கத்தில் உள்ள கப்பல்கள்

இக்கழகமானது குறைந்த ஆழத்தில் செல்லும் வகையில், சிறப்பாக வடிவமைக்கப்பட்ட எம்.வி. தமிழ் அண்ணா, எம்.வி. தமிழ்ப் பெரியார் மற்றும் எம். வி. தமிழ் காமராஜ் ஆகிய மூன்று சொந்தக் கப்பல்களை இயக்கி வருகிறது. இதன்மூலம் தமிழ்நாடு மின் வாரிய அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி கொண்டு வரும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இது தவிர, தேவைக்கேற்ப இந்திய மற்றும் அயல்நாடுகளில் பதிவு செய்துள்ள கப்பல் கம்பெனிகளிடமிருந்து கப்பல்களை நீண்ட கால மற்றும் குறுகிய கால ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு அமர்த்திக்கொள்கிறது.

### 29.2. இயக்கம் மற்றும் நிதிநிலை விவரங்கள்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரி சொந்தக் கப்பல்கள் மற்றும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் மூலமாக ஹால்தியா, பாரதீப் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களிலிருந்து ஏற்றி, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களுக்கு கொண்டு வந்து இறக்கப்படுகிறது.

இக்கழகமானது, 2006-2007-ல் சுமார் 131.74 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகக் கையாண்டுள்ளது. நடப்பாண்டில் சுமார் 150 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி எடுத்து வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

இ... கம். கடந்த ஆண்டுகளில் கையாளப்பட்ட நிலக்கரியின் அளவு, ஈட்டிய மொத்த வருவாய் மற்றும் நிதிநிலை விவரங்கள் பின்வருமாறு: [2007 ஏப்ரல் 24

| வருடம் | கையாளப்பட்ட நிலக்கரியின் அளவு (மெட்ரிக் டன் இலட்சத்தில்) | மொத்த வருவாய் (ரூபாய் கோடியில்) | நிகர இலாபம்/ இழப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 2002-2003 | 146.12 | 304.74 | (−) 14.66 |
| 2003-2004 | 142.11 | 391.99 | (+) 8.57 |
| 2004-2005 | 141.40 | 453.39 | (−) 1.28 |
| 2005-2006 | 127.58 | 470.79 | (+) 0.39 |
| 2006-2007 | 131.74 | 389.83 | (+) 3.52 |
| | | (உத்தேசக் கணக்கின்படி) | (உத்தேசக் கணக்கின்படி) |

## 29.3. தூத்துக்குடி மற்றும் எண்ணூர் துறைமுகப் பணிகள்

தூத்துக்குடி துறைமுகத்தில் 1983 ஆம் ஆண்டிலிருந்து நிலக்கரி கையாளப்பட்டு வருகிறது. இத்துறைமுகத்தில் இரண்டு கப்பல் நிறுத்தும் தளங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இத்தளங்களில் அமைக்கப்பட்டுள்ள கன்வேயர் பெல்ட்மூலமாக கிரேனுடன்கூடிய கப்பல்களிலிருந்து நிலக்கரி இறக்கப்பட்டு நேரடியாகத் தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரி 2001 ஆம் ஆண்டு வரை சென்னைத் துறைமுகத்தில் இறக்கப்பட்டது. அதன் பிறகு, எண்ணூர் துறைமுகம் செயல்படத் துவங்கியதிலிருந்து தேவைப்படும் நிலக்கரியை ஏற்றி வரும் கப்பல்களிலிருந்து இத்துறைமுகத்தில் கன்வேயர் பெல்ட்மூலமாக இறக்கப்படுகிறது.

## 29.4. கன்னியாகுமரி படகுத் துறை

இக்கழகமானது குமரிமுனையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு சுற்றுலாப் பயணிகளுக்காகப் படகுப் போக்குவரத்தினையும் நடத்தி வருகிறது.



2007 ஏப்ரல் 24]

2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமிப் பேரலையினால் படகுத் துறை சேதமடைந்ததோடு கழகத்திற்குச் சொந்தமான மூன்று படகுகளில் இரண்டு படகுகள் பெரிதும் சேதமடைந்தன. எம்.எல். விவேகானந்தா என்ற மூன்றாவது படகு சுனாமி அலையால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. எம்.எல். பாகீரதி மற்றும் எம்.எல். தாமிரபரணி ஆகிய இரண்டு படகுகள் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் இயக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியவாறு, கன்னியாகுமரி படகுத் துறையில் தற்போது இயக்கப்பட்டு வரும் சுமார் 30 ஆண்டுகள் பழமையான எம்.எல். தாமிரபரணி மற்றும் எம்.எல். பாகீரதி ஆகிய இரண்டு படகுகளுக்குப் பதிலாக இரண்டு புதிய படகுகளை வடிவமைத்துக் கட்டிக் கொடுப்பதற்காக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ரூபாய் 2.10 கோடியில் கட்டுமானப் பணிக்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு புதிய படகுகளும் டிசம்பர், 2007-க்குள் கட்டி முடித்து, கன்னியாகுமரி படகுத் துறையில் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்படகுகளுக்கான செலவில் 25% நிதியுதவியை மைய அரசின் சுற்றுலாத் துறையிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 29.5. தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் – தூத்துக்குடி

தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் 16-9-1998 அன்று தூத்துக்குடியில் துவக்கப்பட்டது. இப்பயிற்சி நிறுவனத்தில் ஆரம்பக் காலத்தில் மாலுமிப் பயிற்சி மற்றும் கடல்சார் இயந்திரவியல் சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வந்தன. தற்போது கடல்சார் இயந்திரவியல் பயிற்சிக்குப் பதிலாக, பொது முறை மாலுமிப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிறுவனத்தில் இதுவரை 15 பயிற்சி வகுப்புகள்மூலம் 540 பேர் மாலுமிப் பயிற்சி பெற்றுள்ளனர். இப்பயிற்சி நிறுவனத்தால், மாலுமிகளின் சிறப்புப் பயிற்சி உரிமம் பதிவு செய்தல் மற்றும் கப்பல் வேலைகளின் கண்காணிப்பு-95-ன் (STCW-95) தேவைக்கேற்ப, "தன்னிலைப் பாதுகாப்பு முறை", "கடலில் முதலுதவி செய்தல்", "தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு", "எண்ணெய்க் கப்பல் பாதுகாப்பு", மற்றும் "தீயணைப்பு அடிப்படைப் பாதுகாப்புப் பயிற்சி", ஆகிய ஐந்து பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

## ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு, 2007-2008



(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| ■ | தலைமைப் பொறியாளர் (பொது) | ரூ. 1612.07 |
| ■ | தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் | ரூ. 500.00 |
| □ | தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) | ரூ. 318.00 |
| □ | தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) | ரூ. 287.56 |
| ■ | தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) | ரூ. 90.00 |
| □ | தமிழ்நாடு கடல்சார் வாரியம் | ரூ. 37.93 |

## சாலைகளின் நீளம்




| | | |
|---|---|---|
| □ | தேசிய நெடுஞ்சாலைகள் | 4,483 கி.மீ |
| ■ | மாநில நெடுஞ்சாலைகள் | 9,256 கி.மீ. |
| ■ | மாவட்ட முக்கியச் சாலைகள் | 9,451 கி.மீ. |
| ■ | மாவட்ட இதர சாலைகள் | 36,510 கி.மீ. |
| ■ | ...ப்பு அபிவிருத்தித் திட்டச் சாலைகள் | 1,746 கி.மீ. |

••••

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227571
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.